உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# தியானானுபூதி.

ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள்

திருவருள்பெற்றுவிளங்கும்

அச்சுதானந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது.

௸ சுவாமிகள்

அடியவர்திருக்கூட்டத்தவரால்

களாநிதிஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

கலியுகாப்தம்—௪ ௯ ௬ ௯-ல்—நிகழும்

பிரபவ௵ பங்குனி௴.

MADRAS.

( *Copy Right.* Reserved. )

ஸ்ரீ ச·ப·பா·தி அ·பெ·வி· அ·

# புத்தகவிளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் - சென்னைத் தங்கசாலைவீதியில் ௨-வது. கதவிலக்கமுள்ளவீட்டில் - புங்கத்தூர். கந்தசாமிமுதலியாரிடத்திலும், ஷை வீதியில் - ௫௯ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில்-ப. வீராசாமிமுதலியாரிடத்திலும், பெத்துநாய்க்கன்பேட்டை நாட்டுப்பிள்ளையார்கோயில்வீதியில் - ௫ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில் களாநிதி அச்சுக்கூடத்துத்தலைவர்-பா. குமாரையரிடத்திலும், ஷை பேட்டைக் கோவிந்தப்பநாய்க்கன்வீதியில் - ௧0௪ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில்-ப. பங்காருநாய்க்கரிடத்திலும், சூளைக்கறையான்குட்டைச்சாமிபிள்ளைவீதியில் - ௨0 - வது. கதவிலக்கமுள்ளவீட்டில் - கற்குளம் சபாபதிமுதலியாரிடத்திலும், வீரணன்தோட்டம் ஆண்டியப்பநாயகர் வீதியில் - ௫ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில் சோமசுந்தரநாயகரிடத்திலும் - ஷை சூளைக்கடுத்த புளியந்தோப்பில் - அமரம்பேடு. கனகராயமுதலியார்குமாரர் - அப்பாவுமுதலியாரிடத்திலும், சிந்தாத்திரிப்பேட்டை ஐயாமுதலிரோட்டில் - ௧௨ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில்-வைத்திய-சேஷாசலசெட்டியாரிடத்திலும், திருவல்லிக்கேணி-வீரராகவமுதலியார்வீதியில்-௯௪ - வது. கதவிலக்கமுள்ளவீட்டில்-ஆ. முருகேசமுதலியாரிடத்திலும், திருமயிலை. வடவண்டை மாடவீதியில்-௨௯-வது. கதவிலக்கமுள்ளவீட்டில் - கவர்ன்மென்ற் ஆபீஸ் பப்ளிக் ஒர்க்ஸ்டிபார்ட்மென்ற் ரைடர்-மாங்காடு. வையாபுரிமுதலியாரிடத்திலும், பெங்களூரைச்சார்ந்த அரசூரில் - கம்மிஷனர்ஆபீஸ் ரைடர்-தாங்கி. சபாபதிமுதலியாரிடத்திலும், ஷை யூரில்-சீப் இன்ஜினீர் ஆபீஸ் ட்ராப்ட்ஸ்மான்-வே. குருசாமிமுதலியாரிடத்திலும், இதன்விலைரூபா-௨ - கொடுத்துப்பெற்றுக்கொள்ளலாம்.

# பதிக அட்டவணை.


| பக்கம். | பதிகம். |
|---|---|
| ௧ | திருவருள்விலாசப்பரமகுருவணக்கம் |
| ௨ | மரபுவணக்கம் |
| ௪ | திருவடிமாலை |
| ௧௨ | பொருண்மாலை |
| ௧௩ | பரதத்துவநிச்சயம் |
| ௧௪ | மஹாதேவமாலை |
| ௧௬ | அனுபூதிநிலையம் |
| ௧௭ | குருவருட்பேறு |
| ௨௨ | பிரணவசகிதகுருநாமஸ்தவம் |
| ௨௫ | குருநாமஸங்கீர்த்தநம் |
| ௨௭ | சிவநாமஸங்கீர்த்தநம் |
| ௨௮ | ஹரிநாமஸங்கீர்த்தநம் |
| ௩௧ | சிவஷண்முகநாமஸங்கீர்த்தநம் |
| ௩௨ | புஜங்கப்ரயாதநவகம் |
| ௩௫ | திருநீற்றியல் |
| ௩௬ | பஞ்சாக்கரவியல் |
| ௩௮ | மனோலயம் |
| ௩௯ | அத்துவிதவுண்மை |
| ௪௦ | ஆட்கொண்டமுறைமை |
| ௪௧ | முப்பொருளொருமை |
| ௪௩ | குருவருட்பான்மை |
| ௪௪ | குருவருட்கோலம் |
| ௪௬ | குருவருட்காட்சி |
| ௪௯ | நெஞ்சறிவுறுத்தல் |
| ௫௦ | சிவானுபவவிளைவு |
| ௫௫ | அவதாரலீலை |
| ௫௭ | திருச்சாழல் |
| ௫௯ | அன்னைப்பத்து |
| ௬௦ | குயிற்பத்து |
| ௬௩ | அடைக்கலப்பத்து |

| பக்கம். | பதிகம். |
| --- | --- |
| ௬௬ | உய்யுநெறி |
| ௬௭ | அனுக்ஞாபஞ்சகம் |
| ௬௮ | குருசிஷ்யஸம்வாதம் |
| ௭௬ | ஐக்யானுஸந்தானம் |
| ௭௭ | அனுபவமாற்றாமை |
| ௮௦ | ஆய்ந்தறிவடங்கல் |
| ௮௨ | முடியாவுவகை |
| ௮௩ | பிரார்த்தனை |
| ௮௫ | குருவருட்டிறங்காண்பதரிதெனல் |
| ௮௬ | குருவருண்மாட்சி |
| ௮௮ | ஆட்படவயர்தல் |
| ௮௯ | குருவருட்போற்றித்திருவிருத்தம் |
| ௯௧ | அறிவித்தருள்வேண்டல் |
| ௯௭ | நெஞ்சொடுகிளத்தல் |
| ௯௯ | அருட்டாகம் |
| ௧௦௦ | குறையறவிரத்தல் |
| ௧௦௨ | அருட்பரிசாற்றாமை |
| ௧௦௩ | சிரவணாதிக்கவியல் |
| ௧௦௮ | இராகத்வேஷாதிநிரசனம் |
| ௧௧௧ | சங்கற்பநிராகரணம் |
| ௧௧௭ | அஞ்சுநெறி |
| ௧௧௯ | சங்கரானந்தமாலை |
| ௧௩௨ | ஊசல் |
| ௧௩௪ | திருத்தாலாட்டு |
| ௧௩௬ | திருப்பள்ளியெழுச்சி |
| ௧௩௮ | கட்டியம் |
| ௧௩௯ | கருவிகட்காம்பயன் |
| ௧௪௦ | உந்தியார் |
| ௧௪௫ | தியானாஷ்டகம் |
| ௧௪௬ | நிர்க்குணாஷ்டகம் |
| ௧௪௭ | சொரூபாஷ்டகம் |
| ௧௪௯ | தேவியைவியந்தது |
| ௧௫௪ | வாணியைவியந்தது |

| பக்கம். | பதிகம். |
| --- | --- |
| கடுச | பரம்பொருட்கண்ணி |
| கடுசு | சற்குருக்கண்ணி—மரபுவிளக்கம் |
| கடுஅ | எந்நாட்கண்ணி |
| கசுக | நால்வருட்சிந்தனை |
| கசுச | குருவருட்போற்றியகவல் |
| கசுஅ | அனுபவானந்தவகவல் |
| களஉ | தியானமஞ்சரி |
| களரு | ஆனந்தலஹரி |
| களசு | முத்தியுபாயம் |
| களஅ | சரணப்பதிகம் |
| களகூ | முடிவாமியல்பு |
| கஅ0 | பஞ்சலிங்கஸ்தவம் |
| கஅக | திருவருள்வாழ்த்து |
| கஅஉ | எண்ணக்குறிப்பு |
| கஅரு | ஆசிரியர்வரலாறு |

ஸ்ரீ மத்

பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய

ஸ்ரீமச்சங்கரபகவத்பாத ஸத்குருஸ்வாமிகள்

திவ்யகடாக்ஷவீக்ஷண்யராய்ச்

சித்விலாசசபையின்கண்

பிரதமாசாரியராயெழுந்தருளியிருந்த

**ஸ்ரீமத்வித்யானந்தஸ்வாமிகள்**

திருவாய்மலர்ந்தருளிய

# குருஸ்தவாஷ்டகம்.

ஸ்ரீசந்திரமௌளீஶ்வராயநமஃ

ஶ்லோகம்.

ஜகத்குரும்சமத்குரும்மஹாத்மபிர்வஶீக்ருதம்
விஹாயஸோபமம்விராட்புரோகஸர்வஸாக்ஷிணம்
விகாரிமாயயாமுதாக்ருதாகிலப்ரஜாசயம்
குரூத்தமாதிஶங்கராக்யகோவிதம்பஜாம்யஹம். (க)

க்ஷராக்ஷரத்வயாதிகம்ஸநாதனம்புராதனம்
நிராமயஸ்வரூபிணம்நிரீஹநிர்க்குணவ்யயம்
ஶரீரரூப்வர்ஜிதம்ஸ்வயம்ப்ரகாஶலக்ஷணம்
குரூத்தமாதிஶங்கராக்யகோவிதம்பஜாம்யஹம். (உ)

பராபரம்ஶிவாத்மகம்ப்ரபுல்லபத்மலோசனம்
விரூபசித்ஸுகாத்மகம்விதூஷ்யதோஷகண்டனம்
தராதிபூதநாயகம்தனுத்ரயப்ரகாஶகம்
குரூத்தமாதிஶங்கராக்யகோவிதம்பஜாம்யஹம். (௩)

## குருஸ்தவாஷ்டகம்.

நிரஞ்சனம்நிஜாத்மகம்பரோக்ஷபோதவர்ஜிதம்
பவாப்திஶோஷணம்ஸ்வபோதநிய்யஶக்திரூபகம்
அநாதிஜாலஸூதனம்கதப்ரபஞ்சவ்யாபகம்
குரூத்தமாதிஶங்கராக்யகோவிதம்பஜாம்யஹம். (௪)

சிதானந்தரூபம்சிதாகாஶதத்வம்
ஸதாகாரமத்வைதஸத்ரூபபாவம்
ஹ்ருதாகாஶஸம்ஸ்தம்சிதாபாஸதீபம்
பஜேஶங்கராசார்யமாநந்தமூர்த்திம். (௫)

அநாதிம்குரும்ப்ரம்ஹரூபப்ரகாஶம்
மனோபுத்யஹங்காரசித்தாதிதூரம்
ஸுநாதாத்யதீதம்சிரந்தியாத்ருவஶ்யம்
பஜேஶங்கராசார்யமாநந்தமூர்த்திம். (௬)

அநந்தம்விபும்நித்யகைவல்யரூபம்
ப்ரபோதாத்மகம்ஸர்வமாயாவிதூரம்
மனோஜாததுஸ்வப்னதுர்மோஹஶூன்யம்
பஜேஶங்கராசார்யமாநந்தமூர்த்திம். (௭)

நிதாந்தம்வஸந்தம்நிஜாநந்தகோப்யம்
மஹாவாக்யவாச்யார்த்தலக்ஷ்யார்த்தலக்ஷ்யம்
குகாராத்யதீதம்ருகாரப்ரகாஶம்
பஜேஶங்கராசார்யமாநந்தமூர்த்திம். (௮)

ஸஏவம்குருத்யானமூலம்படேத்ய
ஸ்ஸதாமானுஷம்முக்திபாவம்ப்ரஸீத்தம்
ஸதாபந்ததூரம்புனர்ஜன்மபேதம்
மஹாதிவ்யவிக்ஞானநிஸ்ஸம்ஶயார்த்தம்.

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# நிர்யாணுபூதி.

## திருவருள்விலாசப்பரமகுருவணக்கம்.

அண்டாண்டபகிரண்டமனைத்துமாகியல்லவுமாய்க்
கண்டவகண்டவனுபவமுங்கடந்துகாணுங்காட்சியும்போய்
விண்டுவிளம்பும்வகையிலதாய்விபுவாம்பரிசின்விளங்கியொளிர்
பண்டைப்பொருளாம்பரமகுருபதநஞ்சிரத்திற்பரித்திடுவாம். (க)

நித்தசுத்தபுத்தமதாய்நிகமாபேத்யநிட்களமாய்ச்
சத்தியஞானனந்தமதாய்ச்சதசத்துணர்வின்றாகமா
மத்திபாதிப்பிரியமதாலணையும்பிரமவனுபவத்தி
னுய்த்துமறுசமயநிறுவுமொருவற்பழிச்சியுளமகிழ்வாம். (உ)

வேறு.

நவில்பிரமமாயிலங்குஞானமாகி
நண்ணுசபளப்பிரமநாதமாகிப்
புவிபுகழுமீசனெனப்பொலிவதாகிப்
பூரணசிற்சிவனாகிப்புனிதவாசத்
துவடருநற்றுளவமணிவிண்டுவாகித்
தூயமறைக்கிழவனெனுந்தோன்றலாகி
யவரவருக்காம்வடிவினமர்ந்தாட்கொள்ளு
மாதிகுருசங்கரான்றாளணுகிவாழ்வாம். (௩)

ஆதிநடுவீறிலதாயகண்டமாகி
யனுபவவத்தாயனந்தானந்தமாகிச்
சோதிசுயஞ்சைதன்யசொரூபமாகிச்
சுத்தவடியாரிதயச்சுதையதாகி
யோதுமனமுறையுணர்வற்றென்றதாயென்
னுளமௌனத்தவிசமர்ந்தவுறுதிப்பேறு
யேதமறுத்திடுஞ்சகதகுருவாயோங்கி
யிலகுமவன்பொன்னடிக்கீழினிதுவாழ்வாம். (௪)

மருளிரியத்தனுகரணபுவனபோகம்
வழங்கிமலமறுத்திடுமகேசனாகி
யருளமுதமுதவுமெமதன்னையாகி
யரியபலகலையுணர்த்துமப்பனாகி
யிருமையொழிந்திடவியல்பினியைந்ததாகி
யிருந்துயிருக்குயிராகியின்பநல்குந்
திருவளர்சற்குருபகவத்பாதனெங்கோன்
சேவடியெநாவடியிற்சேர்த்துவாழ்வாம். (௫)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# மரபுவணக்கம்.

மருவாய்மலரா
யருவாயகமாய்த்
திருவார்பரமா
ருருவாகுதுமே. (௧)

அறிவாஞானக்
குறிதீர்மோன
விறலார்தான
முறநாடுதுமே. (௨)

நிபமற்றொளிருஞ்
சபளப்பிரம
விபுவைத்தொழநற்
சுபமுற்றிடுமே. (௩)

தேசுலாவுறும்
ஈசனார்பதம்
நேசமாய்நிதம்
பேசுவாமரோ. (௪)

விரித்தசெஞ்சடை
யுருத்திரன்பதங்
கருத்துளூற்றிடச்
சிரத்தில்வைக்குதும். (௫)

வாரணந்துயி
னாரணன்பதஞ்
சேரொணங்கொளிற்
சீரணிந்திடும். (௬)

வேதமெய்தரும்
வேதனைத்தொழ
வேதமற்றிடும்
வேதமுற்றிடும். (௭)

பிரமன்மனத்தெழு
பிரமவசிட்டமெய்ப்
பிரமவிதைத்தொழப்
பிரமையதற்றிடும். (௮)

சத்திபாதசீர்
நித்தமோதிறற்
பெத்தமாயவே
முத்தியாகுமே. (௯)

அரியபராசர்தம்
விரையமலர்த்தாள்
பிரியமதுறவே
துரியநிறுவுமே. (௧0)

வாதராயணன்
பாதபங்கயம்
ஓதுவார்பவஞ்
சேதமாகுமே. (௧௧)

சுகரடிமுடிபட
வகமமதைகளறு
நகமகிழ்தருநல
மிகுமிததிசயம். (௧௨)

கௌடபதர்ப்பத
வௌடதமுட்கொளக்
கௌவுடன்மலப்பிணி
தவிடுபொடிப்படும். (௧௩)

கோவிந்தன்பத
மேவும்பண்பத
நாவுந்தும்வித
மாமுந்தும்விதம். (௧௪)

அகத்தவிசமர்தரு
சகத்குருசங்கரன்
மகத்துவமறையுமின்
சுகத்தினிதமரவே. (௧௫)

அதிபன்சங்கரன்
விதிதஞ்சிரமுறு
பதினல்வரர்பத
மதிகொண்டிடுவாம். (௧௬)

அத்விதானந்தவாதபன்
வித்தியாரண்யதேசிகன்
பத்மபாதங்கணண்பினர்
முத்தியாகமுடிசேர்க்குதும். (௧௭)

கைப்படுதீங்கனி
யொப்புறவொப்பறு
மப்பயதீக்கத
வப்பனைவாழ்த்துதும். (௧௮)

எம்மான்சங்கரன்
சிம்மாசனமமர்
நம்மாரியர்பதங்
கம்மார்தாநிதம். (௧௯)

சித்தாதனமிசைச்
சத்தாயிலகுறும்
வித்யானந்தனை
வைத்தாய்குதுமே. (௨0)

அருளிறைசங்கர
னருள்வழியுறழ்தரு
மருள்விழியவர்பல
ரருள்வழியடைமினே. (௨௧

அவரவர்வினைவழி
யவரவர்வழிபட
வவரவர்குருவெனு
மவர்நமதிறையே. (௨௨)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# திருவடிமாலை.

கலிவெண்பா.

எங்கும்வியாபகமாயேய்ந்தபரம்பொருளே
பொங்குமுருவம்புனைந்தருளித்—துங்கமதாய்ப் (க)

பார்மேற்றிகழப்பவனிவருங்கோலமதை
யோர்நாவினாற்கூறலுற்றதுவோ—ஏர்மே (உ)

வனந்தன்றனனுமறையவொண்ணாதேனுங்
கனந்தோன்றாவாசைநிகளத்தா—லனந்தமவில் (ங)

சிற்சிலவென்றாற்கூறுஞ்சின்னங்குறையுறினு
மற்புதமாயாய்ந்திரனந்தகுண—சிற்பரன்றன் (ச)

கோலத்தைநீவிர்குறிக்கொண்டவாகூறின்
சாலவுமைப்பணிவேன்சாற்றுமிடத்—தேலவிங (ரு)

னெல்லாநலனுமியைந்ததிருக்கரமும்
நல்லார்பொல்லாருவக்குநன்னுதலும்—பல்லோர்தம் (சு)

பண்பிற்பிரியாதபார்வையும்பக்குவர்த
நண்பிற்றயைசுரக்குநல்வாக்குந்—திண்புவியிற் (எ)

றிக்விஜயங்கூறுந்திருவோலக்கச்சிறப்புந்
தக்ககலையாவுமுணர்தந்நிகரில்—சிற்குணஞ்சேர் (அ)

ஞானபண்டிதர்களெனுநல்லுறவோர்தற்சூழ
மோனநிலையுற்றமுத்தர்முன்பினிடைத்—தானமுற (கூ)

வெம்பிரான்போற்றியிறையேயடிபோற்றி
தம்பிரான்போற்றியெனத்தாழ்ந்துருகு—மன்பர்குழா (க0)

மார்த்தார்த்தலறியடியோங்கட்காம்வினையைத்
தீர்த்தாளுதியெனவேதெண்டனிடப்—பார்த்தவிட (கக)

மெங்குமிருபிறப்போரேகார்த்தியேமுதலாப்
பொங்கும்புரணகும்பம்போர்த்திலகித்—தங்குறவே (கஉ)

வாச்சியங்கட்ரமெல்லாம்வாழ்முதல்வந்தானென்றே
யோய்ச்சலொழிவின்றியங்கணேலமிட—வாச்சரிய (௧௩)

மொன்றிப்ரம்ஹோஹவுபசாந்தவாழ்வடைந்த
நன்றின்பவாளொனநாற்றிசையு—நின்றோர் (௧௪)

பலகோடியாய்க்கூடிப்பாடிப்பணிந்தேத்த
விலதானமாயையிலேயென்றே—நிலையாகப் (௧௫)

பேரிமுதலாகப்ரம்ஹதாளம்முழங்கச்
சீரியவேதத்தொனியாற்றெள்ளியநல்—லோர்விதந்து (௧௬)

பேதப்பிணக்கையறுத்துப்ரம்ஹானந்த
நாதத்தொன்றுகிநயந்துருக—வோதிக்கொண் (௧௭)

டந்தணர்கள்சூழவநாதிமுதலிற்றைவனைத்
தந்தமியல்புணராத்தாபதர்கள்—சந்தமுறு (௧௮)

மெங்கோனெழிற்கடைநோக்கெய்தியிதாகிதத்தா
ணங்கோடிங்கோடியலமரலற்—றெங்கள் (௧௯)

சுருதிக்கிசைந்தசுவானுபவசித்தி
யொருமையுதவுந்தண்டந்தாங்கி—நிருமலமாக் (௨௦)

கவிகைசிவிகைகரிபரிவாரங்கொண்
டுவகைதருபொன்மணிபூண்டோங்கித்—தவமார் (௨௧)

விழுமியவேடம்புனைந்துவித்தகனுமெய்துஞ்
செழுமையிஃதாமென்னச்செப்ப—வொழிவிலின்பச் (௨௨)

சித்தர்ஜயஜயெனத்தேவர்கணம்வாழ்த்தெடுப்பச்
சித்தசுத்தியுற்றடையுஞ்சித்தியர்கை—வைத்த (௨௩)

விருதுத்துஜாலவட்டமேத்கையசாமனாமற்
றரிதிற்சிறந்துசங்கமார்க்க—விரதமொடு (௨௪)

பொற்றடிகைவாரங்கொள்போதகசீலத்தவர்கள்
சொற்கடங்காமேனியன்றன்சூழலின்முன்—பொற்பப் (௨௫)

பதியெனும்ஸ்ரீமத்பரமஹம்ஸவறஞ்சே
ரதிபபரிவ்ராஜகாசார்ய—இதமுறுஸ்ரீ (௨௬)

சற்சங்கரபகவத்பாதனெனுந்தற்பரனே
சிற்கனசின்மாத்ரசிச்சச்சிற்பரனே—நற்பரம (௨௭)

சத்தியனேசாட்சாத்சகத்குருவேசாட்குணிய
வித்தியானந்தமருள்வேதியனே—புத்தமிர்த (௨௮)

வானந்தமாகடலேயண்டபகிரண்டமுற்றுந்
தானந்தவநிறுவுந்தத்துவனே—மானஞ்சேர் (௨௯)

ஷண்மதோத்தரசமிஸ்யத்வம்ஸாரூட
வுண்மைநிலைகாட்டியருளுத்தமனே—யண்மையுடன் (௩0)

சேய்மையாய்நின்றவனேசேர்கதியிதென்றருளான்
வாய்மைநிலைகாட்டியருள்வானவனே—தூய்மைநிறை (௩௧)

யத்துவிதத்தாபிதனுமாரியசிகாமணியே
நித்தசுத்தபுத்தமுத்தநிர்க்குணனே—சித்துருவா (௩௨)

நாதாபராக்கென்றுநாற்புறனுங்கட்டியங்க
ணீதாபராக்கென்றுநீடுரைக்க—வாதரவாய் (௩௩)

வந்தவடிவாசாமகோசரவாழ்வாகுமடி
பந்தமறுக்கும்பராத்மனடி—தொந்தவுயிர் (௩௪)

தோறுந்தழைத்துச்சுகானுபவவத்தாகி
வீறும்படிவிசும்பாய்மேவுமடி—யீறின்றிப் (௩௫)

பூரணமாயோங்கிப்பொறிபுலனந்தக்கரண
காரணமுங்காரியமுங்காண்கிலடி—பேரணிந்த (௩௬)

மாயையவித்தையெலாமாண்டவிடத்தாகுமடி
யாயுமறிவுதயமாக்குமடி—நேயமதாய்ப் (௩௭)

பாடிப்பரவிப்பணிபுரிவார்தங்கள்பவ
மோடியொதுங்கவெழுந்தோருமடி—பாவிக்கக் (௩௮)

கிட்டுமோவென்றேங்கிக்கீழ்மைக்குங்கீழ்மையெனப்
பட்டுவாழ்வேன்செய்தபாக்கியமோ—நட்டமதாய்ப் (௩௯)

பாபந்தொலைந்தபடியோபரிதவிப்பேன்
றுபந்திருச்செவியிற்றுனடர்ந்து—பூப (௪0)

குரோவென்றுகீர்த்தித்துக்கும்பிட்டுப்போற்றி
ஹரோஹரவென்றேயவசமாகத்—தராதலத்திற் (௪௧)

றுன்வந்தகோலத்தகைமையோதானறியேன்
றேனுவந்துநாடுந்திருவாக்கான்—வான்வந்த (௪௨)

தேவர்க்குந்தேவாயதேசிகன்றன்வார்த்தைசொலித்
தாவிச்சுழலுஞ்சழக்கையொழித்—தாவிக்குத் (௪௩.)

தக்கவாழ்வாகுஞ்சதசத்திரண்டினடு
மிக்கிருந்தமேனிவிளங்கவிழித்—தக்கணமே (௪௪)

ஞானாப்ரமதீக்ஷாஞாயவருண்முத்திரையென்
மானாபிமானமகல்வானருளிக்—கோனானேன் (௪௫)

றந்தவடிநாயேன்றடுமாற்றந்தானழியச்
சிந்தைகுடிகொண்டசெம்பொனடி—யந்தமிலாச் (௪௬)

சோதிசுயஞ்சைதன்யத்துல்யனடிசுத்தவகப்
போதின்மணவடிவாம்புங்கவடி—மாதவத்தோர் (௪௭)

சென்னியெனவந்தவடிசித்துருவமாகவென்னுண்
மன்னித்திகழுமகிபனடி—தன்னிகரி (௪௮)

லாதிகுரவனணியடிசீவேஸ்வரனொன்
றேதும்பிரிவறுத்தவொப்பிலடி—கோதறுமா (௪௯)

மோகமாவென்னுண்முளைத்தவகங்காரமுதற்
போகமொடுபோக்யமெலாம்போக்குமடி—யேகமய (௫0)

மானவடிபூதபௌதிகத்திலாழுமெனை
மோனக்கடலின்முழுத்துமடி—நானிவனென் (௫௧)

றுன்னுதுணையாதொழுகும்வண்ணம்புரிந்த
பொன்னுருமேனிப்ரபோதனடி—யென்னைப் (௫௨)

பொருளாக்கியாண்டவடிபோந்தவெலாம்போக்கி
மருளேற்கிரங்குமடிமாணத்—தெருளாக்கி (௫௩)

நின்றவடிநீஞணிசமுணராதேயுழல்வேற்
கின்றுவெளியாயிலங்குமடி—தன்றயையின் (௫௪)

சீர்த்தியிருந்தவாறென்சொல்லுகேன்செம்மையிலாத்
தூர்த்தனேன்செய்ததுதியுவந்து—பூர்த்தி (௫௫)

யருள்வைத்தசெய்யனடியாரணங்கட்கெட்டாப்
பொருள்வைப்பாம்போதனடிபோத—விருளிங் (௫௬)

கிரியவெழுந்தவடியேகமாயென்னே
றுரியசமாதிக்கணடியொன்றும்—பெரியவர்தம் (௫௭)

பேருய்ப்பிறங்குமடிபேசாப்பெருமையடி
யாருறுக்கப்புறத்திலானவடி—வேருகி (ருஅ)

யெங்கும்விளக்கமாயெப்பொருளுந்தானுகித்
தங்குஞ்சுவானுபவசாதனந்தீர்—துங்கநிலே (ருகூ)

யாளர்பூசிக்குமடியன்பிற்சிறியேனே
யாளமதித்தளித்தவத்தனடி—நீள்பவத்தை (சூ0)

மாய்த்தவடிவல்வினேயேன்மாமனத்துவானமிர்தாய்
வாய்த்தவடியென்னேமலர்த்துமடி—சாய்த்தமுடி (சூக)

மீதிற்பொறித்தவடிமேலாகிநின்றவடி
பேதித்துமாயையின்வேர்பேர்க்குமடி—சாதித்த (சூஉ)

வந்நிலேயேதஞ்சமெனவாருந்தமியேனே
முன்னிலேச்சுட்டின்றிமுடித்தவடி—மன்னும் (சூங)

பிரமானுபூதிப்பெருக்கேவடிவா
மான்மாலயனடியெஞ்ஞான்றும்—இரவுபக (சூச)

லின்றிவிளங்குமேகாந்தவிருடிகண்மற்
றென்றிரண்டென்னுதுறையுமடி—நன்று (சூரு)

வகிலாண்டகோடிகண்டவக்கணத்தினுய்யச்
சகலவிபவச்சடங்க—தகமகிழ்வாற் (சூசூ)

ருனியற்றிக்காட்டிந்தமாளுவடிதன்னடிய
ரூன்பவத்தைமாற்றுமுதாரனடி—வான்முதலாம் (சூஎ)

பூதங்களிலார்புருடார்த்தமானவடி
போதக்களஞ்சியமாம்புண்யனடி—நேதியினு (சூஅ)

னீங்கும்பொருளதற்றுநீங்காத்தெருளதுற்றுத்
தூங்குமறிவீந்தசொருபனடி—யேங்கு (சூகூ)

மெனேயழைத்தாட்கொண்டவடியிம்மையறப்பாதார்ச்
சனேபுரியத்தந்தவடிதத்தம்—நினேவிறந்தோர் (எ0)

போற்றுமடிபொன்னுலகோர்பூவுலகோருங்குழைந்து
ளேற்றுமடியெல்லாமாய்நின்றவடி—தேற்றமின்றிப் (எக)

பூதபெளதிகத்துப்புதுமைவெளியாக்குமடி
யேதமறுசீவன்முத்தரெய்துமடி—சேதனனுய்ப் (எஉ)

புன்கரணவாதனையாற்போக்குவரவாய்ப்போந்தே
னென்செய்விரகறியேனெண்ணியவா—றின்னறவிர்த் (எ௩)

தெல்லாமுடிக்கவிசைந்திடர்மெய்பொய்மூன்று
யல்லாயிருந்தபிணிப்பாங்கதறச்—சொல்லாருந் (எ௪)

தூயவரமீந்தான்றுணைவன்றுதிப்பவர்த
நேயபரமானந்தநிர்ச்சிந்தன்—றூயகமாய் (எ௫)

மேவுஞ்சின்மாத்திரமேமேதினியின்மானிடனாய்த்
தாவுமுயிர்க்கிரங்கித்தண்ணருள்கூர்ந்—தோவுமனத் (எ௬)

தொன்றிரண்டென்னுமலோர்படித்தாய்நின்றிடவே
தன்றிருத்தாணீழறனிற்றனிருத்தி—வன்றுயர்நோய் (எ௭)

தீர்த்தபெருமான்றிகழடியர்தங்குழுவிற்
சேர்த்தவருண்மேகமெனச்சிந்தித்துப்—பார்த்தவிட் (எ௮)

மெல்லாந்தானாகக்கண்டெண்டிசைமேற்கீழ்நடுவாய்ச்
சொல்லாதுசும்மாசுகத்திருத்த—வல்லவடி (எ௯)

யென்றிங்குருகேனிடைந்திடைந்தென்புருகி
நன்றிநினைந்துநடுநடுங்கே—னென்றுணையே (அ0)

போற்றியெனக்கைகூப்பிப்போதாந்தமேனியனை
நாத்தழும்பேறத்துதிக்கநானறியே—னேத்துமவர் (அ௧)

தங்கருத்திற்றோய்சமதமாதிகடேறேன்சழக்கி
லெங்கள்பிரானிட்டமிதென்றென்செய்கே—னிங்கிசைத்த (அ௨)

வாறிருந்ததல்லாலறியேன்மற்றின்றிநிற்கப்
பேறளித்தபெம்மான்பிறங்குமடி—கூறுமத (அ௩)

மாறுக்குமானவடியன்பிற்கினியவடி
மாறும்விகிர்தமெலாமாய்த்தவடி—மீறியிங (அ௪)

னெல்லாங்கடந்தவடியென்றனைவாழ்வித்தவடி
கல்லாதபுல்லறிவாற்கட்டுரைத்த—தெல்லாமு (அ௫)

மாதரித்தவொப்பிகந்தவானந்தக்கூத்தனடி
சாதிசமயமதாய்ச்சார்போத—வாதனைதீர்த் (அ௬)

தாண்டபுனிதனடியாட்பட்டார்தத்தமக்கு
வேண்டுமவையெல்லாம்விரைந்தளித்துக்—காண்டகுநற் (அ௭)

காட்சியாய்நிற்குமடிக்ற்பிதாகற்பிதந்தீர்
மாட்சிமையாய்மன்னுமஞ்ஞானடி—சாட்சியாய்த் (௮௮)

தேகத்திரயத்திமிர்ப்பொழிக்கவல்லவடி
யேகத்தெதிரதிலாவீசனடி—சோகத்தி (௮௯)

லாழுந்துரிசறவநாதிவடிவாக்குமடி
யூழின்வலிதொலைக்கவுற்றவடி—சூழ்பிணிக (௯௦)

ணீக்குநிகமாந்தநிருபாதிகன்றனடி
போக்கும்வரவுமிலாப்புத்தவடி—வாக்கிறந்த (௯௧)

வத்துவடிவாக்குமடிவாதனையெலாந்துடைத்து
முத்திவடிவாக்குமுதலவன்றனடி—யுய்த்தகர (௯௨)

முத்தமணியென்னமுடித்தெவையுங்காட்டுமடி
சித்தம்சிவோகமெனச்செய்தவடி—மத்துறுவேன் (௯௩)

கன்னெஞ்சைநீராய்க்கரைக்குமடிகற்பனைக்குண்
முன்னொடுபின்கீழ்மேலாமோகந்தீர்த்—துன்னுமொரு (௯௪)

மாத்திரையிற்காமாதிமாற்றிமஹானந்தமருள்
சீர்த்திறனென்னுலிதெனச்செப்புமதோ—மூர்த்தியின்றன் (௯௫)

வல்லபத்தான்வாராவகையடைவதல்லான்மேற்
செல்லுறுகாலந்திசைதேசத்திடையார்—தொல்லைவினை (௯௬)

தீர்ந்துபிழைத்திடுவார்சிந்தாகுலந்தவிர்ப்பார்
தேர்ந்துசுகிப்பார்களெனச்சிந்தித்துச்—சோர்ந்தவென்றன் (௯௭)

குற்றந்தீர்த்தாண்டகுணக்கடலின்கோலவடி
நற்றுணையாயுள்ளேய்நளினவடி—சிற்சுகமீந் (௯௮)

தென்னையழித்தெழுந்தவின்பவடியெந்நாளுந்
துன்னுசுகதுக்கதொந்தாதீதவடி—யன்னியமற் (௯௯)

றொன்றாய்ப்பலவாயுயிர்க்குயிராய்நின்றவடி
யின்றாயுளதாயியைந்தவடி—பொன்றாத (௧௦௦)

வின்பவடியெல்லாமிறந்தவிடத்தாகுமடி
யன்பாகப்போதவிழ்தேனாருமடி—வன்புகொடு (௧௦௧)

முப்பொருளதாய்ச்சிதைந்தமூலம்வெளியாக்குமடி
கைப்படுநெல்லிக்கனிபோற்காட்டியென்னை—யெப்பொழுதுஞ் (௧௦௨)

சான்றாய்நிறுத்தித்ததாகாரமாக்குமடி
மூன்றும்பாழுங்கடந்தமூலனடி—பூன்றவருட் (க0௩)

போனகமீந்தேதன்புலமறியச்செய்தவடி
யீனமெலாமாற்றியிளைப்பாறுமிட—மானவடி (க0௪)

தத்துவங்கட்கெட்டாத்தனிவித்தாய்நின்றவடி
பெத்தமுத்திகாலத்தும்பேதமிலா—தொத்தே (க0௫)

யநாதிமுதலிற்றைவரையர்மவருக்காகித்
தனுதுநிறைவாற்சபளிதத்தாய்—மனுதிதொடர் (க0௬)

பில்லாவிடத்திதெனவெண்ணுமெதிரீடிறந்து
சொல்லாலுணர்வாற்றொடர்பறவே—நில்லென் (க0௭)

றிருந்தபடியேயிருத்துமெய்பொருளுந்தானும்
பெருந்தகையோன்செய்யவடிபேரா—திருந்துதிசெ (க0௮)

யேழைத்தொழும்பரெலாமீடேறவந்தவடி
மாழ்குமனவிருளைமாற்றுமடி—யேழாம் (க0௯)

புவனமதிற்பல்வடிவாய்ப்போவேனைச்சார்பா
நவையறுத்துஞானமயமாக்கிச்—சிவமோ (கக0)

டயிக்கந்தெரித்தேயநன்னியமாய்நாளு
முயிர்க்குயிராய்நின்றவடியோதி—யுயக்கருணை (ககக)

வைத்தவடிபொல்லாமலகன்மப்பேய்களெலா
மொய்த்துழன்மாயைக்காட்டைமூதறிவா—மெய்த்தழலான் (கக௨)

வேகவெளியாக்கிவிவித்தத்தெனைவைத்து
வாகைபெறவேவளர்க்குமடி—யோகத் (கக௩)

தடியர்முகபங்கயத்துக்கர்க்கனெனத்தோன்றி
மடணிகுமாயோகவடிமானக்—கடையேன்றன் (கக௪)

கண்ணுகிநின்றவடிகாலத்திரயமறந்
துண்ணுடிநிற்கவெமக்குற்றவடி—மண்ணோர் (கக௫)

செய்தவமேயென்னத்திகழுந்திருவடியென்
னையமறுத்தாண்டவடி. (கக௬)

பிரம்ஹார்ப்பணம்.

---

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# பொருண்மாலை.

வெண்கலிப்பா.

எல்லாமாயல்லவுமாயெங்குநிறைந்தபொருள்
சொல்லான்மனத்தாற்றொடாராம - னில்லென் (க)
றிருந்தபடியேயிருத்தியின்னறவிர்த்தாள
மருந்தாயகமதனின்மன்னுபொருள் - பொருந்தியமா (உ)
வியாவுந்துடைத்தபொருளியானிவனென்றுதொன்றும்
மேவும்படியமைத்தமெய்ந்தபொருள் - தேவர்கடந் (ஙு)
தேவாயிலகுபொருடேசிகனுயாஞகி
யோவியம்போலோங்கவரமுதவுபொருள் - பாவனைபோய் (ச)
நிற்குநிலையானபொருணித்தநிமலந்திகழு
மற்புதவானந்தவெள்ளத்தாழ்த்துபொருள் - கற்பனையை (ரு)
நேதித்தகம்பாவநீக்கவிசைந்தபொரு
ளாதிசகதகுருவானபொருள் - போதமுறுங் (சு)
கோலத்தபசியர்கள்கூடிக்குலாவுபொருள்
சாலவெனைக்கவர்ந்தசான்றபொருள் - மாலயனு (எ)
யரனுகிநின்றபொருளஞ்சலஞ்சலென்றடியேன்
சிரமேற்றிருப்பாதஞ்சேர்த்தபொருள் - நிரவயவ (அ)
நிட்களநிர்த்தொந்தநிராமயமாய்நீங்கா
துட்புறனென்றில்லாதுறைந்தபொருள் - திட்பமதா (கூ)
யீதென்றறிவரிதாயெண்ணுமெதிரீடிறந்து
வேதமுடிவாய்விளங்குபொருள் - ஏதமுறுஞ் (க0)
சத்தசத்தாய்ச்சிற்சடமாய்ச்சலனமுறுமின்பதுன்பாய்ப்
பெத்தமுத்தியாய்ப்பின்னுபின்னமுறு - தத்விதமாய்ச் (கக)
சித்திரதீபம்போலச்சேட்டையதற்றொன்றுகச்
சித்தத்தருளுருவாய்ச்சேர்ந்தபொருள் - மெய்த்தவர்சூழ் (கஉ)
சங்கராசார்யனெனச்சாட்சாத்கரித்தபொருள்
புங்கமாயாண்டபொருள். (கஙு)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# பரதத்துவநிச்சயம்.

எவன்றிவினிற்சகமுயிர்பரவினமுறும்
எவனருள்பெறவடியவர்குழுவெழுதரும்
எவனவனவளதுவெனநனியிலகுறும்
அவனடிமுடிபடவடைவுடனடைகுதும். (க)

எவன்மறைமுடிவினினதுவெனவிலகுவன்
எவனதிசுகவடிவெனநிதமமர்குவன்
எவன்முழுதெனவலதெனமனவிசைகுவன்
அவனமதுறவுசெல்வமதெனவறைகுதும். (உ)

எவன்மலைதனின்வளர்குவன்பசுபதியென
எவன்கடலிடைத்துயில்குவனிருநிதியென
எவனலர்மலர்மிசையிவர்தரும்விதியென
அவனுடலுயிர்பொருளெனவகமகலுதும். (ங)

எவனயனெனச்சகவினமெனுமியல்செய்வன்
எவனரியெனவவைநிலைபெறவருள்செய்வன்
எவனரனெனவிரிதருமிறற்றொழில்செய்வன்
அவனலதிலதுளதெனுமதிதவிகுதும். (ச)

எவன்முனமிருளினின்றெடுத்தெனைவிடுத்தவன்
எவன்றனுகரணபோகாதிகள்கொடுத்தவன்
எவனெனையாளமூவருள்வடிவெடுத்தவன்
அவன்வடிவலதுமற்றறிகிலனியானே. (ரு)

எவனுயிர்களினுயிரெனவினிதுறைபவன்
எவன்முதிர்பாடியத்ரயவியலறைபவன்
எவனறுமதநிறுவியெவணுநிறைபவன்
அவனெமையடிமைகொளரியசங்கரனே. (சா)

எவைகளுமெதனிடைவிதிமுறையெழில்பெறும்
எவைகளுமெதனிடைத்திதிபெறவெழில்பெறும்
எவைகளுமெதனிடையதிர்சியவெழில்பெறும்
அவணிலைதருமதையடையகின்றனமே. (எ)

எதுபரிபுரணமதெனவெனுணிகழ்வுறும்
எதுகுறைநிறைவறவெதிரறத்தவழ்வுறும்
எதுவிருளொளிதபுமிடமதிலுறழ்வுறும்
அதுநிசபரமெனவனுதினம்புகழ்குதும். (அ)

எதுவரிதரிதெனுமியல்புடன்மிளிர்தரும்
எதுமனமுரையுணர்வறவிதமெனவரும்
எதுசொலினடர்பொருளெனுமியலினமரும்
அதையனுதினமுளமதுதுதிபுரிகுதும். (கூ)

எதையடைதரவவமெளிதினினிடைந்திடும்
எதைமுனிவரர்குழுவிறைஞ்சிமெய்குளிர்ந்திடும்
எதையறிதரவயலறிவதிங்கிறந்திடும்
அதையகம்பிரமமென்றகமதொன்றிடுதும். (க0)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# மஹாதேவமாலை.

குருதரிசனம்.

பூமன்முதற்பண்ணவர்தமுளத்திற்பொலியுஞ்சின்மாத்திரமே
ஓமென்பதனுட்பொருளீதெனவேயுணர்ந்துலகுய்யச்சுக
நாமம்புனைசிவசங்கரதேசிகஞானவரோதயனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (க)

ஆமலவென்றேயதட்டிச்சரித்தங்கடாதவெலாம்புரியுந்
தீமைமிகுஞ்சிதடன்சிறியன்சிலுகன்சிவவேடந்தாங்கிக்
காமம்பயினெஞ்சகக்கள்வனேனைக்கவர்ந்தருள்சங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (உ)

நாமரூபநடுவாய்நடமாடிநலமிலவற்றைநாடி
வேமனத்தாபவிடாமயன்மீறிவெகுண்டுவிண்மண்புகுவேன்
சாமுனம்வந்துதடுத்தாண்டருளுஞ்சகத்குருசங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (ங)

சாமமறைமுடிவாங்தகுமுப்பதத்தன்மைமுன்னிலேபடர்க்கை
யாமதுநீயென்றறைந்தவாறங்கையதாங்கனிபோலடைந்த
தோமிலனுபவமலர்புனேவானடித்துணேயருள்சங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (ச)

பாமரப்பேய்வயப்பட்டுப்பல்லூழிபவத்திற்சுழன்றவினே
யேமெனவெண்ணுதிறுமாங்தெமக்கிணேயின்றெனவேகுலேந்த
நீமமிலாநாயினேன்றனேயாண்டநிஜானந்தசங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (ரு)

காமர்தருங்கோலக்காட்சியுடன்சகத்காரணன்வந்தவன்றே
போமவரோடுபுலம்பிப்பினேகிப்புராதனற்போற்றிவந்தேன்
ருமருகாவழையாத்தடுத்தாண்டதயாநிதிசங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (சு)

தாமதராசதச்சார்பறச்சத்துவசாதனத்தாற்றனியாய்
நாமவரோடிங்கவையிவையென்னுநவையகன்முர்க்கருளுஞ்
சேமநிதிச்செல்வராயசிகாமணிதேசிகசங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (எ)

காமுகனென்றன்கருத்தமர்கள்வன்கலிதருமாமயலா
ரூமன்கனவினுவந்தருளும்பனுளமமாநிரலா
ரோமமிகப்பாடியாடித்துதிப்பானெமக்கருள்சங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (அ)

நேமியனீள்சடையன்பிரமன்பரனிர்க்குணனித்தசுத்தன்
றாமொழியாளன்சுயம்புசுசீலன்சுபோதன்சுடர்க்கொழுந்தென்
சாமிகுலதெய்வந்தந்தையுடன்ருய்தமர்சங்கராரியனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (கூ)

தேமலர்ச்சோலேசெறிதிருக்காஞ்சிதிகழநலனுதவுங்
காமக்கோட்டிப்பீடக்காரணகாரியகாருணியன்பகவன்
ருமனவாயுடனுமுணர்வாலறியாவணல்சங்கரனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே. (க0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# அநுபூதிநிலையம்.

நயநிஜநடைநொடிநலமிலனவிலுரைநயந்தளியி
னுயர்சுருதியொடனுபவமிலைதருமொருமையனிவனென்
றயனரியரனுடையனுபவமுதவியததிசயமெண்
பயனருள்குரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (க)

அதிரசமதிசுகமதிசுபமதிசயநினதருள்கா
ணதுவிதுவுதுவெனவலமருமறிவிலியெனவுதரு
திதமுடனெதிவரர்நிதிகுணவியல்விதென்றுரைசொலிமெய்ப்
பதமருள்குரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௨)

மலர்தலையுலகிடைவளமலிமகிமையர்வதிதரமுன்
னிலைநிகரிலைநிகரிலையெனநிறுவியதெனையருளா
யெலையறுகலைமுழுதிசையிறைமையதுறுமெழிலுடையோய்
பலர்பணிகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௩)

அகமகமெனுமொளியதுவெனுமசிபதவறுதிபெறச்
சுகவுதயமதுறவதிலெழுசுபசைதனியபரனே
மிகுமளியொடுவிகிர்தனைவியந்ததென்விளம்புதிநிகமம்
பகர்தருகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௪)

எனுமெணமுடிகுவதிலதுளதெனுமியலறிதரமுக்
குணமிசைகுடிகொளுநினதொளிர்குரைகழல்குறுகிடவே
துணிபுகைவலியசித்தியின்முரணிலையெனுஞ்சொலையடைந்தேன்
பணியணிகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௫)

முழுதுணர்முனிவரர்நரர்சுரர்மொழிதவழ்முருகவிழ்பொற்
பெழுகழலுறுபுனலிருமையதகல்வெனதுசிரமார்ந்
தழகமர்தரவழங்கியதருளுரிமையதலதறியேன்
பழமையகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௬)

அவமறுமகநிலையசைவறுமதிர்சியவடைவுட்ஞர்
தவமலிதருநினதுளமெதுவறைதரவெனுமுதியோய்
சிவசிவசிவபரசிவவெனுமிளிர்திதிமிகவருளாய்
பவபவகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௭)

பரிபுரணமதொருவடிவெனநிகழ்பசுபதியெனுநின்
பரமலதிலையெனதகமெனவளர்பரிசஃதருளாய்
ஹரஹரஹரஹரவெனமொழியடியருளமருநிஜ
பரபரகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௮)

அடிமுடிபடவிடர்பொடிபடவடர்வினைகெடவறிவின்
றிடமுடனடமிடமடமொடுமிடியுறழ்திமிர்விடவென்
றுடர்பறவுடலடலுயிர்பொருள்கொடுசுகமருள்புரியாய்
படிபுகழ்குரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௯)

தனைநிகர்தலமிலையெனுமுகதமனுசிங்கேரிதவ
ழனைகலைமகடவிச்திபநினடிமலர்வாழிநிகழ்
நினைவினினினைவெனவகனமர்நினதருள்கொடுசொலுமிப்
பனுவல்கொள்குரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே. (௧௦)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# குருவருட்பேறு.

தந்தைதாய்குருவுமாய்த்தரணிமிசையாருயிர்க
    டங்குமிடமாய்த்தயங்குந்
தருமன்பராம்பயிர்கடாமாயமர்ந்தே
    தழைக்கவருள்பொழியுமுகிலே
சிந்தாகுலஞ்செயிருடீரவெழுபானுவே
    சிவோகவடிவாகவடியேன்
சேர்கதியிதென்றுசெஞ்சேவடிசிரத்தருள்செய்
    சித்களாதீதவெனையா
ளெந்தையேயேகமேவாத்துவிதமென்றுமறை
    யேத்தும்பெருஞ்செல்வமே
யிதவகிதமாகிவருமிருமைநோய்தீர்த்தருளு
    மெழின்மேவுமாமருந்தே
சந்ததமுநின்சரணமேசரணகண்டிதச்
    சட்சமயதாபிதனெனுஞ்
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
    சாத்காரசகதகுருவே. (௧)

பகலிரவுஞானவஞ்ஞானமற்றொளிருநின்
  பாதபங்கயமறந்தே
பாழ்ஞ்சிந்தைவயமாகியவநிலையிதென்றே
  பகுக்கவறியாமலதுவாய்ச்
சகமீதுவாழ்வதேசதமென்றுநம்பியொரு
  சாண்வயிற்றின்பொருட்டாய்ச்
சரித்தெங்குமோடித்திரிந்துழலுமேழையேன்
  சஞ்சலமுறுதவண்ணஞ்
சகத்பாழுயிர்ப்பாழ்பரப்பாழ்கடந்தநற்
  றற்சொரூபத்தின்மருவிச்
சாஸ்வதானந்தமிகுசாம்பிராஜ்யமாகுமுப
  சாந்தமுறவருள்வதென்றோ
சகலகேவலரகிதசவிகற்பமாதிதவிர்
  சகசானுபூதிநிலையே
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
  சாத்காரசகதகுருவே. (௨)

நிர்வசனநிட்கர்மநிர்ப்பின்னநிர்ச்சல
  நிஜானந்தநிமலநிருப
நிர்க்குணவகோசரநித்யாசனுதிப
  நிராமயநிவாததீப
நிர்விஷயநிர்த்தொந்தநிர்மோகநிர்மாய
  நின்மலாதீதவென்றே
நின்றுருகிடாதநானென்பதறமாற்றுவது
  நின்பாரமலதென்மதக்
கெர்விதமியாவுங்கெடுத்தடிமைகொள்வரியார்
  கேடிலானந்தவடிவே
கேள்விக்கடங்காதகீர்த்திப்பிரதாபங்
  கிளர்ந்தசிற்சொருபவாழ்வே
சர்வவியாபகமாகிமுத்தொழினடாத்திடுஞ்
  சடிலனுதியர்களான
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
  சாத்காரசகதகுருவே. (௩)

நச்சும்வியாமோகியாய்நானெனக்குழறி
நலமிலாவற்றைநலமாய்
நாடியதனுன்வருபிராரத்துவமாதியாய்
நண்ணும்வினைக்கீடதா
மச்சமுறுவெம்பவத்துற்றுமுணராமலே
யகமகிழுமறிவிலேனை
யாதரித்தாய்க்குரியவன்புபுரியாமலே
யலமரச்செய்வதழகோ
மெச்சுமெய்த்தவமெய்திமுச்சகத்தின்வாழ்வை
மேவாதிருக்கவருளாய்
மிகுமளியினுற்சத்தியஞானமொடனந்தமா
மிக்கசித்திகள்விளைக்குஞ்
சச்சிதானந்தபரிபூரணசதோதய
சஜாதியாதிகளிறந்த
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
சாத்காரசகதகுருவே. (சா)

பரமென்றுமுயிரோடுபெற்றுபொருளென்றுமேற்
பாராதிபூதமென்றும்
பகருமுருநாமம்பெருங்கனவுபேய்த்தேர்
பளிங்கிலாரோபிதநிழல்
திரமன்றெனத்தெரித்துத்தேசகாலவத்
தின்பரிச்சேதரகிதத்
திறன்மேவுசிற்சடமிரண்டினடுவாகியுயர்
தேசசாரும்விழியினைக்
கரதலாமலகமாய்க்காணென்றுகாட்டியுறு
கண்மயலகற்றியாளுங்
கருணைக்கிசைந்ததோர்கைம்மாறுமுண்டோ
கசிந்துருகிநிற்கவருளாய்
சரவசரபேதமின்றாகியொன்றாகிய
சநாதனனந்தபகவ
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
சாத்காரசகதகுருவே. (ரு)

காட்சியாங்கண்கருத்தாஞேயமாகிக்
 கலந்தநின்கோலமுணரிற்
கடபடாதிகண்மிருத்துவுநூல்களாதியாங்
 காரணத்தன்றியிலேபோன்
மாட்சிமைசெறிந்தவதிரிசியதிரிசியமாகி
 மல்குமுனேயாவரறிவார்
மலமாயைகன்மமெல்லாமொருகணத்தினின்
 மடிந்தஞ்சலிட்டோடவே
வீட்சித்திரட்சிக்குமேதகுநினருள்பெற்ற
 வித்தகர்தமோடுவினைதீர்
வேதவேதியர்கள்புடைசூழ்ந்துவிஜயஞ்சொலும்
 விமலதேசிகநாதனே
சாட்சிமாத்திரமாய்விளக்கியெனையாள்குரவ
 ஜயசுயஞ்சோதிமயமே
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
 சாத்காரசகதகுருவே. (௬)

சதிசெயுங்கருவிகரணங்களோய்ந்தொழியுமோர்
 சாதகமுயற்சியுமிலேன்
சாந்தியொடுதாந்தியாதிகளாந்தவத்தினது
 சௌபானமேதுமறியே
னிதியாமுனைத்தேடுமெண்ணமேபெரிதாக
 நெட்டுயிர்த்துத்தேடிலே
னின்பாததாமரைக்கன்பர்தம்பாற்பணி
 நிகழ்த்திலேனிற்கவருள்கூர்ந்
திதமாயழைத்தடிமைகொண்டவாறென்கொலோ
 வேகாந்தநிட்டையர்களா
னேத்திஹரஹரவென்றிறைஞ்சிவாழ்த்திடுமகிப
 வெம்மனோர்புகலவெளிதோ
சதுமறையின்முடிவிலுறைசபளமற்றிலகுறுஞ்
 சாதுரியமோனவொளியே
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
 சாத்காரசகதகுருவே. (௭)

இகபரமிரண்டாகியின்பதுன்பமதாகி
யிச்சையொடநிச்சையாகி
யேகமாய்ப்பலவாயியம்பதுவொடிதுவா
யிவையந்ததற்கிடமாமெனு
மகமுதலவித்தைமாயைகணூறியாதிமுத
லாம்பொருளதாகவருளா
யாருயிர்த்துணையேயெனிதயாதனத்தமர்ந்
தானந்தமழைபொழிதரு
மகிமைதவழத்வைதமரபுவிளைபூமியே
மடமைதபுமன்பர்நாளு
மனமுறையொடுணர்விகந்தொன்றிரண்டென்றது
மௌனத்திருந்துபோற்றுஞ்
சகுணநிர்க்குணரகிதநிட்பிரபஞ்சப்பரம்
சடவசடமின்றியொளிருஞ்
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
சாத்காரசகதகுருவே. (அ)

பத்திவைராகவுபரதிஞானமேய்ந்துயர்
பரம்பரத்துட்பதிந்து
பாராதியண்டபகிரண்டமூடுருவியே
பார்க்குமிடமெங்குமதுவா
மத்தியான்மீகவனுபூதிநித்திரைசெய
வறைந்தபொருளொருமையடைவி
னற்புதமிருந்தவாறென்சொல்கேனென்சொல்கே
னதுவாகிநிற்பதல்லாற்
பெத்தமுத்திகண்மித்தையாகிப்பிறங் வது
பேசவறியேனபின்மாம்
பேரின்பவாரியிலெழுந்தவானமிர்தமே
பேருருவிலாப்பெருமைசேர்
சத்தசத்தினுமோர்படித்தாய்ப்பொலிந்துநிறை
சாம்பிரதாயகசுசீல
சமரசசுபாவஸ்ரீசங்கராசார்யசாட்
சாத்காரசகதகுருவே. (கூ)

துங்கமாய்நின்னைத்தொழற்குரியனுக்கித்
தொழும்பனேன்கரையேறவே
தொன்மைபோனன்மையாய்த்துன்னும்வடிவாயிடத்
தூயவருளாளுக்கியே
பங்கமில்லாதபிரம்ஹானந்தமோனம்
பகர்ந்துபின்பாவனையிலாப்
பான்மையிஃதென்றுனையளித்தனையுள்ன்பிறைப்
பாவித்திறைஞ்சவாங்கே
தங்குதற்பரசுகததாகாரமாய்நின்ற
தன்மையானென்சொல்லுகேன்
குருய்த்தனித்ததன்னேரின்மாதெய்வமே
தத்துவாதீதமுடிவே
சங்கற்பமோடுறுவிகற்பமற்றவரகஞ்
சார்ந்தொழுகுசாந்தியுணர்வே
சமரசசுபாவஶ்ரீசங்கராசார்யசாட்
சாத்காரசகதகுருவே. (கo)

சிவார்ப்பணம்.

---

ஶ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# பிரணவசகிதகுருநாமஸ்தவம்.

சருவகாரணசின்மயவனுகூத
தன்மயதற்பராதீத
வருவமோடுருவமாமதிட்டான
வகோசரவநிர்வசனியசிற்
பரமகாருணியபகவசத்ரூப
பாவாத்விதப்ரணவாந்தர்க்கதமா
நிருபஜம்நமஶ்ரீசங்கராசார்ய
நித்தியானந்தசற்குருவே. (க)

ஞேயஞாதுருஞானங்கடந்தோங்கு
நிர்க்குணநிரவத்யமுக்த
வாயும்வேதார்த்தவனுபவசித்த
வனைத்துருவாயொளிரநன்ய
மாயைவாழ்வெச்சமாக்குமாநிபுண
மலிசாரசரசபளாத்ம
தூயஓம்நமஸ்ரீசங்கராசார்ய
சொருபவானந்தசற்குருவே. (௨)

தருணமிதாமென்றெனைத்தடுத்தாளத்
தகுகதிக்கிறைமைசார்தக்கோய்
புரணதேஜோமயானந்தப்புனித
போதபாஸ்கரவிகிர்தமதார்
கரணவாதனையாங்கற்பனாதீதக்
காட்சிசேர்கழலனவரதஞ்
சரணம்ஓம்நமஸ்ரீசங்கராசார்ய
சச்சிதானந்தசற்குருவே. (௩)

எங்குமாய்நிறைந்தவேகநாயகனே
யெழிலருட்சோதிமாதேவே
யங்கமோர்மூன்றுபவத்ததையோர்மூன்று
யடருஞ்சிவேஸ்வரசகமாய்ப்
பொங்குமாரோபப்பொலிவதேவடிவாய்ப்
போந்தநாட்கென்சொல்கேனென்னுள்
தங்கும்ஓம்நமஸ்ரீசங்கராசார்ய
சத்தியானந்தசற்குருவே. (௪)

மனந்தனுவுனாயான்மன்னுமாக்கையினன்
வழுத்துநின்னருளமுதருந்திக்
கனிந்துடைந்துருகிக்கசிந்துவாய்குழறிக்
கம்பித்துரோமமுஞ்சிலிர்த்துப்
புனைந்துநின்னடியென்முடிதனிற்பேறுப்
புன்மையேனுய்யுநாளுளதோ
அனந்தஓம்நமஸ்ரீசங்கராசார்ய
வகண்டிதானந்தசற்குருவே. (௫)

அரியர்ப்பிரமவசங்கவாரூட
    வநாமயவசலவசிந்திய
நிருமலாகாரநிரவயவநிரீஹ
    நிர்த்தொந்தநிஷ்க்கிரியநிமல
கரதலாமலகம்போலுனைக்காட்டிக்
    கடையனையாளுநாளென்றோ
துரியஓம்நமஸ்ரீசங்கராசார்ய
    சுகோதயானந்தசற்குருவே. (௬)

சமந்தமாதிகளாஞ்சற்குணப்பிரிவாற்
    றன்மயவியோமமாய்த்தவழ்ந்தே
யிமையும்வேறின்றியெழிலருட்கோல
    வியல்பினையிறைஞ்சுமாறருளா
யமைதியாமனுபூதியின்வத்தாயடிய
    ரகமலர்த்தவிசவிர்சுடராய்
அமரும்ஓம்நமஸ்ரீசங்கராசார்ய
    வத்விதானந்தசற்குருவே. (௭)

சுபமதாயொளிருந்தூவெளிதன்னுட்
    டோய்ந்தியானெனதெனுதொன்றுய்த்
தபுதலோடுதித்தலாஞ்சழக்கொழிக்கத்
    தண்ணருள்சுரந்தினிதிரங்கி
யுபயபாதமதென்னுச்சியிற்பொறிப்ப
    துன்கடனன்றிவேறுளதோ
விபுத்வஓம்நமஸ்ரீசங்கராசார்ய
    வித்தியானந்தசற்குருவே. (௮)

வேண்டுவேனுளும்விவிக்தநின்சேவை
    விண்ணிடைமண்ணிடைவிதந்து
காண்டகாதுன்றன்கழலிணையன்றிக்
    கண்ணிணைகரஞ்செவிசிரமும்
பூண்டிடாவுன்றன்பொற்பணிவார்த்தைப்
    பூண்சுமையன்றிமற்றயலே
ஆண்டஓம்நமஸ்ரீசங்கராசார்ய
    வச்சுதானந்தசற்குருவே. (௯)

உறைந்தையாயென்னுளொன்றினேய்போற்றி
யோவியவடிவமேபோற்றி
நிறைந்தெங்குமாகிநின்றவாபோற்றி
நிராமயநிட்களபோற்றி
பிறந்ததாற்பெறும்பேறுகுவோய்போற்றி
பேசொணுப்பெருமையோய்போற்றி
பிறங்கும்ஓம்நமஸ்ரீசங்கராசார்ய
பிரமவானந்தசற்குருவே. (கo)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# குருநாமஸங்கீர்த்தநம்.

இருணயந்திடுபோகவாழ்வதையெண்ணியேபெரிதாகவே
பொருண்மலிந்திடுபோதமின்றியபுல்லர்பொய்யுறவெய்திலே
னருணபங்கயவடிகளென்முடியமர்வதென்றுகொலருள்செயாய்
சரணமென்றுபல்சரணருந்துதிசங்கரார்யசரண்யனே. (க)

திரமதொன்றியமலேகடன்மலிதிரவியந்திசைவனசக
விரவொடொண்பகல்பரிதிசந்திரனெவனுமார்வெளிவளிகனல்
விரவுறும்புனலிடமெனும்படிவிவிதபல்வடிவுடனிகழ்
சரதவந்தருள்புரிதியங்கணசங்கரார்யசரண்யனே. (உ)

அத்விதாபரமாத்மசுத்தவபேதபந்தவிமுக்தநற்
றத்வபோதததாகராயசநாதனுசுகசாகரா
சித்விலாசசிவாப்யசித்கனஸ்ரீகராபுருஷோத்தமா
சத்தியசீலபராவநன்கருள்சங்கரார்யசரண்யனே. (ஙூ)

எந்தையேமறைநாலுமோதிடுமேகனுகெமதீசனே
சிந்தையோடுணாதிரவேயெழுசீர்சிவோகசின்மாத்ரனே
யந்தமாதியிலாவதீதவகோசராதிபவாத்மனே
சந்தமார்தரநன்றியின்றருள்சங்கரார்யசரண்யனே. (ச)

அண்டபிண்டமடங்கலுந்தவழரியபல்லுயிர்களின்விட்
முண்டசிவதயாபராசிவஓம்ஹரோவெனுமடியர்முன்
கொண்டல்வண்ணமுகுந்தவென்றுகைகூப்புமெய்திகழ்தாசர்முன்
சண்டனஞ்சவேதண்டமேந்துதிசங்கரார்யசரண்யனே. (௫)

வரிசையின்றவவளநலந்தருமகிபவன்பருளமர்குரு
துரியநின்பதமலரின்வண்டெனுந்துகளறும்பரதுதியெனும்
பிரசமுண்டுயர்பெருமிதங்கொடுபெருகநன்கருள்பெரியர்பால்
சரசவிங்கிதசமரசஞ்சொலிசங்கரார்யசரண்யனே. (௬)

விதிகொளுஞ்சுருதியினதந்தநல்வெளியெனும்பரிசுடையதற்
பதபரம்பரவமுதினன்சுவைபருகியின்பமதுருவென
விதனமங்கறுமடியர்தந்தரமிளிர்தரும்படியெழுதருஞ்
சதிர்சவிங்கருள்சகதலம்புகழ்சங்கரார்யசரண்யனே. (௭)

இகபரங்களினிடையுறுஞ்சுகமிதுவெனுமறையறைதர
விகலறுஞ்சமயமதிதென்றுபலியமுறைமுறையுறைதர
வகமடைந்திடும்வழியடைக்திடுமறிவினகுறைநிறைதரச்
சகலசம்பிரமமுடனெழுந்தருள்சங்கரார்யசரண்யனே. (௮)

கனவின்மங்குலகிடைசெறிந்திடுகவலைகொண்டலைதருமின
மனவிலங்குறையிருணிறைந்திடுமடமைதங்கிடமெனுமுய
ரினமிலன்பறுமெனையுமொண்பொருளெனவுவந்தருள்புரிதியோ
சநகனென்றிவணடர்தருஞ்சிவசங்கரார்யசரண்யனே. (௯)

அனுர்தமன்றிடுமகமதொன்றிடுமறிவதின்றிடமதுகொடு
தனையுணர்ந்திடநலமுணர்ந்திடுதயைசுரந்திடவனுகிநின்
றனையடைந்தனனுடலடர்ந்தனன்றரமொடைந்தொழின்முடிவினற்
சநநமின்றிடுமநநமொன்றருள்சங்கரார்யசரண்யனே. (௧0)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# சிவநாமஸங்கீர்த்தநம்.

ஆதிநடுவந்தமற்றொளிர்சோதியநிர்வசன்ய
வாதியிலாமலமாயையவித்தையினுழமய
லாதிகடீசவெழுமறிவாதபமாமணியாம்
ஆதிபசாம்பசதாசிவசங்கரவாரியனே. (௧)

நீலநிறக்கொடிமங்கைபங்கவங்கநீறணிந்த
நீலகண்டவொண்புலியதளாடைகொணித்தநம்ப
கோலசங்காதரனுதியர்கோலநின்கோலமன்றே
ஆலமர்சாம்பசதாசிவசங்கரவாரியனே. (௨)

காலகாலகைக்கபாலசூலகருணாகரனும்
கோலகங்காதரகோபதிவாகனகோசிகனும்
சீலபரம்பரவம்பலவாணதிகம்பரனும்
ஆலமுண்சாம்பசதாசிவசங்கரவாரியனே. (௩)

வேண்டுமடியர்வினைதபுமாறுவிணுதியுமற்
றீண்டுமெவணுமெழுந்தருள்கோலமியன்றிடவே
காண்டகுமேனியொடென்முனம்வந்துகழன்மலர்தந்
தாண்டருள்சாம்பசதாசிவசங்கரவாரியனே. (௪)

அழுதுபுரண்டலறித்தொழுவேனினதன்பனென்றே
பழவினைநூறிப்பழுதறச்சீறிப்பவம்பொடிசெய்
தெழுவகைத்தோற்றத்திடையாவணமெற்கருள்புரிந்தாள்
அழகமர்சாம்பசதாசிவசங்கரவாரியனே. (௫)

தண்ணிலவார்செஞ்சடைப்பரமேசதயாநிதியே
யுண்ணிலவுந்திரியம்பகனுகுமுமாபதியே
யெண்ணிலடியரிருந்திளைப்பாறவெழுங்கதியே
அண்ணியசாம்பசதாசிவசங்கரவாரியனே. (௬)

தெரிவிலிதிண்மையிலிதவநன்கிலிசீவர்கண்மே
லருளிலியன்பிலியாராமையாதியனவுமிலி
குருவிலியென்றுனையாதருள்செய்தகுணாகரனும்
ஹரஹரசாம்பசதாசிவசங்கரவாரியனே. (௭)

ஊரிலிபேரிலியொன்றுமிலியுற்வோருமிலி
பேரியலாண்பெணலிபிறப்பாதிபிணக்கதிலி
யோரியல்பாகவுபாதிகளாதியொருவவரு
ளாரணசாம்பசதாசிவசங்கரவாரியனே. (அ)

சந்ததமொன்றிரண்டோடொருமூன்றுசதுட்டயவைந்
துந்தறுசிறெணுடனுறுமேழெட்டுளவயலாய்ப்
பந்தபசுத்துவமாதியபாறும்பரிசருளும்
அந்தணன்சாம்பசதாசிவசங்கரவாரியனே. (கூ)

வானமர்சோதிமெய்யன்பர்வணங்குமாதேவனெனு
தீனந்தவிர்ந்திடவேபணிவாணியலேதெனுமார்
தானந்தவங்கணிறுவுந்தயாபரதற்பரனும்
ஆனந்தசாம்பசதாசிவசங்கரவாரியனே. (கய)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநமஃ

# ஹரிநாமஸங்கீர்த்தநம்.

விபுவெனும்பரவாசுதேவநின்மலரடி
விரும்புறுமெயன்பரினமார்
சுபமெலாமெய்தவருணினதொருமையென்கொலோ
சுகமருவுதேவரரசே
தபுதல்செய்திருமையெளியேனிடர்களைந்துனரு
டங்கவுந்தயைபுரிதியோ
அபயநாராயணமுகுந்தவச்சுதஹரி
யதீதவானந்தகுருவே. (க)

மதிபரிதியிருவிழியெனுமல்குமாதவ
மகத்வமதுசூதனநிதந்
துதிபரவுமாயகோவிந்தகோபாலநனி
தோன்றுமமுதனையசுபநேர்
விதியையின்றருள்பதுமநாபதாமோதர
வியாபிதவினைந்தருள்செயாய்
அதிபநாராயணமுகுந்தவச்சுதஹரி
யகண்டிதானந்தகுருவே. (உ)

செம்மனினதருணுமநீர்மையுணர்தருவாய்மை
செறிநிலைமையருள்புரிதியோ
விம்முடலடர்ந்தநெறிவீயவவமாயவுயர்
வீட்டின்பமருள்புரிதியோ
பொய்ம்மயலவித்தைமாயைகண்மேயதீக்குணப்
புன்மையறவருள்புரிதியோ
அம்மநாராயணமுகுந்தவச்சுதஹரி
யநுபவானந்தகுருவே. (௩)

கணநாழிநாண்மாதவருடமினவீணே
கழிந்திடுமெயெனவிரைந்தே
துணிவோடுனைத்தொடர்ந்தனரன்பர்சுகமாய்ந்து
துக்கத்திலாழுறலையாய்ப்
பணியேதுமிழைபரிசதறுவாய்மையினனெனது
பவமகன்றிடவருடியோ
அணிகொணாராயணமுகுந்தவச்சுதஹரி
யபேதவானந்தகுருவே. (௪)

சினந்தவிர்மெயன்பர்தொழுசீதரசநார்த்தன
திரிவிக்ரமவனந்தசயன
வனந்தவுலகாதியவதிந்துறனிதந்துதி
வசந்தநினதந்தமன்றே
கனந்தவிரொருதுளநினைந்துறவிதந்தரு
கயஞ்செய்மநநந்தருதியோ
அனந்தநாராயணமுகுந்தவச்சுதஹரி
யநன்யவானந்தகுருவே. (௫)

உரியபேறிலையயலுனருள்பெறுவதலதெனுயி
ரோங்குபுகழ்செல்வமாகித்
தெரிவதாய்த்தெரிவறுதிறத்ததாய்த்தேசுமிகு
தீனரக்ஷகதிதித்வ
முரியபரமாய்ப்பரந்தனையிருமைதெறுநெறி
யுளன்பரனுபவமருடியோ
அரியநாராயணமுகுந்தவச்சுதஹரி
யநாமயானந்தகுருவே. (௬)

திருமகளுலாவுமார்பகநினதுசீரடி
சிரஞ்செறிதவம்புரிகிலே
னிருடிகேசநிதானவிட்டுகேசவனெனு
மிதஞ்செயபிதானமிசையேன்
றருமனிளையவனிரதசாரதியெனுந்தயை
தயங்குதவழ்தருமமுணரேன்
அருள்செய்நாராயணமுகுந்தவச்சுதஹரி
யசங்கவானந்தகுருவே. (எ)

சமர்புரியுமசுரரினமறமாற்றியுயர்முனிவர்
தமைமருவுதலைமையரசே
யமிதமெனவளர்கோடியாதிசங்கற்பவவு
ணாயடர்ந்திடுமபயனே
யிமையறுகணுட்டமமைவுறவெனக்கருளுவமை
யிறுபராத்பரவைகுந்தத்
தமருநாராயணமுகுந்தவச்சுதஹரி
யபின்னவானந்தகுருவே. (அ)

கழிபிறப்பொடுவருபிறப்புநடுபவநிலைமை
கண்டுவாய்கதறிநிரலே
தொழுதெழுந்தார்த்தகநெகிழ்ந்திருகைகூப்பியலர்
தூவியடிமலர்துதையுறும்
விழுமனத்தார்க்கெளியையலதுகயமடமைசெறி
வினையினேற்கருள்புரிதியோ
அழிவினாராயணமுகுந்தவச்சுதஹரி
யதிர்சியானந்தகுருவே. (கூ)

துதிமச்சகூர்மவளவேனநரசிங்கவா
மனசுகுணநயசமாஜர்
மதிபரசிராமசீராமபலராமமகிழ்
வசுதேவதனயகிருஷ்ண
கதிகற்கியாதியவதாரபூதாவறிவில்
கடையனினதருள்பெறுவனோ
அதுலநாராயணமுகுந்தவச்சுதஹரி
யகோசரானந்தகுருவே. (௧௦)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# சிவஷண்முகநாமஸங்கீர்த்தநம்.

அரவணியுடையானகமகிழ்தரவன்னவன்மடியிவர்தாண்முடிசேர்த்துக்
கரமணியதுபோலெனையறிதரநின்கடைவிழியுறழ்வானிருடீர்த்துச்
சிரவணமநநாதிகணிலைதருவாய்திரிசியமகல்வானருள்போர்த்துச்
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௧)

பிரணவவடிவாயறுமுகவணிசேர்பினமறுமுதியோய்பிணிதீராய்
பரைசிவைமதலாயிழிவுயர்வொடுநேர்படுமுடலடராவணமோராய்
ஹரஹரசிவஓமெனுநினதடியாரடிமுடிபடநீடருடாராய்
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௨)

கரமலர்கொடெமுளமிவர்தருகழன்முன்கரவடமகல்பூசையினேய்ந்தே
யரும்வினையகல்வானலைமனமுறழ்காலதிபமெயறிவானறவோய்ந்தே
யுரியநனிலைசேர்தரவகமருளாயுறுமெனையருளானனியாய்ந்தே
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௩)

தெருள்விழியுடையாரறுமதமுழுதார்திரமுறைவெளியாயவர்தேனே
மருள்வழிநடையார்றநெறியொழுகார்மதிநிறையிருளாயமர்வானே
யருள்பொழிகொடையாய்மழுவெறிகதிர்வேலவமயிலெழிலாயிவர்கோனே
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௪)

இருடெறுசுடராபிகலவுணரையோரிமையினின்முடியாறிருதோளா
விர்வுறுமடியார்வினைதபுமமுதாய்மிளிர்மறைமுடிமேலதிர்தாளா
பரவறிவுறவேழ்பவமறவெனையாள்பவதயைபுரியாயருளாளா
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௫)

ஒருவருமறியாவுளவெனுமுதிர்வோடுறுபலமுடைநீடலர்காவே
மருமலொனவோர்வுறுபரமருள்சீர்மலியிடையுபிராயமர்பூவே
யொருமொழியதனுலுயிர்சிவவடிவாயொளிர்தரவருளாயுயர்கோவே
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (௬)

திருவருள்வடிவாயெனைமுதலடியார்திதிபெறவெழுமாதபவீரா
விரிமனவிவிதாசரவடிவறுமோர்மிகுநிலைதருவாயதிருரா
யரிதரிதெனவோரிமையினிலடர்வானகல்புவிவலமாய்வருதீரா
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (எ)

துரியவின்புருவாயிடர்சடமுறுமூழ்தொகுமுடலவிழ்நாளெனதாவி
யிரவொடுபகறிரிடமதிலமைவானிருமையதறநீளடிமேவி
யருமையவகலாவரமருள்புரியாயனவரதமுமாஞனுறுமோவில்
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (அ)

வரவுடனறுமாறபுமடியவர்சூழ்மகிபதியெனநேர்குணவாளா
குருகுதமினமார்தருவனமதில்வாழ்குறமகள்புயமேவணிதோளா
தரியலர்கெடநீடமர்விஜயமதோர்சதமகன்மகளார்மணவாளா
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (கூ)

பரவசமுறஞானமதறைபரிசார்பலகலையுணர்வார்பணிபாதா
பரமருளுயிரோர்பொருள்கனகமதார்பணிதியினியல்போன்மெனும்போதா
நிரவயவமதாநிரதிசயமதாய்நிகழனுபவவாழ்வருணீதா
சரவணபவஓம்நமவுருவருவார்தருகுருபரஷண்முகதேவே. (கo)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# புஜங்கப்ரயாதநவகம்.

சிவஜீவைக்கியம்.

மனலயம்வார்த்தலுறுமஹேசலிங்காயநம
மலாதிகன்மாதிகளின்மனுவசங்காயநம
வினைசெயும்பேதைகுணமெனுவசிந்தியாயநம
விதாமிதன்றுமெனலிலெமானெனுந்தாயநம
கனகனம்போர்கண்மலிகடாரகண்டாயநம
களேபரஞ்சாமுனமென்கணுகுஸ்கந்தாயநம
தினதரந்தீவ்ரதரசிவோஹநந்தாததர
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (க)

இராசியெண்டேஎனுடையவிராஜகும்பேசநம
விலாபமென்றேதுபொருளெனுவெழுந்தேசநம
விராசியஞ்சாருமன்றயிராகமுண்போஜநம
விலாவிருண்மாயையினமிலாவனம்வாசநம
விராவணம்போலுமிவ்வெண்ணுதுளின்றேசநம
வெனுவியெந்தாயெதிரதிலாதசந்தோஷநம
திரோபவந்தீரதரசிவோஹநந்தாததா
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (உ)

அதீதவின்பாயபரவராகசெஞ்சோதிநம
வபாசகம்பீரமயவநாதியந்தேவநம
விதாகிதந்தீரலூறுமெனுதசம்பாயநம
விராவொடொன்றுயபகலிராவிருந்தேயநம
நிதானநண்பாகிவருநிருபநிர்த்தோஷநம
நிர்லேபநிர்மாயநமநிர்மோஹநிர்வாணநம
சிதாகாஞ்சேருதரசிவோஹநந்தாததா
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (ந)

சபாநடஞ்சூழலின்முன்சபாசெனுங்கோஷநம
சபாமடந்தாபனஸதயானுநின்பாதநம
வுபாதியின்றகியொளிருகாந்தசம்ஹாரநம
வுதாரவுல்லாசமிருமுமாமஹேசாயநம
தபோபலன்சாலவருள்சர்வேசசத்ருபநம
சமாதிஷட்காங்கமறைசஹாயசம்பூர்னநம
சிபாரிசிங்காரதரசிவோஹநந்தாததா
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (ச)

வியாபிதஞ்சூழவருவினோதசம்போகநம
விராவுறுந்தாபதர்கள்விபாககங்காளநம
மயானநின்றடல்பயில்மஹானுநின்கோலநம
மனுளவென்பாலமருமனுதியந்தாயநம
செயாபாஞ்சோதிர்மயதிரிலோகசம்பூதநம
திரிதேவவெந்தாகிநிகழ்திரிநேத்ரபிம்பாயநம
தியானநன்காரதரசிவோஹநந்தாததா
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (ரு)

பகாவணங்தேசதவிர்பிரகாசபிந்தாயநம
பராவிநின்றார்கள்பவம்படாவிழுங்கோபநம
சுகாசனந்தாவிவளர்சுசீலதுங்காயநம
சுஜாதிகந்தீரவருசுபாவசம்யோகநம
சுகோதயம்பாயவொளிர்சுபோதவங்காயநம
சுபாஷிதஞ்சூறையருள்சுதாரசம்பாஷிநம
ஜெகாதரந்தீரிதரசிவோஹநந்தாததா
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (௬)

பிசாசுடன்கூடிநடிபெமானெனும்வாமநம
பிணகியென்பாலமருபிராணசஞ்சீவநம
விசாலமுண்டாயிலகுவிணுதிலிங்கேசநம
விகாதவொன்ணார்களெயில்விநாசவெங்காலநம
வுசாவுமன்பாதிதருமுபாயதந்திராயநம
வுலோகநின்வாய்மைவழியுலாவுமிந்திராயநம
திசாபயந்தீரதரசிவோஹநந்தாததர
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (௭)

விடாயுடன்றேடுமவர்விடாவகண்டாயநம
வியாகதந்தீரவருவிவேகசந்திராயநம
கடாவுறும்வாழ்தலதுகலாவல்செய்காந்தநம
கராசனந்தோலுடைகொள்கபாலவண்சூலநம
மிடாபடும்வானமெனவிராவும்விஸ்வேசநம
வியாபதங்கோலுமெனேவெருதத்வந்தாயநம
திடாதிகஞ்சேரதரசிவோஹநந்தாததர
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (௮)

நமாமியென்றேலமிடுநலோர்தமுள்ளார்திநம
நமாமிநஞ்சூணதுகொணநாதநம்பாக்யநம
நமாமிதுன்பாதிமயனபாதிசெய்தாடிநம
நமாமிகங்காதரநடேசசங்காதநம
நமாமிநின்கோலமதெனவினின்பேலநம
நமாமிசங்காசமதினணுப்ரபோதாத்மநம
சிமாசனஞ்சேரதரசிவோஹநந்தாததர
ஜெபாதிமந்திராதிதரசிவாயநமசிவாயநம. (௯)

பிரம்ஹார்ப்பணம்.

---

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# திருநீற்றியல்.

நீறுநியமாதியினிமிர்ந்தபரிசாகு
நீறுவியனாதியநிரந்தரமெயாகு
நீறுஜயமோதியுணிரஞ்சனமதாகு
நீறுபுனைவாமருணிறைந்தொளிருமாறே. (௧)

நீறுபடவீடணையினோர்தலறலாலே
நீறுபடத்தூடணைசெய்நேரலரிலாரோ
நீறுபடப்பூடணைகணோர்தருமதாலே
நீறுபுனைவாமடைமைநீறுபடுமாறே. (௨)

நீறுபரமேசனடிநீழறருமேர்வெண்
ணீறுபிரயோசனமுனேடணியதாகு
நீறுபுறமாசதறுநீள்கவசமாகு
நீறுபுனைவாமுரணினேயமிகுமாறே. (௩)

நீறுபசுபாசமறுநேர்வழியதாகு
நீறுவிசுவாசமுறுநீமவெழிலாகு
நீறுவசுநீசமறுநீவவிழியாகு
நீறுபுனைவாநம்வினைநீறுபடுமாறே. (௪)

நீறுகலையாகமநிதானமதுவாகு
நீறுநிலையேகனிவாதவியலாகு
நீறுதலையாகமணிஜானுபவமாகு
நீறுபுனைவாநிகமநீர்மைவருமாறே. (௫)

நீறுமுழுதாகிநிகழ்நீதமதுவாகு
நீறுவிழுமோனமுறுநேதிங்யமாகு
நீறுமழுவாளனளிநேரரணதாகு
நீறுபுனைவாமலினநீறுபடுமாறே. (௬)

நீறுசிவயோகமுயர்நீறுசுபமாகு
நீறுதவயோகநெறிநீறுநிபமாகு
நீறுபவரோகசுதநீறுநபமாகு
நீறுபுனைவாமடியர்நேசமுறுமாறே. (௭)

நீறுமுடிவானபயனீறுமருவாகு
நீறுபடிவானமயனீறுகுருவாகு
நீறுவடிவானமையனீறுகருவாகு
நீறுபுனைவாமிருமைநீறுபடுமாறே. (அ)

நீறுபுனைவார்கள்வினைநீறுபடுமெனிச
நீறுபுனைவார்துனிகணீறுபடுமணிகொள்
நீறுபுனைவார்சநிபுணீறுபடுமத்னல்
நீறுபுனைவாமனுர்தநீறுபடுமாறே. (கூ)

நீறுநலநீறுபலநீறுகலமாகு
நீறுசுகநீறுமகநீறுசகமாகு
நீறுபொருணீறுதெருணீறுதிருவாகு
நீறுபுனைவாமகிமைநீடமருமாறே. (கo)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# பஞ்சாக்கரவியல்.

அணிநமசிவாயமிகுமளிநமசிவாயநவ
மணிநமசிவாயவளமலிநமசிவாயவமர்
குணிநமசிவாயவளர்குடிநமசிவாயகுறி
குணநமசிவாயவருகுருநமசிவாயநம. (க)

வளநமசிவாயவெளிவளிநமசிவாயகனல்
குளிர்நமசிவாயபுவிகுகைநமசிவாயவென
துளநமசிவாயவுறுமுயிர்நமசிவாயவியல்
கொளுநமசிவாயவருகுருநமசிவாயநம. (உ)

இறைநமசிவாயநடவெழினமசிவாயவக
நிறைநமசிவாயவிலைநிகர்நமசிவாயபல
துறைநமசிவாயபரசுகநமசிவாயகெடில்
குறினமசிவாயவருகுருநமசிவாயநம. (ங)

பசுநமசிவாயபசுபதிநமசிவாயபத
மசிநமசிவாயவழிவறுநமசிவாயதா
வசுநமசிவாயபரவசநமசிவாயமுடிக்
குசநமசிவாயவருகுருநமசிவாயநம. (௪)

நயநமசிவாயவடிநடுநமசிவாயமுடி
யயனமசிவாயவவையகனமசிவாயசிவ
மயநமசிவாயசெயுமகநமசிவாயவருட்
குயினமசிவாயவருகுருநமசிவாயநம. (௫)

சுவைநமசிவாயமதிதுதைநமசிவாயபல
மவைநமசிவாயஹரஹரநமசிவாயதிகழ்
செவைநமசிவாயமறைச்சிகைநமசிவாயபொருட்
குவைநமசிவாயவருகுருநமசிவாயநம. (௬)

திடநமசிவாயசிவைதிகழ்நமசிவாயகள
விடநமசிவாயவனல்விழிநமசிவாயவற
விடைநமசிவாயபடர்விபுநமசிவாயபொதுக்
குடினமசிவாயவருகுருநமசிவாயநம. (௭)

மழுநமசிவாயகரமறிநமசிவாயதெருள்
விழுநமசிவாயஹரிவிதிநமசிவாயகலை
யெழுநமசிவாயமடணிகுநமசிவாயசெவிக்
குழைநமசிவாயவருகுருநமசிவாயநம. (௮)

புலனமசிவாயவறிபொறிநமசிவாயவெழு
நிலநமசிவாயவிருநிதிநமசிவாயவணி
கலநமசிவாயதவழ்கதிநமசிவாயதுதி
குலநமசிவாயவருகுருநமசிவாயநம. (௯)

மருநமசிவாயமதுமலர்நமசிவாயவரு
வுருநமசிவாயதவவொளிநமசிவாயமலைச்
சிரநமசிவாயவிணைசெகுநமசிவாயசகத்
குருநமசிவாயவருகுருநமசிவாயநம. (௧௦)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# மனோலயம்.

அருள்சுரந்துவன்பனார்துறந்துதுன் பவனிவந்துமல்கவதிபொன்றிடும்
அருமைவந்தவின்பகமலிந்தநன்களவிறந்துதங்கமைதிமுந்திடும்
இருமைகுன்றவிங்கிறைமையொன்றிமங்கிருள்பறந்தியங்கெழிறரம்படும்
பரவிநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௧)

சிரமதொன்றுறுந்திகழ்பதம்பெறுஞ்சிலுகுணைந்துறுந்திமிரமின்றறுங்
கரமலிந்துறுங்கனியதென்றுறுங்கடவுளின்புறுங்கதியதின்றுறும்
பிரமைவெந்துறும்பிணிபயம்பெறும்பிணவுடம்பறும்பிதிரினன்றுறும்
பரமநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௨)

வழுதுறந்திடும்வளநிறைந்திடும்வசைபிறந்திடும்வழிமறைந்திடுங்
கழலுறைந்திடுங்களமறைந்திடுங்கறைபிறந்திடுங்கருமறைந்திடும்
பழிபிறங்கிடும்படிறறுந்திடும்பகையுறங்கிடும்பசிகுறைந்திடும்
பழிசெய்நெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௩)

பழமையென்பதும்பலனதென்பதும்பரமதென்பதும்பகரமென்பதுந்
தொழுமெயென்பதுந்துணையதென்பதுந் துணிபதென்பதுந்தொடர்பதென்பதும்
அழகதென்பதோடதுவெனாநினைந்தகமதாறியானந்தமீறியே
பழகுநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௪)

பதமதாவதும்பதியதாவதும்பதனதாவதும்பதவியாவதும்
சதமதாவதுஞ்சமமதாவதுஞ்சகலமாவதுஞ்சகசமாவதும்
இதுவெனாநினைந்திதமதாகிநைந்திடைவிடாதுகந்திடநிதானமாய்ப்
பதிதநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௫)

சதிர்சமேயவேசலனமோயவேசநமாயவேசதிகள்காயவே
விதியினாயவேவினைகடேயவேவிபுலமீயவேவிழிகள்பாயவே
கதியினேயவேகழல்கள்வாயவேகனாறல்வீயவேகருணைசேயவே
பதறிநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௬)

அண்டபோற்றியந்தாதிபோற்றிமன்றுடிபோற்றியாலாலமுண்டமைக்
கண்டபோற்றிகங்காளபோற்றிகைலாசபோற்றிகாணாதுகண்டவேய்த்
தண்டபோற்றிதந்திரோடகாதிசந்தானபோற்றிதாதாணின்பெனாப்
பண்டெணெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௭)

சிந்தைமேவிநின்றுளவந்தசிச்சித்விலாசசித்கனசபேசனை
யந்தமாதியில்லாவகண்டிதானந்ததற்பராபரசுபேசனைச்
சந்தமார்தருந்தாழ்சடைப்பிரான்றனைமறந்தநின்றகைமைபாறவே
பந்தநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (அ)

சுகமலர்ந்தசிற்கனம்விளைந்திடுந்துரியவந்தணற்குணமளைந்திடும்
இகபரங்களிற்புலவுபஞ்சகஞ்சுகமடிந்துதன்புடையிகந்திடும்
அகமுடன்படற்புதபரம்பரந்தனினிவர்ந்தநம்பசிபதந்தொடும்
பகருநெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௯)

உயுநெறிக்கணின்றுயிர்பிழைத்துமென்புருகியென்றுமங்குலதிழைந்திடுஞ்
செயிர்செய்வெங்குணஞ்செகவுழைத்துமின்செகமறந்துமங்குலதிழைந்திடு
நயமதொன்றவன்பர்கடழைத்துமன்றதினடைந்ததிங்கமொழிந்திடும்
பயனினெஞ்சமேபஜகுரும்சிவம்பஜகுரும்சிவம்பஜகுரும்சிவம். (௧0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# அத்துவிதவுண்மை.

பன்முறைதோறும்பன்மறைகூறும்பரிசாள
ரொன்னிடைபுக்காரின்னறவிர்ப்பாரொன்னாடித்
தன்மயமாகுந்தன்மயர்சாருந்தகைமேய
தெந்நிலையென்றேனெந்நிலையென்றுரிதுதானே. (௧)

அங்கமுருதாரங்கமருதாரடியேன்ற
னங்கமுருதாரங்கமருதாரடிசூடித்
தங்குறுமுலகந்தங்குலமுழுதுந்தவழ்கின்ற
தெங்ஙனமென்றேனெங்கனமென்றுரிதுதானே. (௨)

சங்கரஹரஹரசங்கரனுமோர்தவவேடர்
சங்கைதவிர்ப்பார்சங்கையளிப்பார்தமைநேடி
நம்பநினன்பானம்புநினண்பார்நயரடைவே
தம்பலமென்றேனம்பலமென்றுரதுதானே. (௩)

பிரம்ஹார்ப்பணம்.

---

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமః

# ஆட்கொண்டமுறைமை.

கதிர்கொண் மேனிகற்பனையாற்களிம்புதோய்ந்துகிடப்பேனைத்
துதிகொள்வேதஸ்ரோணிசிதம்பரனென்றுறழுந்துகளகற்றி
விதிவித்யானந்தபரனெனவிளங்கிவேதித்தனுபவத்தி
னுதவும்பணிகொண்டனன்விரவுமொளிர்சங்கரசற்குருபரனே. (௧)

மின்னார்போகமேபொருளாய்வெருண்டுமருண்டுதிரிவேனைத்
துன்னார்வேதஸ்ரோணிசிதம்பரனென்றுயிர்வெங்குணமகற்றித்
தன்னாதரதற்பதமருளித்தகுவித்யானந்தனென்னவய
லுன்னாதடைவினாண்டனனுத்தமசங்கரசற்குருபரனே. (௨)

விருப்புவெறுப்புமாயுலகின்வெதும்பித்ததும்பிமெலிவேனை
மருப்பொய்ப்போதமறமலர்த்திவள்ளலாகுஞ்சிதம்பரனு
யிருப்பினரியசுகமருள்வித்யானந்தார்யனெனத்தயங்கி
யொருப்படவினிதாண்டனனொப்பறுசங்கரசற்குருபரனே. (௩)

தேகநானெனவுமழியுஞ்செகமெய்யெனவுமாய்வேனை
மாகவேதஸ்ரோணிசிதம்பரனென்றவற்றின்மயறெரித்திங்
கேகமயஞ்செய்தெதிவரன்வித்யானந்தாத்துவிதனாகிச்
சோகமறவந்தாண்டனன்றொன்மையசங்கரசற்குருபரனே. (௪)

பாழின்வதிந்துபண்பிகந்துபன்னாள்புலர்ந்துநைவேனை
மாழ்குமனஞ்செற்றிடுவகையின்மருவவருளுஞ்சிதம்பரனு
யேழென்றுரைசெய்ஞாங்கரின்வித்யானந்தார்யனெனவமர்த்தி
வாழ்கவெனவந்தருளினனுண்மகிழ்சங்கரசற்குருபரனே. (௫)

பொறியின்வசத்தைம்புலனாதிபொதியமாழ்குங்கடையேனை
யறவன்வேதஸ்ரோணிசிதம்பரனென்றறிவின்வசமாக்கித்
துறவினிருமையொருவவித்தியானந்தார்யனெனத்துணிபின்
மறைசொன்னெறிவந்தாண்டனன்கண்மணிசங்கரசற்குருபரனே. (௬)

இடுக்கணறவுளாழ்ந்திங்கிறுமா[illegible]ததிரற்றிருப்பேனை
முடுக்கித்தவத்திற்சிதம்பரனாய்முந்தும்வணஞ்செய்தகம்பிரமத்
தொடுக்குமுணர்வொட்டனுபவமுற்றுறவித்யானந்தனெனவருட்
கடைக்கணிருத்தியாண்டனன்கற்பகசங்கரசற்குருபரனே. (௭)

அப்பாவையாவெனக்கதறியழுதுபுரண்டுதளர்வேனை
யொப்பார்வேதஸ்ரோணிசிதம்பரனென்றேவலறநிறுவி
முப்பாழ்கடந்தபதமருளிமுனிவித்யானந்தனெனமதித்
தப்பாலடைவினுண்டனனங்கணசங்கரசற்குருபரனே. (அ)

அன்பர்குழுவைப்பணியாமலகந்தைவயத்திற்படுவேனை
யன்பின்வேதஸ்ரோணிசிதம்பரனென்றரியநடைபயிற்றி
யின்பநிலைதந்தருளியவித்யானந்தார்யனெனவயங்கி
வன்பினடிமைகொண்டனன்மெய்மலிசங்காசற்குருபரனே. (கூ)

பிழைக்குநெறியற்றலைந்துபிறந்திறந்துபிறந்துமிறந்தேனை
மழைக்கும்வெயிற்குமிளையாதவணஞ்செய்தமலசிதம்பரனுய்த்
தழைக்குமநந்தனினலர்த்தித்தனிவித்யானந்தனெனவரு
கழைத்தின்னருள்செய்தாண்டனனந்தணசங்கரசற்குருபரனே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமः

# முப்பொருளொருமை.

தேவசிகாமணிதீனதயாபரதேருநிறுதரவால்
தாவுறுவார்தளரார்புகழ்வார்வினைதாமடராரனிச
மேவுறுவார்தொழுவார்பிறவார்சகமேன்மிளிர்வார்சுகம
தாவர்சிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (க)

ஆதரவாநிருபாதிகமாகியகோசரமானவனே
சோதியதாகிச்சொரூபமதாகியதூவெளியானவனே
நீதிநியாயநியாமகமோனநிதானமதானவனே
ஆதிசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (உ)

வேண்டுகோளொன்றுளதேழ்பவமுழ்கிமேல்விண்ணொடுமண்புகினுங்
காண்டகுமேனியொடென்முனம்வந்துகழற்பணிநல்கியெனைத்
தூண்டவுமாதிசுபாவமிதாமெனச்சுட்டவுமாமருளாய்
ஆண்டசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (ந)

அநாமயமாயநிர்வாசகமானவதீதப்ரம்பரனே
கனகனமாகியகாரணபூரணகாரியநுண்ணியனே
பினபினமாகியபேதமதாகியபேசருமாதவனே
அநாதிசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (ச)

எண்ணுமெனெண்ணமெலாமுமீடேறவெழுந்தருளும்பரனே
கண்ணினுளொண்மணியாகியெலாமுங்கலந்தவிர்கின்றவனே
யுண்மையினென்னுடலும்முயிரும்பொருள்கொண்டருளுத்தமனே
அண்ணல்சிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (ரு)

நன்றியொடுன்றனைநாடுறுவானயவாநலமேதுமிலா
வென்றனையோர்பொருளாவெணியேவலிசைத்தருளென்றுனையே
கன்றகலாப்பசுபோலுட்ஞனகணக்கெதுவோதெரிந்தேன்
அன்றுசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (சா)

ம்ாகழனீழலெஞதகமேவமலிந்தருடற்பரமே
யேகமேவாத்விதமேபரமேசிவமேநிகழ்சிற்பரமே
சீகரதண்டதராதிபதேசிகசிற்கனமேபிரம
மாகுஞ்சிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (எ)

வீரனெனுமயலாதிகளெய்திடின்வீசிடுவித்தகனே
காரியகாரணமாகியவித்தைகணத்தருள்சித்தியனே
சீரொவையுந்தருவான்வெளிவந்ததிவாகரமெய்த்தவனே
ஆர்யசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (அ)

நீயெனநானெனநின்றுனையாடியநீசமெலாமொழித்தாய்
பேயெனநின்றுபிதற்றுபல்பேதப்பிணக்கறவேகழித்தாய்
மாயமதாமுட்லாதிமெயென்றிடுமமதையெலாமழித்தாய்
ஆயசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (கூ)

பெரியவரோடுபிணங்குறுமாறெழுபித்ததிறந்திடவு
முரியவெனைத்திருடுஞ்சிறுகள்ளவுலுத்தரினத்தறவுந்
துரியசுகாசனமன்னியதீதசுபம்பெறவுந்தயைசெய்
அரியசிதம்பரவித்யானந்தவருட்குருசங்கரனே. (க0)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# குருவருட்பான்மை.

மகிழ்ந்தருகிருந்திடவரம்பலபயந்தருண்
மிகுந்திருவுளந்தனின்வியந்தெனைநயந்துறு
மகந்தெளிவுறும்பரிசறைந்தருளறஞ்செறி
செகம்புகழ்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (க)

தொடர்ந்திடுபவம்பலதுதைந்துயிர்கடுங்குற
மடம்பயில்விதண்டைகண்மடிந்தறிவுறும்படி
யடர்ந்திடுமுடம்புயிரரும்பொருள்கவர்ந்தருள்
திடந்தருபரம்பரசிதம்பரகுரும்பஜே. (உ)

நிறைந்துயிர்தொறுந்தழைநிறங்குலவுறும்பொரு
ளறிந்திடரறும்பதியமர்ந்தெழின்மிகுஞ்சுக
முறைந்திடவிலங்குறவுவந்தொருசொலன்றருள்
சிறந்தொளிர்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (ங)

அகந்தையினழிந்தலமரும்படிறனென்றனை
யிகழ்ந்திடநினைந்திலனிருந்துதிகொளந்தணன்
புகழ்ந்தமையெனன்றிவண்புகன்றிடுவன்மன்றுறு
திகம்பரபரம்பரசிதம்பரகுரும்பஜே. (ச)

திரியஞ்சககசுதந்தரதிரிபந்தரகிதஞ்சொலி
திரியந்தொழில்புரிந்திடுதிரிசுந்தரதிகழ்ந்திடு
திரிபுண்டரகனந்தவழ்திரிக்ரந்திகள்கடந்தொளிர்
திரியம்பகபரம்பரசிதம்பரகுரும்பஜே. (ரு)

மனந்தனதினந்தரமலிந்தகவுரந்தனில்
தினந்துதிபுரிந்திடுதிறம்பலவுவந்தரு
டனந்தனியெனுந்தகைதலந்தனினிவர்ந்தொளிர்
சினந்தவிர்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (சு)

இருந்தவமுயன்றிலனிருந்திடவிரன்னொடி
யொருங்குறவெழும்புலனுளங்களிகொளும்படி
கரங்கனியெனுஞ்சுககரந்தையைபுரிந்தடி
சிரம்பதிபரம்பரசிதம்பரகுரும்பஜே. (எ)

கருங்குழன்மட்ந்தையர்கலென்றறமருண்டனன்
விரும்புறுநலன்பரின்மிலைந்துயர்பதம்பெற
விரங்கியெனகந்தைகளிரிந்திடமுனங்கிளர்
திரம்பகர்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (அ)

அழுந்துமயலின்பயமகன்றகமலர்ந்தடி
தொழும்பணிசுமந்திடர்துறந்தெனையறிந்துய
வெழுங்கதிருறழ்ந்தெனதெணங்கமலமொன்றுறு
செழும்பொருள்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (கூ)

முயன்றிடினடந்திடின்மொழிந்திடினினைந்திடின்
மெயின்றிறமெலிந்திடின்மிளிர்ந்திடினயர்ந்திடின்
றுயின்றிடினிருந்திடிற்சுதந்த்ரமறுந்துதி
செயென்றருள்பரம்பரசிதம்பரகுரும்பஜே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# குருவருட்கோலம்.

அன்பர்கள்குழுவாம்பயிர்தழைத்தோங்கவருண்மழைபொழிந்திடுமுகிலென்
றன்பிழைபொறுக்குமேருசந்ததமுந்தாழ்பவர்க்குதவுகற்பகமார்
துன்பவன்பவமதகலவின்னருள்செய்சுதைநிகமாதியாகமங்கள்
தன்பரமெனும்வித்யானந்தமுனிதயாளுவின்பாதமேத்திடுவாம். (க)

எத்திறத்தவருமெளிதினிதெனவங்கெய்தமெய்ப்பரம்பரமதனை
யுத்தியுமரியபொருடருசுருதியுடனுபவமுநன்கலர
வித்திறனெனவெண்ணிமையினிற்றெரிக்குமேகநாயகனெலாமுணர்ந்த
நித்தியவித்யானந்தவாரியன்றனிள்கழனிதம்பணிந்திடுவாம். (உ)

பத்திவைராகவுபரதியாகும்பரிசிலேன்றனையுமோர்பொருளா
யத்தமத்தகசையோகமதியற்றியங்கையிற்கனியெனவருளாற்
றத்துவமனைத்துஞ்சடமெனவுதறித்தன்மயமாக்கியவதீத
வித்தகவித்யானந்ததேசிகன்றன்மிளிர்பதவிணைசிரம்பெறுவாம். (ங)

நானெனதெனும்பொய்ந்நடலையினேன்றனற்றவப்பயனெனத்தோன்றி
மோனவாழ்வளித்தமூர்த்திமாகேசன்மூதறிவாயொளிர்முதல்வன்
றானமர்நிலையிற்றகுசிவமயமாய்த்தயங்கிடுஞ்சோதிவானமிர்த
ஞானபண்டிதவித்யானந்தநாதனற்றிருவடிநிழற்படிவாம். (௪)

கானனீர்கிளிஞ்சில்வெள்ளிபோற்கலந்துகவர்ந்துகொண்டனர்த்தஞ்செய்மாயை
வானெனத்தோன்றிவளியெனப்பிரிந்துவண்சுடரான்விபாகமதா
யானநீர்மண்ணாற்பூரித்துப்பொதிந்தவாக்கைவாதனையெலாந்துடைத்த
தாணிகர்வித்யானந்தவெதீசன்றாடலையான்வணங்குறுவாம். (௫)

காய்ந்திடுமோகக்கரவிருபகுவாய்க்கடைமெலிந்தலைவலையிடைந்து
நீந்தரும்பவமுந்நீர்க்கரைகாட்டிநீள்பதவங்கமீந்தருளுஞ்
சாந்தியேவடிவமாகியவிபுலஞ்சார்ந்ததன்மயருளமணியாய்
வாய்ந்திடும்வித்யானந்தமாதவன்றன் மலர்ப்பதாம்புயம்வழுத்திடுவாம்,

பகுதியின்விளைந்துபார்முதற்பூதபௌதிகபவவிதையாகு
மகதகங்காரமலினவாதனைகண்மாய்வுறமாப்பொருள்விரித்தே
யிஃதஃதெனுஞ்சுட்டறவொருபடித்தினியைந்துபசாந்தவாழ்வுறச்செய்
விகிதனும்வித்யானந்தவேதியன்றன்விரைகமழ்பதமிறைஞ்சிடுவாம். எ)

வருணமாச்சிரமமாதியபேய்கள்வதிதருவிகிர்தமுக்குணமா
மிருண்மலியாக்கைமுதலியவனைத்துமிரியவென்னுளத்தெழுஞ்சுடராந்
தெருணயந்துதவித்திவ்வியாதாரத்திகழ்பரம்பொருளினைவிளக்கும்
அருண்மிகுவித்யானந்தசற்குருவினடியிணைக்கன்புபூண்டுய்வாம். (அ)

அச்சமாரனார்தமாதியவகற்றியரியஞானாஶ்ரமமளித்தே
யச்சிதானந்தவருளமுதருத்தியச்சுதானந்தமென்றழையா
வெச்சமதாகவெழில்பெறவருளுமிருந்தவத்தவருணர்ந்துவந்து
மெச்சிடும்வித்யானந்தவேதாந்தவிஞேதனற்சரண்டுதித்திடுவாம். (௯)

பொங்குறும்புவனகுருபரமாம்ஸபுகழ்பரிவ்ராஜகாசார்ய
சங்கரபகவத்பாதவங்கணனின்னருட்கடலெழுதருமருணன்
சங்கைகடவிர்ந்துசார்ந்திடுமடியர்தறுகணிங்கறவரமுதவும்
எங்கணாயகன்வித்யானந்தகுரவனிருசரணாளும்வாழியவே. (௧0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# குருவருட்காட்சி.

புறமாயகமாய்ப்புகழ்தாபதருண்
ணிறைபூரணமாகியநின்மலனே
குறைதீர்தருசற்குணபூபதியே
அறிவாயகமாகியசங்கரனே. (௧)

மலமாயையினான்மனமாழ்கியுடைந்
தலையாவணநின்னருளாலடியே
னிலையாயுறுமோர்நிலைதந்தருளாய்
எலைதீர்தவமாமொதிசங்கரனே. (௨)

உருகாமனநெக்குடையாவுடலந்
திருவாரடிசேர்தருசீர்தருவாய்
பெருவாழ்வதெனும்பிரியாவிடையாய்
வருமாதரவாமகசங்கரனே. (௩)

மதமாறுமொரோவழிவாய்ந்திடவத்
விததாபிதவாரியவித்தகனே
நிதமோரியல்பாய்நிகமாந்தமதாம்
பதமேயருடற்பரசங்கரனே. (௪)

ஊனாருடலம்விழுமுன்னுணர்வஈ
ஞானியெனுமாலறவேநடுவாய்த்
தானாயுறவேதயைசெய்தருளாய்
கோனாய்வருசற்குருசங்கரனே. (௫)

இமையாவிழியோடெணுமோகமறத்
தமையாய்பவரோதமராகுமெனு
வமர்வானருளாயகல்வானமுதாய்ச
சமமாயெவணுந்தவழ்சங்கரனே. (௬)

சதமாயுலகந்தனிலாழ்வதிலாத்
துதியாரறிவிச்சுமடன்பெறவே
விதியாய்பரனேவிழைவாருளினும்
பதியாய்நிகழ்பண்ணவசங்கரனே. (௭)

விண்ணேவிபுவேவினையென்றனிரு
கண்ணேகதிரேகதிநாலினுளாம்
பெண்ணாணலியாய்ப்பிரிதாகியவா
தண்ணாரளிசெய்தருள்சங்கரனே. (அ)

மரணந்தனினின்மநநந்தபுதாக்
கரணந்தனிலாழ்கவினீந்தடரத்
தருணந்தனில்பொற்சரணெற்கருளாய்
புரணஞ்சொலிபொற்புறுசங்கரனே. (கூ)

சுபமாயிலகுஞ்சொருபானுபவச்
சபையாரொனுமெய்த்தவர்சூழிறையே
யபிமானமதாலடையுஞ்சகநந்
தபுமாறருளாய்தகுசங்கரனே. (க0)

இகலாரொழிநீரிதமேதுமிலா
வகமாயையினாலனுர்தாதிகளி
னகமாயுறுமாடலைநீபுரியத்
தகுமோதனைநேர்தருசங்கரனே. (கக)

அவனோடவளாயதுவாய்மரும்
பவபாசமதின்பகைதீர்தரவே
நவமாய்வருவாய்நடுநாயகபூந்
தவிசாமிதயந்தவழ்சங்கரனே. (கஉ)

அருவாயுருவாயணுவாய்மலையாய்
நிருபாதிகமாநெறிசேர்நிதியே
கருவேரறுமோர்கதியேததுநீ
தருவாய்குருவாய்த்தவழ்சங்கரனே. (கங)

சதிதந்திரவிந்திரசாலமதாய்
மதிதந்திடுமல்குபல்போகமுணும்
விதிவெந்துறுமாறருள்வேதியனே
அதிசுந்தரவாதுடசங்கரனே. (கச)

வியன்விண்மணில்வென்றிகொள்வீரியனே
சுயவனுபவநன்கருள்சூரியனே
யயனரியரனென்றிடுமாரியனே
ஜயஜயசிவசங்கரசங்கரனே. (கரு)

ஆவாவெனவிங்கலமந்துறுவேன்
மூவாமுதுஞானமதான்முறையா
மூவாசைகடீர்முடிவாமுதலே
தேவாதிகழ்தேசிகசங்கரனே. (கசு)

தானந்தவமுஞ்சமமுந்தமமும்
மோனந்தனிலாழ்முடிபுந்தணிகூர்
தானந்தமிலாச்சகநாதனெனும்
ஆனந்தவநாமயசங்கரனே. (கஎ)

செடிசேருடலஞ்சிதையாதெனவோர்ந்
திடரேபுரிவேனெனையோர்பொருளா
யடியாரடிசேர்தரவாண்டனனால்
உடைமேற்றுவர்தோயுறுசங்கரனே. (கஅ)

கனவென்றுடலாதிகழன்றுநித
மனமொன்றியவாலறிவாளொனு
மினமின்றிபிருந்தவெனேழ்மைதவிர்
சினமின்றியசீர்பதிசங்கரனே. (கக)

தெரியேனினையலதுதெரிந்தவரைப்
பிரியேனினிபேசுறுமாசையினன்
விரியேனினிமேதகுதண்ணருள்விட்
டிரியேனெனலென்றுகொல்சங்கரனே. (உ0)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# நெஞ்சறிவுறுத்தல்.

அலக்கணக்கணமகற்றிடுமருந்துணையதனை
மலக்கடத்திருண்மாற்றிடுமணிவிளக்கதனை
நிலைக்குநன்னிலைநீதியினளிக்குநின்மலனை
அலைக்குநெஞ்சமேயடைகுதியறிவுறற்பொருட்டே. (க)

சாந்தபூமியிற்றவழ்தணிதருசயம்பதனைக்
காந்தமோனத்திற்கமழ்தரவளர்தருங்கவினைத்
தோய்ந்துந்தோய்வறுசொருபசித்தெனுஞ்சுயமதனை
வாய்ந்தநெஞ்சமேவழுத்துதிவாழ்குதற்பொருட்டே. (உ)

நித்தியானந்தநிர்க்குணநிட்களமதனை
யுத்தியாலனுபவந்தனினுளத்தொளிபரப்பி
வத்துவாயுறவைத்தருள்வள்ளலையனிசங்
கத்திநெஞ்சமேகழல்பணிகதிபெறற்பொருட்டே. (ந)

பந்தமாற்றியபக்குவர்பாக்கியப்பொருளைச்
சிந்தைமேவிநஞ்சிலுகறச்சீறுநற்றெருளைத்
தந்தைதாய்குருதமரெனச்சார்ந்திடுமருளைத்
தொந்தநெஞ்சமேதொழுகுதிதுகளறற்பொருட்டே. (ச)

அரியநீதனையடியவரகத்திருளரிக்குந்
துரியசோதியைத்துதிசெயுநாவினின்றெழுகு
மருவுலாம்பிரசத்தினைமயறபுமருந்தை
உரியநெஞ்சமேயுன்னுதியுய்குதற்பொருட்டே. (ரு)

இட்டதெய்வத்தையெங்கணும்விரவுமின்னமுதைத்
தட்டிறந்திடுந்தன்மயகோலத்தின்றகையை
முட்டிறந்துமுச்சகத்தினுமுருவியமுதலைத்
துட்டநெஞ்சமேசொல்லுதிசுகமுறற்பொருட்டே. (சு)

அஞ்சலென்றணைத்தாண்டருளாதியையருவைத்
தஞ்சமென்றவர்க்கிரங்கிடுந்தற்பரவுருவைக்
கஞ்சன்மால்சிவனாகியகாரணகுருவை
வஞ்சநெஞ்சமேவாழ்த்துதிவளங்கெழற்பொருட்டே. (எ)

ஆண்பெண்ணுடலியாகியவான்மதத்துவத்தைச்
சேண்மணுகியதேவர்கடேவெனுந்திறத்தைக்
காண்டகாதகண்காட்சிதந்தருள்செய்கற்பகத்தைப்
பேணுநெஞ்சமேபேசுதிபிரிவறற்பொருட்டே. (அ)

தீனனேற்கருடீஞ்சுவையானமுக்கனியை
மோனமாகியமுப்பதமுடிவிடமதனை
யீனமாற்றிடுமியல்பினையென்னுடைநட்பை
மானநெஞ்சமேமருகுதிமயலறற்பொருட்டே. (கூ)

பின்னமின்றியபேசரும்பிரமத்தைவித்தை
யின்னதென்றறியாதறிந்திடுமெழினயத்தைத்
தன்னைநல்கிடுந்தக்கஞானப்பழக்கொத்தை
இன்னனெஞ்சமேயேத்துதியிருடெறற்பொருட்டே. (கo)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# சிவானுபவவிளைவு.

தேனமர்தருங்கொன்றைமாலையாடச்சடை
திகழ்ந்தாடநயனமாடத்
திடமார்பினூலரவமாடச்சிலம்படிகள்
திரிகடதொந்தொமெனவாட
மானிமிர்ந்தாடவொளிர்மழுவெழுந்தாடமக
வானுதிதேவராட
மால்பிரமனுதியர்மகிழ்ந்திருமருங்காட
மன்னுகணநாதராடத்
தேனெனவிரும்புமொழியாளாடவெண்டோ
டிகந்தமுறவாடவமருஞ்
சித்விலாசச்சபையினடியர்குழுபாடநீ
செய்கருணையாடலென்றே
கோனெனவுணின்றுடுஞானமயதீபமே
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்திணுளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (க)

ஆதியுருவேயகண்டானந்தவுருவே
யகோசரமதானகுருவே
யண்டகோடிகளடுக்காய்த்தங்கும்வெளியே
யணைந்திடாதோங்குமொளியே
சோதிமயமேசுபந்தோன்றுநயமேசுகஞ்
சோர்வுறுதூறுகயமே
சுத்தபரமேசொலின்றூயசிரமேகனஞ்
சூழ்ந்துபடர்கின்றதரமே
வேதமுடிவேவிபுலமேவும்வடிவேயடியர்
வினையிருமைவிளைவின்விடிவே
விண்ணேவிளங்கெனிருகண்ணேவிழைந்தருள்
விரும்புறுநலங்கொள்பண்ணே
கோதகமதோயமயனேதிசுகபோகமே
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (௨)

செபதபமிலாவேழைசிறியனிவனென்றெனைச்
சீறுதுகூறுதுமுன்
செய்தகருமாதியபலாதியெனநவிலுறுந்
தீமைபாராதருகணைத்
துபநிடதமுடிநடனபாதபங்கயமென்
துச்சிதந்தாள்வதென்றோ
வும்பர்கணநாதர்கந்தருவர்கின்னரர்கருட
ருரகர்வித்தியாதரர்கணின்
சபைமருவியாடலொடுபாடல்பயில்வுறநிதஞ்
சநகாதிமுனிவரர்தொழச்
சகலமறையாகமபுராணமுதலியகலை
சலிப்பிலாதோலமிடக்
குபுகுபெனவருண்மாரிசொரிவிபுவெனுங்கிழமை
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (௩)

காடுமலைநாடுசுடுகாடெனதெனக்கருது
காமர்விளைவீடுதொறுமே
கன்மபந்தாதிதருசன்மபந்தந்தருங்
காமநெறிபடரனந்த
கோடியுடலோடுநடமாடிவிளையாடிய
குணக்கேடனைக்கூவியே
கும்பிடென்றத்தமத்தகசையோகமதுடன்
குலவுமாவாக்கியமெனுந்
தேடுறும்பொருளருத்தித்திருத்தித்திருச்
சீரடிக்காட்படுத்தித்
தீமைகளெலாமறத்திகழ்நலனெலாமுறத்
திருவுள்மிரங்கியெளிதிற்
கோடிகுலசீலமலிவேடிலகுவார்கடுதி
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (ச)

பண்டுறவுவிண்டுதிண்டாடிமன்றுடுமென்
பரிசதுளையாடுகீர்மை
பரிபாகக்காலம்பதிந்துயிர்பிழைக்குநற்
பரிசானதூய்மைவாய்மை
யுண்டெனவுசாவினின்றெண்டிசைதொறுஞ்சென்
லுடைந்துருகிலேன்பொன்றுறு
முடற்சுமையொடெங்குநனியுண்டுடுத்துத்திரிந்
துழலனுபவமலதுனுமெய்
கண்டவர்பினேகுங்கணக்கறிகிலேனணிகொள்
கதியறிகிலேன்கருணையங்
கடவுணின்மகிமைதவழ்காரணமதோர்கிலேன்
கடையவன்றனையுவந்தாட்
கொண்டகுலதெய்வமேதொண்டர்பணிபூணவருள்
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (ரு)

நள்ளிருளினெனைவிடுத்தெங்கொளித்தனையிதென்
ஞாயமோநகுவணிபுழை
நல்லதலைமாலைசூலத்தினொடுடமருகமு
நண்ணமலைமகள்பங்குற
வெள்ளநீர்ச்சிறகருகுதும்பையணிசடைமூன்று
விழிபுலியினதடரித்த
வெண்பொடிதரித்தநற்செம்பவளமேனியொடு
விடையின்மிசைவருவதென்றோ
வுள்ளன்பினோர்தமதுதெள்ளுமனதூடே
யுறைந்தையாய்நிற்குமுணர்வே
யோங்காரபிடத்தினொளிர்பரஞ்சுடரோ
யுவட்டுறுமானந்தமே
கொள்ளைகொண்டுணவடியர்வெள்ளவருளமுதுதவு
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (௬)

பல்லாயிரங்கோடிவிபுதர்சித்தர்கண்முனிவர்
பரமார்த்தநெறியிதெனவன்
பவம்பொடிபடப்பந்தபாசமறவேபரந்
தாமனுதியர்மகிழ்வுறக்
கல்லாலினீழறனினல்லோர்கணால்வர்கண்
கவவுபரமாத்துவிதசிற்
கனவுண்மைகாணாதுகாணுவான்காட்டாது
காட்டநீயதுவாகவே
சொல்லோடுதொழிலற்றுமனமற்றுவெம்பவத்
துரிசற்றுநிருபாதிகத்
துரியமாய்விபுவாய்த்துவந்துவந்தீர்ந்தவர்
சொரூபசுபமேவவருளாய்
கொல்லுநமனைக்கொல்லவல்லபிருதுக்காமர்
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினொளிரைந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (௭)

அந்திவண்ணமுக்கணுபுகல்விண்ப்பமொன்
றறிவுநிலைகுன்றுபோழ்தின்
ஆபரஞ்சோதிசிவனேயெனவரற்றவுமு
ளகமகிழ்வதறுகாலையிற்
கந்தனைத்தந்தவெந்தாய்சம்புவெனவுமுறு
காமாதியுறழ்போதினிற்
காமதகனசங்கராவெனவுமறலியடர்
காலமார்க்கண்டமுனிபால்
வந்தகோலாகாலகாலவெனவாய்கதறி
வாழ்த்திடவுமரியபசிநோய்
வரினிரந்தமுதுசுந்தராருந்திடவழங்
கியபரமவெனவுமருளாய்
குந்திசுதனோடமர்புரிந்தகமகிழ்ந்தருள்செய்
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினெளிாந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (அ)

அருவுருவமிருவுருவமொருவுருவமாயகண்
டாகண்டமாயனந்த
மாகியொன்றாய்மகத்தாகியணுவாகியங்
கங்கதுவொடிதுவாகிநற்
பரமருளொடுயிராய்ப்பரந்தவானதிசெறி
பரன்மையாய்ப்பரவெளியதாய்ப்
பண்பாகிநிர்க்குணப்பரிசாகிநயனிலாப்
பாவயொடபாவமாகித்
துரியமயமாய்ச்சொருபமாய்ச்சுகோதயமாய்ச்
சுஜாதிகவிஜாதிகமுடன்
சுவகதமிலாதசின்மாத்ரதொந்தாதீத
சுருதியனுபவமிலவுறுங்
குருவடிவமேயருள்செயிருநிதியமேபெருமை
குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமந்தினெளிாந்துதொழிலுந்து
குளிர்சந்திரமௌலீசனே. (கூ)

ஹரஹரசிவாயநமவென்றனுதினம்பரவு
  மடியருளமணுகும்வெளியே
யானந்தநிர்த்தநடராஜநமவென்னுன
  ரகப்பொதுவிலாடும்வெளியே
கரமுகன்றனையீன்றகடவுணமவெனுமறிஞர்
  கரதலாமலககனியே
கைலாசவாசசகதீசநமவெனுமன்பர்
  காணவெளியாகுமுனியே
கரகபாலாநீலகண்டநமவெனுமுதியர்
  காட்சியாய்நின்றபொருளே
கதியாகியிலகுபசுபதிநமவெனுங்கள்வ
  னென்கணூடமர்தியருளே
குருமணியிழைத்தவருமணியாதனத்தின்மிசை
  குலவுகைலைக்குரிசிலே
கொளுமந்திரமெனுமைந்தினெளிரைந்துதொழிலுந்து
  குளிர்சந்திரமௌலீசனே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# அவதாரலீலை.

கேரளந்தன்னிற்கிளரவதாரஞ்செ
யேரிளவிந்துமௌலீசர்
ஏரிளவிந்துமௌலீசரெங்கோன்சங்க
ராரியராகவந்தாரே. (க)

பிரணவோச்சாரணையுடன்பிறங்குலகதனின்வந்
தரனெனவாதரித்தாரே
அரனெனவாதரித்தாரனந்தங்கோடி
சரணர்தாந்தாமெனுமாறே. (உ)

வளநனிமொய்வாரணாசிமன்னாய்வந்த
வெளுமுடைமண்டலமிச்சிரன்
வெளுமுடைமண்டலமிஸ்ரனைவென்றுறு
தளர்வறுகாவிதந்தாரோ. (௩)

வெண்டாம்ணாயாள்விண்மின்னெனுமுன்னர்வாய்
விண்டுரையாடிவென்றாரோ
விண்டுரையாடிவென்றாரன்னவடனைப்
பண்டப்பீடத்தமைத்தாரோ. (௪)

வாதராயணருடன்மாறிவாதாடவந்
தேதமில்சீர்த்திதந்தாரோ
ஏதமில்சீர்த்திதந்தாரதையேற்றனர்
ஆதிகுருபரனாரோ. (௫)

மதங்கள்வனையுமதாந்தகாரம்படப்
பதங்கடெரித்துப்பறித்தாரோ
பதங்கடெரித்துப்பறித்தாரொனுமிருமூன்று
மதங்கள்வகுத்துவிரித்தாரோ. (௬)

ஒளிகெழும்ப்ரஸ்தானத்ரயபாஷ்யோத்க்ருஷ்டாதி
மிளிர்கலைகளைவிதந்தாரோ
மிளிர்கலைகளைவிதந்தாரத்விதானந்த
அளிமழைசொரியநின்றாரோ. (௭)

சினந்தவிர்முனிவரிருடியர்சித்தர்க
ளினந்தமதெணமுனீடேறவே
இனந்தமதெணமுனீடேறவேஜகத்குரு
தனந்தனியாகவந்தாரோ. (௮)

பூமிக்கணியாய்ப்பொலிதிருக்காஞ்சியிற்
காமக்கோட்டிப்பீடக்காட்சிசேர்
காமக்கோட்டிப்பீடக்காட்சிசேர்ஸ்ரீசக்ர
ஏமத்தாபிதமிழைத்தாரோ. (௯)

வாய்ந்தபெரும்புகழ்வாரருள்சங்கரர்
ஆய்ந்தெனையாண்டுகொண்டாரோ
ஆய்ந்தெனையாண்டுகொண்டாரோஸ்ரீமன்மாதே
வேந்திரஸரஸ்வதியாரோ. (௧0)

நீர்மலிவேணிநியாமகசங்கரர்
ஆரருள்செய்துநின்றாரோ
ஆரருள்செய்துநின்றாரோநரசிங்க
பாரதிகுருபரனாரோ. (௧௧)

ஆரியசங்கரனாரருள்பெற்றவர்
ஓரியல்பொன்றிநிற்பாரோ
ஓரியல்பொன்றிநிற்பாருலவார்தவச்
சீரொலாம்சேர்திறலாரோ. (௧௨)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# திருச்சாழல்.

காருண்யவியல்.

சருவபரிபூரணமாய்த்தானாய்மிளிர்பரமன்
கருவுதியாக்குருநிதியாய்க்காணவந்ததென்னேடீ
கருவுதியாக்குருநிதியாய்க்காணவராவிடினடியர்
வருதலொடுபோதல்வழிமாளாகாண்சாழலோ. (௧)

ஈடணைகளின்றிநிகழீசனவன்செங்காவி
வேடமதுபுனைந்தவிதமேதறியவிளம்பேடீ
வேடமதுபுனைந்தவிதமேதினியோர்தாம்பிழைக்கக்
கூடும்வழியுணர்ந்துகுறிக்கொள்வான்சாழலோ. (௨)

ஏகமிரண்டென்னுமலிலகுசுத்தாத்துவிதபர
னேகதண்டங்கைப்பிடித்ததெனக்கறியவிளம்பேடீ
ஏகதண்டங்கைப்பிடித்ததிகன்மதமாடுகண்ஞான
வேகவெளிபோய்ச்சொருபவிடம்புகுவான்சாழலோ. (௩)

தேசன்சிவலோகன்றிருமாலயனுவான்
பூசைசபதபஞ்செய்புதுமையதிங்கென்னேடீ
பூசைசபதபங்கள்புரியாவிடினெவரு
நேசநியமாதிகள்செய்நிலைகுலைவார்சாழலோ. (௪)

கோடிமிகுகோடியெனக்குலவுபாமார்த்தமுதிர்
பாடியங்கள்செய்தருளும்பரிசஃதிங்கென்னேடீ
பாடியங்கள்செய்தினையபயனுதவாவிடினுலகை
மூடமதிமேகமிகமூடிடுங்காண்சாழலோ. (௫)

பிரிவாகுநால்வேதம்பேசாப்பெருமையதென்
றரிதாயுரைத்தவதையவர்விரித்ததென்னேடீ
அரிதாயுரைத்தவதையவர்விரியாவிடினகிலம்
பரிபாஷைப்பார்ப்பனையார்பாலாங்காண்சாழலோ. (௬)

மாறுபடுமெண்ணிகந்தமதங்களெலாமாற்றுமங்நா
ளாறுமதம்வரையறுத்தவதிசயந்தானென்னேடீ
ஆறுமதம்வரையறுத்ததன்புமுதலாம்வழிபோய்த்
தேறியிவர்பூரணவான்சேர்ந்திடுவான்சாழலோ. (௭)

இவ்வகைமிக்கிசைத்தவவற்கெண்ணரியபத்திபுரிந்
தொவ்வுமுயிர்பிழைப்பதற்றிங்குழல்வர்சிலரென்னேடீ
ஒவ்வுமுயிர்பிழைக்கும்வகையுன்னுமைமுற்பவத்தின்
கவ்வுமலவாதனைசேர்கட்டாங்காண்சாழலே. (௮)

தனுகரணபுவனமுடன்றவழ்போகநல்குமவ
னுனுமுலகருளுற்றுமவையுவந்திடலிங்கென்னேடீ
உனுமுலகருளுற்றுமவையுவப்பதவற்கன்றறிவால்
நனிதமைநன்குணருநல்னயந்தருள்வான்சாழலோ. (௯)

வேதகோஷங்கண்மிகவிழவெடுப்பமெய்த்தவர்சூழ்
போதவெதிநாதன்பொருந்துவதிங்கென்னேடீ
போதவெதிநாதன்பொருந்தாவிடினிவண்மற்
றேதியுறவாடியுயாவுயிர்த்திரள்காண்சாழலோ. (௧0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வரார்யநமஃ

# அன்வணப்பத்து.

அனுபவ நுகர்ச்சி.

கற்றைச்சடையர்கபாலக்கரத்தின
ருற்றநந்தெய்வங்காணன்னேயென்னும்
உற்றநந்தெய்வமுவந்தருளாவிடி
னுற்பவமாறுவாலன்னேயென்னும். (க)

பொறிவதிமார்பர்பொங்காழிக்கரத்தினர்
நிறைசெல்வமாவர்காணன்னேயென்னும்
நிறைசெல்வமாகுநிஜானந்தமொன்றுக்காற்
குறைசெல்வங்கூத்தாடுமன்னேயென்னும். (உ)

கமலத்தவிசர்கலைமகணவின
ரமலநங்குலமவரன்னேயென்னும்
அமலநங்குலமாவதறியாவிடினவ
முமலமுறவாகுமன்னேயென்னும். (ங)

அமலவசங்கவகோசரமாகுங்கா
ணிமலசின்மாத்திரமன்னேயென்னும்
நிமலசின்மாத்திரநேடுமவர்தமைத்
தமதுருவாக்குமாலன்னேயென்னும். (ச)

அரனரியன்றியயனயலானவர்
குருபரனரவரன்னேயென்னும்
குருபரனர்திருக்கோலஞ்செய்நாமஞ்சங்
கரபகவத்பாதரன்னேயென்னும். (ரு)

வேண்டும்வடிவின்விளைந்தணைத்தாள்பவர்
தூண்டாவிளக்கினரன்னேயென்னும்
தூண்டாவிளக்கெனுஞ்சோதியர்நந்தமை
யாண்டவராகுங்காணன்னேயென்னும். (சு)

வேதாந்தமோனவிழுப்பொருளானவர்
போதாந்தவெள்ளத்தரன்னேயென்னும்
போதாந்தவெள்ளமேற்பொங்கித்ததும்புங்கா
ணாதாந்தயோகத்தாலன்னேயென்னும். (எ)

சிற்கனமாகித்திகழும்பரம்பொரு
ணிற்குணமாகுங்காணன்னேயென்னும்
நிற்குணமாகுநிருவிகற்பாங்கத்தின்
றற்சுதந்தரமறுமன்னேயென்னும். (அ)

ஆண்டகைபாதமனுதினம்பூசிக்கின்
வேண்டுமவைநல்குமன்னேயென்னும்
வேண்டுமவைநல்கின்வேள்விமுடிந்திடு
மாண்டுதியாமலிங்கன்னேயென்னும். (௯)

வாலறிவாளனைவாழ்த்திமணந்தனன்
சாலக்குலேகுலேந்தன்னேயென்னும்
சாலக்குலேகுலேந்தேனென்சொல்கேனெனற்
கால்மிருந்தவாவன்னேயென்னும். (௧0)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# குயிற்பத்து.

அருட்பூரணத்திற்கவசமுறல்.

ஆலமமுதாயருந்திடுவானை
யாரியனுகியருள்செயுங்கோனை
மாலவதாரமாய்மன்னிநிற்பானை
வாய்மலர்ந்தோர்மொழிவாய்மைசொல்வானைக்
கோலமெவையுங்கொளும்பெருமானைக்
கூடிக்குலாவுறுங்கொள்கையினானை
ஏலவிரவிற்குயிலேவரவே
யிசையுடன்கூவியென்னின்னுயிர்க்காவே. (௧)

உலகுயிர்பரமவையுதவுறுவானை
யுலகுயிர்பரமறவுணர்வுறுவானைக்
கலைமுழுதுங்கடந்தோங்குறுவானைக்
காரணகாரியமாகிநின்றானை
மலமறவீட்டிமணஞ்செய்குவானை
மாண்பொருளாகிமலிந்திடுவானை
இலதுளதாகுங்குயிலேவரவே
யிதமுடன்கூவியென்னின்னுயிர்க்காவே. (௨)

நானெனதென்றேவீணாள்கழித்தேனை
    நாணாதுவந்தணைத்தாண்டுகொண்டானை
யூனுடலுள்ளேயுலாவிநிற்பானை
    யுன்னலுணாத்தலினன்னியவானை
மாணிடத்தானைமழுவலத்தானை
    மாற்றுளனுப்பாமல்வாழ்வளிப்பானை
ஈனந்தவிருங்குயிலேவரவே
    யின்புடன்கூவியென்னின்னுயிர்க்காவே. (௩)

ஐயமறுத்தடிதந்தருள்வானை
    யரியயனுமரனுங்குணவானை
மெய்யடியார்தொழவீற்றிருப்பானை
    மேதகுமோனவிவிக்தத்துளானைத்
துய்யமறைசொலுந்தொன்மையினானைச்
    சுந்தரர்க்காகநடந்துநொந்தானை
வையம்புகழுங்குயிலேவரவே
    வளமுடன்கூவியென்வாழ்நலங்காவே. (௪)

உலகமெலாமொருங்குண்டருள்விண்ணை
    யுலவாவின்பப்பெருக்காகியதண்ணைக்
கலகமனத்திருளாகியகண்ணைக்
    கற்பனையற்றவிடத்தவிழ்திண்ணைப்
பலகலைகூறும்பரிசுடைப்பண்ணைப்
    பற்பலவாகப்பராவியவெண்ணை
எலையறுதேசார்குயிலேவரவே
    யிக்கணங்கூவியென்னின்னுயிர்க்காவே. (௫)

ஆராமைகாட்டியவற்புதத்தேவை
    யாளத்துசங்கட்டியாண்டருள்கோவை
யோருமன்பர்முகந்திடும்பூவை
    யெண்சித்திமுத்தியளித்திடுங்காவைச்
சோர்விலாதெங்குந்துதைந்திடுந்தூவைத்
    துன்னிப்படர்ந்தவைதுஞ்சிடுங்கூவைச்
சேர்வுழிச்சேரக்குயிலேவரவே
    சீருடன்கூவியென்சீவனைக்காவே. (௬)

சிந்தனைக்கெட்டாத்திருவளர்சத்தைச்
செய்துஞ்செயாத்திறலார்தருசித்தை
முந்துபிந்தாகிமுளைத்தெழுமுத்தை
மூதறிவோருட்கொண்முப்பழக்கொத்தை
வந்துபோதநல்கனுபவவத்தை
வாதைக்குடன்படாவாழ்முதல்வித்தைச்
சுந்தரநீலக்குயிலேவரவே
சுபமுடன்கூவியென்சூக்குமங்காவே. (எ)

அண்டபிண்டப்பிரமாண்டவுருவை
யணுவுக்கணுவாயமருமருவைத்
தொண்டருட்பூவிற்றுயிலுமருவைத்
தொடர்ந்தபல்லூழிநிகழ்நகக்கருவைக்
கண்டவர்விண்டுரையாததிருவைக்
காரணமாய்த்தவழுஞ்சகக்குருவைப்
பண்டுறவாகுங்குயிலேவரவே
பண்புடன்கூவியென்ப்ராணனைக்காவே. (அ)

அழைத்தவானைக்கருளாதிமூலத்தை
யன்பர்பைங்கூழையளிக்குமாலத்தை
முழுப்பொருளாகிமுடிந்தகோலத்தை
முத்திநெறிக்கனுகூலகாலத்தை
யழுத்துமுபாதியகன்றசீலத்தை
யமைதிதருமாறின்மேலாஞாலத்தை
விழுத்துணையாகுங்குயிலேவரவே
விரகுடன்கூவிவினையனைக்காவே. (கூ)

தேவர்க்குந்தேவாய்த்திகழ்பரன்றன்னைத்
தெள்ளுணர்வாகித்தேசார்தரும்பொன்னை
மூவர்க்குமேலாமுடிவுறுமுன்னை
முப்பாழுக்கப்பாலதாகியபின்னை
மேவற்கரிதென்றுளிர்தருமின்னை
மேல்கீழ்நடுபக்கமாதியமன்னைத்
தாவிக்கரியகுயிலேவரவே
தவமுடன்கூவியென்றன்னுயிர்காவே. (க0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# அடைக்கலப்பத்து.

## முத்திவிருப்பம்.

கட்டளைக்கலிப்பா.

மாயும்பொய்யுலகாசைமயக்கினன்
 மகிபவுன்னைமறந்தபுலையனே
னேய்விலாமலுன்பொன்னடிக்கீழ்ப்பணிந்
 தொன்றிவாழ்ந்திடுநாளுமுண்டாங்கொலோ
தாயுந்தந்தையுநீயன்றிவேறில்லை
 தமியனேனுளந்தங்குமுதல்வனே
ஆயும்வேதமடங்கலுமேத்திடு
 மப்பனேயடியேனுன்னடைக்கலம். (௧)

ஆதரித்தெனையாள்பவரின்றென்ப
 தையநின்றனருளறியாததோ
மோதும்வல்வினைப்பாசமுறியவே
 முனைவனேயென்றன்முன்னிற்பதென்றுகாண்
சீதநற்சரண்சேர்ந்தமெய்யன்பர்கள்
 சித்தமார்தருசிற்சுகவாரியே
போதமேவடிவாம்பரிபூரணப்
 புத்தனேபுன்மையேனுன்னடைக்கலம். (௨)

பந்தமோக்கமிறந்துபரந்தொளிர்
 பரமவுன்னைப்பராவித்தொழாமலே
விந்தைமாயைவிளைவுக்குரிமையாய்
 வெதும்பியுள்ளம்விகற்பத்தினனிதஞ்
சிந்தைநைந்துதிகைத்திடனீதியோ
 செல்வநன்னிதியாயெங்குநீநிற்க
வெந்தையேயெனையாட்கொண்டருளுவா
 யிறைவனேயேழையேனுன்னடைக்கலம். (௩)

கூரிருட்பவக்கோலாகலத்தினுற்
குழறியானென்றுகூத்தாடியுன்பதந்
தேர்தலின்றித்தெளிவிழந்தின்னல்சூழ்
தினனாகித்திரிந்திடனன்மையோ
பேர்மிகும்பிரமானந்தப்பெற்றியாம்
பேசாமோனப்பிணிப்புண்டுநாயினேன்
சீரருட்கடலிற்குளிக்கச்செயாய்
சித்தனேசிறியேனுன்னடைக்கலம். (௪)

தஞ்சமென்றுனைச்சார்ந்ததனியனைத்
தக்கவாழ்விற்சலிப்பறவேவைத்தே
யஞ்சலென்றணைத்தாள்வதுன்பாரமே
யையனேயரசேயழியாவணம்
விஞ்சுகாமவெகுளிமயக்குறும்
விண்மண்வாழ்வைவியந்துபுகழிலே
னெஞ்சக்கந்தைநீயேயறிகுவாய்
நித்தனேநீசனேனுன்னடைக்கலம். (௫)

தூலசூக்குமகாரணத்துள்ளொளிர்
தொன்மையாகியதூயநற்றேயசே
மூலகாரணனாகியமுத்தனே
முழுதுமோர்ந்தருண்மூர்த்திமாகேசனே
யோலமிட்டலறித்தொழுமாதவர்க்
குற்றநற்றுணையாயுறவாகவே
கோலமாகவந்தாட்கொண்டருடருங்
குரவனேகொடியேனுன்னடைக்கலம். (௬)

கள்ளமாமயறீர்ந்துன்கழலிணை
காணுமாறுகலங்கிநிற்பேனருட்
கொள்ளைகொண்டுணநல்கிற்குறையுமோ
கோதிலாதவருட்செம்பொற்குன்றமே
விள்ளொணாதென்றேவேதகீதைகள்
விமலமாய்ப்பணிந்தேத்தும்விவிக்தனே
தெள்ளுமாரமிர்தேதெவிட்டாவின்பத்
தேறலேதீமையேனுன்னடைக்கலம். (௭)

ஊனடுத்தவுடம்பின்சுமையதை
　யுறுதியாகக்கொண்டேயுளமோகத்தா
ஹீனமாயபராதமியற்றினே
　னென்செய்கேனினியென்னுயிர்த்தாரக
ஞானநாயகவாயினுநின்பெரு
　நலமிகுமருளாலாதரித்திடாய்
வானுமாய்வளியாய்க்கனலாதியாம்
　வள்ளலேவன்பனேனுன்னடைக்கலம். (௮)

அச்சமாரனூர்தாதிகளான்மிக
　வலமந்துற்றிடாவண்ணமமலனே
பொய்ச்சகத்தின்புணர்ப்பையகற்றியென்
　புன்மைதீர்த்தடிசேர்தரவாண்டிடாய்
முச்சகத்துமுருகவிழ்மாமலர்
　முண்டகத்தாடொழுமுதற்றெய்வமே
நச்சியானடைந்தெய்த்திடுவெம்பவ
　நாசனேநாயினேனுன்னடைக்கலம். (௯)

தேசகாலவத்தாந்திரிசியமதாய்த்
　திருக்குவாய்த்தீமையாவுஞ்சிதைப்பதா
யாசிலாக்கலையாவும்புகல்வதா
　யண்மைசேய்மையதாகியவத்துவே
தேசதார்பதஞ்சென்னியிற்சூட்டியே
　திகழவாண்டருடேவர்கடேவனே
பேசிடாப்பெருமைத்தாய்ப்பிறங்கிடும்
　பிரமமேபேதையேனுன்னடைக்கலம். (௧௦)

பி ர ம் ஹா ர் ப் ப ண ம்.

---

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# உய்யுநெறி.

கொச்சகக்கலிப்பா.

ஆதாரமாயெவைக்குமன்னியமிலாமனின்ற
நீதாநின்சேவடியைநினைந்துருகப்பணிக்குதியேல்
சூதாயெனைக்கவர்ந்துதொண்டரொடுகூட்டாமல்
வாதாடுமாயையெனும்வன்பிணிப்பற்றுய்குவனே. (க)

ஆரணங்கடேடுமானந்தத்தெள்ளமிர்தே
சீரணியுமேனிதிகழவென்முனிற்குதியேல்
காரணகாரியமாகுங்கற்பனையெலாங்கடந்து
பேரணிபிரம்ஹானுபவப்பெற்றியைப்பெற்றுய்குவனே.(உ)

நாடுகின்றவெப்பொருட்குநாயகமாய்நிற்குமொன்றே
கூடும்வகையுணர்த்திக்கூட்டுதியேனின்னடியி
லோடித்திரும்பியுழலூசலைப்போலாமாசைக்
காடழிந்துவாய்பேசாக்காட்சியைப்பெற்றுய்குவனே. (ங)

அந்தநடுவாதியிலாவத்துவிதவாரியனே
சந்ததமுநாயேனைத்தாட்பணிக்காளாக்குதியேல்
பந்தவினைப்பாசம்பறிகொடுத்துப்பகர்தருமென்
சிந்தைமயலெல்லாம்போய்ச்சிற்சுகமுற்றுய்குவனே. (ச)

செல்லுகின்றகாலதிசைதேசமுணராதநின்ற
னல்லடியார்க்கேவல்செயுநற்கருத்தொன்றீகுதியேல்
புல்லுறவாமைம்பூதப்பொறிகரணமெல்லாமற்
றல்லும்பகலுமறந்தலக்கணிறந்துய்குவனே. (ரு)

ஏகமிரண்டென்னுமலெப்போதுமோர்படித்தாய்ச்
சோகமொடுமோகமறச்சும்மாவிருத்துதியேல்
ஆகமுதலாமவித்தையாரோபவாதனைபோய்
மாகழனீழலிற்படிந்துமாணுறவாழ்ந்துய்குவனே. (சு)

துய்யவன்பர்க்குட்புறனுய்த்துன்னும்பரஞ்சுடரோ
யையமெலாமாற்றியுனையணையும்வகைசெய்குதியேல்
வையமிசைவிடுசுற்றவாழ்வெனும்வாரியிற்பொருந்தும்
பொய்ம்மையிதவகிதமெனும்பொருதிரைவிட்டுய்குவனே.

மருப்புணருமலர்போலமன்னுமுயிர்க்குயிராநின்
றிருப்பார்வையாலேநோக்கித்திடமுறச்செய்தாள்குதியேல்
விருப்பாலணைவினையின்விளைவானபுன்மைமிகுங்
கருப்பாசையைக்கடந்துன்கண்ணமர்வுற்றுய்குவனே. (௮)

ஞானக்கணல்கிநான்பிறவொன்றுன்னுமபி
மானக்களைபிடுங்கிமலிந்தபயிரோற்றுதியேல்
ஈனக்கடைநாயாயேங்கியலையாமலருண்
மோனக்கடன்மூழ்கிமூதுணர்வுற்றுய்குவனே. (௯)

மத்துறுவேன்செய்தபிழைமதியாதருகழைத்துப்
புத்திசொலியென்னைப்புறம்புவிடாதாள்குதியேல்
பித்தாய்ப்பிறழ்ந்துபிரியாதமலமதாய்ச்
சத்தியஞானாநந்தத்தன்மயமாயுய்குவனே. (௧௦)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# அனுக்ஞாபஞ்சகம்.

திருவளர்காமக்கோட்டிப்பீடமதிற்றிகழ்தருநின்றிவ்யபாத
மருமலர்த்தாமரையிலளியெனவடைந்தேற்கருளமுதம்வழங்கினையே
னிருமைசெறிநோய்க்குமருந்தாயருந்தியின்புறுவேனிரங்குவாயே
பெருமைதிகழ்சங்கராசார்யப்ரபோதாத்மனெனும்பெற்றியோனே.

நின்னருட்பூரணவெள்ளந்ததும்பியகண்டானந்தநிறைவாய்த்தோன்றித்
துன்னிகரில்வித்தியானந்தவெதியெனவோங்கித்தாழுமென்னைத்
தொன்மைமாபினிற்றேய்க்கத்தூயவரமளித்தபலமாகவந்தாய்
இன்னமிர்தாம்சங்கராசார்யபரிவ்ராஜகாசார்யமேலோய். (௨)

அதுவிதுவென்றுறுசுட்டாலனவரதமனுர்தஜடதுக்கத்தாழ்ந்து
பதியெனுநின்பணிசுமக்காப்பதிதனெனப்புன்செறிவாற்பலவாயோர்ந்திங்
கிதவகிதத்திடைந்தேனெற்கருளவெழுந்தமையிதென்றிசைக்சற்பாற்றே
வதிபனெனும்சங்கராசார்யவகண்டானந்தவதீதவாழ்வே. (௩)

நித்தியநிர்ச்சலநிருப்நிட்களநிர்க்குணநிமலநிகமாபேத்ய
வத்துவிதானந்தவபரோக்ஷவனுபவவத்தாயகன்றுழ்ந்தோங்கி
யுத்தியுணர்வினுக்கெட்டாதொளிர்தருநின்கோலமெனுவாக்கற்பாற்றே
முத்தர்தொழும்சங்கராசார்யபகவத்பாதமுத்திப்பேறே. (௪)

சிறுமையெலாமெவ்வளவுண்டவ்வளவெலாமெனதாய்ச்சிதைவுற்றேனை
யிறையவநீயழைத்தடியர்குழாத்தடியர்க்கேவலெனவிசைத்தாலன்றி
நிறைமதியிலேன்செயலானினையடருமாறுளதோநீசனேன்றன்
குறைதவிரவரும்சங்கராசார்யகுணக்குன்றேகோதிலானே. (௫)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# குருசிஷ்யஸம்வாதம்.

நிரதிசயபோதம்.

அநாமயவசங்கவனந்தவானந்தவவாங்மனோகோசரவமல
வநாதிமாமாயையவித்தியாபந்தமகலுமத்துவிதவாத்துமசிற்
கநாதிபககனசதுர்ஸமஹாத்மகல்பிதகலுஷவிஸர்க்க
சநாதனசங்காரரியபகவசகலசாம்பிராஜ்யநின்சரணம். (க)

விராட்டிரணியகர்ப்பமொடியலவியாக்கிருதவித்தகவிகிர்தமதா
மிராசதசுயசத்துவதமசெனுமுவ்வியல்புறழ்ப்ரவ்ருத்திதனிவ்ருத்தி
தராதலமிசைநன்கொளிர்தரமிடிதீர்தற்பராபரதயாபரநின்
புராதனவடியென்முடிதரப்பொருமிப்புலம்புமென்புன்சொலாதரிப்பாய்

மாயையாமரவுதீண்டவெவ்விடமாமருவியபவந்தலையிவர்ந்து
நேயமார்சிவேசுரசகத்திரளாநெட்டுயிர்ப்பெறிந்துமுக்கரும
வாயினுனின்பதுன்பமென்பேனம்வரமறந்தனனினதருளாங்
தூயமாகலுழமந்திரவலியிற்றுணுக்கெனவிழித்தனன்விழிந்நே. (௩)

நினைந்தனனின்றனேயமுமாயைநிகழ்த்திடபாயமுநேராய்க்
கனிந்தனனுருகிக்கசிந்தனன்கண்ணீர்கம்பலையாய்க்கதியிழந்தே
னினம்பிரிந்தகன்றகன்றுபோன்மயங்கியிதமுடனகிதவாழ்விகந்து
தனமிஃதெனநின்றனேயடைந்தனனென்சங்கைகண்மாற்றனின்கடனே.

பேசுவதென்கொல்பெத்தமுத்திகளிற்பிரிவுறுதுயிர்க்குயிராகித்
தேசுறுபடிகம்போன்மெனவிளங்கித்திவ்வியாதரநெறிதிகழ்வோ
யேசுவனொன்றேயெழின்மிகுமடியரெம்மனோர்க்கிரங்கிலைபோலு
மாசறுதேசிகேசவென்மடமைமாற்றனின்கடனலதிலையே. (ரு)

(வேறு.)

எவ்வமதகலுமாறிங்கேதுறப்பிறவிமாயுங்
கவ்வியமலமார்பாசக்கட்டறுநீர்மைகாணே
னெவ்வுயிர்த்திரளுமென்றுமிளைப்பறுமிடமதேதோ
திவ்வியபாதநம்பித்திகைக்குமெற்கருள்செயெந்தாய். (சு)

ஆதியந்தமுமற்றோங்கியனுர்தமற்றகண்டமாகி
யோதிநின்றுணருமாந்தர்க்குறைவிடமாயெலாநல்
கேதுவொடிலகுஞ்சீர்மையியையினெலாமுமெய்துங்
கோதிலாய்குணத்தின்மிக்காய்குறித்தகமகிழ்ந்திடாயே. (எ)

செய்யவாய்மலர்ந்துநல்குஞ்செம்பொருள்கேட்டலோடு
மையமெலாமுநாங்களகல்குதும்விடுதியென்றே
நையுறவினையுமானுனவிலவிங்கயலுண்டாமோ
வையனேயறைந்தநேர்மையாள்வதுன்னறுதியாமே. (அ)

பிரமையிற்பிறந்துமாழ்கும்பேதமையதனினூர்ந்துங்
கருமநேர்தொழிலதொன்றிக்கற்பிதவுணவுதுய்த்து *
நிருமலனுநினன்மநிசவடிவிழந்துநொந்தாய்
காமுறுகனியெனுநிற்காட்டுதுமறிந்துகாண்பாய். (கூ)

நிருமலவான்மநீதனேற்களவறுசினீர்மை
தரும்வழியேதுசாற்றுந்தருக்கதியேதுசாரு
முரிமையினிவையொவாதிங்கொன்றுமற்றுளதுமோர்தற்
கொருமையினுணர்த்தற்பாலதுமதருட்கடனதன்றே. (க0)

(வேறு.)

துங்கமுறுநீயமர்சுஜாதிமுதலாகப்
பங்கமுறவந்தசெயல்பன்னவெளிதாமோ
வங்ஙனம்விளைந்ததநிர்வாச்சியமதாமா
லிங்குனைமுனறியவயலெளிதினறிவாயே. (கக)

வந்தவரவாகுமதன்வாய்மையறியாமற்
புந்திகொடுபோம்வழிபுலன்படவுமாமோ
மந்தமதியேனையுமோர்வண்மையனெனுநின்
சிந்தைசெய்திசைந்தகுருதெய்வசிவமயமே. (௧௨)

ஆதரவதாகுமொளியாலெவையுமறியு
நீதமதுபோலவுனைநீயறிவதாகுஞ்
சோதிசொருபானுபவசொலிகிரணமதனாற்
பூதபவுதிகமுள்வருபுதுமைவெளியாமே. (௧௩)

ஏதமறவெனையறியுமேதுவெதியற்றுஞ்
சாதகமதேதுபயில்சற்கருமமேது
வாதனைசெய்மோகமெனும்வல்லிருள்கிழிக்கும்
போதமெதுமேவருள்புரிந்துரைசெய்வாயே. (௧௪)

(வேறு.)

அன்னியசிந்தனையகற்றியறிகரணவாதனைகளகலநாளு
முன்னியமெய்யகம்பிரமத்தியானமிமையோவாதிங்குனாற்றிமேலாந்
தன்னிகரில்வாக்கியவங்கநியாசநியமநெறிதவழ்ந்துசால்பிற்
பன்னருமுன்னதிட்டானவாரோபவிடைபயின்றுபகுத்தலாமே. (௧௫)

(வேறு.)

தெரியநன்குணர்த்துஞானதேசிகவரசேசொன்ன
பிரிவுணர்ந்திலனென்பீழைபெயரவிங்கிசையுமென்னிற்
கரிலறக்கண்டியாவுங்காணாமற்கண்டதும்போய்த்
துரியமாய்விபுவுமாகித்தொடர்பறமிகுதலாமே. (௧௬)

உரைசெயந்நிலையினோங்கியுறச்சஜாதியசம்பந்த
நிரையிறந்தவற்றின்மேலாநீர்மையசாட்சியாகி
வரையறுமகிழ்வினோடும்வயங்கிடியூகவாய்மைத்
தரமுறவிதந்தபான்மைசாற்றனுன்கடனதாமே. (௧௭)

(வேறு.)

அறியத்தொடங்கினயலாமதிட்டானமங்கறிவதறிஞரோபிதஞ்
செறிவுற்றிலங்குறுமிவிருவகைவிகற்பமுஞ்சிதைவுறமெய்யறிவதோன்றிப்
பொறியற்றிடப்புலனறக்கரணபேதமும்போகுறச்சான்றதாகி
மறலற்றியாவுமெனையன்றிவேறிலையெனமதித்தறிவதாமைந்தனே.

ஆனாலுமையனேயமைதிபெறவெண்ணுவோர்க்காம்வழியனந்தவிதமாய்
மாநாலுவேதமுடன்மற்றுமுளகலைகளும்வகுத்தவாறருள்செய்குவாய்
தானாகுமோனந்தழைத்தோங்கவன்புபுரிதாபதர்வழுத்துமாலைத்
தேனாகுமன்பகமகிழ்ந்துணுமகாரசசிவானுபவஞானவளியே. (௪௯)

புத்திரநினாதுளநிகழ்ந்தசங்கைகளறப்புகலுவாமொன்றுபடவே
யர்த்தப்பிரபுத்வமோடாரூடபாதித்யமடரும்வாசவிவேகம்
வர்த்திக்குமென்றுபலவழிதெரிந்துயமறைவகுத்ததல்லாலனையவா
மத்தமுணராமலோதியுமுணர்ந்தாவதெனடாதுவழியொன்றதாமே.

(வேறு.)

சொல்லாருமறைதுணிந்துசொன்னெறிபன்னோக்காயி
னல்லாததேதவற்றுளாவதேதறையுமாற்றஞ்
செல்லாதோமனம்விகற்பத்திரிசியவடிவின்று
கல்லாலினீழல்வந்தகடவுளேகழன்றிடாயே. (உக)

சொருபமாந்தனைமறந்ததொல்லைநாட்டொடர்பின்வந்த
வுருவநாமங்கடம்மாலுறுமுபாதிகளனந்தம்
பெருகியதாற்பிறங்கும்பிரதிபத்திவாக்கியமவ்வா
றருமையாயனந்தமானவதிசயவுளவிதாமே. (உஉ)

இருவகையாகுமந்தவியல்களிற்புறவிசேடம்
புரிதருதியக்கந்தானும்புகன்றதோரகவிசேடந்
தெரிதரப்பயக்குஞ்சிருஞ்சின்மயானந்தஞான
குருபரநின்றாள்போற்றிக்கூறுகினேற்கருள்செய்வாயே.

பலபலவிந்தைமேயபகுதியின்விவிதபேத
மலைவுறுகரணபோதமல்குவாதனையுட்டோய்ந்தங்
கலமருசீவனீசனகிலமாதிகளடர்ந்து
தலைமயக்குறவேமாழ்குந்தகைசெயும்புறவிசேடம். (உச)

வாதனைப்பழக்கந்தானேவரவுபோக்கிரண்டுமாமென்
றேதமில்சுருதியானுமிலகுறுங்குருவினானும்
போதமார்புந்தியானும்பொலிதரவாய்ந்துநேதித்
தேதகுசேடமாக்குமெனகவிசேடமாமே. (உரு)

எந்தவாதனைசிருட்டிக்கியைந்துமுன்பின்னதாகு
மந்தவாதனைக்குமேதுவாவதுமருள்கவென்னின்
முந்தியகருவிகார்யமொழிந்தவேதவற்றினேது
சிந்தைசெய்பாவாபாவச்சேட்டையென்றுரைப்பர்மாதோ.

அந்தநான்கியல்புதம்மையருள்புரிந்திடவன்போங்கிச்
சிந்தைநைந்துறுநின்சங்கைசேய்மையினகற்றியாள்வோ
முந்துகாரணமகேசன்முடிந்தகாரியமெய்ச்சீவன்
அந்தமேய்பாவமுத்தியபாவமார்பந்தமாமே. (உஎ)

(வேறு.)

உரைத்தநான்குமுகப்பறுவாதனைத்
தரத்தவாகவுணர்தருதன்மையிற்
றிரத்வமேதுமிலாத்திமிர்மாயமென்
றருத்தமோவருள்வாயடியேனுக்கே. (உஅ)

(வேறு.)

வத்திதென்றுனினவத்திதெனவயங்குறுமனாதிப்
பித்துறுபின்னாபின்னப்பிழைகள்கூர்துவிதஞ்சாருங்
கத்துறிராகத்துவேடக்கலியும்வந்தனுகுமுன்பின்
மத்துறவெண்ணிமாழ்கிமாப்பொருளிழப்பதாகும். (உகூ)

இங்ஙனமிருத்தலோடுமேகமேவாத்விதப்பேர்
துங்கநன்னெறியினேதுஞ்சுருதிதம்வாய்மைமாயுஞ்
சங்கையினிழியுமாற்றமாதிதம்மயம்விராவு
மங்குமிங்கலைக்குமாயையவித்தைதம்மேவலென்றே. (௩0)

யானெடுத்துரைப்பதென்கொலியாவுநின்னறிவினாயின்
மானிடமாதியாயமலிதருப்வத்துண்மாழ்கி
யூனடம்புரிந்தகாலத்துணர்ந்தவந்நெறிவந்தெய்து
ஞானபோனகந்துய்த்தற்காய்நாடிவந்தணைந்தபிள்ளாய் (௩க)

தஞ்சமென்றணைந்தநாயேன்றனைநயந்தருளுஞான
வெஞ்சலிலமுதமேயவிருங்களஞ்சியமேபோற்றி
யஞ்சினனடியனின்றனருள்வழியறிகிலாதிங்
கஞ்சலென்றறியுமார்க்கமருளனின்கடனதன்றே. (௩௨)

எளிமையின்முகத்தைக்காட்டியிடைந்தருட்கதியைநாடித்
துளிகணீரடியிற்றூயத்துதிசெயுமாணாகேண்மோ
வளமலிதருமவ்வாய்மைவயங்குநிற்பிறிதலாத
மிளிர்பரம்பொருளானின்மிடிதவிர்ந்திடுதிகொல்லோ.

அவ்வழியல்லவெல்லாமபிநயவேடந்தாங்கிக்
கவ்வுவாதனைகண்மேவுகாட்சியாங்கண்டவெல்லாம்
வவ்வித்தன்வயமதாகவனைதருமாயைமாயுந்
திவ்வியாதாரஞ்சேருந்திறமரிதாகுங்கண்டாய். (௩௪)

வாதனையென்பதொக்கும்வாழ்முதற்கோவேநாளு
மேததுவடுத்ததவ்வாறிசைந்தமையன்றிப்புந்திச்
சாதகமின்றிவாளாசரித்தநாட்கென்சொல்கேனவ்
வேதமதறுக்குஞானவெழிற்கணீந்தருளுவாயே. (௩௫)

(வேறு.)

சொல்லுஞானசுபோதவருணெறி
நல்லனேயருளென்றுநயந்தநின்
னல்லலேகவறைகுதுமாலினு
மெல்லைதீர்பரமானந்தமெய்தற்கே. (௩௬)

(வேறு.)

தானெனிலெவற்றினுக்குந்தலமதுவாகையானுந்
தானிலையெனினிலாமைதவழ்ந்திடுதன்மையானு
நானதுவென்றுதோங்குஞாயசுபாவமாகித்
தானிகர்தனியாமுன்னிற்றனித்துநின்றிருந்திடாயே. (௩௭)

கண்டனன்குருவேநின்றன்கருணையினயலொன்றின்றி
யெண்டிசைநடுமேல்கீழ்மற்றெவணுநின்றனனியானே
பண்டைமெய்ப்பொருளும்யானேபல்லுயிர்த்திரளும்யானே
கண்டிதாகண்டமாகுங்கற்பிதமாதியானே. (௩௮)

(வேறு.)

அந்தமாதிநடுவற்றெருளிரகோசரமதைச்
சந்தநான்மறைகள்சாற்றுகிலமென்றயர்வுற
விந்தவென்றிநனிசைத்ததெனகோவதிசயஞ்
சிந்தவிப்பிரமைதீர்தியருள்வழிச்சிறுபிளாய். (௩௯)

ஐயவென்னியல்பறிந்தறையவல்லரொவரோ
மெய்யிதென்றுநனிமேவியும்விவேகமிலியாய்த்
துய்யநின்மொழிதுறந்தனனெனேழ்மையதனு
லுய்யுநன்னெறியுவந்தருள்செயும்பாரசே. (௪0)

புரணநின்வயினினும்புகலுநீர்மையுளதா
லரணதாமனமடங்கவெழுமானந்தமார்
கரணவாதனையதோகருதவேறெனையதோ
தருணமீதருளனுதுபவமொருவுதரனே. (௪௧)

இன்பமேவிடவினுதுமுளதாகுமுணர்வா
லின்பறுநிலையதெய்தியிதவகிதமயறீர்
முன்பினேடறமுடிந்தபொருளாயிடினிதா
மென்பதற்கெதிரதேதநனெலாமுநீயே. (௪௨)

(வேறு.)

இங்ஙனமுரைத்தலோடரியவனுபவமதெய்திப்
புங்கமாய்ப்பூர்த்தியாகிப்புரிவதொன்றிலதுமாகி
யிங்கிதவிடமறந்தங்கேகமாய்ச்சலனமின்றி
மங்குருவாழ்வினையமயலறுங்குழந்தாய்கேட்டி. (௪௩)

எங்ஙனம்விளைந்ததோவங்கிரண்டறமிலையுமாற்றி
னங்கநீபாவுந்தோன்றியழிவதற்கெனுமவ்வாய்மை
சங்கையிலாதுநோக்கித்தககமென்றுறினாயோ
விங்கவைதொகுப்பினாயவிரண்டொருமொழியிற்சொல்லாய்.

சொல்லெனிற்கேட்டலோடுசொல்பவர்யாரோமற்றுஞ்
சொல்லுறுபொருளதேதுசுயமதுவாகுமாயிற்
செல்லுறுகாலதேசதிசையெலாம்விழுங்கிநின்ற
வல்லவாநினதுபாதமருவியுமருவலென்னே. (சரு)

எல்லையிறவசிரோயசெய்தினரகத்துமேலாஞ்
சொல்லுறுமிடத்துமன்னுந்துயதாட்பரிசவேதி
தொல்லையாம்பவவுலோகத்துகளினையகற்றித்தானா
யல்லலதகலுமாழையாக்குமற்புதமிதென்னே. (சசு)

(வேறு.)

ஆசியாலுயிராதிப்பிழைத்தேனேயடையநின்னையானென்றேன்பிழைத்தேனே
மாசுதீர்மகிழ்வெய்தித்தழைத்தேனேமலினவாதனையாவுமழித்தேனே
தேசிகேசவென்சென்னியிற்றேய்தருந்திவ்யபாதமலான்மற்றறிகிலே
னேசனேபுத்தமுத்தமொடேசுத்தநித்தசத்தியக்கியானானந்தநீதனே.

திரிவறுந்தீமைநன்மையிலாததுந்திருக்குவாய்த்திரிசியங்களுருததும்
பெருகுமாபத்துமற்றதுமின்மையும்பின்னாபின்னப்பிணக்கறுநன்மையு
முருவமன்றியருவெனுமுண்மையு மோவியம்போலசைவறுதிண்மையுக்
தெரியவந்தவதேநின்வடிவமாய்த்திகழ்திதீர்வையிதல்லதிங்கில்லையே.

ஆதரித்தனைத்தாண்டருண்மெய்யனேயனுர்தமாதியவாய்க்கெடும்பொய்யனேன்
மாதவஞ்செயுமாறருடுய்யனேமண்விணேற்றுமலிபுகழையனே
யேதுசெய்கினுமேதுசெயாதஃதென்னையாளவெழுந்தநிற்கேலவே
நாதவென்கைம்மாறென்றியானாடுவேனம்பினேனின்சரணஞ்சரணமே

புடவியென்றும்பொருந்துயிரென்றுமேற் பூதமென்றும்புகல்வதென்பொய்யரோ
விடமெலாநின்னிருப்பிடமாகுமேயியாவுநின்றனியல்வடிவாகுமே
திடமருமிகுசீர்த்தியெலாமுநின்றேமலர்ப்பதத்தேனினமாகுமே
கடனெனக்கொன்றுங்கண்டிலன்கண்டிலன்காரணாபரிபூரணானந்தனே.

வேறு.

இதுவெனாப்பொருளதொன்றைநாடமதியில்லையன்னியமுமில்லையிப்
புதுமைசெய்தவிரகேதறிந்திலனின்பொன்னடிக்கடிமையாகவே
பிதிரதொன்றினனிமேவிமல்குபவபேதமாயும்வகைபேசுமென்
னதிபனேசரணகர்த்தனேசரணகோசரானுபவனேசரண். (ருக)

பொருளெனும்பரமபோதரூபமனமேகவேபுவனபோகமேற்
றெருளிழந்துமிகுதாகமாகியெதிர்தானுமாய்ச்சிலுகிலாழுமென்
மருளுவந்ததிசயமதேயலதுமற்றிசைப்பதெனியன்றநின்
னருளினுனினையடைந்ததன்றியெனதடரும்வல்லபமதன்றரோ. (௫௨)

ஏதுமாதவமியற்றினென்பெருமையேலறங்கள்பலசெய்துமென்
கோதிலாக்குடியின்மன்னினென்னமிகுகோலமாங்கலைகள்கற்றுமென்
ஆதிநாயகனெனுங்குருப்பிரமவரியபத்திபுரியாவிடின்
போதமார்பொருளதேதுபெத்தமறுபொங்குமாசருளதேதரோ. (௫௩)

வேறு.

வன்சமுசாரவாரியிற்படிந்துவரவுபோக்கிடையலமருமென்
புன்செயறனினிற்புகழ்ந்தலர்கொடுநின்பூசனையாதிசெய்கிலனே
லென்செய்தபடியென்றனையெனக்களித்தாயெனையொழித்தெழுந்தசூரியனே
நின்செயனினைந்திங்கெனைநயந்திடுவனிர்க்குணாகரநிராமயமே. (௫௪)

தெள்ளமுதாநின்றனைமகிழ்ந்துணுநின்றிறமிதென்றுரைசெய்கைம்மாறின்
குள்ளதென்னெனினன்குறைக்குதுமுறுதிப்பேறெனும்பொருளுடனுறழுங்
கள்ளமாமயலதிறந்தனமெனுமொண்காட்சிகண்ணுடன்கருத்தாவென்
றுள்ளவாவினையின்றுவந்தெமக்களிப்பதுணர்தியிங்கிதுவலதிலையே.

அபயமென்றணைந்துன்னருள்வழிப்பெறும்பேறனைத்தையுமமலமாய்த்திகழு
முபயபங்கயப்பொற்பதமமைத்தனன்மற்றுன்னுதலுரைத்தலொடியற்றல்
சுபமிகுமருளினுக்கினைவழியிற்றோய்குவதன்றியாவுளவென்
றபலமொன்றுறநின்றியற்றுவனசைவிலருட்கடலெழுந்தவானமிர்தே

செய்திடுஞ்செயலுஞ்செயப்படுபொருளுஞ்செயுமுதலவனுமியாமாக
வையமிலாமலடுத்தனவருளினவ்வழிபுரிந்தனையாயின்
மொய்தருஞ்சகலகிருதகிர்த்தியங்கண்முடிந்தவனுகுவைமுடிபாங்
துய்யநான்மறைகடுதிசெய்பக்குவனேசுபமிகுந்தொளிருமாதவனே.

அறிந்திடினருணின்னுமமந்திரமெய்பமலசற்கதிதருநிதியா
முறைந்தையாமுரியபோகநன்னுகர்ச்சியுன்பணிசுமத்தலாமுறவு
நிறைந்தநின்றொழும்பர்குழுவினுக்கடியர்நேயமாம்பலபிறப்பொழிந்தே
பிறந்ததாலடையும்பேறிதினுளதோபேசொணாப்பெருமைசேர்பெரியோய்

உரியதேசிகனுயுலகுயவந்தவொப்பில்சங்கரனகத்தருளு
மரியவிப்பொருளையமைதியாயுணர்வாரகோசரவநிர்வசனமதாய்ப்
புரிதருமியல்பும்பூரணானந்தப்பொலிவும்வந்துறவதாய்ப்பொருந்த
திரிவிதவுலகத்தவர்களுமேத்துஞ்சீரொலாமெய்தவாழ்குவரோ. (௫௯)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# ஐக்கியானுஸந்தானம்.

ஆதிவாகிகமாங்கரும்பார்தழை
நேதிசெய்துநிதித்தியிற்றற்போதக்
கோதுவீசியிரதமுட்கொண்டுலாம்
போதவானைதன்பொன்னடிவாழ்த்துவாம்.

வேறு.

சார்ந்தசகம்பொய்யெனவுதறிச்சாந்திதாந்தியுபரதியிற்
றோய்ந்துதகுதிதீக்கைநெறிதுன்னிமயித்ரியாதிகுண
மேய்ந்துதவஞ்செய்திதுவிதெனவெணுஞ்சுட்டறநம்வடிவதனைத்
தேர்ந்தவ்வடிவுமிழந்துறழ்சிவோகமெனநின்றிடுகிற்பாம். (௧)

தேகமிறந்திந்தியநீர்மைதீர்ந்துவாயுகன்மமன
மோகவினமுள்ளிருளிரியமுன்பினின்றிமுளைத்தவகஞ்
சாகவொளியினொளியதெனத்தயங்கிவெளியின்வெளியாகி
யேகபோகமெனவிரண்டற்றெழிற்சிவோகமெனத்திகழ்வாம். (௨)

தேகத்திரயவிலட்சணமாய்ச்செறிமுவ்வவத்தைதமக்கயலா
யேகமுறவைங்கோசவெதிரேகமாகிச்சதுர்விம்சத்
தாகநவிறத்துவங்கடவிர்ந்தகுணவிசுத்தவிமுக்தமதா
யூகபுந்தியுணர்வதிறந்தொருசிவோகமெனவுறைவாம். (௩)

விவிக்தமருவிவிரக்திபதம்விளங்கவிதயமொருமையதா
யவித்தையபிமதங்கடவிர்ந்தறிவதறிந்தங்ககமமதை
யவித்தைமாயையறநூறியகமதாறிச்சலனமறப்
பவித்ரமாகிப்பவமறுசிற்பரசிவோகமெனப்படிவாம். (௪)

சிவோபாதியிலகுபரன்சேருபாதிகடந்துசகப்
பாவாபாவங்கடந்துபரம்பரமொன்றாகும்பதங்கடந்தங்
கோவாதென்றுமொருபடித்தினுள்ளபடிவமாநிறைகொ
டேவாயெங்குமுறவொளிர்சிவோகமயமதெனத்திகழ்வாம். (௫)

முறையினேதிநேதிபயின்மூவாச்சியலட்சியவுணர்வி
னிறையிற்றேசகாலவுடனீத்துநிசங்கொளக்கணைக
ளறையும்பரிசினயலநன்யமறிந்துட்புறனுமனைத்துமெனக்
குறைவில்பரிபூரணமாகிக்கொளுஞ்சிவோகமெனக்குளிர்வாம். (௬)

சகமுகமதின்றிரிபுடியுந்தனையுள்ளுணருமுனம்விரவு
பகுதிவிகுதியறவுளினுட்பதியும்விரகின்றிரிபுடியு
நிகரிலிரண்டற்றொன்றெனுமங்கியதியின்பத்திரிபுடியு
மிகுசுபாவமாயனிசமிலைசிவோகமெனமிளிர்வாம். (௭)

சங்கற்பங்கள்பலகோடிசாருஞ்சத்திரமெவையு
மெங்குற்றடியுமுடியுநடுவெய்தியிகந்துபின்படையும்
பங்குற்றிடுமெவ்விடமதத்திபாதிப்பிரியவியலமைதி
தங்குற்றிடுமங்கிபிடமுறத்தகுசிவோகமெனத்தவழ்வாம். (௮)

அற்பவுலகத்தியாசமதினளவினுகருமனுபவத்திற்
கற்கிற்கழறிற்கானமலைகடக்கிற்கிடக்கிற்கண்டுயிலி
னிற்கின்முடக்கினெட்டுயிர்க்கினிலையிற்றிரிவதறுநீர்மைச்
சிற்கனத்துவிதமயசிவோகமெனவின்பகமுறுவாம். (௯)

சகஞ்சொப்பனமதெனலினைசாரும்பெருமைசிறுமையிலை
புகலுந்தேகமசத்தெனலிற்பொருந்துசுகதுக்கங்களிலை
யகமுள்ளாறியமைவதினிங்கபிமதாதியணுறலிலை
பகரவயலிலதனினுயர்பரசிவோகமெனப்பணிவாம். (௧௦)

என்றனிதயமலர்த்தவிசினிலகுகுருசங்கரனினைய
நன்றிதருசுபோதநவின்றெவருமெளிதினயந்தடைய
வென்றிமிகநண்பினின்வெளியின்விடுத்தவமுதிதெனநுகர்வோர்
துன்றுபவமுந்நீரிடைந்துதுதைதலொருவுந்துணிபினரே. (௧௧)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# அனுபவமாற்றுமை.

எண்ணரியசித்திமுத்தியெல்லாநல்கு
மேகாந்தப்பெருவெளியேயியங்குகின்ற
பெண்ணினுட்டுணைவியாய்ப்பிறவுமாகிப்
பேதவபேதங்கடந்துபிறங்குந்தூய
வுண்மைநிலையாயுயிராயீசனாகி
யுலகாகியோங்குபரமார்த்தமாகி
யண்மையுடன்சேய்மையுமற்றயலுமாகி
யமர்ந்தருணின்னருட்பரிசிங்கறைதற்பாற்றே. (௧)

அலகில்பரமானந்தலீலைசெய்திங்
கடியர்தமைப்புரந்தருளுமரசேயென்னை
யுலகிடைவிட்டுழலவைத்தாயுனைப்பிரிந்திங்
குய்வேனோவெனையுனைக்கண்டோய்குவேனோ
வலகில்பவத்தழிவேனோயாக்கைவாழ்க்கை
யனூர்தமதென்றுளமதித்தங்கமருவேனோ
விலகுசுடர்க்குன்றேநீயறிதிகண்டா
யிதவகிதமயறபுமென்னிதயவாழ்வே. (உ)

கல்லாதபுல்லறிவுங்கபடநெஞ்சுங்
காரிகையார்தமைப்பேணுங்காதலுங்கொண்
டில்லாசமாய்த்திரியுமுணர்வும்பொய்ம்மை
யுளநிறைந்தபொக்கிஷமுமுலோபந்தங்கும்
பொல்லாததீக்குணங்களனந்தகோடி
பூத்துக்காய்த்திடுசெடிசேருடன்மெயென்றே
சொல்லாருஞ்சுருதிமுடிவானநின்றன்
றுணையடியைமறந்தனனென்றுணிபிதென்னே. (ங)

ஈதொன்றிங்கதிசயமென்சொல்கேன்கண்டா
யிதயவெளிக்குள்ளொளியாயெங்குந்தானாய்
மூதண்டகோடிகளிலப்பாலிப்பான்
மொய்யறிவாங்கதிர்பரப்பிமுழுதுமாகி
நாதவிந்துகலையாகிஞானமாகி
நண்பினிசைந்தருணினதுநயம்தோர்ந்தும்
பாதகஞ்செய்வேன்பினையும்பரமேயென்று
பதைப்பனுடன்மறப்பனென்கொல்பதகனேனே.

உன்னலொன்றிங்குளுற்றலொன்றிங்கோர்தல்வேறு
யோவுமனப்பேய்பிடித்துலாவியாடிப்
புன்மைசெறிபுழுக்குடிலைவளர்க்குமாறிப்
புவிமிசைநைந்தலமருமென்புலவிதீரத்
தன்மநெறியுளபடிவந்தருள்செய்தாளுந்
தகைமைசெறிநினதணிகொடையையெனன்பேன்
கன்மமொழிந்தவர்பரவிமலர்கடுவு
காரணசிற்சிவஞானக்கருணைக்குன்றே. (ரு)

பேரின்பவாசைவிளைவித்தநீயென்
  பேதைமைதண்டயர்வறுமெய்ப்போதநல்கிச்
சீர்திகழ்செம்பொற்றாளினிழல்சேர்விப்பான்
  சேட்டையகன்றறவொறுக்கிச்சீர்மைநல்கா
தூரனந்தம்பேரனந்தமாயுலாவி
  யுலையவிடுத்தாடல்கண்டாலுறுதியுண்டோ
பேர்மிகுபூமேலையனுய்ப்பிறங்குந்தேவே
  பிரிவிலனந்தானந்தப்பெருக்கின்வாழ்வே. (சு)

சொரூபவியல்காத்துச்சுகங்காத்தசுத்தந்
  தொடராமற்காத்துச்சுபங்காத்துக்காம
மருவலறக்காத்துமயலவித்தைமாயை
  மலிதரமிங்கறக்காத்துமநகங்காத்துச்
சருவபந்தவிமுக்தநிலைமேவக்காத்துச்
  சன்மசாபல்லியஞ்சாயாதுகாத்தங்
கருமைபெறவளர்ப்பதெவணரியுமாகி
  யாருயிருக்குயிர்ப்பதமதாகுமோன்றே. (எ)

அகம்பாவநீத்தனூர்தமாதிநீத்தங்
  கபிமானநீத்தயர்வினைதனீத்தே
யிகபோகநீத்துமறுபோகநீத்தி
  யானெனதென்றுரைசெயுமவ்வியலுநீத்துச்
சகசீவபாவிகற்பஞ்சாரும்போத
  தாதான்மியநீத்திளையசார்புநீத்துச்
சுகபரிபுரணநயந்தின்னருள்செய்கண்டாய்
  சோதிசிவாத்விதசுயஞ்சைதன்யவாழ்வே. (அ)

சொப்பனத்திற்கண்டபழங்கதைபோலின்பச்
  சுரதமுற்றதல்துசுகத்தாழ்ந்ததுண்டோ
வற்பவழிவாலறிந்தேன்போலங்காங்கே
  யனவரதமரற்றிநின்றதலதுளாழ்ந்தே
யுற்பவநோய்தீருமுளவறிந்தங்கொன்றி
  யுண்மையனுபவத்தழுந்தியுணர்விறந்து
கற்பனையற்றெனைக்கவர்ந்துன்றன்னைக்கூடிக்
  கலந்தொன்றாய்திதமதாய்க்கரைந்ததுண்டோ. (கூ)

இரவுபகலெனும்பரிசதிறந்துசுத்த
வேகாந்தப்பெருவெளியினேறிமீளாத்
திரநிலைபெற்றேவியமென்றிலகிநாளுந்
தேசுமிகுந்தமைமறந்துமறவாதோங்கி
விரவுமுபசாந்தவெளமூழ்கியன்பர்
மெய்குளிர்ந்துபரமவுல்லாசமதினொன்றி
ஹரஹரசம்போசங்கரார்யவென்றே
யருட்குரிமைபூண்டதறிந்தடைந்தெனின்றே. (க௦)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநமஃ

# ஆய்ந்தறிவடங்கல்.

வெண்பா.

ஒன்றாய்ப்பலவாயுயிர்க்குயிராயோங்கியெங்கு
நின்றானையான்வணங்கிநேயத்தா—னன்றாகப்
போற்றியடிபணிந்தேன்புன்மைகெடப்போதகன்சொன்
மாற்றமுரைப்பதுண்டோமற்று. (க)

உண்டில்லையென்னுமுணர்விறந்துசித்திரம்போற்
பண்டிருந்தவாறென்னைப்பாழாக்கி—யண்டர்கோ
னின்றநிலையினிருணயமேதோவென்ப
தன்றியறியேன்யானயர்ந்து. (உ)

யானென்பதின்றியிருந்துமகமதனு
லானொன்றியபவத்திலுற்றுமிகப்—போனேனென்
புண்ணியமோவன்றிநிறைபூரணனார்தாம்வைத்த
தண்ணருளோதாட்கமலச்சார்பு. (ங)

சார்ந்தேனிறையடியைச்சநநமரணஞ்செயிருள்
தீர்ந்தேன்நிகழுமறைதேடியெங்கு—மோர்ந்தறிய
வொண்ணாப்பெருமையனையுட்புறனாயேத்துவன்மற்
றெண்ணேனயலொன்றுமே. (ச)

ஒன்றுமுணர்வதனாலுற்றறியுமெய்ப்பொருளும்
பொன்றுமுணர்வழியாப்பூரணத்தி—லொன்றியகற்
றேயசஃதாதலினாற்றேசதிசைகாலவத்து
வாயவைக்கோன்றுபடமாம். (ரு)

ஆமென்றுதோன்றியழிவதனாலெப்பொருளுந்
தாமென்றுரைத்திடவுந்தான்றகுமோ—நாமெனவீங்
குன்றாதுரையாதொழிலுபசாந்தமதாய்
மன்றாதுமன்னுவதேமாண்பு. (சு)

மாண்பாகுமோனமலிகடலிலேகுளிக்கிற்
காண்பான்காட்சிப்பொருளுங்காணலுமில்—சேண்பாரு
மாகித்திரண்டெங்குமாமத்துவிதவின்ப
மேகைப்பொருளாகுமே. (எ)

ஆகமுதலாமவித்தையாங்கடலினிற்பொருந்துஞ்
சோகமொடுமோகச்சுழியினின்று—வாகையுதா
பெண்ணினுண்டோவிரியவெலாநேதிக்குங்
கண்ணதாய்நிற்குங்கழல். (அ)

கழல்கண்டாலுய்யுங்கதியுண்டாஞான
வழல்கண்டாற்கன்மமகலும்—எழிலாக
வெண்ணுமெதிரீடிறந்தாலேகமாமத்துவித
நண்ணியொன்றாய்நிற்குநயந்து. (கூ)

நயந்துருகிநாளுநாதனடிப்போதை
வியந்துபுகழும்விரகை—யியைந்தபடி
வாழ்த்தவறியகில்லேன்வண்சரணானந்தவெள்ளத்
தாழ்த்தியெனையொழித்ததால். (க0)

ஒழித்தென்றனையடிக்கீழொன்றவைத்தவானோர்
வழுத்துபகவத்பாதவள்ளல்—செழித்தோங்கு
பண்டாயகோலமெலாம்பன்முறையானேற்றிடுமா
றுண்டோவுணர்விறந்தே. (கக)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# முடியாவுவகை.

கட்டளைக்கலித்துறை.

தேசந்திசைமுதலெல்லாங்கடந்ததிருவருளாற்
பாசங்கெடப்பரமானந்தமேவிடப்பார்த்தருளுஞ்
ஸ்ரீசங்கரபகவத்பாதவாரியசின்மயநின்
வாசங்கமழ்சரணாம்புயநாளும்வழுத்துவனே. (௧)

வழுத்தும்பிரமவனுபூதியானந்தவாரிதியின்
முழுத்தும்படிக்கிசைந்தேமூவர்போற்றுமுதல்வவெனை
யொழித்துன்றனையளித்தாட்கொள்ளலுற்றவுபாயமென்னே
செழித்தெங்குமெய்த்தவரோங்கிடவேயருள்செய்குருவே.

குருவாயடியர்தமைத்தடுத்தாண்டுகுணத்திரயத்
திரையார்பவாழிக்கரையேறவேநின்றிருவடியா
மருவார்புணையைமகிழ்ந்தேயளித்தனைமாண்பொருளே
திருவேமறைமுடிவேயருவேதிகழ்தெய்வக்குன்றே. (௩)

குன்றாதசெல்வமெனுமோனவாழ்வைக்குறுகுமெனக்
கன்றேயளித்தனையற்புதனேயகண்டானந்தமார்
பொன்றாப்பரமபதவரசேபுகழ்பூரணனே
யொன்றாய்ப்பலவாயெவற்றூடுமொத்துள்ளவனே. (௪)

உள்ளவனாகிமற்றில்லவனாகியொருபடித்தாய்க்
கள்ளமதாமயறீர்த்தேபொலியுமென்கண்மணியே
தெள்ளமுதேதெவிட்டாவின்பமீந்தருடேசிகனே
விள்ளவும்வாயுளதோவறியேனின்றன்வித்தகமே. (௫)

வித்தகவேடம்புனைந்துயிர்கட்குவிழுத்துணையாய்ச்
சத்தியஞானவனந்தமொடானந்தஞ்சார்ந்திலகு
மத்துவிதான்மவடிவெங்குமோங்கவருள்பொழிந்தாய்
நித்தியசுத்தநிலைதருநிர்க்குணநின்மலனே. (௬)

நின்மலமாக்கியென்சிந்தையுணின்றுநிருவிகற்பத்
தன்மயமாக்குந்தயாநிதியாகியதற்பரனே
சொன்மனமற்றுச்சொருபமதாகச்சுதந்தரமா
யென்னையுமோர்பொருளாகவந்தாட்கொளிறையவனே.

இறையாமுனைமறந்திகபரமேவலுற்றியானெனதாய்ப்
பொறையாதிகள்புறமேபோகவிட்டென்றன்புன்மையினு
னிறையேனுமுன்றனியல்பறியாதவென்னேழ்மைகெட
வறிவோடறியாமையைமாற்றியாட்கொளருமையனே. (அ)

அருமையனென்றுனைப்போற்றுகிலேற்குமருள்சுரந்து
கருமமுதற்செயலெல்லாங்கழலுங்கழற்சியிலாம்
பெருமையுறும்பதஞ்சென்னியிற்சேர்த்துப்பிரிவின்றியே
யிருமையொழித்தனையென்னுட்கதிர்க்குமெழிற்சுடரோ. (கூ)

சுடராகவேநின்றனைத்தூடுருவிச்சுகமுறுசிற்
சடமாயமர்ந்தங்கதுவதுவாகிச்சரித்தெவைக்கு
மிடமாயுண்டாகிவிளங்கியிலங்குமிறையவனும்
படர்வானுலகமதாகிப்பரந்தபராம்பரனே. (க0)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# பிரார்த்தனை.

கண்டாகண்டப்பொருள்காட்சிகாண்போனெனவுட்கலந்தெவனு
முண்டாய்விளங்கியுணர்வோன்மற்றுனைப்போனுகியுறையுமுனை
விண்டேன்பிழைக்கும்விதமருளிவினையார்கமலபதமளித்தாள்
பண்டாகியசங்கரபகவத்பாதசகதகுருபரனே. (க)

பாசாதிகளைப்பறித்தெறிந்துபரமானந்தத்தேனருந்திப்
பேசாதிருக்குமிடத்திருந்துபிரிவில்போதந்தனைக்கவர்ந்து
தேசார்சொருபமாய்த்திகழுந்திறத்ததாமெய்தெரித்தாளாய்
நேசாபகவத்பாதனெனுநிமலானந்தநித்தியனே. (உ)

சொல்லும்பொருளுமாயவற்றைத்தொடருஞ்சாட்சியாயடரு
மல்லும்பகலுமாயணுவுமாகிமகத்துமாகிநிற்க
வல்லதன்மையாரறிவார்வழுத்தவயலில்லாமையினா
லெல்லைகடந்திங்கொளிர்பகவத்பாதவேகவெழிற்சுடரே. (௩)

அருவென்றுருவென்றருவுருவென்றறையும்விரகதெல்லாமு
நிருவிகாரமாம்பிரமநியதியலவென்றனவரத
மரும்வாங்மானசகோசரமதென்றரியமறைப்பயிலும்
பெருமைதிகழ்தற்பதநிலையிப்பிறிதினளித்திபெற்றியனே. (௪)

நானீயெனுமாலெய்திநின்றனளினபாதந்தனைமறந்த
நானேவின்புக்கிலக்காவேனாடுநாட்டத்துள்ளொளிருங்
கோனேநின்னாலடியேன்கொள்குறைபாடதனைத்தீர்ப்பதல்லான்
ஞானானந்தசங்கரனாநற்றேசிகமெய்த்தவமுடிவே. (௫)

எல்லாமாகியல்லவுமாயிணையற்றோங்கெம்முயிர்த்துணையே
வல்லேயுயிர்கடமைமறைத்துவளமாஞ்சொருபந்தனைவிழுங்கி
யல்லோலங்கள்செயுமலங்களகற்றியங்கைக்கனிபோலத்
தொல்லைவடிவீந்தருள்பகவத்பாதனென்னுந்தூயவனே. (௬)

பித்தாய்த்திரிவேன்றனையாளப்பிறங்குபாதந்தலைதாராய்
முத்தாவிதயத்தாமணியேமுன்பினடுவினலனுபவ
வத்தாயுறையும்வாழ்முதலேவள்ளலாகும்வண்மையனே
அத்தாபகவத்பாதனெனுமருளார்மேனியாரியனே. (௭)

மறையின்முடிவேயென்றுமண்ணோர்விண்ணோர்பரவுமாண்பொருளே
யிறையேமாயாவித்தையெனுமிருடீர்த்தடியேன்பிறப்பிறப்பாஞ்
சிறைநீத்திணையிலடிப்போதென்சென்னிசேர்த்திசிவக்கொழுந்தே
நிறைபூரணசங்கரபகவத்பாதநிருபநிர்க்குணனே. (௮)

ஞானாகாரமாகிநின்றேநவிற்றியெவையுநயந்தருளா
னாணும்பாசக்குகையதனிலொன்றியிருந்துமுணராமற்
போனேனென்றன்பிழைபொறுத்துப்புனிதனாக்கியெனதகத்திற்
றானயமர்சங்கரபகவத்பாதமேலாந்தற்பரனே. (௯)

பத்தியறியேன்பரவுநெறிப்பான்மையறியேனென்றிகழா
தொத்தவனைத்தினையுமுவந்தேயுணர்த்தியுள்ளமுணர்வெய்த
வைத்தவருட்குங்கைம்மாறுவறியேனறியேன்கழல்போற்றி
மெய்த்தசங்கராசார்யமேலோர்பணியுமிக்கவனே. (௰)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# குருவருட்டிறங்
## காண்பதரிதெனல்.

எனையோர்பொருளெனவுன்னியேயிருதாட்கமலங்க
டனியேன்சிரமீதிற்றருந்தயையின்றிறமீதென்
றுனுமாறறிகிலனிங்ஙனுளதாயொருமுதலாய்த்
தனைநேர்தனிச்சுடராகுநின்றகைமைசொலத்தகுமோ. (௧)

தகுஞானமதாகும்பயிர்தானாய்த்தழைத்திலக
மிகுமாருண்மழைபெய்துழிவிதைமாயையின்விளைவாஞ்
செகசீவபரமதாங்களைதிறனேபிடுங்கியபின்
னகமாதியபறவைக்குழுவகல்வானகற்றளியோய். (௨)

அளியீந்தனையதனுனினையடையும்வகையுணர்ந்தே
களிகூர்ந்தனனலதேழ்பவக்கடன்மூழ்குமிக்கடையே
னெளிதோகலந்துயிர்வாழ்தரவிருக்காதிகண்முடிபா
மொளியேயுயிர்த்துணையாகியவொன்றேயருட்குன்றே. (௩)

ஒன்றும்பொருணீயாமெனுமுணர்வின்மையின்விதப்
பொன்றும்பொருள்பொருளாமெனப்போந்தேபுவியிடையி
னன்றென்பதையாமென்றுரையாடித்திரிவேனை
யென்றுங்கருதொருதன்மையினிசைவித்தமையென்னே. (௪)

என்னேசமயிகணின்றனைபெண்ணுதிறுமாந்தே
பன்னூலவைபகரும்பரிசறியாநெறிபடுவா
ருன்னுருளவிருளாயுணர்வுறுவாரகவொளியா
மன்னேயெனதகமன்னியவருடானதிசயமே. (௫)

சயவென்றுதனியநன்னிலைசார்ந்தோர்மகிழ்பூப்ப
மயலின்றிமாயோகத்தவர்மனவாய்வொருங்கேய்ப்ப
நயமொன்றுதகிலைதேர்தருஞானாதிபர்வாய்ப்ப
வயலின்றியத்விதமோங்கிடவமர்ந்தாய்சகத்குருவே. (௬)

குருவாகிவந்தடியேனுறுகுறிநேர்வழியொழுகிப்
பெருவேலையதாகும்பிணிப்பிறப்போடிறப்புதவுங்
கருவேரறவேகண்கடைக்கதிரானுறழ்வுறநின்
றிருவார்கழன்மலர்தந்தனைதிறல்சேர்குருமணியே. (௭)

மணியேமணியொளியேமரகதமேமறைமுடிவே
தணியாவினைதபுமாறருடணியேதவநெறியே
யணியாரிணையடிசேர்தருமடியார்தமதணியாம்
பணியேசெயுமெழிலார்தருபரிசேதருள்புரியே. (௮)

புரியுந்தொழினிதமுன்பதப்புகழ்பூசனையதுவாய்த்
தெரியும்பலபொருணின்றிகழ்திருமேனியதாக
வுருகாவுளநெகிழாவுடலுறைவானயர்வறவே
குருபுங்கவவருணீதரக்குறையேதினியெனக்கே. (௯)

எனக்கோர்செயலெனவேயெணியிகவாழ்வதற்கிடமா
மனக்கேண்மையினுடனுனெனமதியாநினைமதியேன்
றனக்கோர்சுதந்தரமேதுறுதனைமீதெனத்தடுத்தா
ணினக்கேயெனைமனக்கோதறநிரலேயளித்தனனே. (௧௦)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமঃ

# குருவருண்மாட்சி.

பெத்தமுத்திப்பிணுபினபேதங்கண்
மித்தையாயறமேதருநல்லருள்
வைத்தவாநின்றன்வார்கழல்போற்றியே
நித்தசங்கரநிட்களநீதனே. (௧)

சொருபமாதித்துதைதம்பமீறதா
யுளைசெய்கின்றவற்றுட்புறனுகியே
பெருகியெங்கணும்பேருருவற்றொளிர்
நிருபசங்கரனேயருணித்தனே. (௨)

இதுவாமீதலவென்னுஞ்சமயிகட்
கதுவாய்நின்றவித்யாமயனீக்குபு
பதியாய்மாழ்கும்பசுத்துவம்போக்குவாய்
முதல்வசங்கரமூர்த்திமாகேசனே. (௩)

இழிவிகந்துயோகசமாதியி
னெழிவில்பேரின்பமுற்றவர்க்கன்றிநின்
செழுமைத்தாந்திறந்தேர்வதுண்டாங்கொலோ
அழிவில்சங்கரானந்தவபேதனே. (௪)

ஓதும்வல்வினையூட்டுவதால்வருங்
கோதுறும்பவக்கூட்டங்குலையவே
சீதநற்சரண்சென்னிதந்தாள்வையோ
நாதசங்கரநற்குருராயனே. (௫)

இனியேதுன்னருளேழைக்கெனநிதம்
பனிகண்பாயப்பதைத்துமிலேனெற்கு
நனியிரங்கினைநம்பதயாபர
முனிவனேசங்கரானந்தமூர்த்தியே. (௬)

இருளதாமாயையின்மெலிந்தேமிக
மருளுவேனுநின்மாணடிசேரவே
தெருளதாகித்திரண்டெழும்வானமிர்
தருளுவாய்சங்கரானந்தானந்தனே. (௭)

ஏதமேதருமிவ்வுடலாதியை
நேதிசெய்திநிருவிகற்பாங்கனே
நீதிமேவுநிதித்தியிற்காட்சியே
ஆதிசங்கரவாத்மானுபூதியே. (௮)

முத்தராற்றொழுமுழுமுதற்றெய்வமே
மத்தனேனகமன்னிப்பொலிந்திடாய்
சித்தமோனசிவோகமதாயொளிர்
புத்தசங்கரபோதப்பிரகாசனே. (௯)

ஞேயஞாதுருஞானநியதியி
னாயும்வேதமடங்கலுமோலிடுந்
தேயசேதிசைதேசகாலங்கடந்
தாயசங்கரனேயருளாயரோ. (௧௦)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# ஆட்படவயர்தல்.

மிக்கவேதவேதாந்தமெய்ப்பொருளெனவிளங்குஞ்
செக்கர்மேனியாய்செழுஞ்சுடர்பரந்தருள்பழுக்கு
முக்கணப்பநின்முருகவிழ்பதமலரிறைஞ்சு
மிக்கணத்தினிலியைந்தளித்தாள்வதுன்கடனே. (௧)

உலகம்யாவையுமொருங்கினுண்டுமிழ்நெடுமானின்
கலகமாயைசெய்சதிபலவுறக்கருத்தழியா
வலகில்வெம்பவத்தலமருமெனையொருபோதும்
விலகிடாவணமருள்புரிந்திடுதிகொல்விரைந்தே. (௨)

தாதுலாவுமெல்லிதழ்விரிசரியளிதுதையும்
போதினான்முகப்புனிதவெவ்வினைநுகர்புலையே
னேதுவாழ்குறவியற்றினுமிருவினைக்கிடமாந்
தாதைநின்றயையலதுமற்றுளகொறற்பரனே. (௩)

என்றுமேபலவாயிசைத்திடுமொலியிறைநின்
றன்செவிப்புலனடைந்திலவோதகுபருவ
மின்றெனச்சுமாவிருத்தியோவேழ்பவந்துடைக்கும்
வென்றிநாயகவிழுமியதாம்பரவெளியே. (௪)

அகத்தினானனூர்தாதியினளப்பருங்கால
மிகுத்ததீயவைவிழைவினினிழைத்தனனிருக்க
மகத்வநீயருள்வழங்கியுமாழ்கினேன்கண்டாய்
சகத்துரோத்தமதகைநிறைசங்கராரியனே. (௫)

இருண்மலாடவியினின்வதிந்திடருழந்தேனைத்
தெருணயந்தருள்சுரந்திணையடிநிழல்சேர்கென்
றருள்வதென்றுகொலறையுமவ்வடைவினுக்கணித்தாம்
பொருட்டரும்பணியெதுவதுபுகறவப்பொலிவே. (௬)

வம்புலாமனவளமிலேன்றனையுமோர்பொருளாய்
நம்புநல்லடியாருள்நளினவாதனநின்
செம்பொனாலயமெனநிதஞ்சேர்ந்தினிதிருக்கப்
பம்பல்போலுவந்தொன்றுநாளெந்தநாள்பகர்வாய். (௭)

ஆக்கைபோமுனமஞ்சலிலென்றடிமுடிசூட்டிச்
சாக்கியாய்ச்சகசீவதாதான்மியமகற்றும்
வாக்கியப்பரிசளிக்கவும்வாய்க்குநாளென்றோ
போக்குடன்வரவற்றொளிர்புனிதசற்குருவே. (அ)

நனவிலேகனவென்மனக்கனவினன்னனவு
தனைவினவிடையறவுணர்ந்தொழுகுநின்சரண
ரினமதிற்கடையேனையுமிருத்தியாள்குதியேல்
சநநமெய்தினுந்தாழ்விலன்றமியனேன்றக்கோய். (கூ)

அன்னைபோன்றெனையாதரித்தாய்க்குறுகைம்மா
றென்னையிங்குளதெனவியற்றிடுவனிவ்வெளியேன்
கன்னலின்சுவைகண்டுதேன்கயப்புறருசிக்கு
முன்னையேநினைந்துருகுவேனுளங்களிகூர்ந்தே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# குருவருட்போற்றித்

## திருவிருத்தம்.

இகத்தொடுபரமுமற்றேயேகமாம்பொருளாம்வண்ண
மகத்பரிபுரணமேனிமகிழ்வுடன்விளங்கக்காட்டி
யகத்துடனவித்தைமாயையறவருள்புரிந்தாட்கொண்ட
சகத்குருபகவத்பாதசங்கராபோற்றிபோற்றி. (க)

உரைமனமுணர்விறந்தவொருபரம்பொருளாகின்னை
விரவிவந்தனுகவெண்ணுவினையினேற்கிரங்கிமோன
வரமருள்புரியுமாறுவண்மைசேர்கமலபாதஞ்
சிரமருள்பகவத்பாதச்செல்வனேபோற்றிபோற்றி. (உ)

குறிகுணமிறந்துநிற்குங்கோலமார்பிரமந்தன்னிற்
செறிதருமாயைதோன்றிச்செகமுயிர்பரமாயோங்கி
யறிபவனறிவாய்த்தோற்றமாகியேயல்லவாகு
நெறியருள்பகவத்பாதநிருபனேபோற்றிபோற்றி. (ங)

கருமநற்பத்தியோகங்கழறிடுஞானமீதென்
றிருவினையகலுமாறிங்கெழிலருட்பார்வைதன்னாற்
சொருபமதாக்கியாண்டசொருபசிற்கனசின்மாத்திர
சருவமாம்பகவத்பாதசங்கராபோற்றிபோற்றி. (௪)

பிரத்தியேகவான்மாபிரம்மப்பேதமிலகண்டஞானக்
கருத்தஃதிமையினல்குங்கடவுணின்கோலங்காண்பான்
கரத்துறுங்கனிபோனாளுங்காட்சியாய்விளங்கவுள்ளிற்
றெரித்திடும்பகவத்பாதச்சிர்பதிபோற்றிபோற்றி. (௫)

நிற்குணநிமலாத்வைதநிட்களநிகமாபேத்திய
தற்பரவடிவாநின்னைத்தமியனேற்களித்ததேவே
சிற்சடவிகற்பமின்றிச்சிவோகமாய்விளங்குந்திவ்ய
சற்குருபகவத்பாதசங்கராபோற்றிபோற்றி. (௬)

நிறைந்தநின்புரணமாகுநீர்மைதேராதுநாயேன்
மறந்துமாலெய்திவாளாமடமையினயர்தனேக்கி
யுறைந்தையாயுன்னிலொன்றுயொன்றிடும்வழியிதாமென்
றறைந்தருள்பகவத்பாதவதிபனேபோற்றிபோற்றி. (௭)

பேதவபேதமற்றுப்பினுபினமின்றியாளுங்
கோதிலானந்தமோனக்குருவுமாயானுய்நின்ற
போதனேபுகழார்மேனிப்புனிதனேயன்பர்போற்று
நீதனேபகவத்பாதநிமலனேபோற்றிபோற்றி. (௮)

பந்தமும்வீடுமற்றுப்பரம்பொருடானேதானுய்ச்
சந்ததமகிழவீந்தசரணவண்கமலம்போற்றி
சிந்தனைக்கெட்டாஞானத்திகழ்பரம்பொருளாயோங்கு
மெந்தையேபகவத்பாதவேகனேபோற்றிபோற்றி. (௯)

நித்தியசுத்தபுத்தநிர்த்துவந்துவனேபோற்றி
சத்தியஞானனந்தச்சதுமறைமுடிவேபோற்றி
யித்திறனென்றுன்கோலமேற்றுமாறறியேன்போற்றி
மூத்தனேபகவத்பாதமுதல்வனேபோற்றிபோற்றி. (௧௦)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# அறிவித்தருள்வேண்டல்.

மூன்றுமூர்த்தியுமாய்மும்முதற்பொருளாய்மூதிருள்கிழித்தெழுஞ்சுடராய்த்
தோன்றிநின்றழியுந்தொடக்கினையகற்றுந்தூயமாதேசிகவடிவாய்ச்
சான்றதாய்த்திகழுஞ்சங்கராசார்யதற்பரசிற்பரானந்தத்
தேன்றுளிகமலச்செய்யபொற்பாதஞ்சென்னிமீதிருத்திவாழ்வளிப்பாய்

வாழ்வெலாமுதவும்வாழ்முதற்றேவேவளமலிகருணைமாமுகிலே
தாழ்வுயர்வெனும்பொய்மெய்நலந்தீமைத்தகைமையினுண்மைதேர்ந்தொழுகி
யூழ்வலிப்பகைதீர்ந்துள்ளுடைந்துருகியுன்னருட்கிசையுமாறறியா
தாழ்பிறப்பிறப்பாங்கடலினைந்தழிந்தேனுதரித்தென்னையாள்வாயே (௨)

ஆள்வதேகடனுயருட்கொடியுயர்த்தோயத்விதானந்தவாரிதியே
கேள்வியான்மறையாற்கிளரனுபவத்தாற்கிருதகிருத்தியத்தினின்றன்
றுளடைந்துய்ந்தாரன்பர்மற்றடியேன்றாழ்மலாடவியின்வீழ்ந்தழிந்து
நீள்பவமறுக்குநெறியிலேனெந்தாய்நீசனேனுய்யுநாளுளதோ. (௩)

உளதுமாயிலதாயொன்றுமாய்ப்பலவாயுரைமனங்கடந்தவொண்மயனே
யுளமிசையமர்ந்தேயுயிர்க்குயிராகியுணர்த்துநின்னுளவறியாம
லளறெனும்பாசப்பிணிப்பினன்மெலிந்தேயனுர்தமாதியின்வடிவாகித்
தளர்வுறுவேற்குந்தாட்புணைபயந்துதண்ணருள்பொழியுமாறுண்டோ.

உண்டெனுமடியர்க்குட்புறனுய்நின்றுண்மைமைத்தெரித்திடுமாபோற்
றெண்டனேன்செய்தபிழைபொறுத்தருளித்தூயமாமலரடிதருவா
யண்டர்நாயகனேயாருயிர்த்துணையேயப்பனேயொப்பிலாமுதலே
யெண்டிசைமேல்கீழ்நடுவயலின்றியேகமாயிலகருட்குருவே. (௫)

அருட்குருவாகியகமமதைகடூரடியர்தமனத்தினிதிருந்து
மருள்கெடுத்தாண்டவளர்மதியேயமாண்சுடரொறிக்குழூதொளியே
யிருட்பவக்குழிவீழ்ந்திளமைமூப்பாதியின்னலிற்சுழன்றியானெய்த்தேன்
றெருட்பரிதியைச்சேர்ந்திருவினை கழித்துன்றிருவடிவழுத்துமாறறியேன்

அறிகிலேனின்னையன்றியோர்முதலையடைக்கலந்தந்தெனைப்புரக்க
வறிபொருளறிவோடறிகுவோன்றுனுமாகியேயதுவிதுவென்னு
துறுபொருளியாவுமுன்வடிவாகவோர்ந்தியானறக்கடைக்கணிப்பாய்
செறிமயலகன்றுசிற்சுகமுற்றூர்செங்கையிலாமலகத்தோய். (௭)

அத்துவிதப்பேறனைத்தினும்பெரிதென்றருமறையொலித்துநின்றரற்றக்
கத்துறுசமயவாதனைக்கிடமாங்கற்பிதத்திரிசியவடிவாய்ப்
புத்திசெய்தீசனுயிர்சகமெய்யாய்ப்போந்தநாட்கென்சொல்கேனந்தோ
வித்தகபகவத்பாதநிர்க்குணனேவிமலமெய்ஞ்ஞானதேசிகனே. (௮)

தேசிகவடிவாய்ச்செய்பதாடோன்றிச்சிறக்கமெய்த்தபசிகணிறக்கத்
தேசுலாமேனிசெழிக்கநல்லடியர்சேர்வுறுதுறுபிறப்பொழிக்க
மாசிலாமணியாயெழுந்தனைபரனேவள்ளலாய்வந்தமாதவனே
யாசிலாக்கலைகளனைத்துநின்றேத்துமற்புதானந்தவச்சுதனே. (௯)

சுதன்செயறன்னிற்றுகளிலையென்றேதூயநின்னருளினானோக்கிப்
பதமலரளித்துப்பதைப்பெழாதடக்கும்பரநினக்கன்றிவேறுளதோ
விதவகிதத்தானெழுபவப்புணரியெறுழ்கரையேறுமாறறியேன்
சதிசெயுங்கருவிகரணங்களோய்ந்துன்சரணிழற்கீழுறச்செய்வாய்.(௧௦)

செய்திடுஞ்செயலுஞ்செயப்படுபொருளுஞ்செய்குவோன்றானுமாயிலகு
ஐயனேயரசேயருட்கிரணமதாலாக்கைவாக்கியக்கமாதிகளாம்
பொய்ம்மயலவித்தையாரிருள்பெயரப்பொலிதருஞானசூரியனே
ஐயமாற்றுதிமெய்யறிவதாய்த்திகழுமாரணமுடிவதாம்பொருளே.

பொருளெனுமான்மபூரணஞ்சகமாய்ப்புகலத்தியாசமாய்ப்பூப்ப
திருளினிற்பழுதைபாம்பெனவியங்குமியல்புபோற்றோற்றன்மாத்திரமென்
றருளினையறியாதாணவத்தழுந்தியகந்தையான்வேறெனநாடித்
தெருளிழந்தேற்குந்திருவடிக்கமலத்தேறலானந்தம்வந்துறுமோ.(௧௨)

வந்தவாறடையும்வழிமறந்தகிலவாதனைவயத்தினான்மெலிந்தே
தொந்தமாமுடலம்விடயம்யானெனதாய்த்தொடக்குறும்வினையினுட்சிக்கிச்
சிந்தைநைந்திடுதனீதியோவுன்றன்சீர்த்திறற்குரிமையோசெப்பா
யெந்தையேயிருக்காதிகண்முடிவதனிலிலகருட்சோதிநாயகனே.(௧௩)

நாயகனேநின்னறுமலர்ப்பாதநம்பியீடேறுதலின்றித்
தாயிலாச்சேய்போற்றலைவனின்மனைபோற்றந்தியின்வாய்க்கரும்பதுபோன்
மாயைவாழ்வெண்ணிமனக்குரங்கதன்கைமல்கரவாயினேன்கண்டாய்
தாயகமாகியெவைகட்குமேலாந்தண்ணருள்சுரந்திடுந்தக்கோய். (௧௪)

தக்கவனீயேயென்றுகைகூப்பித்தஞ்சமென்றிரந்திடுந்தமியேன்
மிக்கவாழ்வடைந்தமெய்யன்பர்குழுவின்மேவினானுயிர்பிழைப்பதலாற்
புக்கழிந்திடுமிப்பொய்யுடனடலைப்போகம்போம்வகையுண்டோபுகலாய்
சிக்கெனப்பிடித்தேன்சிறைதபுமாறுன்சீரருளிரங்குநாளென்றோ(௧௫)

என்றுனைச்சேர்ந்தென்னிருகணீர்மாற்றியினைப்பறவாழ்குவேனெழிலோய்
பொன்றியும்பொருளேபொருளெனமதித்துன்பொன்னடிவழுத்திடாப்புலையேன்
கன்றுகற்றுவைத்தேடியுட்கசிந்துகலங்குறுமாறுபோற்றேடி
நின்றிநனிருப்பதறிகிலாய்போன்றுநிற்பதேனிணையிலாத்தேவே.(௧௬)

தேவதேவேநின்றிருவருட்கோலந்தேர்கிலேமென்றனுதினமு
மூவுலகினருமுருகவிழ்மலரான்முண்டகத்தாளருச்சித்துத்
தாவிநின்றேத்தித்தொழுதுய்வரொன்றுற்றமியனேனுரைத்திடற்பாற்றே
பாவமபாவங்கடந்தொளிபரப்ும்பரமனேபகரொணுப்பண்பே. (௧௭)

பண்பதாநின்சீர்பகர்ந்திடக்கேட்டல்பழவடியார்தமக்கிசைய
நண்பனுயிருத்தனறுமலர்சூடிநளினவண்மலர்ப்பதமேத்த
லுண்மலிஞானப்பயிர்தனைவளர்த்தலூதியமேயெனவுணர்ந்தேன்
கண்மணியேமற்றுரைப்பதிங்கெனைநின்கண்ணமர்ந்தனனருள்புரியே.

(வேறு.)

புரிந்திடுந்தொழிலெலாநின்புரணமெய்லீலையாகத்
தெரிந்திடும்பொருளெலாநின்றிகழ்திருமேனியாக
நிரந்தரமுணர்ந்துள்ளாறிநிற்கவந்தருள்வையாயி
னருந்தவம்புரிவதேதிங்கறைதியிவ்வறிவிலேற்கே. (௧௯)

அறிவறியாமைமாற்றியங்கையிற்கனிபோனின்னைப்
பெறும்வகையின்றிவாளாபிதற்றிடும்பேதையேன்சொ
லிறைவநின்சீர்த்திக்கேலாதென்றுகைவிடுதியாயின்
முறைமுறையருளோயென்றுமுதுரையுரைப்பதென்னே. (௨0)

என்னினும்பொல்லாரில்லையிறையருள்கேட்டுணர்ந்து
மின்னல்கொடின்பவின்பத்தேழமைதுய்த்துநொந்தே
தன்னிகரில்லாதோங்குந்தாட்பணிசுமத்தலின்றித்
துன்னுமாமாயைக்காளாய்த்துவந்துவத்தழிவதென்னே. (௨௧)

என்னையான்காணவேண்டியெடுத்தவிவ்வுடலந்தன்னை
மின்னினுநிலைமையில்லாமித்தையென்றறிந்துன்பாத
நன்னயமாகவுன்னிநாத்தழும்பேறவோதித்
துன்னுவதென்றேசொல்லாய்சோதியேயாதிமூர்த்தி. (௨௨)

மூர்த்தியேமுன்பினின்றிமுளைத்தவாங்காரந்தன்னைப்
பேர்த்துமாலகற்றியான்மப்பேற்றினையுதவப்பெற்ற
வார்த்திகர்முதலாயுள்ளவண்சரணர்களாற்சூழ்ந்து
சீர்த்திநின்றேத்தவந்தசெல்வனேபோற்றிபோற்றி. (௨௩)

போற்றிநின்றிறைஞ்சிவாழ்த்தும்புனிதருட்போதமான
தோற்றமுமிறுதியில்லாத்தோன்றலேதொடர்ந்துபற்றிக்
காற்றிலாத்தீபம்போலக்கடையனேயிருத்திநின்னை
யேற்றிடப்பணிப்பதென்றேவெம்மனோர்க்குறாத்தியெந்தாய். (உச)

எந்தையேயப்பாநின்றனெழிலருட்பார்வைதன்னாற்
பந்தமோக்கங்களாகும்பயமகன்றகண்டமாகிச்
சிந்தைசெயையந்தீர்ந்துசிற்சுகமாவதல்லா
லெந்தநல்லடைவாங்கண்டாயேகனேயிதயவாழ்வே. (உரு)

இதயவண்கமலமீதினினிதுனையிருத்தலின்றிச்
சுதையெனுமதுகைவிட்டுத்துகளுறுமண்டுய்ப்பார்போற்
புதைபடாதுள்ளந்தன்னிற்போந்தநாட்கென்சொல்கேனியா
னிதநினக்கேற்குமாறுநேதிசெய்தாட்கொள்வாயே. (உசு)

கொள்ளுதறள்ளலாகிக்கூடுதல்பிரிதலாகித்
துள்ளுமிம்மனமாம்பேயின்றுடிப்பறயானற்றெங்கு
முள்ளவாவுன்னிலொன்றுயோவியம்போற்கலந்து
விள்ளொணுவிபுவாய்நிற்கவிதிப்பதெக்காலஞ்சொல்லாய். (உஎ)

சொல்லொடுபொருளுமற்றுச்சுபாசுபமற்றுவான்போ
லல்லொடுபகலுமற்றேயனைத்துமாயல்லவாகு
மெல்லையிறவங்கடம்மையிழைத்தவர்க்கன்றியென்றன்
சொல்லளவாகுமோநின்சொருபவாழ்வானமோனம். (உஅ)

மோனமாயிருந்தான்மூலப்பகுதியின்விளைந்தவெல்லா
மீனமாமதனுனின்பதுன்பங்கடீருமத்தான்
ஞானவஞ்ஞானமற்றுநானெனலொடுங்குமப்பால்
தானமர்நிலைவந்தொன்றித்துசிவோகமதாய்நிற்கும். (உகூ)

நிற்குதியிவ்வாறென்றுநிதித்தியிற்காட்சிதந்தாய்
சிற்கனசிற்சொருபசித்களாதீதமுக்த
நற்பரமாத்விதிய்யநவில்சிதாகாசரூப
சற்குருபகவத்பாதசங்கராசார்யநித்ய (௩0)

நித்தியானந்தசைதன்னியநிருவிகற்பமேலாஞ்
சத்தியஞானனந்தத்தன்மயவிதேகமுத்தி
சித்திகள்விளையும்வித்தேசெழுஞ்சுடர்க்கொழுந்தாமொன்றே
மத்துறுவேனையாள்வாய்மாப்பெருங்கருணைக்குன்றே. (௩க)

(வேறு.)

குன்றுதசெல்வமடியேற்குமீந்துகுளிர்பாதமுச்சியுறவே
நின்றின்பவாரிதனின்மூழ்கவைக்கினிலைபெற்றுமோனவடிவா
யன்றேயெனுவிபுபசாந்தமன்னியனுர்தாதியற்றுனிருதா
ளொன்றிப்பிரமோகமயமாகுமென்றனுளமேவுமுண்மைவடிவே(௯௨)

வடிவாகியோங்கிவழிபாடுசெய்யும்வளமாருமன்பரொளிதா
யடிசேரும்வண்ணமபயங்கொடுத்தனவர்தம்மையாளுமாபோற்
கொடியேனடைந்தகுறைதீருமாறுகுறியாதிருப்பதழகோ
கடையேன்றனுலென்செயலாகுமோனகருணைப்பிரவாகநிலையே(௯௩)

நிலையாகிநின்றுநிருபாதிகேசநினையேநினைந்துநெகிழ்வுற்
றலையாமலைந்துபுலனுதியோடுமைம்பூதமானவிடயத்
திலதானமாயையிலதாயிலங்குமேகாந்தவியல்புபெறவே
புலையேன்றனக்கும்வருமோவென்றேங்கிப்புகுவேனையாளநினையாய்.

நினைவின்விளைந்தகனவொக்குமிந்தநீடிந்திரசாலவுலக
மெனவோதியோர்ந்துமுறுமோகநூறியின்புற்றுவாழவறியேன்
வினையானணைந்தபெயரோடுரூபவிடமுண்டிறப்பதொழியத்
தனைநேருநின்றனிருபாதமென்றன்றலைசேர்வதென்றுபுகலாய். (௯௫)

புகலிந்தியங்கள்வயமாகுமான்மபோதம்பதைத்தெழுவதுன்
மிகுமாரருட்கண்மிகுநோக்கமென்றன்மிசைவைக்கினன்றியறுமோ
விகலாருஞானவொளிவாள்பிடிக்குமெழின்மேவுமன்பரிதயச்
சுகரூபமானசோதிப்பிரகாசசுயசிற்சொரூபவெளியே. (௯௬)

வெளியாகியெங்கும்வியாபித்திலங்குவியன்மேவுவிபுலமுதவி
மிளிர்தேவதேவவிழைவானடைந்தவினைமாயுநீர்மையிலதே
லெளியேனலக்கணறுமோவிசைத்தியின்பேயெவைக்குமுதலே
யளியோயனைத்தினூடுற்றமர்ந்தவாத்மானுபூதிமயமே. (௯௭)

அனுபூதிவத்ததெனவிங்கமர்ந்தவதிர்சியப்பிரானுன்மகிமை
பினமோடபின்னமெனவேபிதற்றுபேதைப்பெரும்பிழையினே
னினைவாதியோடிவியலென்றுகூறநேருந்திறத்தினளவோ
தனியேநின்கோலமெவரோபுகல்வர்தானற்றுவாழ்குவதலால். (௯௮)

அதமேபுரிந்தெனகமன்னுமோகவலைவுக்குளாகியனுவாய்ப்
பதியாமுனக்கன்பிழையாதுநாளும்பாழானபதகனுயவே
யதிபாநின்பாதமணுகும்படிக்குமன்பின்பெருக்கைவருவித்
திதமாயழைக்கவருமோவோர்காலமெனையாளவல்லவரசே. (௯௯)

அாசாகியண்டபகிரண்டமற்றுமாளும்பெருந்தகையெனும்
பரிபூரணத்துமிகுமின்பவாரிபரவித்ததும்பியிலகுங்
குருவேயெனெஞ்சுளமராய்மெயன்பர்கூடிக்குலாவுமணியே
யருமாமறைக்கணமுதேயதீதவாதாரபூதவடிவே. (௪0)

பூதங்கடந்துபொறியுங்கடந்துபுலனுங்கடந்துகரணப்
பேதங்கடந்துபினமானவாயுபிரிவுங்கடந்துபிறழ்வுற்
றேதஞ்செய்சீவேசுராரூபமானவிருநாமரூபமகல்வுற்
றேதுங்கடந்தொரியல்புற்றிருக்கவெனைநீதொகுத்தல்கடனே. (௪௧)

(வேறு.)

தொகுத்துணர்ந்துரைத்திரந்ததொண்டனேனையாட்கொள்வான்
மிகுத்தபேரருட்கணுவென்மீதிரக்கமில்லையோ
பகுத்துணர்த்துபண்பினேய்நின்பான்மையென்கொலறிகிலேன்
வகுத்துவையம்யாவையும்வளர்த்தழிக்குமெய்யனே. (௪௨)

மெய்யிதென்றுகனவினும்விழைந்துநாடவெண்ணிலேன்
பொய்யிலாழுமங்கையார்தம்போகமுன்னியுன்னியே
வெய்யகாமமாதியாயவினையிடத்தனையினே
னையநீயறிந்தகற்றினல்லதில்லையபயமே. (௪௩)

அபயமென்றணைந்தநாயினேனறிந்துவழிபடா
துபயபோகவாதனைக்குளொன்றினன்றருகுமோர்
சுபமிகுத்ததூய்மையாளர்துன்னிடும்பிரதாபனே
யபலமாயழிந்திடாமலாளுநாளுங்கூடுமோ. (௪௪)

கூடுமோநின்பாதசேவைகோதிலாதமாதவர்
தேடநின்றபொருள்தானசித்களாந்தவெள்ளமே
யோடியெங்குமாடிவந்துலாவிநைந்துநேடுரு
வாடுமென்றன்பிணிதவிர்க்கவல்லபாதமுதவுவாய். (௪௫)

(வேறு.)

உதவும்பொருளெனநின்றனையுணராதிறுமாந்தே
நிதகாவெனமறப்போடுறுநினைவிற்கிலக்காகுஞ்
சிதடன்றனக்குண்டோவெனச்சிந்தாகுலமெய்தும்
பதிதன்றனைவாவென்றழைப்பதுநின்கடனாமே. (௪௬)

ஆமென்பதையலவென்றுவாதாடித்திரிவேனும்
போமாறினியென்னேபுகல்போதாந்தவிண்ணவனே
கோமானினதடியார்தமக்குண்டோகுறையறைநின்
றாமம்புகல்வார்மற்றிஙனண்ணுதகதொன்றுளதோ. (௪௭)

ஒன்றேடிரண்டெனுமோர்வினனுளமோகமொடறவே
பொன்றப்பதமுடிதந்தெனைப்புரந்தாள்வதென்றுனையா
யன்றாலடிதனிலுல்வருக்கறமோதியபரனே
நன்றாகவனைத்துட்புறனணுகித்திகழ்பொருளே. (சஅ)

திகழும்பொருணீயாமெனுந்திடஞானமதறவே
யிகழ்மாதர்பொனிடமேபொருளெனவேயுழன்றனிச
மிகையேபுரிவினையேன்பரவெளியாயெலையறுநின்
சுகபூரணவருளானுனைத்தொடரும்வழிபெற்றேன். (சகூ)

பெற்றேனினதருளானினைப்பேணுந்தொண்டருறவைக்
கற்றேனின்றனுமங்கதிக்காமந்திரமெனவே
மற்றேதுமிலாதுன்விரைமலர்த்தாட்பணிசுமக்க
லுற்றேன்சகத்குருவாயெங்குமொளிர்சங்காகுருவே. (ரு0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# நெஞ்சொடுகிளத்தல்.

நெஞ்சேநின்னேழ்மைதபு நியம—நிண்ணயநீர்மைசொல்கேன்
விஞ்சுமாமோகமுற்றே விதிர்—விதிர்த்துடல்கேட்குதியேல்
துஞ்சுவைநீயுமயானுந் தொலலைத்—தூச்செல்வம்பெற்றுய்குவன்
அஞ்சாதுனையடைந்தே யலைந்—தயர்வோரும்பிழைப்பர். (க)

சகத்குருவாயிலகுஞ் சிவ—சங்கரதேசிகன்றன்
மகத்வமிகுந்திறல்சேர் மலி—மாண்கோலமேத்துதியேல்
சுகக்கடன்மூழ்கிமிளிர் சுயஞ்—சோதிச்சாந்தம்பூசி
அகர்த்தாவபோக்தாவா யரு—ளமுதம்புசிப்பையன்றே. (உ)

அரன்மாலயனுகி யண்ண—லவத்தாத்திரயங்களி
னிரவயவயமாகி நிற்கு—நிசரூபங்காண்குதியேல்
வரவுபோக்கிரண்டாகும் வழி—மாண்டதுங்காணுமே
பரிபூரணனந்தமாய்ப் பவ—பாசமகல்வையன்றே. (ங)

அகமகமென்றனைத்து டைய—னமர்தருங்கோலமதை
யிகபரவாழ்வைமறந் தென்று—மேத்தியிறைஞ்சுதியேல்
சகசிவபரவிகற்பஞ் சாருஞ்—சன்மசாபல்லியமாய்ச்
சுகவனுபூதிதன்னு ணின்று—சொக்கிக்கிடப்பையன்றே. (ச)

அந்தோவிந்நாள்வரையி லதிப—னருட்கோலங்காண்பதற்றே
பந்தவலையதனுட் படு—பட்சியென்றேங்கினேயே
சந்ததமோர்நிலையாய்ச் சரண்—டாழ்ந்துளமாறுதியேல்
தொந்தமதாகியுன்றன் றென்மைத்—துரிசறுத்தாள்குவனே. (ரு)

பாராதியண்டமுற்றும் பரன்—படைப்புடன்காப்பழிப்பா
மாராயினஞ்செயலிங் கிலே—யாமென்றறிகுதியேல்
தாராவருளனைத்துந் தந்துன்—றன்னைச்சிறைவிடுப்பன்
தூராதிதூரமெல்லாஞ் சூழுஞ்—சொருபப்பட்டங்கட்டுவன். (கா)

ஆசையினலலைந்தா யத்த—னருளார்வழிகுலைந்தாய்
கோசக்குகையிலைந்தாய்க் கூடுங்—கூட்டத்தோடேதொலைந்தாய்
பேசாமலோர்படித்தாய்ப் பேதா—பேதமற்றேத்துதியேல்
வாசாமகோசரத்துள் வைத்து—வாழாதுவாழ்விப்பனே. (எ)

நான்பிறனொன்றதே நாம—ரூபத்துண்மன்றதே
யூன்பவந்துன்றதே யிம்ப—ரும்பர்வாழ்வைப்பன்றதே
தான்பலவாகியொன்ருய்த் தனி—யாகுந்தயாநிதியை
ஊன்மயவாக்கைவிழு முன—முட்கசிந்தேத்துதியே. (அ)

என்னதென்றோர்பொருளே யெண்ணி—யேத்திமகிழ்வதுறே
லென்கோமானின்னருளே நினைந்—தின்பநுகர்வதறேல்
பொன்னடிசென்னிவரும் பரி—பூரணச்செல்வந்தரும்
அங்நிலேயேயெவரு மடைந்—தாரென்றுரணம்பகரும். (கூ)

துன்பின்பொழிக்கவல்லாய்-தொன்மைத்-துணையாகிவந்தகல்லா
யின்சொலதாகுநில்லா யெழிற்—கோலமதாகும்புல்லா
யன்பெனும்பிட்சையைத்தண் ணரு—ளாகுமோட்தனிலேற்றுண்
டன்பர்வழுத்தும்பொருண் மாலே—யணியுமாரியன்சொலாண். (க0)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# அருட்டாகம்.

விண்ணேயொளியேவிபுவேமிளிர்செம்பொருண்மேனிக்
கண்ணேகடிசேர்கதியாயிலகுங்கழனாயே
னுண்ணேர்தருமாறுளதோவறியேனுரையாயே
பண்ணார்மறையின்முடிவாயிலகும்பரிசானே. (௧)

நனவாதிகளார்தருவாதனையானனிவாடி
யுனுமாயையினாலுலகாசையினைந்துழல்வேனை
யினியோர்வடிவாயிதமோடகிதமெணிவாளா
சநியாவணமாட்கொளுவாயிதயத்தனிவாழ்வே. (௨)

சிறியேனெனதாருயிரோதிறல்சேர்திகழ்தேசே
யிறையேனுமிலாவிருடீர்தரவாய்ந்திலகாநன்
னெறிபோமுதியோர்நிலைவாழ்வஃதேநெடிதீயாய்
நிறைவேநிகழ்போதநிகாசமிலாநிசவானே. (௩)

புகலிந்தியமோர்பொருளோர்ந்தறியும்பொலிவின்று
லகமாயையினானறியும்பரிசென்றகமோர்ந்தே
புகுதாதுறுபல்விடயந்தனிலாம்போதம்போ
யிகன்மாமயறேர்ந்திருபாதமலர்க்கிசைவேனோ. (௪)

படிறேனிடரார்பவசாகரவெந்துயர்மேவுஞ்
செடிசேருடலஞ்சிதையாமுனநின்சீர்பாதத்
தடியாரடியாரடிசேர்தருமாறருள்வாயோ
முடியாமுதலேமுனியேமொழிதீர்முழுதோனே. (௫)

அனூர்தாதிகளானழியாவணமென்னகமன்னும்
பினமோடபினப்பிழைகூர்துவிதப்பிரிவற்றே
மனமாயைகழன்றகலாவணநின்மலர்த்தாளிற்
றனைநேர்தனியாயுறவேகுருவேதடுத்தாளாய். (௬)

பரிபூரணசிற்கனாதரவாம்பதியோனே
தரமாகியபல்லுயிர்த்தாரகமாய்த்தவழ்வோனே
யரன்மாலயனாயடர்மன்பதையாண்டருள்வோனே
குருவாயடியேன்குறைபாடுதீர்குணவானே. (௭)

அதுவாமிதுவன்றெனவோதுதலாமகமற்றே
முதுமாமறையின்பொருளாயிலகும்முடிபொன்றி
நிதநானதுவாநிருபாதிகமாகிலைதந்தா
ணிதியாநிரவத்தியநித்தியனுநெடியோனே. (அ)

சருவாகமநூற்கலையாதிகள்சூழ்தகையாளா
தெரிவார்தெரிவூடிகலாநிருடீர்திறலாளா
வரசாயொருமூவுலகாள்பதியாமருளாளா
கருணாலயகம்பலைதீர்தாநீகருதாயோ. (௯)

சொல்லும்பொருளுஞ்சுபமோடசுபச்சுமையுந்தீர்த்
தல்லும்பகலோடகமும்புறமும்மறியாமே
நில்லென்றெனுமோர்நெறிதந்தருணின்மலனுநின்
றுரல்லைப்படிவந்தனிலார்தரவேதொகுத்தாளாய். (௧0)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# குறையறவிரத்தல்.

நித்தநிஜாத்மநித்தியாசருபகநிட்பிரபஞ்ச
வத்துவிதானந்தமாகியங்கங்கதுவாய்த்திகழா
முத்தரிதயத்துறுமோனப்பூவாய்முருகவிழு
மத்தசங்கரபகவத்பாதவற்புதவாண்டருளே. (௧)

மூதண்டகோடியப்பாலுமிப்பாலுமொய்முன்னவனே
மாதொண்டொடிமலைமங்கைமணாளவளம்பெறவே
நீதண்டியாதெனைநீத்திடினீள்கடையாவதல்லா
லேதண்டுமாறிடமெந்தாயெம்மீசவிறையவனே. (௨)

ஊணுதியுண்டுறங்காவணநாடியுணர்ந்துணர்ந்தே
காணாதுகாணுங்கடவுணின்கோலமென்கண்ணுறுமோ
வீணுகுமென்புன்வினைபடநூறிவிளங்கொளிசேர்
பூணர்பொலிவொடென்முன்வருவாயருட்பூரணனே. (௩)

வாசாமகோசரவன்பின்றிவாணாளைவீணேயிழந்
தாசாபிசாசத்தழிவேனைவாவென்றருட்கண்வைத்துப்
பேசாதிருக்கும்வரமொன்றளித்தென்பிழைதவிர்த்தாய்
தேசார்பகவத்பாதவருட்டேசிகச்சீர்பதியே. (௪)

மீண்டும்பிறவாவணஞ்செயும்வித்தகவேதியனே
காண்டகுமேனியென்கண்பொலிவான்வருங்காலமென்றோ
தூண்டாமணிவிளக்கேசுபந்தோன்றுஞ்சுகாரம்பமே
யாண்டகையேயடியேனுன்னடைக்கலமாண்டருளே. (௫)

ஞானவஞ்ஞானகாரணகாரியங்களைநண்ணுகிலாத்
தானாய்த்தனியாய்த்தகுசிவமாகித்தயங்குகின்ற
மோனமூவாப்பொருளேயருளாயெம்முழுமுதலே
வானோர்வழுத்தும்பகவத்பாதனெனும்வண்மையனே. (௬)

விண்ணினுந்தூய்தெனமேல்கீழெனாமனடுப்பகலா
யுண்ணிலவுந்தாரகப்பிரமாதித்தவோங்குபுக
ழெண்ணிலவெய்துமேகாந்தமோனத்தினையெய்தவரு
ளண்மையுடன்சேய்மையாகியவத்துவிதானந்தனே. (௭)

சோகமோகக்கடலிற்சுழன்றேசுகதுக்கத்தாழா
தேகபோகமதாயியானெனதென்னாதிலகிநிற்க
மாகர்வணங்குமலர்ப்பதமீகுதிமாண்பொருளே
வாகைசேரும்பகவத்பாதவாணாதிவைக்கும்வைப்பே. (௮)

தத்துவமியாவுஞ்சடமெனமாற்றித்ததாகாரமா
முத்தியனுபவமொன்றிப்பிரம்மோகமுதவுமின்பத்
தொத்ததுவாகியதுவுமிழந்தங்கொருபடித்தாம்
வித்தகமேதருளாயெங்குமாகும்வியாபகனே. (௯)

உன்பணியானுடலோங்கிவிதிர்விதிர்த்தொன்றிநிற்க
வுன்பாதமேநினைந்துருகியுளமகிழ்ந்தாறிநிற்க
வுன்கோலமேபுகழ்ந்தேத்தவெக்காலுமுறைகள்கற்க
வுன்னிலொன்றாகவருள்புரியாயெமக்குள்ளவனே. (௧௦)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# அருட்பரிசாற்றுமை.

முத்திவேட்கையினான்மூவாமுதுணர்வுற்றதூயோர்
பத்திவைராகஞானம்பதிந்தருள்படைத்துய்ந்தாரால்
சித்தசுத்தியுங்காணேனின்சீரடிக்கன்புமில்லே
னெத்திறத்துய்வேன்கண்டாயிலகொளிசுடர்பொற்குன்றே. (௧)

தக்கநற்கேள்விவாய்ந்துதகுகதிக்குரிமைபூண்டு
நெக்குநெக்குருகியேத்திநெட்டுயிர்ப்பெறிந்தார்த்தார்த்துத்
தொக்கிடையுழலாதுன்னைத்தொடருநாளென்றோசொல்லாய்
பக்குவர்குழாங்கள்போற்றும்பரவுசீர்ப்பரிசினானே. (௨)

இருண்மனமெதிரிட்டெய்துமிதவகிதங்கள்போக்கி
மருண்மயலகற்றித்தானாய்மருவிவண்கமலநின்பொற்
சரணுறவாப்தவங்கதானசற்பாவமென்னும்
பொருண்மிகுபணிதந்தாளாய்புன்மையேனுய்யுமாறே. (௩)

பாசபந்தங்கணீங்கிப்பரமநின்கோலங்காண்பா
னாசையுற்றிருப்பதுன்றனருளுக்கேவெளியாமன்றே
பேசுவதென்னைநாயேன்பிழைத்தனபொறுத்தல்வேண்டு
மாசறுதேசிகேசமகிபதியெனுமாதேவே. (௪)

அறவழியொருவிநாளுமகந்தையின்வயத்தனாகி
மறஞ்செறிகாமமீறிமாப்பொருளிழந்தநாயேன்
பொறிபுலன்வழியுறாதுன்பொன்னடிக்கன்புபூண்டு
குறைதவிர்ந்துயிர்பிழைக்கக்குறுகினேன்கூட்டுவாயே. (௫)

தாக்குறும்விடயவின்பத்தழும்பெனவூனாற்றுன்னு
மாக்கைபோமுனமேலாநின்னருண்முடித்தாளுங்கொல்லோ
நீக்கருநிலைமெய்யன்பர்நேயமாய்த்தோன்றுதொட்ட
பாக்கியமெனவந்தாளும்பரமருளுயிராமொன்றே. (௬)

கடபடமிருத்துநூலின்காரணகாரியம்போ
லடருமான்மாவெலாமுமல்லவுமாயிலங்க
மடமையான்வேறாய்நாடிமாழ்கிவெம்பவத்தூடொன்றி
யிடர்சடம்பொய்யிலாழுமேழையேற்கிரங்குவாயே. (௭)

எப்பதங்களினுமேலாமெல்லயறுதேசுலாவு
முப்பதமுடிவதாகிமூன்றிலக்கணைகடந்தே
யொப்பிலாதோங்கித்தானுயுளாமனமுணர்விறந்த
வப்பனேயடியனேனையாதரித்தாட்கொள்வாயே. (அ)

மேவரும்விவிக்தத்துற்றுவிழியிமையாமனுடித்
தாவருங்கரணபோதந்தவிர்ந்தெழுமகமுள்ளாழிப்
பாவமபாவந்தீர்ந்துபரசுகமுறுவதென்றே
மூவருமாகிமல்குமுழுதுமாமுத்திப்பேறே. (௯)

யானெனதென்றுதென்னையானெனக்காணவென்ற
வீனமெலாமுமோய்ந்திங்கிளைப்பறுமெழிலுண்டாமோ
தானமர்நிலையைப்பெற்றதக்கவர்பழிச்சிவாழ்த்துந்
தானிகர்சங்கரார்யதனிசிவாத்விதமெய்வாழ்வே. (௧0)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# சிரவணுதிக்கவியல்.

எங்கும்வியாபகமாயெக்காலுமோர்படித்தாய்த்
தங்கும்பொருள்களெலாந்தானகத்— துங்கமா
யாளுமருண்மேனியாய்சங்காகுருவே
தாளென்சழக்கொழியத்தா.

வினவிடைவெண்பா.

யானுரிதுவதெனயானென்றழுந்தலெது
தேனுர்மொழியுதவுந்தேசிகனே—நானுவாய்ப்
பற்றியுணருமுனும்பற்றற்றபூரணநீ
பற்றுவதுன்போதமெனப்பார். (௧)

முழுப்பொருளேயானுகிமுன்பினின்றிநிற்க
விழுத்துணையோநானுவிகற்பங்—தழைப்பதெனை
யார்ந்தவுபாதியெனுமத்தியாசத்தினுற்
சேர்ந்திடையினிற்குமெனத்தேர். (௨)

ஆனாலிவையொழிவதண்ணலேயெவ்வாறுங்
கோனேயெனையடிமைகொண்டவனே—நீநாடிப்
பார்ப்பவெலாமுன்னறிவாற்பாதிக்குமேயெனலால்
சீர்க்கநின்னுள்ளேதெளி. (௩)

எல்லாமறியுமெனையானறியாவாறெவன்கொல்
சொல்லாய்சொருபசுகக்கடலே—வல்லாய்
நினைப்புமறப்புச்சகலநேர்கேவலமா
வனைத்தும்பிரிக்கினறிவாய். (௪)

துவந்தங்களாகித்தொடர்ந்துபற்றியென்னைக்
கவர்ந்ததெதுவெனக்குக்காட்டாய்—பவந்தருவ
தாகியனாதிதொடுத்தாணவத்திலாழ்த்துறுபொய்ச்
சோகமோகந்தான்றுணி. (௫)

துன்னுமிருளாகுமலந்துன்றாதொழிப்பதெது
இன்னதெனவெற்குணர்த்தவேலாதோ—வன்னியமாய்ப்
பாராதுபார்த்தெவையும்பற்றாதொளிர்தருநற்
சீராருஞானமெனத்தேர். (௬)

பந்தமோக்கங்களெனப்பன்னலெவனென்றனது
சிந்தைநோய்தீரத்தெரித்தருளா—யெந்தையே
பற்றுதலேபந்தம்பரிகரித்தன்முத்தியதா
மற்றிவைகளற்றதேமாண்பு. (௭)

வத்துவேநிற்கவெங்கும்வாய்ந்தபந்தமுத்தியுறப்
புத்திசெயுமோபுகலுதியா—னித்தியனே
பூரணானந்தப்பொருளாந்தனைமறந்த
கோரணிமால்கூத்ததென்றுகொள். (௮)

மாயையிலாதிருக்கமாலுதலெவ்வாறிவணின்
றாயவகையேதிங்கறைந்திடுதி—தாயகமாய்
நிற்கும்பரம்பொருளேநீள்சகமாய்மாழ்குவது
நற்றாணுமானவனாடு. (௯)

நிருவிகாரப்பொருளேநேர்ந்தெங்குமாக
வரவுபோக்காகிநின்றுவாழ்வேன்—சொருபநிலை
நீராடவிம்பநிலைமாறல்போல்விகற்பச்
சார்போதத்தாற்சரிக்குந்தான். (௧௦)

தோற்றமிறுதியின்றித்துன்பவின்பமற்றிடுமோர்
மாற்றமெனக்குணாக்கின்மாண்பாமே—யாற்றன்மிகு
நீயுதிக்கினெல்லாமாய்நின்றிடுமோணின்னொழிவின்
மாயுமெலாமென்றேமதி. (௧௧)

கதிக்காம்வழியேதுகாட்டியருளா
யுதிக்காதொடுங்காதுறையப்—பதைப்பறவே
பாராதியண்டம்பரவிப்பரவெளியா
மோராருமோனமெனவெண். (௧௨)

ஏதாயிருந்தாலியங்குவனவெல்லாமு
மூதொளியதாகுமொழிகவே—யேதமறச்
சும்மாவிருத்தலொடுசூக்குமத்தின்றன்மையமா
மம்மாணறிவாயமர். (௧௩)

ஏதேயடைவதிருமுகத்தாற்றெருந்தமென
வோதாய்வேதாகமத்தினுட்பொருளே—தீதடரா
வாதாரவாரோபமாயவழிதேர்ந்துணராப்
பேதாதிபோதமென்றுபேண். (௧௪)

முப்பொருளதாய்ச்சிதைந்துமோகவிடயத்துறைந்த
தெப்படியென்னெஞ்சிலுறையீசனே—செப்பா
யறிவுமறிபொருளுமாய்பவனுமாகிச்
செறிவுபிறந்ததனுற்றோர். (௧௫)

தன்னால்விளைந்தவெலாந்தன்னிடத்திலேயிருக்கத்
துன்னுமிருவினையிற்றேய்வதே—னென்னரசே
யிதவகிதமேவியெதிரிட்டவதனாற்றற்
பதநிலைதாதான்மியமாம்பார். (௧௬)

தன்னாற்றானின்பதுன்பஞ்சார்வதெவனீதறியா
வென்னாவிமன்னவியம்புதியால்—முன்னாகத்
தன்விளக்கத்தாற்றோன்றுந்தன்சாயைவேறெனவே
யுன்னுமொளிபோன்மதுவென்றோர். (௧௭)

வந்தவழிமறந்தேன்வத்துநிலையுற்றுணர்ந்து
சந்ததமுமோரியல்பாய்ச்சார்வதுதா—னெந்தநிலை
தன்சத்தையாற்சொருபந்தான்சகமாய்த்தோற்றுமென
வுன்சித்தத்துள்ளினுதிக்கும். (௧௮)

அன்பாதிகன்மத்தாலாகாதோவான்மசித்தி
துன்புறுவேற்கிதுரையாய்தொன்மையனே--பன்னற்க
வன்பாதிகளாலகமொருமையாமதுதா
னின்பாஞானத்தாலாமெண். (௧௯)

முத்தமுறக்கன்மமுயங்குநெறியேதோ
சித்தநிரோதச்செல்வஞ்சேர்தரவே—மித்தை
யெணற்கருஞானவியலினுத்தியோடு
பணித்தமயல்பாறுமுனிப்பார். (௨௦)

சுட்டுக்கடங்காச்சுகாதீதமோனவரு
ணிட்டைநிலையெவ்வாறுநிட்களனே—யெட்டுணைப்போ
தேனும்பிரியர்திமையர்நாட்டத்தையுறிற்
றுணுய்த்தழைத்திலகுந்தான். (௨௧)

ஆனந்தவெள்ளத்தழுந்தியெனையொழிவுற்
றீனந்தவிர்வதெவனெங்கோனே—வானாதி
பூதவிடயத்தொன்றும்பொய்யறிவினேடுமருள்
வாதனைதீர்வாய்மைவழித்தாம். (௨௨)

தாக்கற்றிருந்தெவையுந்தானாகப்பார்த்திடுமா
வாக்கியத்தினுண்மையருள்வள்ளலே—நீக்கரிய
சாக்கிரமாதிக்கப்பாற்றற்பரமாய்நின்றுணருஞ்
சாக்கியதேநீயாய்த்தனி. (௨௩)

தனியாகிநின்றவிடந்தானாய்த்தழைத்திட்
டுனுமாறகன்றவுளவோதா—யினிது
பினவபினமின்றிடவேபேருருவற்றோங்கு
மனையநிலைதானென்றறி. (௨௪)

நான்வேறதுவேறேநன்றாயுரைத்தருளாய்
தானானதன்மயத்தைச்சார்தரவே—வான்கடத்திற்
றேன்றியிரண்டாவதுபோற்றோன்றுபரமான்மாவா
யான்றவதுநீயென்றறி. (௨௫)

கருமமுதற்பத்தியொடுகாட்சியதாம்யோக
நிருமலஞானத்தினுயர்நீர்மை—பெரிதுரையா
யுற்றுணர்ந்துநிற்றலுணர்கருமமாதியவா
மற்றிவைதேர்மாட்சிமைஞானம். (௨௬)

வேதாகமங்கள்விளம்பும்பொருண்முடிவே
தோதாதுணர்த்தியருளுத்தமனே—யேதமிலாப்
பிம்பப்பிரதிபிம்பப்பினமுறைவேதாகமத்தின்
செம்பொருள்களொன்றெனவேதேர். (உஎ)

சுருதிக்கிசைந்தசுவானுபவசித்தி
யிருண்மைக்குறுமருந்தாமெந்தா—யருளாய்
பரோக்ஷமாய்நிச்சயித்துப்பார்த்ததுவாய்முன்னும்
பரோக்ஷமாய்ப்பாராதுபார். (உஅ)

எல்லாந்தானுகியிலகுஞ்சமாதிநிலை
நல்லார்பொல்லாருளத்தாநாயகனே—சொல்லாய்நீ
சத்தியஞானனந்தத்தன்மயமாயோவியம்போ
லத்துவிதமாயமர்தலாம். (உகூ)

எந்தவடைவாலியங்குகினுமெம்மானே
சந்ததமுநிற்குஞ்சகசமெது—தொந்தமதாய்
வாயுவுடனிகழ்ந்தும்வானடையாவாறதுபோ
லாயுமறிவாய்ப்பயிறலாம். (௩0)

குறைவுநிறைவற்றினிதுகொள்சாட்சாத்கார
முறையஃதேதெற்குணர்த்திமுன்றே—யிறையருளாற்
பெற்றேமெனவுணாயப்பேறவனையேசாரப்
பற்றறுதிபான்மைநிலையாம். (௩க)

குருசீடனென்றுகொளிற்றுவிதமன்றே
நிருபாதிகமெங்ஙனிற்றல்—புணாதீ
ரொளிகிரணம்பேரிரண்டாயொன்றிடினுமாங்கே
தெளியிடத்தொன்றுமாபோற்றேர். (௩உ)

இரண்டற்றென்றுயிருக்கவேதமென்னேஞானங்
திரண்டுருக்கொடேசிகனுந்தேவே—வெருண்டு
பழுதையிரவதனிற்பாம்பாயெல்லின்றல்
பொழுதினிரண்டாகுதலேபோன்ம். (௩௩)

துறந்தாற்பெறுவதன்றித்தூயசுகவாழ்வா
நிறைந்தபரிபூரணத்தினேர்மை—சிறந்துறுமோ
தற்காஞ்சுதந்தரத்தைத்தள்ளுறவல்லான்
மற்றுவதில்லைமதி. (௩௪)

சுதந்தரமற்றுலாஞ்சுகவாழ்வதேது
விதந்தெவையுமாஞானவித்தே—சுதந்தரமாய்
வவ்வியுனைக்கவரும்வாதனையெலாமாய்க்குந்
திவ்வியாதாரச்சிவம். (௬௫)

என்னிங்கிதுகாறுமிவ்வாறிருக்கவுநா
னின்னறரும்பவங்களெய்தியவே—தன்னிகரில்
லாநின்றனைமறந்ததாலாணவச்சிறையா
லூனின்றவாகமுற்றதோர். (௬௬)

இங்ஙனமென்றுய்ந்தவர்களெவ்வாறியங்குவர்கள்
சங்கையறத்தேற்றியருள்சற்குருவே—பங்கமுற
வெவ்வெவ்வகைவரினுமெட்டுணையுமேசலியா
தொவ்வுமொவாதென்றுமையாரோர்ந்து. (௬௭)

வினையானணைந்துவருமின்னலுறுவெம்மையினுன்
மனமோடுமாழ்காரோவையத்—தெனைத்தா
மனைத்திற்குஞ்சாட்சியதாயாநித்தன்போன்றுல்
கனத்தவிருளென்செயுமேகாண். (௬௮)

ஆண்டகையேவாழியடியேன்றனையாண்ட
மாண்டகுணக்குன்றமேவாழியரோ—காண்டகுநன்
மேனியேவாழிவிரகினெனைவிழுங்கு
ஞானகுருவேவாழிநன்கு.

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# இராகத்வேஷாதிநிரசனம்.

மாதரார்மயன்மலிதருராகமாழ்கிச்சேருழித்துக்கமற்றளவி
லேதமார்தருமிகபரங்களினுமெரியும்வாய்நரகிடைநனியிருத்து
மாதலாற்சுகமிலைப்பிணநெஞ்சேயரியமுத்திகாங்கையினைநீவேட்டங்
காதிசங்கரகுருபரனடிகளடைதியானந்தமணுகுதற்பொருட்டே. (௧)

தண்ணெனுதுளந்ததும்பிவெம்மையினுற்றகருமாறுகொண்முனிவினரலகில்
புண்மலிந்தபல்யோனியிற்புக்குப்புழுவெனுத்தவித்திடுவொன்றியம்பு
முண்மைதேர்ந்திலைபோலுமென்னெஞ்சேயுனைக்குமாற்றமொன்றுளததனைநீ
யெண்ணுமோர்கணத்தெழுபவந்துடைக்குமீசனைத்தொழூதேத்துதிவிரைந்தே

காமமாய்வருகதியுணராதுகபடமாயுறவாடிவண்பொருள்க
டோமெனுவுணர்ந்துறலகன்றவற்றைத்துன்னிவாழ்தலினெதுபயன்கண்டாய்
ஓமெனும்பதத்துட்பொருளாகியுணர்வதாயுயிராயுயிர்க்குயிரா
யாமிதல்லவென்றறைவதற்கரியவமலபோதவந்தணற்பணிநெஞ்சே.

குரோதமுற்றிருவினைவழியறியாக்குருடர்போம்வழிக்குறுகிநிற்பதனா
லிராவொடேபகலறுசுகநாட்டமெய்தலாமெனத்துணிந்தனைபோலுந்
தராதலத்திடையதனெறியணுகித்தறுகணீங்கின்றொனையரின்மையினா
லராவணிப்பரனடிமலர்பரவியடைதிநெஞ்சமேயறிவுறற்பொருட்டே.

உலோபமுற்றவருயர்நலமிழந்தவ்வும்பரிம்பரிற்கடையராய்நகுவ
திலாபமாயடைந்திடுகதைகேட்டதில்லைபோலுமங்குறுமதநெறியே
விலேபனஞ்செயாதெழுபவங்கருதிவிம்மிமேனிமெய்ப்பணிசுமந்தரிய
பலாபலன்கருதாதுநம்பரமன்பாதபங்கயார்ப்பிதஞ்செய்திநெஞ்சே.

ஆகபுந்தியாலறிவதையறியாதனந்தமாம்பரிச்சேதமேல்விரிவா
மோகமாயுடல்வருந்தினர்காதைமொழிந்தவாய்மையிங்குணர்ந்திலைபோலு
மேகநாயகனிணையடிபரவுமெண்ணமேபெரிதாகநெட்டுயிர்ப்பின்
மாகநாடருமதிக்கநின்மடமைமாற்றெனெஞ்சமேமாணுறற்பொருட்டே

விழைவொடேயுறும்வெறுப்பினின்றலகில்விதப்பூண்பொருள்வரவொடுதிரிவா
யழியுஞ்செல்வத்திலாஞ்செருக்கென்னேயடருமம்மதமாரிடத்துறவா
யொழிவிலாதுறைந்தையதெனவிருந்ததுணாத்திநெஞ்சமேயுளவிருளிரிய
வெழுந்தசோதியேநமதுயிர்பொருண்மற்றிருங்ட்சேபமென்றேத்துதிமதித்தே.

மற்சரத்தினான்மனம்பொறாதழிந்தமலினர்செய்தியைமறந்தனைகொல்லோ
வெச்சுகத்தினையடைந்தனையதனையெவர்பிடுங்கினரறிந்திலைபோலு
முச்சகத்தினுமுழுதுமாய்நிறைந்தமூர்த்திமாதவன்முனிவரர்வணங்கு
மச்சுதன்பரந்தாமனைவாழ்த்தியடைதியானந்தமரியவென்னெஞ்சே.

ஏழ்பவந்தமிலிழைத்தவையியல்பினிசைந்துமுன்னிலைபடர்க்கையின்வயத்தா
யூழ்வினைக்கிடமாய்வருமிடுக்கணொருமையாயனுபவிப்பதிங்கொழிந்து
சூழ்கவென்பிணிபிறர்க்கெனநயந்துசொல்லுதற்குறுமீரிஷையகற்றி
யாழ்கடற்றுயினாரணன்பாதமணுகிவாழ்த்துதியநகன்னெஞ்சே. (௯)

தன்னதாமுயிர்போலமன்னுயிர்கடழைக்கவெண்ணுமதொழியசூயையினாற்
பின்னமாய்ப்பெறும்பேறிழந்தழிந்துபிறந்துமாழ்குவதல்துமற்றுளதோ
கன்மவேதுசெய்வன்மையைவிடுத்துக்காரணற்பணிந்தருணிலைபடைத்து
மன்னுவாய்நெஞ்சேமாநிலந்துதிக்குமாட்சியிதலதிலையெனமதித்தே.

டம்பமென்செயுந்தாண்டவம்பயிலுந்தாதையோர்கிலனோதவமில்லாய்
நம்புவார்களோநல்லடியார்கணகைத்திடார்களோநாட்டினர்பரவு
மம்பரம்வளியனல்புனன்மண்ணாயட்டமூர்த்தமாயமர்தருமுக்க
ணெம்பிரான்றனைக்கூடிமெய்யடியரேவலைசெயவெண்ணுதிநெஞ்சே.

எங்கணும்புகழ்ந்தேத்திடவெதிரற்றியல்பதாய்ப்பரமானந்தத்தொன்றாய்த்
தங்கிவாழ்குனரிருக்கமற்றளவில்சங்கையோடுதாதான்மியமாகித்
துங்கபோதமதிழந்தனையந்தோதோன்றத்தர்ப்பமததன்வழிக்குறுகி
மங்கைபாகனைமறந்தவென்னெஞ்சேமாற்றுவாயதைமணம்பெறுமாறே

அகங்கரத்தினாலழிந்தவர்கோடியாமிந்நானிலத்தளவிடவெனவே
சுகங்கொள்பூரணர்சொற்றதைத்திறம்பிச்சுருதிவாய்மையுமறந்தனையந்தோ
நகந்தருங்கொடிநாயகன்பாதநச்சியன்னவனருட்கடலாடிச்
சகஞ்சிரித்திடவுண்டுடுத்துழலுஞ்சழக்கைமாற்றுதிதவனமார்நெஞ்சே

மாண்டுபோவதைமறந்துநீடுலகவாழ்வைமெய்யெனுமதியினர்துணிவால்
வேண்டும்பல்பொருட்கிளைஞரைத்துறந்துவிண்மணாதியநரசவெங்கதிகள்
தாண்டிலாரெனுந்தாபதருரையைத்தாண்டிநிற்பதிற்பயனெதுகண்டா
யாண்டகாயெனவனுதினம்பரவியஞ்செழுத்துரைத்தமர்தியென்னெஞ்சே

காலமாதியற்பமூநிலையின்றிக்கழியுமாற்றநன்குணர்ந்தமையதனாற்
றாலமாய்வதென்றெணித்துணுக்கெனவேதுன்னியஞ்சிநின்றரனடிப்போதைச்
சாலவேத்திநின்றருள்படைத்துய்ந்ததக்கசான்றவர்சரிதமோர்ந்திலையோ
கோலநெஞ்சமேகிஞ்சுகமொழியங்கோதைபங்கனைக்கூவிமன்னுதியே.

கோதினாமொழிகூறுதல்கேட்டல்குணமிலாவற்றைக்கொள்ளைகொண்டுனுத
லாதியாலவரவர்தடுமாறியாருயிர்க்குறுதுணையிலராத
னீதியாலுணர்ந்தாய்ந்திலைகொல்லோநிமலன்மெய்ம்மொழிநினைந்தருள்பெறவே
சாதனிச்சயமெனநினைந்துருகிச்சரண்புகுந்துறுசழக்கொழிநெஞ்சே.

சாமுடற்பொருணிலங்களுநமவைதாமெனப்படும்பாடவைதெரியா
ராமவர்க்கிதம்புரிந்தவர்சதமாயலக்கணுற்றிடுமாமடநெஞ்சே
சோமசேகரனம்பிதாமாதாதுதிகொள்கௌரியன்னவரடியவர்க
ணீமநந்தமனோநயந்தணுகிநேசமார்திநிண்ணயநிலையோர்ந்தே. (கஎ)

காளையாம்பருவமதெலாங்கழித்துக்கடையிற்காண்குதுமென்றுநீகருதே
னாளையென்பதுநம்முடைநாளோநமன்றனாளெனநாடிலைபோலும்
வேளையன்றெரித்தருண்மகதேவவித்தகன்றனைவேயினைநிகர்த்த
தோளிபங்கனைத்தொழுதருள்படைக்குந்துணிபதொன்றிநின்றிடுதிநன்னெஞ்சே.

காணுங்கண்ணிணைதமையுணராதுகாட்சியாயயலறிவதுபோல
வாணவத்தினலறிந்தனைபோலுமாரவாரஞ்செய்தலமருநெஞ்சே
மாணதோமடமிறந்ததோவதுவாய்மன்னிநய்கொலோமயலறநூறி
வேணியான்பதவிமாமலரணுகிவிவிக்தத்தொன்றுதிவீணவாவொழிந்தே
பத்தியும்வயிராக்கியமின்றிப்பரிதவிப்பதிற்பயனெதுகண்டாய்
சத்திதென்றுணர்ந்தகந்தைகளொருவிச்சலனமின்றியேகாக்ரசித்தமதூற்
றுத்தியாலனுபவத்தினலொன்றுயோங்குமாரியனுதவுமோர்மொழியா
லத்திபாதியின்பமதுருவாகியமைதிபெற்றிடவாய்தியென்னெஞ்சே.

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநமஃ

# சங்கற்பநிராகரணம்.

## ஆதிசங்கற்பம்.

சங்கரதேசிகன்றன் - செய்ய - தாடலைமீதுவைத்தே
புங்கமாயன்ஞேன்சொலும்புத்தியிற்சில
புகல்கேனுடன்பிறந்தீர். (க)

ஒன்றுயிருந்தநாமுன் - னுடைந் - தூழிகணீத்தோம்பின்னும்
என்றுமொருபடித்தாகவிசைந்திட
வெண்ணுவிடினன்மையோ. (உ)

நான்பிறவொன்றியம்பி - வாளா - நாட்கழித்தாலுவந்தே
யூன்கடத்துள்ளேயுலாவுமதிசய
வுண்மைதேர்ந்துய்குதிரோ. (ங)

தாங்குமுயிர்க்குயிராய் - மன்னித் - தழைக்குந்தயாபரனை
வீங்குமுடலம்விழுமுனநேடி
விழைந்தணைவீர்விரைந்தே. (ச)

## வித்யாசங்கற்பம்.

சொல்லாற்பசியறுமோ - கூறுஞ் - சொற்பொருடுய்க்காவிடின்
நல்லோருதவுநூனுத்தழும்பேற
நவிலுந்திறமுடையீர். (ரு)

மாத்திரையொன்றினுள்ளே - மாயை - மாசாலஞ்செய்யுந்தன்மை
சாத்திரமோதிச்சாமர்த்தியங்காட்டுஞ்
சழக்கினிற்காண்பெளிதோ. (சு)

கற்றவறிவுகொண்டு - பல - கற்பிதம்பேசவல்லீர்
நற்றுணையாமோநலந்தருமோபவ
நாசமாமோநவில்வீர். (எ)

காசைக்குறித்தேவையுங் - கற்றுக் - கபடநடஞ்செய்புல்லீர்
கோசக்குகையிற்குடிபுகுநீர்மை
குறியாதிருப்பதென்னே. (அ)

சொற்பொருளிதென்வோர்ந் - தவர்போற் - றேலாவழக்குரைப்பீர்
கற்றவராரோவவர்க்கென்னபேரோ
காணுதவர்நீரோகற்றோர். (கூ)

கோடானுகோடிநூல்கள் - பார்த்துக் - குழறிக்கூத்தாடவல்லீர்
நாடோறுநீவிர்நடுங்கவுணின்று
நடம்பயில்வாரெவரோ. (கம)

சொல்லின்மெய்பொய்யெனவே - துன்னுஞ் - சூட்சியறிவதிறந்
தெல்லையினூல்களைக்கற்றென்கல்லாமலென்
னேகாந்தவாழ்வெய்துமோ. (கக)

கற்கவும்வேண்டுங்கல்லீர் - ஐயன் - கழன்மலர்வாழ்த்திநின்றே
யுற்பவநாசமுறச்செய்மோக
வுபாதியுட்டோயாமலே. (கஉ)

வேதமுடிவாம்வித்தை - தானாய் - மேவினோன்வித்வானென்றே
மாதவத்தோர்கண்மகிழ்ந்துரைத்தாருண்
மார்க்கமீதாகுங்கற்பீர். (கந)

## போகசங்கற்பம்.

பாராதியாளவெண்ணும் - பொய்த்த - பாழ்மயலைத்துறந்தே
யோருமெந்தையிணைமலர்ப்பாத
மிறைஞ்சுமினேத்தநின்றே. (கச)

பெண்டுபிள்ளைபண்டங்க - ளும்மைப் - பேயங்கமாக்குவைதக்
கண்டுமிருந்துங்களித்துத்திரிந்தாற்
கடைக்குத்துணையாவரோ. (கரு)

தேகபோகார்த்தமதாய்த் - தீய - செய்கைக்குடன்படுவீர்
வாகாமிருத்துவந்தேகொடுபோகும்
வகைக்கென்வகையுடையீர். (கசா)

உறவொடுறுபகையா - யுறு - மும்போல்வாரைப்பிடித்தென்
உறவொடுறுபகையாயுமிற்போர்செ
யுளுத்தனைக்காண்குதிரோ. (௧௭)

பொய்யிற்பிறந்துழன்று - நனி - பொய்க்கோலமேபுனைவி
னையோவுமக்குமருளார்ந்தமேனிய
னருள்வருமோவறையீர். (௧௮)

## மதசங்கற்பம்.

விதுவாகும்விஷ்ணுவெனின் - மேலாம் - வியாபகப்பொருளதுவாந்
துதிபுரிசிவமெனிற்றூயவான்மாவென்று
சொல்லுவர்தொல்லைநல்லோர். (௧௯)

அகம்பிரமாஸ்மியென்றே - மறை - யறையுமாவாக்கியத்துந்
தருஞானவ்யாபகவான்மாவேபிரமமாய்த்
தழைத்தோங்குமாறுணரீர். (௨0)

ஏதொன்றெய்தற்பாலதோ - வதற் - கேலும்வண்ணம்பயிலா
தீதாமிதுவலவென்றெதிரிட்டெதி
ரேகத்திடைவதென்னே. (௨௧)

காரணமாய்த்தவழும் - பரன் - கலந்தெங்குமாகிநிற்கக்
கோரணிமாயைக்கூத்தாடிக்குழறும்பேய்க்
கூத்தர்கணீவிர்யாரே. (௨௨)

ஏதொருமூர்த்தந்தன்னி - னிச்சை - யிசைந்ததோவஃதெங்குமாஞ்
சோதியென்னீரோவத்துவிதமுன்னீரோசொல்
குடங்கவிழ்நீரோசொல்லீர். (௨௩)

ஆதிநாயகனேயெல்லா - மாகி - யல்லவுமாவனென்னுப்
போதமுணரீர்புலம்புவீர்வீண்பொழு
தேபோக்குவீர்புகலீர். (௨௪)

நாமரூபங்களிலா - நடு - நாயகன்கோலமிஃ
தாமலவென்றறைவாரெவரோயள
வாயறியாதவரோ. (௨௫)

பாஷண்டவிஞ்சைகற்றுப் - பாவா - பாவம்பகர்ந்திடினுந்
தோஷவிகாரதுர்ப்போததுர்வாதங்கள்
தூரந்தொலைந்திடுமோ. (௨௬)

சமயஞ்சம்வாதமென்றுந் - -தானே - சாட்சியென்றுமுணரின்
அமைதிவருமானந்தந்தருந்தாஞ
யமருமோனமுறுமே. (உஎ)

## மோகசங்கற்பம்.

காயங்கிலேபெறவே - வறுங் - கற்பங்களுண்ணவல்லீர்
மாயக்குடிலேவளர்க்குஞ்சிறுரோ
மனப்பேய்விடாரோமல்கீர். (உஅ)

உட்புறஞேர்படித்தாய் - நின் - றுபசாந்தவாழ்வடையா
தட்டமாசித்தியடையுமதாலுமிங்
கமைதிபெற்ருராரந்தோ. (உகூ)

எல்லாமறியவல்லீ - ருமை - யேதென்றறிந்தீர்கொலோ
சொல்லீர்சுருதிக்கியைந்தவனுபவந்
தோய்ந்தவுத்தியினுணர்ந்தே. (௩0)

## விருத்தசங்கற்பம்.

சிறுமடங்கலெஞ - வெவருஞ் - சோரவணஞ்செய்வதாற்
பேறுபெற்றீரோபிறப்பறுத்தீரோ
பிணக்கொறுத்தீரோபேசீர். (௩க)

வாதங்களுளும்பேசி - நீர்தும் - வாஞுளவிணேயிழந்
தேதந்தரும்வன்பிசைக்குமதாலுமிங்
கேதடைந்திரிசையிர். (௩உ)

அகங்கரத்தின்பரமா - யற - மாதிதகர்வதிஞற்
சுகமதுற்றீரோசுசாதியற்றீரோ
சுபாவமிற்ருேசொல்விர்காள். (௩௩)

ஊன்மதுவுண்டுசுத்தாத் - வைத - முற்ருேமென்ருேலஞ்செய்விர்
மான்மழுவாளன்மகிழ்வனென்ருேமன
மாசகனிர்மையிற்ருே. (௩௪)

மருளுடைமாந்தர்மகிழ்ந் - தூன்கொள் - மார்க்கமநுசரித்தே
தெருளுடையேமிகத்தேர்ந்தேமென்றுண்ணுந்
தெரிவினர்நீவிர்யாரோ. (௩௫)

மூன்பெரியோர்சிலருன் - மது - மோந்துணற்கியாதெனிலீ
தென்னறியாமையக்காரணமோரீர்மற்
றியன்றவைசெய்குதிரோ. (௩௬)

எதிரிலாஞானங்கற்றே - மென்றே - யின்னல்கூர்மாதர்பின்போ
யதிவிகயத்தோடறிவுகுலைவ
ததீதவனுபவமோ. (௩௭)

சுகத்தைவிரும்புனர்போல் - ஜகச் - சும்மாடெனத்திரிந்தால்
அகர்த்தாவபோக்தாவெனுமங்கடுநிலை
யாம்வாழ்வனுகுதிரோ. (௩௮)

சிந்தையுடன்சொல்வேறும் - செய்கை - சேவையும்வேறெனவாம்
இந்தவிலக்கணமேவவலக்கணி
ரேதென்றிவனுரைப்பீர். (௩௯)

## தற்போதசங்கற்பம்.

அரன்மாலயனுகி - மற்று - மாங்குருபரனைக்கண்டாற்
கரதலமாகுமெலாமும்பொய்போகுமெய்
யாகுங்கண்டீர்கடையீர். (௪0)

தருமதானங்கள்செய்தென் - மிகு - தவமாசாரம்புரிந்தென்
குருபரனடியேகுடிகொண்டு
குலவுஞ்சொற்றேராவிடின். (௪௧)

எவரெவரெவ்வறத்தின் - மீளா - திருந்தீரோவாங்கதுகொண்
டவரவர்க்காம்வழியேதவைநேடி
யடைமின்குருபரமாய். (௪௨)

## நிஷித்தசங்கற்பம்.

ஆனந்தமோனந்தன்னி - னசைவற் - றதுவாகிநிற்கும்வரைத்
தானந்தவமுஞ்சடங்குகளியாவுந்
தவிர்வதலான்மற்றுண்டோ. (௪௩)

பூசைசபதபங்கள் - போக்கிப் - போனகமாதியுட்கொண்
டாசைவலையினனுர்தாதிவேடர்க்
ககப்படுமாறிலிரோ. (௪௪)

முழுப்பொருட்குள்ளுடையா - மூகர் - முன்னவன்கோவில்புகார்
விழுப்பொருளாகுமேலோர்களறங்கள்
விளங்கச்செய்வார்கள்விடார். (௪௫)

அரன்மாலமர்ந்திலகு - மேலா - மாலயங்களினுட்புகா
திரவும்பகலுமெணுமற்பொய்ம்மாத
ரிருப்புழிச்செல்வதென்னே. (௪௬)

வலம்வந்தான்சந்நிதி - வழு - வாமலருளடையா
தலமந்தவித்யாபுரமதில்சுற்றி
யடைந்ததெப்பயனறையீர். (௪௭)

## ஆச்சிரமசங்கற்பம்.

இல்லத்திருந்தேயாமும் - சுகித் - தேகாந்தமாவேமெனின்
அல்லும்பகலுமலைத்தழித்தாடல்செய்
யபிமானமாய்வுறுமோ. (௪௮)

சந்யசித்துப்பெறுவே - மென்று - சார்பகன்றேகிடினுந்
துன்னிருட்பாசந்துணிந்தவனென்றுசொல்
லாமற்றுறந்திடுமோ. (௪௯)

சடைமுடிதரிப்பதனுன் - மாயை - சார்ந்திவற்பயனிலையென்
றட்ராமற்போமோமெய்யானந்தமாமோ
வனுர்தாதிவேமோசொல்லீர். (௫0)

முண்டித்துத்தண்டந்தாங்கி - யொரு - மூலையுட்போய்ப்புகினுந்
தண்டிப்பானென்றுமாமோகப்பிசாசந்
தலைகாட்டாதோடிடுமோ. (௫௧)

காஷாயகௌபீனமும் - அற்றுக் - கான்முழையிற்புகினும்
ரோஷபாசமிலானென்றவித்தைமன
ரோகஞ்செய்யாமற்போமோ. (௫௨)

மந்திரம்பலவுங்கற்றே - யூத்தை - வாயான்மிணுமிணென்னிற்
றந்தமகந்தைதமைச்சபிப்பாரொன்று
தள்ளாடியோடிடுமோ. (௫௩)

வித்தகவேதவித்தோர் - தாங்கு - மெய்த்தவாங்கங்கடாங்கிற்
சத்தியமாமோசநங்கள்போமோசத்
சாதுக்கள்சபையேறுமோ. (௫௪)

பந்தமோட்சங்களெனும் - பிரமை - பரித்யசித்தகம்சிவமாய்ச்
சந்ததமோர்படித்தாமுபசாந்தமெய்ச்
சகசியொவணிருந்தென். (௫௫)

## அந்தசங்கற்பம்.

மானபிமானமின்றி - நம் - மவனுயிருந்துநம்மை
நானுவிதநயநகைசெய்தானேதென
நாடுவீரோனவில்கேன். (௫௬)

என்னகத்தொளிர்தேசிக - னருள்கூர்ந் - திசைத்தவண்ணம்புகன்
னன்னதுநன்றேவகர்த்தமதன்றே
வறியீரநாதியரோ. (கஎ)

ஸ்ரீமத்சங்கரபகவத் - பாதன் - சீரடித்தாமரையி
லாமகத்தாந்துகளுடையவல்லார்க்கக
லாததணுகாததுண்டோ. (கஅ)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநமஃ

# அஞ்சுநெறி.

எழுபவப்புணரியஞ்சேனிதமடமாதரஞ்சேன்
முழுதுமாய்நின்றசோதிமுதல்வனஞ்சங்கராரியன்
கழன்மலர்முடிகொளாதுகதியுளதயலென்றேங்கி
யழிகுவாரவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (க)

தாவுறுசியமஞ்சேன்சமர்நிலம்புகுதலஞ்சேன்
பாவினமெல்லாமோதும்பரிசின்வந்தடிமைகொள்ளுந்
தேவினிற்பொலியுஞ்சங்காரியன்சீர்த்தியோரா
வாவிதீரவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (உ)

வாதபித்தாதியஞ்சேன்மாயையொடவித்தையஞ்சே
னோதுவார்கேட்பார்தங்களுணர்வினுள்ளுணர்வாய்த்தங்கும்
போதநாயகனெங்கோன்பொற்புறுசரண்பொருமியேத்தா
வாதர்தாமவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ங)

இகலுடலவித்தையஞ்சேனின்னல்கூர்வாழ்க்கையஞ்சே
னகமுடனறிந்தார்போலுமாடல்கொண்டறிஞர்தம்மை
மிகைபடக்கூறியுள்ளம்வெதும்பிநீணரகிலாழ்ந்தங்
ககலுறாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ச)

கணைமலர்மதனையஞ்சேன்காலனார்தூதுமஞ்சே
னிணையறுசோதியெங்குமாகியவியல்புதேரா
துணர்விகந்துரைசெய்பேதமோதிநின்றெந்தைபாத
மணுகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (ரு)

விஞ்சுகோளரவுமஞ்சேன்வினையெலாம்வரினுமஞ்சேன்
கஞ்சன்மால்சிவனுய்நின்றகாரணகுருவைவாழ்த்தா
வஞ்சுமெய்யடியார்தம்மையரனெனக்காணலோடங்
கஞ்சிடாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௬)

வடிவுடைவாளுமஞ்சேன்மாநிலவேந்துமஞ்சேன்
பொடியணிவேணியான்றன்பொன்னடிகுழைந்துபோற்று
மடியர்மெய்யருளினேதுமரியநூலிகழ்ந்துதீமை
யடைதலாமவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௭)

நவைதருமாணமஞ்சேனள்ளிருளிடியுமஞ்சேன்
புவிபுகழ்வேதமோதும்பூசுரர்தம்மைநிந்தித்
தெவமடைந்தெதிரிலேமென்றெண்ணியுட்பொங்கிவாழு
மவலமாமவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௮)

மறம்லியுழுவையஞ்சேன்மதகரிவலியுமஞ்சேன்
கறைமிடற்றண்ணல்பாதங்கவர்ந்துளமாறிநிற்குந்
துறவினராசிகூறத்தொழுதுயிர்பிழைத்துவாழு
மறமிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௯)

நிமிர்சுடர்புனலுமஞ்சேனிலைசிதறிடினுமஞ்சே
னுமைமணவாளனுந்திபூத்தவனொருமைதோரா
திமையவர்வழுத்துஞானவியல்பினர்தம்மைநிந்தித்
தமைகுவாரவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௧0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# சங்கரானந்தமாலை.

புத்திசொல்லிப்புறம்புவிடாமலே
சித்தம்வைத்தருள்செய்தெனையாளுவாய்
மெய்த்தவத்தவர்மேதகுமன்புசெய்
நித்தசங்கரானந்தநிஜாத்மனே. (க)

அத்விதப்பேறனைத்தினுமிக்கதென்
றுத்திகொண்டுள்ளுடைந்துருகுமன்பர்
தத்தம்பூங்கழல்சாரும்வகைசெயாய்
சுத்தசங்கரானந்தசொரூபனே. (உ)

பெத்தமுத்திப்பிணக்கையொழித்திடாய்
வித்தகாவிகிதாவென்றுவிண்மனோர்
கத்திநின்றுகதறித்தொழுதெழும்
புத்தசங்கரானந்தப்பிரபோதனே. (ங)

யுத்தியின்றியுணர்வின்றியுன்பத
பத்தியின்றிப்பரிதவித்தானன்றோ
புத்திமுத்திப்பிரதாதாரப்பொங்கருண்
முத்தசங்கரானந்தமுதல்வனே. (ச)

கத்துறுஞ்சட்சமயாதிகற்பனை
பித்ததென்றுபிரம்மோகமதாயிடு
மத்திறமடியேற்கருள்செய்தியால்
சத்தியசங்கரானந்தசரண்யனே. (ரு)

திரமதாகித்திரிசியமின்றிய
பிரமானந்தப்பெருக்கேவடிவமாம்
வரமளித்தியென்வாழ்முதற்றேசிகப்
பரமசங்கரானந்தபகவனே. (சு)

அங்கமாதியனைத்திற்குஞ்சாட்சியாய்த்
துங்கபாதந்துதிக்கவும்வாய்க்குமோ
வெங்குமாகியிலகுஞ்சகத்குரு
புங்கவாசங்கரானந்தபூர்னனே. (எ)

வீங்குமாகம்விழுமுனமென்றனைத்
தாங்குமாறுந்தகைமைநினக்கன்றி
யீங்கின்றென்பதறிந்துமெனைவிட்டாற்
பாங்குண்டோசங்கரானந்தப்பைம்பொனே. (அ)

புத்தியினன்பொய்யன்மிகுபுன்மையன்
மத்தனென்றுமதியர்தருக்கழத்
தொத்தவெல்லாமுவந்தளித்தாளுவா
யத்தசங்கரானந்தவதிபனே. (௯)

முப்பொருண்முடிவாகுமோனமிர்தங்
கைப்பிலாமற்கடையேனுமுண்பனோ
வைப்பதாகிவானுதிமலிதரு
மப்பனேசங்கரானந்தவண்ணலே. (க0)

தெருளதோன்றியசிந்தையினுள்வெளிப்
பொருளதென்றுபுகழ்ந்திடுவார்கடம்
மருளதின்றிமறைந்திடுமாறுவந்
தருள்செய்வாய்சங்கரானந்தாதிகனே. (கக)

ஓதியோர்க்துமுறுபயனென்றிடா
தேதமேசெபுமேழைக்குளேழையாம்
பேதையேன்செய்பிழைபொறுத்தாளுவா
யாதியேசங்கரானந்தாதுலனே. (கஉ)

அரணதாமருளாலாதரித்துப்புன்
கரணவாதனையாவுங்கழற்றிடுந்
தருணம்வந்துதடுத்தாள்வதென்றுகாண்
புரணசங்கரானந்தபுனிதனே. (கங)

ஏகமேவாத்வைதம்பிரம்மமென்றிடும்
போகவாழ்வின்புலம்வெளியாக்குவாய்
தேகபோகஞ்சினந்துயிர்வாழ்பவர்
பாகமாஞ்சங்கரானந்தபண்பனே. (கச)

எல்லையின்றியிணையின்றியேகமா
யல்லையுண்டபகலதுவாகுநின்
றொல்லைநல்லடியார்த்தொழவேயருள்
வல்லவாசங்கரானந்தவள்ளலே. (கரு)

கமலநான்முகன்கண்ணன்முக்கண்ணனென்
றமலமூவடிவாகியறைதருஞ்
சமயிகட்காந்தகுகதிதந்தனை
நிமலசங்கரானந்தநிர்த்தொந்தனே. (கசு)

நிர்மோகாதனநிர்விஷயானந்த
நிர்ப்பின்னாத்விதநிட்டையுங்கூடுமோ
நிர்ப்பீஜாத்மகநிர்க்குணநிர்ச்சல
நிர்ம்மாயாசங்கரானந்தநீதனே. (கஎ)

உட்புறம்போர்படித்தாயுலாவிடு
நிட்பிரபஞ்சநிகமாந்தராசிய
கட்புலனுறுகாரணரூபகப்
பெட்பருள்சங்கரானந்தப்பெற்றியே. (கஅ)

ஆராமைத்திறத்தார்த்தார்த்தலறிலேன்
பேராநாட்டம்வைத்துன்பதம்பேணிலேன்
பாராயென்முகமென்னிற்பாலிப்பையோ
சீரார்சங்கரானந்தசிவோகமே. (ககூ)

மிகுமருட்செல்வ்வெற்பெனக்கேட்டுன்பாற்
புகுவேனைப்புரந்தாளல்புதுமைத்தோ
வகல்கநீயென்றதட்டியகற்றுதல்
தகுமோசங்கரானந்ததயாளுவே. (உ0)

தனையுணர்ந்துததாகாரமாகிநல்
லினமதொன்றியெழிற்பணிபூண்டிடா
தெனைமதித்தேயிருப்பேனுமுய்வனோ
முனைவனேசங்கரானந்தமூர்த்தியே. (உக)

கூட்டமற்றுக்குறிகுணமற்றேக
நாட்டம்வைத்துனைநானணுகிற்பனோ
வீட்டின்பத்தினைவேதாந்ததீபத்தாற்
காட்டுஞ்சங்கரானந்தவொண்காட்சியே. (உஉ)

சொப்பிரகாசசுயஞ்சைதன்யப்பொரு
ளிப்பவத்தோடியைந்தொன்றதாகியான்
றப்புமாறுந்தயைசெயக்காண்பனோ
துப்பனேசங்கரானந்தத்தோன்றலே. (உங)

நீநானென்னுங்கிஷிதத்துளாமெனை
மோனாகாரத்துண்மூடவுங்காண்பனோ
ஞானாகாரநறுஞ்சுவையாகிய
தேனார்சங்கரானந்தச்செவ்வாயனே. (உச)

சுகத்தின்மேல்வருதுன்பமதோர்கிலா
திகத்தையேசதமென்றுதிரிவனோ
வகர்த்தனாகியனைத்தும்புரிதரு
மகத்வசங்கரானந்தமகிபனே. (உரு)

அங்கணோக்கம்வைத்தாதரியாவிடி
னெங்குமோடியிளைத்திவண்வந்தவென்
சங்கைதீர்ந்துசலிப்பறவாழ்வனோ
பொங்குறுஞ்சங்கரானந்தபுண்யனே. (உசு)

உய்யுநன்றியுதவெமதாரிய
வையநின்னையணுகும்வழிதனி
னையமியாவுமறவடியேற்கருள்
துய்யனேசங்கரானந்தசோதியே. (உஎ)

பொய்ப்பவத்தின்புணர்ச்சிகண்மாற்றுபு
செப்பருந்தவச்சீர்மைவந்தெய்துபு
கைப்படுங்கனிபோலுனைக்காண்பனோ
வொப்பில்சங்கரானந்தவொருவனே. (உஅ)

பாழ்த்தசிந்தைபயின்மறவாசையு
ளாழ்த்திடாமலடிநிழற்கீழ்தனிற்
றாழ்த்துவாயுனைத்தாழ்பவர்க்கேவலாய்
வாழ்த்துவாய்சங்கரானந்தவாரியே. (உகூ)

இல்லாமாயைக்கிதஞ்செய்கிலேனினி
யெல்லாநின்னருட்கென்றிழைப்பேனென்சொல்
செல்லாதென்னிற்சிறியேனுயிர்தப்பி
நில்லேன்சங்கரானந்தநிரீஹனே. (௩0)

விஞ்சுகாமவெகுளிமயக்கினாற்
றஞ்சமின்றித்தள்ளாடுந்தமியனே
னெஞ்சகந்தவெல்லாநீயறிகுவா
யஞ்சினேன்சங்கரானந்தாகண்டனே. (௩க)

உள்ளத்தொன்றுமுனையுணராமலே
கள்ளமாயையினான்மெய்கலங்கினேன்
விள்ளொணாவிபுவாயுண்மிளிர்தரு
மொள்ளியோய்சங்கரானந்தோங்காரனே. (௩௨)

மறையினுச்சியுமாதவருள்ளமு
மிறைவநீயிருந்தியாவும்விதித்திடப்
பொறைமிகும்பொனிற்பூவினிற்கோவிலா
மறவசங்கரானந்தவசங்கனே. (௩௩)

தபமதுற்றிடுந்தக்கவர்சார்பெனுஞ்
சபையினாததயாபரமூர்த்தியே
யுபயபாதமென்னுச்சிதந்தானாவா
யப்பயஞ்சங்கரானந்தவகுணனே. (௩௪)

அந்தோவிந்நாள்வரையறியாமையாற்
பந்தபாசப்பழமைதனிற்பதிந்
திந்திரசாலமிழைத்தவாறென்சொல்கேன்
றந்தையேசங்கரானந்தசத்வனே. (௩௫)

ஊழ்வலிப்பகையாகியுறுஞ்சுமை
வீழுமாறுவிளைந்துவந்தானாவாய்
தாழுமன்பர்தலைக்கணிபோன்மெனா
வாழுஞ்சங்கரானந்தமாணிக்கமே. (௩௬)

கன்மனத்திற்கடைப்படுநாயினேன்
றன்மைநோக்கியுந்தாண்மலர்ப்போதினை
வன்மையின்றிவழங்கினைஞானமா
நன்மையார்சங்கரானந்தநாதனே. (௩௭)

சோகமோகச்சுழற்சிக்கிடமதா
மாகமூன்றுமவத்தைகண்மூன்றுடன்
போகபோக்கியப்போக்குறலென்றுகா
ணேகனேசங்கரானந்தவெந்தையே. (௩௮)

அல்லோலஞ்செய்யவகுணப்பல்கிளைப்
புல்லோர்தம்மைப்பொருந்தியவீணாசை
யெல்லாமாய்விளைப்பறவெண்ணினேன்
புல்லாய்சங்கரானந்தப்பொற்பாதனே. (௩௯)

வாக்கிறந்தொளிர்வாசாமகோசர
மாக்கினுற்குறையாமோவருணிதிப்
பாக்கியஞ்செய்பழவடியாருண்டு
தேக்கிடுஞ்சங்கரானந்தத்தேறலே. (௪௰)

சீவனீசன்செறிசகமாயையற்
றேவுநெஞ்சமுணாயுணர்வற்றரும்
பாவனாதீதப்பான்மைவந்தெய்துமோ
தேவனேசங்கரானந்தச்சீர்த்தியே. (௪௧)

மூன்றுலோகத்துமும்முதற்றேவுநீ
சான்றுநீசச்சிதானந்தப்பேறுநீ
யீன்றவன்னையுநீயென்பிதாவுநீ
பூன்றசங்கரானந்தபூதாத்மனே. (௪௨)

உருவநாமமுருப்பரமாத்வித
சருவகாரணதற்பரசிற்பர
சுருதியுத்தியனுபவச்சூட்சியாய்
மருவுவாய்சங்கரானந்தமாண்பனே. (௪௩)

போற்றிநின்றுபுலம்பியுன்பொன்னடி
யேற்றமாணறியாச்சிறியேனையுந்
தேற்றுவாய்மிடிதீர்தருகற்பகத்
தோற்றமாஞ்சங்கரானந்ததுல்யனே. (௪௪)

பேரின்பச்சுதைநல்கும்பெருமநற்
றருளாநின்புயங்கட்டழுவுதற்
கோருபாயமுணாசெயற்கோர்தியோ
வாரருட்சங்கரானந்தாத்வைதனே. (௪௫)

செயசெயென்றன்பர்திக்விஜயஞ்சொல
வியனுலகின்வியாபித்துயிர்களி
னயர்வறுத்தடிசேரவளித்தியால்
நயமிகுஞ்சங்கரானந்தநம்பனே. (௪௬)

எல்லையில்பரவேகவெளியதாய்ச்
சொல்லிறந்தசுகாரம்பமோனமா
யல்லையுண்டறிவாகும்பகலதாய்
மல்குவாய்சங்கரானந்தமானுவே. (௪௭)

மூலமேயெனமுன்வந்ததெய்வமே
யாலமுண்டவருட்செம்பொற்குன்றமே
யோலமிட்டலறித்தொழுமெற்குருக்
கோலமென்சங்கரானந்தக்கூத்தனே. (சஅ)

நீயெலாமெனநிற்கவுமீதெனே
பேயனேற்கிரங்கிற்கைபிடிப்பவ
ராயுங்காலுளரோமற்றறிகிலேன்
றூயகாசங்கரானந்ததத்வனே. (சகூ)

பாரார்பல்லுயிர்மேயபகுதியை
மேராமென்றறவேபரிக்கும்விழுச்
சீராஞானத்திறலெற்களித்தனின்
பாரமேசங்கரானந்தபாக்கியமே. (ரு0)

எந்தவானந்தலேசத்தினுலெலாஞ்
சந்தமாய்மகிழ்வெய்தித்தழைத்திடு
மந்தவானந்தமேவடிவாகினுய்
சந்தமார்சங்கரானந்தத்தாணுவே. (ருக)

முமலமும்போய்மோகாதிகளென்றிடுந்
திமிரமும்போய்த்திகழ்தருந்தேயசார்
சமதமாதிகளாகுந்தவாங்கமு
மமருமோசங்கரானந்தானந்தனே. (ருஉ)

மறந்தும்பாசமயலளற்றுறென்றிடா
துறைந்தையாய்மனதுன்னடிதோய்தருந்
திறந்தராமையதேதருள்செய்திடாய்
நிறங்கொள்சங்கரானந்தநிர்ச்சிந்தனே. (ருங)

உளங்கொளின்பவுறுதிப்பொருளெனும்
வளங்கொள்போதம்வழங்குவதென்றுகாண்
களங்கமாற்றுங்கவினுடைக்காட்சியாய்
விளங்குஞ்சங்கரானந்தவிமலனே. (ருச)

வேர்க்கநின்பணிமெய்வருந்திச்செயா
தார்க்குமுண்டோர்தனிச்சின்மயானந்த
மார்க்கமென்றிடும்வாய்மைகாணேனேயுஞ்
சேர்க்குஞ்சங்கரானந்தசிதாத்மனே. (ருரு)

உளறுவேனையுமோர்பொருளாவெணித்
தளர்வுறுமற்றதாகாரமாகவே
யொளிருமுன்னடிப்போதளித்தாயருள்
கிளருஞ்சங்கரானந்தகெம்பீரனே. (ருசு)

ஓடாதோடிபுணவிற்கலைவுற்றே
தேடாதுன்னைத்திமிர்ப்புண்டிருந்தவென்
கேடாந்தன்மைகிளக்கிற்கொடியதாம்
பீடார்சங்கரானந்தப்பிரதாபனே. (ருஎ)

கணத்தின்மாயைகபடநடஞ்செயுங்
குணத்திற்குள்ளாயக்கொள்கைக்கிசையவே
யெணத்தகாதவெலாமெண்ணினேனெலா
மூணர்த்துஞ்சங்கரானந்தவுதாரனே. (ருஅ)

நம்புமென்னைநயஞ்செயினென்கொலோ
வம்பாஞ்செறிகாலனலப்புமண்
ணிம்பரும்பரொவற்றுளுமேகமாம்
பிம்பசங்கரானந்தப்பிரகாசனே. (ருகூ)

உலகெலாஞ்செய்யுயர்தவமாமென
வலகிலாப்பரமானந்தலீலைசெய்
தெலையிலாக்கலையேலவியற்றுவாய்
குலவுஞ்சங்கரானந்தகுணாளனே. (சு0)

ஊன்மயப்பிண்டமாமிவ்வுடலினை
யானென்றுன்னியடாதவெலாஞ்செய்தேன்
கோனேநின்னருளாலுனைக்கூடவு
மானேன்சங்கரானந்தவனந்தனே. (சுக)

அண்ணிதாயிருந்தாதரியாமலே
பெண்ணொடாணலியன்றிப்பிறவுமாய்
நண்ணிமாழ்கிநலிவுறச்செய்ததென்
வண்ணசங்கரானந்தமகேசனே. (சுஉ)

என்னையேநாளுமெண்ணுமறிவின்றிப்
பொன்முதன்முப்பொருளாகவெண்ணியே
சின்னபின்னமதாய்ச்சிதையாதரு
ளென்னையேசங்கரானந்தாகாசனே. (சுங)

வாதிபாவணம்வாய்புதையாவருட்
போதபோனகம்பூர்த்திசெய்தாருவாய்
நீதிசேருநிருவிகற்பாங்கனே
மேதகுஞ்சங்கரானந்தவிஜயனே. (சுச)

கதியாமேல்கீழ்நடுவெனுங்கன்மத்தின்
விதியான்வெல்லப்படாதவினையெலா
முதிர்வாஞானமதான்முசித்தாயெதி
பதியாஞ்சங்கரானந்தபராத்மனே. (சுரு)

நண்ணுநாற்கதிக்குண்ணலமொன்றிலாப்
புண்மலிந்தபல்யோனிபுகாநெறி
யெண்ணுமாறெனெஞ்சேழ்மைதபுதியோ
வுண்மையார்சங்கரானந்தோத்யுக்தனே. (சுசு)

இழிவதாகியியானெனதாய்மிகப்
பழகும்வாதனையாவும்பாழாகவே
தொழுநின்றொண்டர்தந்தொண்டரிற்கூட்டிடா
யழகுறுஞ்சங்கரானந்தவாப்தனே. (சுஎ)

தொடரும்வெம்பவந்தூரத்தகலவு
மிடரொலாம்பறந்தோடவுமேதமார்
மடனிருந்திவ்வறியன்கொண்டாடவு
மடர்திசங்கரானந்தாதிட்டானனே. (சுஅ)

இகலார்நெஞ்சத்திதாகிதமெய்துறப்
புகலேன்வேறோர்பொருளுளதாயருண்
முகிலேயென்னைமுனிந்திங்ககற்றினு
மகலேன்சங்கரானந்தவதிர்ஸ்யனே. (சுகூ)

படரும்பூதபௌதிகவுடற்பற்றின்றித்
தொடருமெய்த்தவர்தோய்தருமுன்வினை
யடராவண்ணமருள்புரிதேவநீ
சுடராம்சங்கரானந்தசுசீலனே. (எ0)

பழமறைத்துணிவாகும்பரிசினைப்
பழுதுறும்பாவியேற்கும்பாலிப்பையோ
முழுவதுங்கடந்தெல்லாமுடிவிலே
விழுங்குஞ்சங்கரானந்தவினோதனே. (எக)

பேசுஞ்சொல்லிற்பிழைகண்டகொள்கையோ
வேசுவார்களென்றேவெண்ணிருந்தவ
ராசிகூர்ந்தருளாதமைவுற்றனே
மாசிலாச்சங்கரானந்தமாட்சியே. (எஉ)

கோசமைந்துட்குடிபுகுநாண்முதல்
வாசமார்தரும்வண்சரணம்பெறு
நேசமொன்றுநிகழ்த்திலனாயினும்
பேசிடாய்சங்கரானந்தாபேதனே. (எங)

எண்ணமெல்லாமீடேறுவதென்றுகா
ணுண்ணிவந்தொளிரோவியமேயுயர்
விண்ணவர்க்கிறையேவேதவித்தேயென்
கண்ணேசங்கரானந்தககனமே. (எச)

தருமதானந்தபசப்மாதிக
ருரிமையாய்ச்செயுபாயமதேனும்யான்
றெரிகிலேன்சிவத்தன்மைமிகுதியி
னருவசங்கரானந்தவசலனே. (எரு)

மரணத்தின்முன்மலினமெலாந்துடைத்
திருணிற்காமலிரியவெழுதரு
மருணனைப்போலாமாறருள்புரிதியோ
சரணம்சங்கரானந்தசத்பாவமே. (எசு)

அபரிச்சின்னத்வவன்பர்பவப்பிணி
தபுதல்செய்தனைசத்தியக்கியானனந்த
சபளப்பிரம்மசதாபந்ததூரமா
நிபுணசங்கரானந்தநிர்மோகனே. (எஎ)

நேரதாயென்னினைவின்படிக்கெலாஞ்
சீரருட்கண்மலர்திறவாவிடி
னாவாரத்தினைவதுண்டோசதா
காரசங்கரானந்தகைவல்யனே. (எஅ)

பராமுகமாயிற்பதிதன்பொருந்திடும்
பிராரத்வத்தின்பிணக்கிங்கொழியுமோ
நிராதாரத்தினிலையுணர்ந்தோர்தொழும்
புராதனச்சங்கரானந்தபோற்றியே. (எகூ)

அவ்யக்தத்துளழுந்தியநாட்டொட்டுன்
றிவ்யபாததெரிசனமற்றதாற்
கவ்வுமாயைகழலச்சபித்திடா
யெவ்வமில்சங்கரானந்தவிருடியே. (அ0)

கருமமாதிகழற்சியிலாகின்ற
பரமதென்னுட்பதியவருள்செயா
யிருமைமார்க்கத்திறைவவெலாமருள்
பிரமனும்சங்கரானந்தாபின்னனே. (அக)

துட்டவாதனேயின்றிச்சொரூபமா
நிட்டைநாளுநிலைபெறக்காப்பாயுத்
கிருஷ்டமாகியுயர்ந்தகன்றுழ்ந்திடும்
விஷ்ணுவாம்சங்கரானந்தவியாப்பனே. (அஉ)

தவமதொன்றித்தனியாகிநின்றிட
வவவென்னேதமகலவரித்திடாய்
கவையிலாநலனுளும்பயந்திடுஞ்
சிவமாம்சங்கரானந்தசின்மாத்திரனே. (அங)

தன்னேரற்றதனிமுதலாவதா
லென்னுலோதுமியல்புளதோகினே
யுன்னுநிற்குமாயோகவமுதுநல்
கன்னேசங்கரானந்தாவதாரனே. (அச)

கரவடஞ்செயுங்கற்பனேமாய்வுற
விரவொடேபகலின்றிவிலகியான்
பரவசப்படும்பாக்கியமென்றுகாண்
குரவசங்கரானந்தக்கொழுநனே. (அரு)

பிரியமோதப்பிரமோதமெலாஞ்செயற்
கரியவற்றுளழுந்தவருள்செயாய்
பெரியர்போற்றும்பிரானேபிரிவறு
துரியசங்கரானந்தச்சுடர்க்குன்றே. (அசு)

கற்குஞ்சொல்லிற்கபடமுண்டாயினு
முற்றுமோர்ந்தருண்முன்னவனுகுநீ
மற்றதாகமதித்திடனீதியோ
வுற்றவாசங்கரானந்தோத்தூளனே. (அஎ)

நீணுணீத்தவநீதனிங்கேனும்யான்
சேண்மனோர்புகழ்தேநினையன்றிமெய்
காணேனின்றன்கழலன்றிவேறொன்றைப்
பேணேன்சங்கரானந்தப்பிரசண்டனே. (அஅ)

உன்னலோடுளையாடலுன்பாலதாய்ப்
பன்னிநாளும்பயனுறச்செய்தியேல்
மின்னறன்னிலேதன்னினும்பொய்ம்மெயின்
மன்னேன்சங்கரானந்தவைபோகனே. (அகூ)

எவ்விதத்துமென்னேழ்மைதவிர்த்துநின்
செவ்விதாந்திறத்தேசின்மிளிர்தர
வவ்வுமாறருள்வைப்பருள்செய்வையோ
தெய்வசங்கரானந்தசித்தாந்தனே. (கூ0)

பேதையென்றும்பிறந்தனமென்றுமுன்
வாதையுண்மதிமாழ்குமெம்போலிய
ரோதும்பொன்னடியொன்றவருள்செய்வாய்
கோதில்சங்கரானந்தகுணாட்யனே. (கூக)

பண்டைமெய்ப்பொருளாம்பரமார்த்தத்தை
விண்டநாயடியேன்வினைதீர்தரத்
தொண்டர்தந்தொண்டனாகத்திருவுளங்
கொண்டிடாய்சங்கரானந்தக்கொண்டலே. (கூ௨)

எளிதினன்பரிடுக்கணிரிந்துளங்
குளிருமாறருள்செய்யுநின்கொள்கையை
யளவிடாமறையோதிடவாய்ந்தன
னெளியன்சங்கரானந்தவேதீந்திரனே. (கூ௩)

ஆனந்தந்தலைக்கொண்டனுர்தாதியற்
றீனமாதியிலாவணமெய்திடு
மோனவாழ்வின்முடிவுறுமாறருள்
ஞானசங்கரானந்தநாதாந்தனே. (கூச)

மானமோகமயலினைப்பாறிட
மானவென்றனயர்வகல்வானரு
ளனரட்சகனேசித்களாதீத
தானசங்கரானந்தசமர்த்தனே. (கூ௫)

மடமைதந்துமகானந்தமாற்றிடு
மிடையினுடுமிலாவிருண்மாயைதன்
புடைபெயர்ந்தகல்வானருள்பூத்திடா
யடரும்சங்கரானந்தாவதானனே. (௯௬)

தேகிதேகத்திமிரமிரிதர
வேகமாமெழிலெய்தும்பரானந்த
மாகுணாலயனேயுளமன்னிடா
யாகும்சங்கரானந்தாபரோக்ஷனே. (௯௭)

எண்டிசாதியிடைமேல்கீழெங்கணுங்
கண்டிதாகண்டிதானந்தமார்கதி
யண்டியானறவாழவருள்செயாய்
பண்டிதாசங்கரானந்தபாஷ்யனே. (௯௮)

மூண்டவல்வினைமோகமிகுதியின்
வேண்டுமின்பவிழைவதிலேன்றனை
யாண்டநின்றகையாருணர்வாரோம
தாண்டவாசங்கரானந்தாத்யாத்மனே. (௯௯)

பாடினேனின்றன்பங்கயச்சேவடி
சூடினேன்சிரந்தொண்டர்தந்தொண்டராக்
கூடினேன்குறையேதருள்கூர்நட
மாடும்சங்கரானந்தவநன்யனே. (க00)

பிரம்ஹார்ப்பணம்.

---

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# ஊசல்.

உட்கோலம்.

பார்முதலண்டாண்டமெலாம்பரவிநிற்கும்
 பரிசெனவேயெனதிதயப்பலகைதன்னிற்
காருணியமாம்பாசங்கயிறுப்பூட்டிக்
 கதியாகியிலகுறுவண்கமலபாதஞ்
சேர்பரமயோகியர்கள்ஜெயஜெயென்னச்
 சித்தர்கணநற்சரணச்சிந்துபாட
வாரருள்செய்சங்கரரேயாடிரூச
 லானந்தக்கடலனையீராடிரூசல். (க)

வளமலியன்பர்களோர்பால்வடந்தொட்டாட்ட
 வானுறையுந்தேவர்குழாம்வாழ்த்தெடுப்ப
வளிமுரலுமாலையசைந்தாடவாட
 வஞ்சலஞ்சலென்றுகரமாடவாடக்
களிதருகற்பகத்தருவாய்க்கடையனேனைக்
 கவர்ந்தடிமைகொளவெழுந்தகனகவெற்பா
யளியினமர்சங்கரரேயாடிரூச
 லாரணநான்முடிபறைவீராடிரூசல். (உ)

இறையளவேனும்மொரிடத்திராமலோடி
 யின்பதுன்பக்கடலின்விழுந்திளைக்குநெஞ்ச
மிறைமைதவழ்சந்நிதியிலேவல்பூண்டங்
 கெண்ணரியபத்திபுரிந்தேகநாட்டத்
துறையொழுகித்துவந்துவமாந்தொடக்கைமாற்றித்
 தொல்லைவடிவருள்கவெனத்துன்னிநின்றே
யறையவருள்சங்கரரேயாடிரூச
 லகோசரகோசரமாவீராடிரூசல். (ங)

பொற்புறுநற்புத்தியருட்புரணகோலப்
 பொலிவினைக்கட்டியமாகப்புகழ்ந்ததிர்க்கத்
தற்பததன்னியநிலைதீர்தமியனேனைத்
 தடுத்தாள்வாரிலையதனுற்சார்பொன்றில்லா
வெற்கடைவேதின்றென்றுங்கெழுக்கெழுந்தே
 யியம்பகங்காரம்பறைதத்திட்டிறைஞ்சியேத்த
வற்புதநஞ்சங்கரரேயாடிரூச
 லாருயிருக்குயிரனையீராடிரூசல். (ச)

செகசிவபரவிகற்பஞ்சிதையச்சித்தஞ்
சிதாகாசக்குடையதனைச்சேர்ந்துபற்ற
விகபரமற்றேகமதாயிலகுமோன
விதயவெளிக்குள்ளொளியாயியங்குகின்ற
தகைமைசெறிதன்மயமாய்த்தழைக்கவைத்த
தாளிணையென்சிரமீதிற்றயங்கியாட
வகனமருஞ்சங்கரரேயாடிரூச
லனுதியுறவானவரேயாடிரூசல். (ரு)

ஐம்புலனுமாலத்தியாதியேந்தி
யத்துவிதத்துவசமுதலனைத்துந்தாங்கி
யைம்பொறிவாயிலினணியினசைதலின்றி
யமைதியதாய்த்தத்துவங்களனுகிநிற்க
வைம்பூதபௌதிகத்தானுயவாக்கை
யணையாதியானதுவாயணையவீந்த
வம்புயமார்சங்கரரேயாடிரூச
லருண்மாரிமுகிலனையீராடிரூசல். (சு)

சந்தமுறுஞ்சாந்தியொடுதாங்கிநின்று
சகலமொடுகேவலமுஞ்சார்ந்திடாமற்
சந்ததமுமுட்புறனுஞ்சகசமாகுஞ்
சாந்தாற்றிகவரிபுடைசாய்த்திரட்டப்
பந்தவிருடுறந்தெழுந்தபரிதியாகும்
பரம்பரமாய்ப்பகரவொணாப்பான்மைப்பேறு
மந்தமருள்சங்கரரேயாடிரூச
லனைத்துமாய்நின்றவரேயாடிரூசல். (எ)

சாதலொடுபிறப்பிலுபசாந்தமாகுஞ்
சத்தியஞானனந்தச்சபைபுண்மேவுஞ்
சாதகராமெல்லியர்கள்சமயமீதே
சற்பாவமொடுசரணைச்சார்ந்துப்தற்கென்
றோதியிடைந்திருகரங்களுச்சிசேர்த்தே
யுள்ளமகிழ்ந்துணர்விறந்தங்குலாவியாட
வாதிகுருசங்கரரேயாடிரூச
லகண்டிதசிற்சுடராவீராடிரூசல். (அ)

பழகியவாதனையாவும்பாழ்பட்டோடப்
பரமார்த்தமாநெறியின்பகுதிநீட
விழுமியவேதங்களிடைவிடாதுபாட
வித்தகவேடத்தவத்தோர்மேவியாட
விழைவுவெறுப்பாம்வினைகள்வெருவியோட
விழியிணைகளேழையின்மேல்விரைந்துநாட
வழகின்மர்சங்கரரோயாடிரூச
லரனயன்மாலானவரோயாடிரூசல். (கூ)

சமரசநிர்ச்சலசரதஞ்சாரும்போதன்
சங்கற்பவிகற்பமதாய்ச்சதிசெய்கின்ற
முமலவிருள்செவிடுபடமோனவாச்சிய
மூதறிவாங்கரணமதான்மோதித்தட்டித்
திமிதிமெனத்தினமுழக்கத்திமிர்ப்புண்டாகுந்
திசைதேசாதிகளிறந்ததேசசாகி
யமர்தருசீசங்கரரோயாடிரூச
லசையர்தசைந்தருள்வீராடிரூசல். (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநம:

# திருத்தாலாட்டு.

நியதியிற்காட்சி.

மகத்பரிபூரணமயமாய்மகானந்தமாயிலகுஞ்
சகத்குருசீசங்கராசார்யனெனுந்தற்பரனே. (க)

பூதமயவிடயமெலாம்புடைபெயர்ந்திட்டோடும்வண்ணஞ்
சீதசரணளிக்கத்தேடிவந்ததேசிகனே. (உ)

இந்தியங்களெல்லாமிரியத்திருக்கரத்தாற்
பந்தவிருட்பாசம்பறிக்கும்பழம்பொருளோ. (ங)

புலனுதிகள்வழியிற்போகாதருகிருத்தி
நலமாரருட்பார்வைநாட்டவந்தநாயகனே. (ச)

வாயுவியக்கமின்றிவரவொடுபோக்கற்றெவையு
மாயுமறிவோடுறங்கவமைத்தருளுமற்புதனே. (ரு)

கரணவிகற்பமெலாங்கழலக்கருணைசெய்யுந்
தருணமிஃதென்றுதடுத்தாளுந்தாரகனே. (சு)

தத்துவங்கடம்மைத்தனித்தனியேபிரித்துணர்த்திச்
சித்தமயறன்னைச்சேதிக்குஞ்சிபதியோ. (எ)

முத்தேகங்கட்குமூவாவிலட்சணமாய்க்
கத்தவியமற்றிருக்குங்காட்சியாங்காரணனே. (அ)

அவத்தாத்திரயவனுகூதசாட்சியதாய்த்
தவத்தாற்பெறும்பேறுய்ச்சார்கின்றதன்மயனே. (கூ)

ஐந்துகோசங்கடமையணையாவெதிரேக
வெந்தைமாதேவோவிருக்காதிகண்முடிவோ. (க0)

தத்துவாதீதத்தனிப்பரமாய்த்தற்சொருபத்
தொத்தோவியம்போலொளிர்கின்றவொண்மயனே. (கக)

சிவேசுரசகத்தின்றிமிரமெலாந்தீர்த்தருளுந்
தேவாந்தினகரன்போற்றிகழ்தருசின்மாத்திரனே. (கஉ)

திரிசியங்கடாமாய்த்திரியாதெனதுளத்தி
லரசியற்றிக்காக்குமருளார்ந்தவாரியனே. (கஙு)

ஞானிவனென்றுன்னுமனடுவாயிலங்குறவே
தானமருநிலையிதெனச்சாற்றுஞ்சகத்குருவோ (கச)

மாயையவித்தையெலாமாண்டவழிகாணும
லோயும்படியருளிலொன்றவைக்குமுத்தமனே. (கரு)

சத்தாகித்தாமெவைக்குந்தண்ணருள்செய்தாண்டருளுஞ்
சித்தாகியானந்தச்செல்வமாஞ்சிற்கனனே. (கசு)

பெத்தமுத்திகாலத்தும்பிரியாவுயிர்க்குயிரா
நித்தசுத்தபுத்தமுத்தநின்மலநிரூபகனே (கஎ)

துவிதப்பிழையறுக்கத்துசங்கட்டியொன்றாக்கி
விவிதச்சங்கற்பமெலாம்வேரறச்செய்வித்தகனே. (கஅ)

துவிதாத்துவிதங்கடோன்றாவானந்தவெள்ளச்
சுவையாரமுதமுண்டுசொக்கவருடுய்மையனே. (ககூ)

என்னையழித்தெழுந்தவின்பப்பெருக்கோபின்
றன்னையெனக்களித்தசமரசசாட்சாத்பரனே (உ0)

இவ்வண்ணந்தாலாட்டுமெம்போலியர்கடமைக்
கவ்வுமலவிருடீராக்கதிர்பரப்புங்கருணையனே. (உக)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# திருப்பள்ளியெழுச்சி.

அருணுடிநிற்றல்.

நீக்கருநித்திரையாமிருளகல
 நிகழ்த்திடுஞானமாம்பரிதியும்வந்தே
சாக்கிரமாநுதன்மாமலைமுடிமேற்
 சார்ந்தனன்சமயமீதாதலின்மகிழ்ந்தே
வாக்கியமருள்புரிந்தாட்கொளும்வண்ணம்
 வரவுபோக்கிரண்டறும்வழியதுபெற்றோர்
பாக்கியமாம்பகவத்பாதகுருவே
 பழம்பொருளேபள்ளியெழுந்தருளாயே. (க)

பதியெனுநின்பணிப்பழநுகராமற்
 பற்பலவாம்விடயப்பலமோர்ந்தே
சதிசெயுங்கருவிகளாம்புட்களுடனே
 சரித்தனனெங்கணுஞ்சார்ந்ததன்வயமாய்க்
கதிதருகற்பகமேநினதருளாற்
 காதன்மிகுத்துவந்தின்றுனையடைந்தே
னதிபதியாம்பகவத்பாதகுருவே
 யற்புதனேபள்ளியெழுந்தருளாயே. (உ)

விண்ணவர்மண்ணவர்விரவிவந்தடைந்தார்
 வித்தகவேதியர்வேள்விகண்முடிக்கத்
தண்மலரேந்திவந்தகங்குழைகின்றார்
 தக்கவர்பலருமுன்றாட்பணிசுமக்க
வண்மையதாகவந்தணுகினரோர்பா
 லரியமூவடிவாய்முத்தொழினடம்புரியும்
வண்மையனும்பகவத்பாதகுருவே
 வாழ்முதலேபள்ளியெழுந்தருளாயே. (ங)

அருமறையாகமமாற்றுகின்றனவா
　லன்பர்கள்பரவசமாய்த்திகைக்கின்றார்
திருவருணிலையுறத்திகழ்தருந்தவத்தோர்
　தேசிகநின்சரண்டேடிவந்தடைந்தா
ரொருவருமறியாமலொப்பிகந்தொளிரு
　முண்மைதெரித்திடவுவந்தினிதிரங்கி
நிருபகனும்பகவத்பாதகுருவே
　நின்மலனேபள்ளியெழுந்தருளாயே. (௪)

தற்பதந்தொம்பதந்தகுமசிபதமாய்த்
　தயங்கிடுமும்மையுந்தாண்டியேயப்பா
லுற்பவநாசமுறாவிடமாகு
　முறைமனமுணர்விறந்துயர்ந்தநின்சரண
மெற்களித்தினிதுவந்தாட்கொளவேண்டி,
　யிறையவனேயிருமைக்குறுமருந்தே
சிற்பரனும்பகவத்பாதகுருவே
　சீபதியேபள்ளியெழுந்தருளாயே. (௫)

காரணகாரியமாய்த்தவழ்மாயா
　கற்பனையாமுடலாதியர்னெனதாய்ப்
பேரணிந்தேபலயோனியுட்புக்குப்
　பெண்ணுடனுணலியாய்ப்பிறந்தெய்த்தேன்
சீரணிந்திடவினிச்சிந்தைசெய்தடைந்தேன்
　சினந்திடாதென்னையுன்சீரடிக்காக்கப்
பூரணனும்பகவத்பாதகுருவே
　புண்ணியனேபள்ளியெழுந்தருளாயே. (௬)

உட்கரணத்தொடிவ்வுடற்சுமையொழிய
　வுள்ளநற்பொருளினதுறுசுவையருத்திக்
கட்செவியாதிவாதனையெலாங்கழியக்
　கழறிடுஞ்சுருதியோடுத்தியிற்சேர்த்தே.
யுட்புறனோர்படித்தாகுநன்னிலையா
　மோவியம்போலசைவறவமைத்திடவே
நிட்களனும்பகவத்பாதகுருவே
　நிர்க்குணனேபள்ளியெழுந்தருளாயே. (௭)

சத்துறுசமயவாதப்பேய்களிறக்கக்
கற்பனையாம்பறவைகளெலாம்பறக்கப்
பத்தர்குழாமெங்கும்பரவியேநிறக்கப்
பந்தவிருட்பாசம்பாழ்படத்துறக்கச்
சித்தஞ்சிவோகமாய்ச்செழுமையாய்ச்சிறக்கச்
சின்மயானந்தநற்கடன்மடைதிறக்க
நித்தியனும்பகவத்பாதகுருவே
நிராமயனேபள்ளியெழுந்தருளாயே. (அ)

ஓர்வரிதாகியொன்ருய்ப்பலவாகி
யொப்பில்சுபாசுபமாயின்புதுன்பாய்ப்
பார்முதலாம்பூதபௌதிகவடிவாய்ப்
பரமருளாய்ப்பகர்ந்திடுமுயிராகிச்
சேர்வரிதாகிச்சேர்ந்தடைவதுமாகிச்
சிற்சடமாய்த்திகழ்செழுஞ்சுடர்க்குன்றே
யாரமிர்தாம்பகவத்பாதகுருவே
யானந்தனேபள்ளியெழுந்தருளாயே. (கூ)

சகமுயிர்பரமெனச்சாற்றிடுகின்ற
சங்கற்பவிகற்பமேவடிவதாய்ப்பொருந்து
மகதகங்காரங்கண்மடிந்திடுமாறு
மடணிகுமத்தொய்தமரபுவிளைத்தோ
யகமகமென்றனைத்தூடுமெலிந்தே
யண்டசராசரமுழுதுமாய்நின்றேய்
மகிபதியாம்பகவத்பாதகுருவே
மாண்சுடரேபள்ளியெழுந்தருளாயே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# கட்டியம்.

விஜயப்பிரதாபம்.

ஷண்மதஸ்தாபிதநாதா - ஸாஸ்வதிபீடபொற்பாதா
வுண்மைநிலையாகும்பிரபோதா - வுணர்வுவடிவாகியொளிர்நீதா. (க)
சகததிட்டானகாரணனே - சச்சிதானந்தபூரணனே
சுககருணைமுகிலுதாரணனே - சுயசொப்பிரகாசாபரணனே. (உ)
அத்துவிதத்தாபனசார்யா - வலகில்பிருதுகள்சூழும்வீர்யா
மெய்த்தவநல்லறமெழில்செய்கார்யா - மிகுமளியிற்பவனிவருசீர்யா.

பிரம்ஹப்பிரகாசகெம்பீரா - பேசொணுப்பரமேவுதாரா
நிர்மலமதாநிர்விகாரா - நித்தியவைபோகமார்சீரா. (ச)

எண்டிசையுமேத்துமகதேவே - யெண்சித்திமுத்திதருகாவே
பண்டமர்பரானந்தப்பூவே - படிசெய்தவமாகிவருகோவே. (ரு)

ஹரிஹரப்பிரம்ஹானுபூதியே - யண்டபகிரண்டநிறைசோதியே
திரிசியப்பிரமைதவிர்நேதியே - தேசிகத்திருவுருவநாதியே. (சு)

அமரர்சுரர்நரர்பணியுநேயா - வனந்தபதமேன்மருவுதேயா
விமையில்பரமுறவருளுபாயா - வெதிரதறவிஜயமிகுதூயா. (எ)

தொழுமுனிவருளமருவுதேனே - தொல்லைமறைமுடிவிலுறைகோனே
யெழுபிறவிமாளவருவானே - யின்பவீடதையருள்செய்வோனே. (அ)

ஆதரித்தெனையாளுமையனே - யாத்மானுபூதிமயத்துய்யனே
யாதிமுக்குணரகிதமெய்யனே - யஞ்சலென்றருளபயக்கையனே. (கூ)

காஞ்சிமாநகர்மருவுமருவே - காமகோட்டிபீடாதிபகுருவே
தீஞ்சொலினற்றேசுதவுதிருவே - தினகரனெனப்பொலியுமுருவே.

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநமః

# கருவிகட்காம்பயன்.

ஆராமைகாட்டியருகழைத்தாண்டவன்
சீரானபாதத்தைச்சேர்கவென்சென்னியே. (க)

கண்ணேயவன்கோலமன்றிவேறென்றையு
நண்ணுதுறங்கிநீநாடுவாய்நாளுமே. (உ)

நாசியேயன்னோன்லமோனப்பூமணம்
வாசியான்வாங்கின்வளம்பெற்றுவாழ்தியே. (ங)

செவியேயவன்சொலுஞ்செம்பொருள்கேட்டியேற்
புவிமீதுவந்துபொருந்துதல்போகுமே. (ச)

வாக்கேயவன்சீர்த்திவண்சரணமிர்துண்டு
தேக்கிப்புகழ்தியேற்றியக்கமொழியுமே. (ரு)

அஞ்சேலென்றருள்செய்தவாரியன்பாதத்தை
நெஞ்சேநினைத்தியேனேர்ந்திடுமின்பமே. (சு)

புத்தியேயன்னேன்சொல்புத்தியையேற்றிடின்
மத்தியவிகபரவாழ்வற்றுவாழ்வையே. (எ)
கன்மேந்தியங்காள்கதிக்காம்வணஞ்செயி
னின்மலச்செல்வநிறைந்துதுளும்புமே. (அ)
மெய்யேயவனுக்குமேவிடிற்கோயிலா
யுய்யுநெறிக்கனியுள்ளங்கையாகுமே. (கூ)
தத்துவங்காளெங்கோன்ருட்பணிசுமப்பீரே
லத்துவிதானந்தமாருய்ப்பெருகுமே. (கo)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ
சங்கரபகவத்பாதாயநம:

# உந்தியார்.

பரமார்த்தநிலை.

ஆதிசங்கரபகவத்பாதனருண்மிகு
பாதம்பணிந்தோமென்றுந்தீபற
பரமார்த்தமுணர்ந்தோமென்றுந்தீபற. (க)
அன்னைபிதாகுருவாகியவண்ணறன்
பொன்னடிக்கன்புசெய்துந்தீபற
பூரணமானேமென்றுந்தீபற. (உ)
அடியிணைமுடிதரித்தானந்தமெய்தவே
யடியேனையாண்டானென்றுந்தீபற
வாரியனருளினுலுந்தீபற. (ஙூ)
நால்வகையோனிநவிலெழுதோற்றத்தி
னல்வருந்துயிர்களுக்குந்தீபற
நனியருள்சுரந்தானென்றுந்தீபற. (ச)
ஆதாரமாயண்டமாதிகளொன்றுவ
தியாததுவோவஃதுந்தீபற
விருமைநோய்தீர்க்குமென்றுந்தீபற. (ரு)
சகத்குருவாகிச்சழக்கின்மெய்யன்ப
ரகத்தவிசமர்ந்தானென்றுந்தீபற
வரனரியயனுவானுந்தீபற. (கா)

சத்தியபுத்தியாற்முனைவைக்குமுத
லத்துவிதான்மாவென்றுந்தீபற
வஃதேநஞ்சொருபமென்றுந்தீபற. (எ)

ஆதிப்பிரமமனைத்துமாயல்லவாய்ச்
சோதியுட்சோதியாயுந்தீபற
சுயம்பாய்த்திகழுமென்றுந்தீபற. (அ)

எல்லாஞ்சொரூபவியல்பாகவெண்ணுறி
னில்லாதுமாயையென்றுந்தீபற
நிருவிகற்பமதாமென்றுந்தீபற. (கூ)

அண்டபகிரண்டமப்பாலிப்பாலெனக்
கண்டிதமாகவேயுந்தீபற
கற்பனைபிறந்ததென்றுந்தீபற. (க0)

சமாதிசகசசாட்சாத்காரமாதல்
சுமாய்த்தனித்திருத்தற்கென்றுந்தீபற
சுகமுற்றுவாழற்கென்றுந்தீபற. (கக)

தற்சொரூபத்திற்சலிப்பறவேநிற்கிற்
சொப்பனம்போலவுமுந்தீபற
சூழுலகங்களென்றுந்தீபற. (கஉ)

சுட்டறிவின்றிச்சுபாசுபமற்றிடி
னிட்டைவேறுண்டோவென்றுந்தீபற
நிலையதேபொருளாமென்றுந்தீபற. (கங)

ஞானவஞ்ஞானங்கணண்ணித்தேகாதியை
யானெனதென்னுமலுந்தீபற
யாதும்பிரமமென்றுந்தீபற. (கச)

பொறிபுலனகப்புகல்கரணச்செய
னிறைபூர்னத்தின்றென்பதுந்தீபற
நிதித்தியான்விளங்குமென்றுந்தீபற. (கரு)

நீநானெனுமயனேதியிற்றள்ளவே
தானாகுந்தற்பரமுந்தீபற
தலமதெவற்றிற்குமுந்தீபற. (கசு)

சகசிவபரமென்றுசாற்றுவதற்கிட
மகமாயையாதலானுந்தீபற
வனுர்தாதியாயவென்றுந்தீபற. (கஎ)

ஒன்றிரண்டென்னுமலோர்படித்தாகவே
நின்றதேநிட்டையென்றுந்தீபற
நிமலன்மெய்ப்பூசையென்றுந்தீபற. (கஅ)

தேடித்திரிந்துதேசிகனடிபணிவது
கூடியொன்றதற்கென்றுந்தீபற
குணமற்றுநிற்றற்கென்றுந்தீபற. (கக)

தொல்லைவினையின்றுவந்துவமாய்த்திடும்
வல்லவன்ருனேயென்றுந்தீபற
வாழ்த்தற்குரியோனென்றுந்தீபற. (உ0)

அருவாயுருவாயருவுருவாகிய
நிருமலவான்மாவேயுந்தீபற
நீள்சகமாயதென்றுந்தீபற. (உக)

உற்பவநாசமுருவிடமறந்ததாற்
சிற்சடமிரண்டாகியுந்தீபற
சேர்ந்தனவிகற்பமென்றுந்தீபற. (உஉ)

அறிவறியாமையாதிகளலையாதிபோற்
செறிமாயைக்காற்றினலுந்தீபற
சிற்பிரபைக்கடலிலாமுந்தீபற. (உங)

உன்னுதலோடுளையாடலுணர்ந்திடற்
கன்னியமாகிநின்றுந்தீபற
வமருஞ்சொரூபமென்றுந்தீபற. (உச)

அறியும்பொருளுமற்றறியாப்பொருளுமற்
றுறையும்பொருளதேயுந்தீபற
வுலப்பின்மாதெய்வமென்றுந்தீபற. (உரு)

ஓர்ந்திடின்முப்பொருளாகியுறுவதாற்
சார்ந்திடுஞ்சுகதுக்கமுந்தீபற
சபளீகரிப்பதானுந்தீபற. (உசா)

ஆய்ந்திடினிவ்வாறவத்தையுபாதியிற்
ருேய்ந்துந்தோயாமனின்றுந்தீபற
துன்பின்பொழிக்கலாமுந்தீபற. (உஎ)

ஆதிமுற்சோதிநாமறிபொருளன்றென
நேதிசெய்வானேனென்றுந்தீபற
நிறைவாய்நாமேநிற்கவுந்தீபற. (உஅ)

ஆரியனருள்பெறினங்கைக்கனிபோலச்
சாரும்பரமார்த்தமுந்தீபற
சன்மசாபல்யமென்றுந்தீபற. (உகூ)

ஆதாரமாதேயமாகியங்கங்கரு
ணுதன்விளங்குமாறுந்தீபற
நவிலற்கரியதென்றுந்தீபற. (௩௦)

மேலாநெறியுணர்மேலோர்களுக்கன்றி
யேலாதீதாதலானுந்தீபற
வில்லையுண்டென்னுமலுந்தீபற. (௩௧)

குருவுமாயானைக்குலாவுமதிசய
வொருமையேதென்பதென்றுந்தீபற
வுரைமனமற்றதென்றுந்தீபற. (௩௨)

எல்லாங்குருபரனெழின்மிகுகோலமே
யல்லால்வேறில்லையென்றுந்தீபற
வனைத்துஞ்சிவோகமென்றுந்தீபற. (௩௩)

அந்தோவிந்நாள்வரையறியாமேமாயையாற்
பந்தமுற்றழிந்தோமென்றுந்தீபற
பற்பலவானேமென்றுந்தீபற. (௩௪)

ஆசானடியிற்குடியாயமர்ந்துநாந்
தேசமெல்லாம்பரந்துந்தீபற
தேடித்திரிந்தோமென்றுந்தீபற. (௩௫)

உருவநாமமெலாமொன்றாக்கியாண்டவ
னருள்பெற்றுவாழ்ந்தோமென்றுந்தீபற
வையமிறந்ததென்றுந்தீபற. (௩௬)

நிருபாதிகமயமாகியநித்தனை
யொருபோதுமறவாமலுந்தீபற
வுட்புறனைத்துதித்துந்தீபற (௩௭)

வாசாமகோசரவண்சரணமிர்துண்டு
தேசார்ந்திலகிநாமுந்தீபற
தேக்கித்திளைத்தோமென்றுந்தீபற. (௩௮)

புன்மையுடையேன்புலையேனென்றிகழாமற்
றென்மைநாயகனுவந்துந்தீபற
துங்கமாயாண்டானென்றுந்தீபற. (௩௯)

சத்தியக்கியானானந்தசகசவானந்தகன்
முத்தமாமோனத்திலுந்தீபற
முடித்தனனெங்கோனென்றுந்தீபற. (௪௦)

அன்னவன்பொன்னடியாமலர்முடிமிசை
மன்னமுடித்துக்கொண்டுந்தீபற
மகிழ்ந்தெங்குமாடிநின்றுந்தீபற. (சக)

பெத்தமுத்தியதாகும்பேதத்துவிதங்கண்
மித்தைசெய்தாளவேயுந்தீபற
மேல்கீழ்நடுவற்றதுந்தீபற. (சஉ)

நிர்க்குணமாகுநிகமாந்தராசியஞ்
சற்குருவருளினாலுந்தீபற
சார்ந்ததென்றுண்மகிழ்ந்துந்தீபற. (சங)

கற்பிதமெல்லாங்கழலக்காலாலுதை
யற்புதனேயென்றிங்குந்தீபற
வாரணமுடிவேயென்றுந்தீபற. (சச)

முப்பதமுடிவாகிமும்முதற்பொருளாகி
யப்பாலுக்கப்பாலாயுந்தீபற
வனைத்துமாய்நின்றோமென்றுந்தீபற. (சரு)

பரமவாரிதியேபரம்பரனேயென்று
கரமலர்தூய்த்தொழுதுந்தீபற
கசிந்துகண்ணீருகவுந்தீபற. (சசு)

ஐயனடித்துணையனுதினம்பரவியே
யுய்யுமாறஞ்சல்செய்துந்தீபற
வொப்பில்சற்குருவேயென்றுந்தீபற. (சஎ)

சங்கரதேசிகன்றாட்புணைபெற்றதாற்
சங்கற்பத்தானாகுமுந்தீபற
சழக்கொழித்தோமென்றேயுந்தீபற. (சஅ)

காமக்கோட்டிப்பீடக்காரணசற்குரு
ஸ்வாமிக்கடியனென்றுந்தீபற
ஸ்வானுபவமீதென்றுந்தீபற. (சகூ)

வாணிபீடத்தமர்வள்ளல்கழறனைப்
பேணுவார்க்குண்டோவென்றுந்தீபற
பிறப்போடிறப்புகளுந்தீபற. (ருo)

என்னையாட்கொண்டவிறைவனருளினாற்
சொன்னதிதாகுமென்றுந்தீபற
சுருதிக்கிசையவேயுந்தீபற. (ருக)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# நியாஷ்டகம்.

தங்குறும்பல்லுயிர்கடங்களுக்கின்புதவ
வங்கண்மாஞாலமிசையழகிதாமேனிகொடு
எங்குமேவித்துறையிதென்றுதாபித்தருள்செய்
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௧)

அங்கமோர்மூன்றுடனவத்தையோர்மூன்றுமற
விங்கியானென்னதெனுதேகமாய்நின்றிலக
வங்கணேக்கான்மமதையாதிநேதித்தருள்செய்
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௨)

தங்குருதொழியவிருடங்கவருளரியநின
தங்கையாலபயமுறவருள்பரானந்தவெதி
புங்கபரமேசபரிபூரணவிகாசமுனி
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௩)

பங்கமாம்பற்பலபவார்கலிகடத்துமுயர்
வங்கமாம்பொற்பினுறுவண்பதாம்போருகம
திங்குவாவென்றருகிருத்தியின்போடுதவு
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௪)

சங்குல்பகலின்றிநிகழ்காலதிசைதேசமற
வங்கிஙனெஞ்தவகையாகியெனதாடுவள
ரெங்குமாகும்பிரமமேயெனவிறைஞ்சவருள்
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௫)

சங்கமாகியசிவசகபரவிரூபவிருள்
பொங்குநினதருளாகுபுனிதவொளிகாணுமுன
ரெங்ஙனமறைந்ததஃதீதுளதெனுதவகை
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௬)

திங்களார்சடிலனொடுதிகழுமாலயனுணைசெய்
பங்குறுமணாதிநிகழ்பௌதிகவிலாசமெனு
மங்குதலில்கோலமிளிர்மாநிதியமாகிவளர்
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௭)

மங்குலெனவருளாகுமாரிபொழிமகிபநம
சங்கையறநூறிவளர்சகசவுபசாந்தநம
வங்கமுடனங்கமெனவங்கமறுமாதிநம
சங்கராசார்யநமசங்கராசார்யநம. (௮)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# நிர்க்குணாஷ்டகம்.

நிதித்தியாசாயநமவென்றுநினைந்தென்புருகிநீள்பவத்தி
லுதித்தேயுழலுமுசறவிர்ந்துன்பாற்பிரிவற்றுணர்வரிதாம்
பதத்தாமரையினிழல்படியும்பழயவடியாருடனிருக்க
விதிப்பாயகத்தினொளிகதிர்க்கும்விமலானந்தவித்தகனே. (௧)

நிர்க்குணாயநமவென்றுநேதித்தனுர்தமாதிமயல்
நிர்ப்பிணாயநமவென்றுநிருபத்ரவநிட்களமாகி
நிர்ச்சிந்தாயநமவென்றுநிமலவசங்கநிருபகமாய்
நிர்த்வந்தாயநமவென்றுநின்னையேத்தப்பணிப்பாயே. (௨)

நிராலம்பாயநமவென்றுநெகிழ்வுற்றகமன்பகலாது
நிராமயாயநமவென்றுநினைவுகனவென்றறநூறி
நிராபாசாயநமவென்றுநிலையிலுலகநிலைமீறி
நிராபேக்ஷாயநமவென்றுநின்னைவாழ்த்தப்பெறுவேனோ. (௩)

சிற்சொரூபநமவென்றுசிவசொரூபமெனவிலகிச்
சிற்பிரகாசநமவென்றுசீவபாவமறவொருவிச்
சிற்கனாயநமவென்றுசெறிசுசீலதிடமருவிச்
சிற்சுகாயநமவென்றுசிறியனிறைஞ்சுமாறுளதோ. (௪)

(வேறு.)

ஆதியந்தரகிதாயநமவென்றனுதினம்
ஓதிமுன்புகழையோலமிடுமென்பர்தமினம்
காதலின்பொடுகலாவுமருணின்மலகனம்
சிதவண்சரணசேவைதருமென்னிதபரனே. (கு)

நிஷ்பிரியாயநமநீதகினையன்றியுளதோ
நிஷ்கிரியாயநமநீசனினையொன்றவெளிதோ
நிஷ்களாயநமநேசநினையென்றருதியோ
நிஷ்கர்மாயநமநீமகினையின்றருடியோ. (சு)

நிர்ப்பீஜாயநமநெஞ்சுளொளிர்கின்றபரனே
நிர்ம்மாயாயநமநெஞ்சுறநிமிர்ந்ததிரனே
நிர்த்தோஷாயநமநெஞ்சுறநிகழ்ந்ததரனே
நிர்ம்மோஹாயநமநெஞ்சொளியதாகுமுரனே. (எ)

நிர்விக்ஷேபநமநீவாரசூகவெளியே
நிர்விகாரநமநீவாததீபவொளியே
நிர்ப்பயாயநமநீவாமெயன்பரளியே
நிர்மலாத்மநமநீவாழிவாழியுளியே. (அ)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# சொரூபாஷ்டகம்.

சீர்மறையினுச்சிவளர்செம்பொருளதாகிக்
கூரிருளொளிக்குளொளிர்கோலவடிவாகிக்
காரணமொடேயுறுமோர்காரியமிலாம
லோரியல்பதாகநிலையுற்றதேசொரூபம். (க)

நிர்க்குணநிராமயநிரஞ்சனநிரூப
தற்பரததாகாரதன்மயவிதேக
வற்புதவகோசரவனந்தமொடானந்த
சிற்பரசிதாத்துமசிவோகமேசொரூபம். (உ)

நானிவனொடவனென்றுநவிலுமளவின்றி
ஞானமொடஞானமதைநணுகுவதிகந்து
மானவபிமானமறுமாட்சிமைசெறிந்தே
தானமர்தனிப்பெயர்தழைப்பதேசொரூபம். (௩)

நித்தியநிமலாத்துவிதநிட்களநிரீஹ
சத்தியசகசானுபவசமரசசுபாவ
மித்திறனெனும்பரிசதின்றியவிபாகப்
பெத்தமொடுமுத்திதபும்பெற்றியேசொரூபம். (௪)

பேதமொடபேதமெனும்பேருருவிழந்தே
வேதமுதலாகமம்விளங்கிடமதாகிச்
சாதகமிலாதவிர்சதோதயமதாகி
யேதமறவேயிலகுமேகமேசொரூபம். (௫)

கற்பனைசெய்மாயையொடுகழலுறவவித்தை
சிற்சடமிரண்டினிவர்செய்கையிவையென்றே
யுற்றுணர்கிலாதசைவிலோவியமதாகி
நிற்குநிகழ்போதமறநிற்பதேசொரூபம். (௬)

தேகமுதலார்கரணதிரிசியவெதிரின்றிச்
சோகமொடுமோகமுறுசுத்தமொடசுத்தப்
போகமொடுபோக்கியமெனப்புகல்வதின்றி
யேகபரிபூரணமதெய்தலேசொரூபம். (௭)

சித்தமயலின்றியொளிர்சீவநிலைதேர்ந்தே
மத்தறமகேசநிலைமாணமுறவோர்ந்தே
யுத்தியுடனுமனுபவத்தினிடையூர்ந்தே
யத்தியொடுபாதிசுகமாவதேசொரூபம். (௮)

இந்தவகையாம்பொருளியம்பியெனைமேவிச்
சிந்தைகுடிகொண்டசிவமாகவெனதாவி
சந்தவருள்கூர்பரமசங்கரனெனுவி
லுந்துமொழியாமிவையுவந்தவருளாரோ. (௯)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# தேவியைவியந்தது.

திருவமருமறுவமருமார்பணிளையாணினது
　திருநடனமென்சொல்லுகேன்
றிகழுமுப்பத்துமுக்கோடிதேவர்களாற்
　றினம்பரவுறுந்தேவிநீ
திரிலோகவரசிநீதேடுவார்தேட்டஞ்
　செழிக்கவாமுதவுமருணீ
திங்களார்சடிலனார்பங்கில்வளர்செல்விநீ
　திடஞானசிற்சத்திநீ
பரசிவசகமாய்ப்பரந்தபல்பொருளுநீ
　பனிமலைதரும்வல்லிநீ
பரிபூரணானந்தபராநீயெலாமுதவு
　பண்புநீபரிசுநீயே
கருமருவுமெனையுமொருபொருளெனவுனினைதியோ
　காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
　காஞ்சிவளர்காமாட்சியே. (௧)

பூரணிகிருபாகரிமனோன்மணிநிரந்தரி
　புராந்தகிசகன்மோகினி
பொங்குசிவகாமிசுந்தரிவாமிசாம்பவி
　புராதனிபுராணிவாணி
சிரணிசிதானந்திசிவலோகநாயகி
　திரியம்பகிதிரிசூலிநீலி
செழுஞானசத்திபகவதிகௌரியந்தரி
　திகம்பரிவாராகிமாரி
நாரணிபிரபாகரிபரானந்திபைரவி
　நயந்தருமகோரிசூரி
நாடுமயிராணியோங்காரிரீங்காரிபர
　ஞானசாம்பிராஜ்யபிரமுகி
காரணிகளாதீதகாருணிவிரைந்தருள்செய்
　காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
　காஞ்சிவள்ர்காமாட்சியே. (௨)

நீதமுறநேதிமுதிர்சாதகமதாமதனி
  னீதிதவிராதுநிதமெய்ந்
நேசமுறமாசுறுபொயாசையுறுகோசவறை
  நீசநிறைபாசமதெனு
மேதமனவாதனைசெய்பேதமயலாதிதொடர்
  பீதெனநிஞுதரவிஞு
லெண்ணிநணிநண்ணிநவமுண்ணிலவுமுண்மைசெறி
  யெண்ணெயெளினண்ணியதெனும்
போதமதுவாமுசிதசோதிமயதீபமது
  பூதவுடல்சாதலின்முனம்
புத்தியெனுமுத்திதவழ்சுத்திகர்ப்பூரமதி
  லுய்த்திலகுசித்திதருவாய்
காதனனிமேவியெவருங்கைதொழுதேத்துமுயர்
  காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
  காஞ்சிவளர்காமாட்சியே. (௩)

உற்றதுணையென்றுனைநயந்துறுமிவடியனுள
  வுளவறிந்திலைபோலுமீ
துசிதமலதிலைநினையடைந்தவர்தமக்குனரு
  ளோங்குபுகழ்செல்வநல்கிச்
சற்குணக்கங்கைநீராட்டிச்சதானந்த
  சகசசந்தமதணிந்து
சத்தியக்கவசந்தரித்தருகிருத்திவரு
  சநநபயமெனுமிடுக்கண்
சற்றேனுமணுகாதுசரணிழலளித்தினைய
  தகைமைசெறிவகையுமலதூஉம்
சலியாவிரக்திமனைபுதல்வன்சுபோதனொடு
  சந்ததமும்வாழியவெனுங்
கற்பகக்கொடியேநினடிமுடிபொருந்துமோ
  காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
  காஞ்சிவளர்காமாட்சியே. (௪)

கலையாகியவைதமுட்பொருளாகியிதுவெனுங்
கடபடாதிகெட்ரிவுறுங்
கரணமாய்க்கரணங்கடந்தகண்டாகண்ட
கனமாய்ப்பரந்தவெளியா
யெல்லையாகியெல்லையிலாவியல்பாகியெண்ணரிய
வெழில்சித்திமுத்திகடமை
யெய்தவருணல்கியங்கெய்துமவரிதயத்
தெழுஞ்சுடர்க்குன்றுமாகி
யலகில்விளையாடல்புரியரிவைநீயரிவையர்க்
கரசிநீயண்டமுழுது
மாள்கின்றவமலைநினதருள்புரிந்தாள்வையோ
வடியனினதடிமையன்றே
கலகமனதாடிருளதெனவொழுகுமருமைசெறி
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவைபெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (௫)

சூலையொடுபேதிசுரமாதியவியாதிநனி
சூழ்ந்துபறைகொட்டியாடிச்
சோகமொடுமோகமுறுலோபகுணமேகமுறு
தொன்மைகெடமீறிநாளுந்
சோலைதொறுமூலைதொருமாலைதொறுமேல்வீடு
சொர்க்கநரகந்தோறுமாய்ச்
சூறைகொளவோசூதுவாதுகொளவோவுலகு
சும்மாடெனக்கொள்ளவோ
தூலசூக்குமகாரணாகவபிதானாதி
துதையவிளையாடல்கண்டாய்
துன்பங்கள்பலகோடியின்பங்கள்சிலகூடு
தொந்தித்தபந்தநீங்கக்
காலகாலிகபாலிநீலியருள்வையோ
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (௬)

அடருமைம்பூதவுடலனுர்தசடதுக்கமென
வபிமானமகலநாளு
மசைவறச்செய்துசாக்கிரமறந்துதுவிது
வதாஞ்சுட்டிறந்துசுகமா
யடிமுடியிலாமனடுவாய்முளைத்திடுமன்தி
னற்பகிலெசொப்பனமெனு
வறிவாலறிந்தறிஞாகமமதைமாய்ந்துபக
லலதுமிரவறவுரைசெயுந்
தடையொன்றிலாதுதமையாய்ந்துகதிபெறவருணின்
றயையெனென்றறைவனடியேன்
றன்மயமதாகிநிகழுன்மயமதாயமர்
ததாகாரமாகவருளாய்
கடண்மடைதிறந்தபடியருண்மாரிபொழிநிகரில்
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (எ)

கல்வியறிவின்றிநின்கழற்குரிமையின்றிமுன்
கழிந்தநாட்கென்கழறுகேன்
கற்பனையிலாழ்ந்தலைவினவநெறிவதிந்துமுயல்
கயமையேதாய்க்கழறுகேன்
புல்லுறவுபற்றியுயர்போதமதிழந்ததுர்ப்
புத்தியேதென்றுபுகல்கேன்
போனநாளுக்கிரங்காமடமைதங்குறு
புணர்ச்சியேதாய்ப்புகலுகேன்
வல்லவனெனும்பெயரிவன்பனடைதரமன
மகிழ்ந்தமையெனென்றுவரைவேன்
வம்பனேனினையவகைமாழ்கலறவருநின்து
மலரடியினணிநூபுரங்
கல்லெனக்கல்லினெனதுள்ளநெகவுருகுமோ
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (அ)

கன்னன்முக்கனிகண்டுநின்மொழிருசிக்குமலி
கானமயிலனமணிகொணின்
கானடைவியக்குமதிபரிதிகோளிருமைபுரி
கடுமைதணிதருமமுதமார்
தன்னிகரினின்தொளிருமுகதரிசனமதினுனை
சதிர்சமறுமுயர்கற்பகத்
தருகாமதேனுசிந்தாமணிகடைக்கணின்
சார்பிறருநலமியார்க்கு
முன்னழகுபொன்னழகினும்மழகெனுமுதுசொ
லோலமிட்டவென்னழகெனு
லுன்னியுனைசெய்யவருமன்னிமிளிரன்னியமி
லுன்னதநலனையுமையே
கன்மவினைதொடராதுகாலனடராதருள்செய்
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (௯)

அண்டர்கள்வியக்கவுயர்தொண்டர்கணயக்கவுணர்
வரியவரமிவணெவர்க்கு
மாதரித்தனவரதமன்பினருள்புரியவாழ்ந்
தான்றுகம்பீரமாகி
யண்டபிண்டாண்டபிரம்மாண்டமுகடுருவியத
னப்பாலுமணுகிநிரலே
யட்டதிசையெங்குமுழுதுற்றுமற்றும்பரவு
மத்விதானந்தமுதவு
மண்டர்கட்கிறைமகாதேவசங்கரகுருவெ
னையனருளாலமைத்த
வரியசுந்தரமந்திரயந்திரபீடத்தமரு
மம்மைநினதணிகொள்படிவங்
கண்டுகொண்டனனடியனென்னகுறையினியினிய
காமகோட்டித்தலைவியே
காஞ்சனிமுகக்காட்சியோஞ்சிவையெனுஞ்சூட்சி
காஞ்சிவளர்காமாட்சியே. (௰)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# வாணியையவியந்தது.

வேதனுவினிடைவிவிதபல்பொருள்விளைந்திடுந்தகைகொள்வித்தமே
யாதியேயினருளன்றியோரொலியசைந்துநாவினிடமெய்துமோ
பூதரூபிதுதிநாதரூபியுமைபுணர்சுதாரசசுபாஷிதப்
போதரூபிநிகழ்போதமாற்றுதிபுலம்புமென்புலவிதீரவே. (க)

தருமதானநெறியறிகுனர்க்குறுசகாயசத்யகுணசீலிநின்
னருமையோர்ந்தவர்பிழைப்பரவ்வழியதறியநின்றனருள்வேண்டியே
குருவெனுநினையடைந்தனன்பிறவிகோடலற்றினிதினுய்வனே
சருவகாரணிதகைந்தருள்புரிதிதயைமிகுந்துசரசோதியே. (௨)

சொன்னயம்பொருணயங்களுன்பணிசுமந்துவாழுமியலோர்கிலா
துன்னலொன்றுடனுரைத்தலொன்றுநடையொன்றுமாய்ப்பயிலுமேழையான்
பன்னருங்கவிஞர்நின்றனைப்பரவுபண்பிசைந்தவுயர்பாடறோர்ந்
துன்னைமின்னைநிகரன்னவன்னையெனவுன்னினேன்கலைமடந்தையே.

இகபரங்களிடையெழுபவங்கண்மலிபிடர்துறந்தெனையறிந்துமே
லகநிறைந்தபொருளஃதுணர்ந்தணுகியதுவெனுநிறுவவடர்தியோ
பகுதிமுன்விளைவதாநயஞ்செறிபகாநிலைப்பதமறத்தல்செய்
சகசமல்குமிருடுமியவுண்மைமொழிதருசநாதனிவெண்சலசையே (ச)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# பரம்பொருட்கண்ணி.

நன்மார்க்கமாகிநலங்கொழிக்குமோனவருட்
சன்மார்க்கமாநெறியைச்சாற்றாய்பரம்பொருளே. (க)

கண்ணீர்ததும்பிக்கசிந்துருகிநின்கோல
முண்ணுடிநிற்கவெமக்குண்டோபரம்பொருளே. (௨)

உன்னலுன்பொன்னடிக்கீழொன்றிநிற்பதல்லாம
லென்னுலியாதிங்கியங்கும்பரம்பொருளே. (௩)

பொல்லாப்புலையேனுன்பொன்னடிக்காளாகும்வண்ணஞ்
சொல்லாயொருமொழியுட்டோயும்பரம்பொருளே. (ச)

ஐயாவப்பாவென்றரற்றுவதேயல்லாம
லுய்யும்வகையறியேனுனையாய்பரம்பொருளே. (ரு)

சேதித்தகம்பாவஞ்சிற்சுகவானந்தவெள்ளத்
தேதுமறந்திருப்பதென்றோபரம்பொருளே. (சு)

அச்சமகற்றியருண்மழைபெய்மேகமென
மெச்சுமுனையடைந்தேன்மேலாம்பரம்பொருளே. (எ)

அஞ்சலஞ்சலென்றடியேனுக்கையிடுகாடடைமுன்
கஞ்சமலர்க்கையமைக்கக்கருதாய்பரம்பொருளே. (அ)

பெத்தமுத்திகாலத்தும்பிரியாதிருந்தவுனைச்
சித்தமயறன்னுற்றெளியேன்பரம்பொருளே. (கூ)

ஆசாதிபாசமெலாமகற்றியெனையறிந்து
பேசாதுநிற்குமுண்மைபேசாய்பரம்பொருளே. (க0)

சரவசரபேதமெலாந்தாமாகப்பார்ப்பவர்தங்
கரமருவுமாமணியேகதிநீபரம்பொருளே. (கக)

அல்லும்பகலாகுமஞ்ஞானஞானமறிற்
செல்லுங்கணத்திலுனைச்சேர்வேன்பரம்பொருளே. (கஉ)

என்னுள்ளொளியாயிருந்துமுணராமலுனை
யன்னியமாய்க்கண்டிங்கலைந்தேன்பரம்பொருளே. (கங)

அன்போடியைந்தறிவினருள்பெருகிவாழாமற்
றுன்போடியைந்துதொலைந்தேன்பரம்பொருளே. (கச)

அன்னியமிலாமலுன்றனடியிணைக்காளாக்குதியேல்
துன்னிருண்மாமாயையெங்கேதோன்றும்பரம்பொருளே.

ஊனுருடலாயுயிராயுணர்வாகித்
தானாகியென்னுட்டனித்தாய்பரம்பொருளே. (கசு)

புலனுதிகளைந்தும்பொறிவழியிற்சாராதங்
கலகிலுனையாய்ந்தடங்கவாமோபரம்பொருளே. (கஎ)

அங்கங்கவரவருக்காம்வடிவாய்மன்னிநின்று
பொங்குமருளளிப்பாய்புகழார்பரம்பொருளே. (கஅ)

இருமுகமுநாடாமலென்னையுனக்கூணாக்கித்
திருவருள்சேடத்தையுணத்தேற்றாய்பரம்பொருளே. (ககூ)

கண்டவகண்டானந்தக்காட்சியெலாமொன்றாக்கித்
தொண்டனெனையாளாய்துணையாம்பரம்பொருளே. (உ0)

உன்னலுனைத்தலிறந்துட்புறனென்றில்லாதிங்
குன்னோடொன்றாகுமுளவுனையாய்பரம்பொருளே. (உக)

காக்கக்கடனுனக்கேகத்தவியமன்றியுண்டோ
போக்கும்வரவுமில்லாய்போற்றிபரம்பொருளே. (உஉ)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# சற்குருக்கண்ணி.

நித்தனுநின்னைநினையாமடமையுறு
மத்தனெனத்தள்ளிவிடன்மாண்பாமோசற்குருவே. (௧)
சுத்தமாஞானச்சுடரொறிக்குமற்புதனே
பித்தனேன்செய்தபிழைபொறுப்பாய்சற்குருவே. (௨)
புத்தமாயோங்கும்புரணவடிவாகுநினைக்
கைத்தலமாகுங்கனிபோற்காட்டாயோசற்குருவே. (௩)
முத்தனேயென்னுண்முளைத்தவகங்காரமுடன்
சித்தமயலெல்லாஞ்சிதைத்தருளாய்சற்குருவே. (௪)
சத்தியனேயுன்னைச்சரணடைந்தார்க்கல்லாமல்
வத்துவாய்நிற்கும்வகையுளதோசற்குருவே. (௫)
பரமனேயென்றுபதைத்துருகிப்பாதமலர்
கரமலர்கொடர்ச்சிக்கக்கற்பியாய்சற்குருவே. (௬)
ஆனந்தத்தேனேயமிர்தேயருண்முகிலே
யீனந்தவிர்ந்துன்னையேத்துவனோசற்குருவே. (௭)
சொருபனேயென்றுதுதித்துண்ணெகிழ்ந்துமன
நிருபகமாய்நாளுநிலைப்பேனோசற்குருவே. (௮)
சாட்சாத்பரனெனவுஞ்சகதகுருவேயெனவு
மாட்சிமையாய்ப்போற்றிமகிழ்வேனோசற்குருவே. (௯)
சற்குருவேநின்றன்சரணத்தின்சீரன்றிச்
சொப்பனத்தும்வேறொன்றைச்சுட்டுகிலேன்சற்குருவே.

## மரபுவிளக்கம்.

பிரமமாயெங்கும்பினவபினமில்லாம
னிரவயநிட்களமாகிநின்றனைநீசற்குருவே. (௧௧)
ஞானவடிவாயெவையுநன்றாய்ப்பிரித்துணர்த்தி
மோனவடிவாக்கியருண்மூர்த்திநீசற்குருவே. (௧௨)
சபளப்பிரமமாய்ச்சார்ந்தங்குயிர்க்குயிராய்த்
தபுதற்குறுவினைகடையைபுரிவாய்சற்குருவே. (௧௩)
ஈசனாய்வியாபித்திருவினைகட்கீடான
பாசமாமின்பதுன்பம்பகுத்தளிப்பாய்சற்குருவே. (௧௪)
அரன்மாலயனாகியங்கங்கவரவர்கள்
பரமாயிருந்துயரும்பதமருள்வாய்சற்குருவே. (௧௫)
வசிட்டடொடுசத்தியாய்வண்புவியிற்சம்சர்க்க
விசிட்டவகண்டப்பொருளைவிரித்தனைநீசற்குருவே. (௧௬)

பராசர்வியாசனெனப்பார்மீதிலேதிகழ்ந்து
நிராபாசநித்தியத்தினிலேவிதித்தாய்சற்குருவே. (௧௭)
சுகர்கௌடபதராகித்தூயநிலைகாட்டியவா
நிகரில்சுகத்தென்போல்வார்நிற்கவருள்சற்குருவே. (௧௮)
கோவிந்தயோகியெனக்குவலயமெலாம்புகழ
மாவிந்திரசாலமயன்மாற்றவந்தாய்சற்குருவே. (௧௯)
சகத்குருசீசங்கராசார்யபகவத்பாத
மகத்துவநின்பொன்னடியைமருவவருள்சற்குருவே. (௨0)

## இதுவுமது.

திண்புவியிற்றிகழவந்ததேசிகசங்கரனருளைப்
பண்புடனுண்டோங்குபத்மபாதவருள்சற்குருவே. (௨௧)
சந்ததமுமோரியல்பாய்ச்சாயாதுநிற்கவரு
ளெந்தைதந்திரோடகனுமெதிவரனீசற்குருவே. (௨௨)
அத்தாமலகனிதன்புமிகுமெய்யடியர்
வித்தாரமாகநன்குவிளங்கவந்தாய்சற்குருவே. (௨௩)
அடர்புவனபோகமயலாறும்வணமருளித்
தொடர்பறவந்தாளுதியோசுபோதனெனுஞ்சற்குருவே.
போதசுகாதீதமதாய்ப்பொருந்துநிலைபோதித்து
வாதமயறீர்க்கவந்தாய்வார்த்திகனுஞ்சற்குருவே. (௨௫)
நித்தியானந்தமுறுநீங்கவெலாமென்றருளு
நித்தியானந்தவருணித்தியனுஞ்சற்குருவே. (௨௬)
மோனந்தனிலழுந்திமுன்பினிடையறவருளா
யானந்தகிரியெனுமோனானந்தசற்குருவே. (௨௭)
படிறற்றபத்திமுதல்பரஞானமேவவருள்
திடபத்தமாமுனியாய்த்திகழவந்தாய்சற்குருவே. (௨௮)
பேதபந்தமாயுமன்பின்பெருமிதத்தாலென்றனையெந்
நாதனெனவந்தநித்தியநாதனெனுஞ்சற்குருவே. (௨௯)
திரிசியங்கடூர்க்கத்திருக்காயெதிரறவே
யருமையெனவந்தனையோகானந்தசற்குருவே. (௩0)
எட்டுணையும்பானெனதென்றெண்ணுதிருந்தபடிச்
சுட்டறவேநிற்கவருள்சுரேந்திரனுஞ்சற்குருவே. (௩௧)
பேதாபேதங்கடவிர்பெற்றியருளார்பரம
மேதாதிதியெனவேர்மேவியொளிர்சற்குருவே. (௩௨)
சீரார்சிவோகமுறச்சீவமயல்போக்குதியால்
பாரதீவம்சனெனும்பாக்கியமாஞ்சற்குருவே. (௩௩)
அபராதமாற்றியெல்லாமாருயிராயாக்குமுயர்
சுபமெலாமெய்தவருள்சுமதியெனுஞ்சற்குருவே. (௩௪)

## இதுவுமது.

வாணிபீடாதிபராய்வந்தருணின்வாய்மைவழி
வீணவலமெல்லாம்போய்மேவவருள்சற்குருவே. (௩௫)
காமக்கோட்டிப்பீடக்காரணர்களாய்த்தவமுஞ்
சாமியுனையானடைந்தேன்றகைமைசெறிசற்குருவே. (௩௬)
புட்பகிரிபீடமிவர்பூரணர்களாய்ப்பிறங்கு
நிட்பிரபஞ்சநின்னருளோசேசித்தேன்சற்குருவே. (௩௭)
கரபாத்ரமுனிவரராய்க்கவினிந்திரபீடமமர்
பரமார்த்தமேனியநின்பதமடைந்தேன்சற்குருவே. (௩௮)
மற்றுமுளபீடமவின்மல்குமுனையாவுமெனக்
கற்கக்கழறநிதங்கருணைசெய்வாய்சற்குருவே. (௩௯)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநம:

# எந்நாட்கண்ணி.

சான்றோர்வணக்கம்.

நந்திமுதற்குரவர்பொற்றுணயந்துசிவானந்தமணஞ்
சந்ததமும்வீசச்சழக்கொழிவதெந்நாளோ. (௧)
தண்டியடியிணைகடாழுமவர்தம்மைநிதங்
கண்டசிவமென்றுருகிக்கரமுகிழ்ப்பதெந்நாளோ. (௨)
பரம்பரத்துளொன்றுகும்பத்திவைராக்கியஞானப்
பிருங்கியெனுமாமுனியென்பிணக்கொழிப்பதெந்நாளே.
சம்புவிருடியெனுந்தாதையிணையறுசீர்ச்
செம்பதுமத்தாணிழற்கீழ்ச்சேருநாளெந்நாளோ. (௪)
சர்வாபராதமெலாந்தபுமாறருள்சுரந்து
துர்வாசமாமுனிமுன்றேன்றுநாளெந்நாளோ. (௫)
நிதஞ்சலியாதோடுமனநின்றுசிவானந்தமுறப்
பதஞ்சலியார்பொன்னடியைப்பரவிநிற்பதெந்நாளோ. (௬)
மருளறவியாக்ரமபாதமாமுனிவனின்னருளைத்
தெருளுடனுண்டோவலறுந்திறமுறுவதெந்நாளோ. (௭)
தபமன்னியாவுஞ்சழக்கெனவேதாண்டிநிற்க
வுபமன்னியமுனிதாளொன்றிநிற்பதெந்நாளோ. (௮)
அகத்தியர்பொற்பாதமலாபயமெனவுள்ளுடைந்தே
யகத்தெழுமோகங்கடவிர்ந்தறிவுறுவதெந்நாளோ. (௯)
மார்க்கண்டமாமுனிவர்மாணடியிலார்துகளைச்
சீர்க்கொண்டசெல்வமெனத்தேர்ந்தடைவதெந்நாளோ.

ஆதிபௌதிகாதிதுயராறவறமுணரவருட்
சூதமுனியாருவந்துசூட்சிசொல்வதெந்நாளோ. (௧௧)
நைமிசாரணியவனவாசிகள்பொற்றாணிழலிற்
கைமையேனொன்றியுயர்கதியடைவதெந்நாளோ. (௧௨)
அரியசநகசநந்தராதியர்தாட்டாமரைக்கீ
ழுரியசுகாதீதவமுதுண்டுநிற்பதெந்நாளோ. (௧௩)
பெரியோன்சங்கர்பிரான்பிரியாவிடையருளாற்
றெரியேன்சிவோகநிலைதெளிந்தடைவதெந்நாளோ. (௧௪)
நாரதர்பொற்றாணிழற்கீழ்நண்ணிநிர்விகற்பாங்கச்
சீரருள்பொற்றோவியம்போற்றிகழ்ந்துநிற்பதெந்நாளோ.
அருட்பிரகலாதர்தயையடியேற்குறப்பரிந்து
பொருட்படுமெய்ப்பத்திபணிபுரிந்துநிற்பதெந்நாளோ.
கபிலாதிமாமுனிவர்கண்கடைநோக்கெய்திநின்று
சபமாதியோகநிலைசார்ந்துநிற்பதெந்நாளோ. (௧௭)
சாதிசமயமெலாஞ்சார்போதமென்றுதறி
யாதிநாதசித்தருறவாடிநிற்பதெந்நாளோ. (௧௮)
தத்தாத்திரயனடிதாழுமவர்க்கேவலெனுச்
சித்தார்த்தபோதந்திடமுறுவதெந்நாளோ. (௧௯)
சித்தரிருடிகண்முனிவர்சீரருளான்மெய்ப்பரிசாற்
பெத்தமுத்தியாகும்பிணக்கொழிவதெந்நாளோ. (௨0)
அல்லவாமென்னுமலங்கலிங்கமொன்றாகி
யல்லமாப்பிரபுபொற்றாளடைகுவதிங்கெந்நாளோ. (௨௧)
வசவேசராதியரைவாழ்த்திமனமுருகிப்
பிசகாமலோர்படித்தாய்ப்பிறங்குநாளெந்நாளோ. (௨௨)
அல்லும்பகலுமிலாவானந்தத்தில்லையில்வாழ்
செல்வமலியந்தணர்தாள்சேர்ந்திருப்பதெந்நாளோ. (௨௩)
சம்பந்தமாயுலகிற்சாராதுசீர்ஞான
சம்பந்தன்றண்ணருளைச்சாருநாளெந்நாளோ. (௨௪)
எப்பிறவிதோறுநிறைந்திருந்துயிருக்குயிராகு
மப்பனையான்காணவப்பனருள்பெறுவதெந்நாளோ. (௨௫)
இந்திரசாலங்கனவென்றிவ்வுலகிலாழாது
சுந்தரனார்பேரருளிற்றோயுநாளெந்நாளோ. (௨௬)
வாதவூராளியெனும்வள்ளலருளான்ஞான
போதவெள்ளமூழ்கிப்பொலியுநாளெந்நாளோ. (௨௭)
கறைவைத்தகண்டனடிகாணும்வழியீதெனவே
யறுபத்துமூவரெனையாதரிப்பதெந்நாளோ. (௨௮)
திருவாய்மொழியுரைத்தசீராளர்தந்தயையா
லருமையாரார்த்திபதமணுகிநிற்பதெந்நாளோ. (௨௯)

எவ்வமனுகாஞானவிருநிதியமோங்கவரு
ளௌவையார்பற்றுக்கோடாகிநிற்பதென்னாளோ. (௩௦)

திருவள்ளுவநாயனாரிருதாள்சேர்ந்துமலக்
கருவுள்ளுறுதவிதங்காணுநாளென்னாளோ. (௩௧)

பட்டினத்துப்பிள்ளைநற்றாள்பற்றிப்பவக்கடல்விட்
டெட்டிப்புணர்ந்துகரையேறுநாளென்னாளோ. (௩௨)

பத்திமிகுஞானம்பதிந்துட்பரவசமாய்ப்
பத்திரகிரியாருறவுபற்றிநிற்பதென்னாளோ. (௩௩)

மரணமுனமென்னிருகண்மணியானவள்ளலெனு
மருணகிரியாரெனைவந்தாதரிப்பதென்னாளோ. (௩௪)

பிள்ளையாரருள்பூண்டபெரியரகக்கண்ணுடைய்
வள்ளலாதியர்தமருள்வாய்க்குநாளென்னாளோ. (௩௫)

இகபரமற்றேகமதாயேகாந்தவாழ்வடையக்
குகைநமசிவாயர்பதங்கூடுநாளென்னாளோ. (௩௬)

அருவமுடனுருவமதாயானந்தமாயிலகுங்
குருநமசிவாயர்பதங்குறுகுநாளென்னாளோ. (௩௭)

அவமாக்குமாயையறவானந்தமோனமுறச்
சிவவாக்கியர்பதஞ்சென்னிவைப்பதென்னாளோ. (௩௮)

வித்தாரமாகிவளர்வீண்சழக்கதெல்லாம்போய்ச்
சத்தானவேமனர்பொற்சரணடைவதென்னாளோ. (௩௯)

சாலமனமுருகித்தள்ளாடுநாயேன்மேற்
பாலையானந்தருட்பார்வைவைப்பதென்னாளோ. (௪௦)

சிவப்பிரகாசப்பெருமான்சீரருள்பெற்றுறவால்
தவப்பயனெலாமெய்தித்தழைத்தொளிர்வதென்னாளோ.

குமாரதேவன்கழல்கள்குறுகிப்பசுத்துவம்போய்ச்
சமாதிநிலைபெற்றெனதுசலிப்பறுவதென்னாளோ. (௪௨)

தத்துவராயர்பொற்றாடாரகமாய்நம்பியுய
ரத்துவிதானந்தமயமாகிநிற்பதென்னாளோ. (௪௩)

தாயுமானாரருளாற்றாதான்மியங்கடவிர்ந்
தாயுமறிவோடுறங்கியயர்வறுவதென்னாளோ. (௪௪)

தோப்பாவெனவமுதந்துய்ப்பித்தெனைவிடுத்துக்
காப்பான்கருணைவெள்ளக்கடல்படிவதென்னாளோ. (௪௫)

வேதசிரோணிவந்தவிமலன்சிதம்பரன்மெய்ப்
போதமறவாதுதினம்போக்கியுய்வதென்னாளோ. (௪௬)

அரியபிரமானந்தனருள்வழிவந்தாதரித்த
வரியகிருஷ்ணானந்தவெதியுரைபலிப்பதென்னாளோ. (௪௭)

இருக்காதிமாமுனிவரிசைத்தவழியேநடந்து
திருக்காய்த்திரிசியம்போய்த்தேசுறுவதென்னாளோ. (௪௮)

எண்ணரியசித்திமுத்தியெய்துமருளாளரிரு
கண்ணிமைபோலென்கருத்தைக்காக்குநாளெந்நாளோ.

அரன்மாலயன்பதஞ்சேராத்தருறவாலகண்டத்
திரமார்சுவானுபவஞ்சேருநாளெந்நாளோ. (ரு0)

மேலோராய்ச்சென்றோர்சேர்வார்செல்வர்மெய்புறவிங்
கேலவிசையுமன்பினெய்துநாளெந்நாளோ. (ருக)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# நால்வரருட்சிந்தனை.

## ஆளுடையபிள்ளையார்.

ஆசிலாக்கவிதைமழைபொழியுமேக
வானந்தத்தெள்ளமுதேயரசேயுன்னைப்
பேசுவாரெவரவர்தமுள்ளந்தங்கிப்
பிறங்குதிருத்தாளாயிப்பேதையேனை
யேசுவார்க்கிடமாகவையாதிம்மை
யினிற்றுனேயெணங்கண்முடிந்தியல்பாய்நிற்க
வாசிபுகன்றருளுதிசீகாழிவந்த
வாரியசம்பந்தனெனுமமலவாழ்வே. (க)

வாழ்வெலாமுதவுதெய்வஞானபந்த
வாரிதியேகான்கருணைமலையேவிண்மண்
ணூழ்வலியானுயர்ந்திழிந்தங்குடனிங்காக
வுலையவிடாதுனதருளுக்குரிமையாகுங்
காழ்மிகுமெய்ப்பத்திநெறிகாட்டிமேலாங்
கதிகாட்டியாள்வதுன்றன்கடனுங்கண்டாய்
தாழ்குழன்மாதேவியுமைமுலைப்பான்மூன்றாய்த்
தவழ்பருவந்தனினருந்தித்தழைத்ததேவே. (உ)

தேவதேவெனும்பரனூர்திகழுமேலாந்
திருக்கோலக்காவடைந்துதிருமுன்னின்று
மாவடுகைதோய்தரவொத்தறுத்துப்பாட
மனஞ்சகிக்கலாற்றாதுவள்ளலெங்கோ
னுவுறழ்மந்திரபஞ்சாக்கரநயஞ்செய்
நல்லருளாற்நீட்டியபொற்றாளமங்கை
மேவுறச்செய்திடப்பாடியாடிநின்ற
வித்தகசம்பந்தகுருமணிவிளக்கே. (ந)

விளக்கொளிபோனினதருளென்னகத்துண்மன்ன
விகிர்தவிருள்பறக்கவன்புசிறக்கநாளுங்
களிக்குமுபசாந்தவெளமூழ்கிச்சுத்தக்
கரணமொன்ருங்கூடலியைக்கடந்துமோன
வெளிக்குள்வெளியாய்விதியைக்கூற்றைத்தாண்ட
மேதகுநின்கடைநோக்கின்வேதித்தாளா
யுளற்கருஞானனந்தவிரகம்பொங்கு
முயர்காழித்தமிழ்க்குரிசிலெனுமெம்மானே. (௪)

## ஆளுடையவரசு.

எம்மானுத்தூளனமிற்றென்றுவையத்
திசைநிறுத்தியமண்சூழுவிகலார்நெஞ்சப்
பைம்மாசுபறித்தெழுந்தபரிதியாகும்
பாமவுனைப்பணிந்திடலென்பாக்கியமன்றோ
பெம்மானின்சீர்திகழ்வல்லபமென்சொல்கேன்
பெரியர்புகழ்திருநாவுக்கரசேமாழ்கி
வெம்மாயவுலகிடையானிடையாவண்ண
மிகுமருள்வைத்தாளுதிமெய்யடியர்வேந்தே. (௫)

வேந்தரொனவுலகாளுமவர்தம்வாழ்வும்
விண்ணவர்வாழ்வுங்குலைந்துவிழுமென்றஞ்சி
யாய்ந்தடியர்நின்வழிகண்டுய்ந்தாரந்தோ
வலமருமிக்கடையேனிங்கவலமானேன்
வாய்ந்தபெரும்புகழப்பமுனியேயென்னை
வாவென்நின்வான்கருணைவழங்கினுய்வே
னேய்ந்தமனவுபசாந்தமொன்றிநாளு
முழ்வாரப்படைசுமந்தவுறுதிப்பேறே. (௬)

## ஆளுடையநம்பிகள்.

பேருகிநிற்குமுண்மைபேசவந்த
பெருந்தகையைப்பித்தனெனச்சீறியன்னோன்
மாறுதபெருங்கருணைவடிவங்காட்ட
வாயாரப்பாடுமியல்வரம்பெற்றோர்ந்த
வீறுனபிஞ்ஞகவென்றிசைத்துப்பாடி
விண்மாரிசொரியவருள்படைத்தாய்போற்றி
யாறுறுக்கப்புறத்திலமர்வானெண்ணி
யடைந்தனன்வன்றொண்டனெனுமண்மையோனே

அண்மையுடன்சேய்மையுமற்றுருகுழக்க
 ணவிர்சடையெம்பெருமானின்றனக்காய்த்தூது
மண்ணுலகினடந்தனனென்றாலுன்சீர்த்தி
 வரம்பிஃதென்றுரைப்பெளிதோமாசொன்றில்லா
யுண்மையுளவறிந்துய்யும்வழியைக்கூட
 வொன்றுவிப்பாயுத்தமனேயோங்குசெல்வத்
திண்மையறிவுடன்கயிலையானையூர்ந்து
 தேவர்தொழவமர்ந்ததிருவுளத்தினென்றே. (அ)

## ஆளுடையவடிகள்.

ஒன்றெனவும்பலவெனவுமுரைக்குமாற்ற
 முணர்ந்துணர்ந்துள்ளுடைந்துருகியோவியம்போற்
சென்றுசென்றங்கணுவணுவாய்த்தேய்ந்துதேய்ந்து
 திகழ்ந்தொன்றாய்த்திரிசியங்கடரும்வாய்மை
யின்றெனதுளில்கவருளாயெங்கோவே
 யின்னறவிர்மருந்தாகவாதவூரின்
வென்றிமிகவந்துமன்றுண்மறைந்துநின்ற
 வித்தகவேதியர்திலகவேதவித்தே. (கூ)

வித்தாகிமேல்கீழ்மற்றெங்குமாகி
 விளங்குபரன்மண்சுமந்துவிபுலங்காக்கக்
கைத்தாங்குபிரம்படியேற்றனனென்றானின்
 கனதையெவர்புகலவல்லார்கடையனேனைச்
செத்தாலங்கேசுவவொன்றிசைத்தநேயந்
 திறம்பாமலந்தமொன்றத்தெளிவிப்பாயே
வத்தாகுமவனுண்மகிழ்பூப்பப்பாடு
 மாணிக்கவாசகமாமணிவிளக்கே. (க0)

பிரம்ஹார்ப்பணம்.

ஶ்ரீசந்திரமௌளீஶ்வராயநம:

# குருவருட்போற்றியகவல்.

ஏகமேவாத்வைதம்பிரம்ம
மாகுந்தன்னையறவேமறந்து
பாவனையதனுற்பரவியசகமொடு
சீவபரமெனுந்திரிசியமகல்வான்
சங்கரஶ்ஶங்கரஸ்ஸாக்ஷாத்தெனவே
துங்கநின்பதவடியார்தொழுதிறைஞ்சக்
கருமமாதியிற்காரணங்காண்பவர்
தருமநின்னடிமுடிதரவகங்குழையப்
பழுதறவீண்டுரைபகருநாமாரெனத்
தழுதழுத்தன்பர்கடமைநினைந்துருகச்
சித்தியெலாந்தருசீர்பதியெனவே
சித்தர்குழாமொருசேர்ந்தடிவணங்க
வஞ்சனலாதியரஞ்சலினகமகிழ்ந்
தெஞ்சுதநிலைமுடிவெய்துறவணங்கத்
தன்னேரில்லோன்றனைநயந்தணுகி
யின்னலதகற்றவிசைகுதுநாமென
முத்தர்களொருசார்முருகவிழ்மலர்கொடு
வித்தகநெறிபடவிதந்தருச்சனைசெய
வேதாகமவறமிருதிபுராணநூல்
நாதாவெனமிகுநாதமொடொலித்திட
விண்ணவர்மண்ணவர்விரவிவந்தணுகிக்
கண்ணுறக்கமதுருக்காட்சியனேயென
வாரணமுடிவில்மர்பழம்பொருளாங்
காரணகுருநின்கழலிணைவிளங்கப்
பேருருமாயாவித்தைகள்பெயரப்
பாருவந்துதித்தபரம்பொருள்போற்றி
சச்சிதானந்தமாகியதன்மய
வச்சிவமுணரவங்கமருமுப்புடியா
யச்சமாரனுர்தாதியவிடயமதுறி
ணச்சுறுபுடியொருமூன்றுநண்ணிடுமா

லறிவறியாமையினுமிருதிரிபுடி
செறிபரிபூரணச்சீர்மையினிலதே
யங்ஙனமாகலினூர்ந்தொருதனிமைபி
னிங்ஙனமங்ஙனமென்றிவணியம்புத
னேதியாவணமுனேதியதுசெய்பாவா
தீதமதாதலேதேர்ச்சியதாகலி
னுய்ந்தறிவுறவமைந்ததுவிதுவயலென
தோய்ந்துபசாந்தமதொன்றிடின்முறையே
யையமுடன்றிரிவாதிகளொரீஇ
யுய்யுமெய்ந்நெறிவந்துற்றிடுமுறவாய்
மடமுடலிடர்தருவாசனையொழிபிற்
படர்சகசீவபரமிறந்தொன்று
மறிவறியாமையினணுகுதல்பந்தஞ்
செறிதருமஃதறநிகழ்தருமுத்தி
யித்திறனுமிருவியலறமிகலே
யத்திபாதிப்பிரியாந்தமதாகுமென்
றுதரித்தடியேனருந்துயரகற்றிச்
சீதமென்மலரடிசென்னிதந்துறுமுயர்
விழிவிகந்திணைதபுமௌனயலதிலையென
வொழிவில்பேரின்பவுததியின்மூழ்கி
யழகமர்சேவடிக்காம்பணிசுமக்கும்
வழியருண்ஞானவரோதயபோற்றி
கருமமைந்தெனுங்கழனெறியாமவை
மருவிருவழிமனமாசறநடந்து
பாகியவநன்யபரமவேகாந்த
மாகியவன்பவையாமணிகெழுதிரி
வேணிசங்கமநனிமேவியாங்கைதக
ணணியொதுங்கிநடந்திடப்படிந்து
மந்திரலயவடராசமாயோக
முந்துசோபானமுதுகளையிவர்ந்து
தண்ணருள்பொதுளுந்தாயகமெனவொளிர்
நிண்ணயஞானநிவேசனமெய்துறு
மடைவினுக்கெதிரேகவறிவதிகந்து
புடைபெயராவியல்புகன்றிடுமுறையில்
வத்துநிரவயவடிவெனவயங்கிச்
சத்தமுமனமுந்தவழ்நிலைகடந்தங்

காமலவெனறவிர்ந்தசலமதாகி
நாமரூபாதிகணனுகுதலிலதாய்
நிற்றலினிங்ஙனநிகழ்ந்துறுபோத
நற்றுணையதுகொடுநானெனுமகமன
நழுவியிரண்டறுநவில்சுகமிழந்து
முழுதுநாமெனமுரணறுமுதுநிசமுறன்
முன்பினற்றேங்குமுப்பொருண்முடிவென்
றன்பிலேற்கிரங்கியறைந்தனைபோற்றி
மருட்கடன்மூழ்குறுமடமையேற்கிரங்கி
யருட்குருவாகிவந்தருளினைபோற்றி
யத்துவிதான்மவனுபவநிண்ணய
மித்திறனுமெனவிமையுமுற்பொழுதிற்
கைத்தலநெல்லிக்கனியெனவளித்த
புத்தநிர்த்தொந்தபுனிதனேபோற்றி
சத்தியஞானனந்தவாநல
மொத்துறுதனியாயோவியமாமென
வல்லும்பகலுமறவொருதன்மையுறாய்
நில்லென்றருளியநீதனேபோற்றி
யங்கங்கதுவதுவாகியமைந்தரு
டங்குந்தரவுயிர்த்தாரகபோற்றி
கருணையின்டியேன்கருத்தகமலிந்தே
யிருவினையொழிந்திடவிசைந்தனைபோற்றி
தவாதவமிறந்ததலமதேதன்மய
சிவோகமதாமெனுஞ்சீர்பதிபோற்றி
யாதிமாமாயையினுந்திரிசியமெலா
நேதிசெய்நிரஞ்சனநிராமயபோற்றி
சொன்முடிவெனநவில்சொருபவானந்த
மன்னுமாப்பொருள்சேர்மகிபனேபோற்றி
சராசரமுழுதுஞ்சபளாத்துமமாய்
நிராகரவடிவாய்நின்றனைபோற்றி
தற்சொரூபந்தனிற்றுணுய்த்தனிமையி
னிற்கவென்றருளியநிமலனேபோற்றி
யண்மையுஞ்சேய்மையுமாகியவற்புத
வுண்மையுவந்தருளொருவனேபோற்றி
பரமருளுயிரொன்றெனவுணாபரிசார்
திரநிலையீதெனத்தெரித்தனைபோற்றி

நித்தியமுத்தநிலையாமனுபவ
வத்தெனவயங்குமாண்பினைபோற்றி
யடிமலர்வீழ்ந்தெழுந்தார்த்துநின்றிடுமெவர்
செடிமயலறவசைத்திடுசிரம்போற்றி
சஞ்சிதாகாமியந்தவழ்பிராரத்துவ
மஞ்சவிழித்தருளம்பகம்போற்றி
மின்செகவாசகமேவியவிகிர்தனென்
புன்சொனயந்தவிபுலச்செவிபோற்றி
மலர்மணநுகருமாட்சியினடியார்
குலநலங்கவர்நாசிகைக்குமிழ்போற்றி
தானிகர்தனக்கென்றுந்தகுநிலைதரு
கானிழிமொழிச்செங்கனிவாய்போற்றி
தஞ்சமென்றிரந்ததமியனேற்கிரங்கி
யஞ்சலென்றமைத்தவமர்கரம்போற்றி
யுலகியலொருவுமுத்தமருளங்களிகூ
ரிலகுபொன்மேனியிருநிதிபோற்றி
சத்தினிபாதத்துத்தமர்தலைமிசை
வைத்தநின்சீரடிவண்மலர்போற்றி
யோர்வரிதாமுனையுதவியிங்கடியேன்
பேரறமாற்றியபெருந்தகைபோற்றி
குளிர்பொழில்வாவிசூழ்குலவுறுகாஞ்சி
வளனெனுங்காமக்கோட்டிவான்பீடத்
தமர்ந்தனைபோற்றியண்டர்கடொழுதெழுதரு
நிமிர்ந்தகன்றுழ்ந்தொளிர்நிலைகொள்சிங்கேரியி
ணருங்கலைமகடவிசார்ந்தனைபோற்றி
நெருங்கியென்றனதுளநேர்ந்தனைபோற்றி
போற்றியகண்டிதபுரணதேஜோமய
போற்றிபோற்றிபுராதனபோற்றி
போற்றிபோற்றிசிவசிவபோற்றி.

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# அனுபவானந்தவகவல்.

ஆதியீறிலதாயகண்டிதாகாரமாய்ச்
சோதியாயொன்றாய்ச்சுருதியின்முடிவா
யநாதியசங்கவமலானந்தமாய்
மனாதிகடொடராமகத்பரிபுரணமா
யருவாயுருவாயருவுருவமதாய்த்
திருவாய்நிறைந்ததேவர்கடேவா
யெங்குந்தானாயிலகுறுஞ்சுடரே
பொங்குமுருவம்புனைந்தருளுருவமாய்த்
தொண்டர்கள்சூழத்தொழுதெழமுனிவர்க
ளண்டர்கள்ஜயஜயென்றஞ்சலிகூப்ப
நான்மறையொலித்துநாற்றிசைபோற்ற
மாநிலத்தெவருமகிழ்ந்தினிதேத்த
ஞாலமேன்மனிதனாய்நண்ணியவதிசயக்
கோலமீதென்றுகூறுதற்பாற்றோ
பலவாந்தொன்னூற்பண்பேவடிவுகொண்
டுலவாவின்பமுதவுபதாம்புயத்
தணியுமவனருகழைத்தகையணியும்
பணிபுரியடியர்பவப்பிணியெலாமொரு
கணத்தினிற்போக்குங்கண்ணோக்கணியு
மெணற்கரும்புவனசற்குருவெமதுளநிதி
யாதிசங்கரனாரருளமுதருந்தி
யோதுசாத்திரங்கட்குவமையிலணியு
மிங்ஙனமென்றிவணோர்தவழ்மணிமுடித்
துங்கவனந்தனுந்தொகுத்துரைப்பரிதே
மாவீரேழ்புவனங்களின்மலிந்து
மூவேழ்பிறவியுருவணமுனைந்து
பொல்லாப்புலையேன்புன்மையைமாற்றுபு
வல்லேயறிதியென்றெனைமதித்து
வாக்குமனமுங்காணாவதீத
நீக்கருநிட்டைநிலையிஃதென்றும்

போக்கொடுவரவுமிலாதொளிர்பூரண
மோக்கமதெனுமுயர்முடிவிஃதென்றும்
வாரணன்முதலியவானவரறியாக்
காரணப்பொருளைக்காட்டியகாரணன்
அஃதெங்ஙனமெனினரும்பொருளாந்தனை
யிஃதஃதெனுஞ்சுட்டறவொருதன்மையி
னிற்றியென்றத்தமத்தகசையோகநியதி
மற்றஃதியற்றிமாணுறவளித்த
வற்புதமாமவ்வனுபவநுகர்ச்சியிற்
சொற்பொருளியாவுஞ்சொருபாகாரமா
யலகில்பல்லுயிர்களனைத்துமநன்யமா
யிலகுவதாலஃதெங்ஙனம்புகல்கே
ளாயினுமவன்றனருட்கொடுசிற்சில
நாயினேனிசகாமாசையினவிலுகேன்
சாத்திரஞ்சமயந்தருக்கமுமாயைக்
கோத்திரமென்றெமக்குரைத்தளவறுசீர்
மந்திரமூதன்மாயோகவாதனையெலாம்
பந்தமின்ஞானப்பார்வையாற்றகித்து
நெஞ்சதுபயிறிரிகாலநிவிருத்தியிற்
சஞ்சிதமாதிகடகர்ந்திடுமென்றும்
பிராகிருதமாமனுர்தாதிகளறவப்
பிராகிருதசத்தாதிகணணிபயிற்றி
முக்குணசகிதக்கியானமேமுதலார்
பக்குவாங்கங்கள்பிராகிருதமென்றும்
முக்குணரகிதக்கியானமேமுதலார்
பக்குவாங்கங்களப்பிராகிருதமென்றுஞ்
சத்தேதூலஞ்சித்தேசூக்குமம்
வித்தானந்தமெய்ம்மேவியகாரண
முருவகமாகியிங்கொன்றுமிம்மூன்றுங்
கருதுமிடத்தினிற்காரியமென்று
மத்திபாதிப்பிரியங்காரணமென்றுஞ்
சுத்தமாஞாதுருவாதியதொடர்பினற்
சொன்மனமிறந்தசுயம்பிரமமதை
யுன்முகநாட்டத்துணர்கையினுணர்வா
மஃதுபிரத்தியேகவான்மாவறியப்படு
மஃததிட்டானப்பிரமமதெனவு
மித்தகவாமிவ்விரண்டினையிக்கிய
மெய்த்தநான்மறைமுடிமேவுமாவாக்கியத்

தானீயதுவாமதுநீயாமென
மோனமதுறவேமொழிந்தபினிலக்கணை
யாயுமிடத்துமூன்றுமென்றனனவை
வீயுமஞ்ஞானம்விவேகத்தின்மையா
னஃதேஜகர்லட்சணையறிதரவா
மிஃதுநாமல்லவென்றுஞானத்தான்
விடுத்துத்தன்னமிசம்விடாமையினாலே
யடுத்தவிதற்கேயஜகர்லட்சணையென்
றறைகுவதாகும்பிரமத்திடத்தி
லுறையுஞானத்தொடஞ்ஞானமதொன்றுறா
தாகையினாலிவ்விரண்டையுமகற்றி
வாகைசேர்தன்னைவிடாமனனமதா
னிதுவேஜகதஜகர்லட்சணையதென்
பதுவாமென்றினிதருளியதன்றியு
நிலவுறும்பிரமநிருவிகற்பமதாங்
குலவுறுமுணர்வாற்கூடியொன்றாகுதல்
சவிகற்பமதாஞ்சமாதியதென்றன
னிவிகற்பங்களிறந்தவிடத்தி
லதிசயமீக்கொளவாருயிர்த்துணைவன்
பதிபெறநிறுவியபான்மையதலதூஉம்
தத்துவமுடிவாய்த்தவழ்தருமூவகை
யுத்திசேரனுபவமுறைத்திடினஃதி
லண்டாண்டத்தனுபவமுப்பொருளும்
பிண்டாண்டத்தனுபவமுறுபெற்றியான்
முன்னரினுரைத்தமும்மையும்வாச்சியம்
பின்னரினுரைத்ததுபேணுலட்சியமா
மிருமைசேர்வாச்சியலட்சியவியலற
வருமையார்பிரமாண்டத்தனுபூதிய
துறுவதுதிண்ணமிங்கேனுமொண்குருவாற்
பெறுசுயலாபப்பேறெனுமொளியா
மருள்வளமோங்குறவமர்தருபோதவண்
பொருளுரிமையினலாற்பொருளாகாமையி
னதுலநல்லாரியனதிகனென்றறிதா
விதமாய்ச்சங்கரனிசைத்தனனாகலி
னதிசுகவிவ்வயிக்கியவனுட்டான
விதிமுறைநின்றால்விளைந்ததுமன்று
நிற்குணப்பிரமநியதியுமன்று
சற்குருவருளாற்சாலநண்ணியதா

முமாபதியுரைத்தவொளிர்கிதைப்படி
நமானவிலத்தகுநயவனுபவத்தாற்
குருவேசாட்சாத்பிரமமுங்குழகநீ
மருவியபிரமமுமாமடைவிதுவே
யிங்ஙனமிருவர்தமயிக்கியமேதெனிற்
பங்கமில்கீரங்கீரத்தோடும்
பகர்தருதோயந்தோயத்தொடுமென
நிகரிலயிக்கியநேர்வதுநிண்ணய
மென்றிவைநிகழ்த்திமற்றிதுமுதலுணர்வி
னொன்றியநடிப்பினோங்குலகொருமூன்றினு
மத்தொய்தமாயமர்ந்தமலநல்லாரியன்
சுத்தசந்நிதியிற்றெழும்பனாய்நடிக்குக
வென்றுசிகளறைந்தருளியெங்கோமான்
பொன்றுப்பதமலர்சிரமிசைப்பொறித்திட்
டச்சிதானந்தவருளமுதருத்தி
யச்சுதானந்தமென்றெனையழையா
வினிப்பிறவாமுடியேய்ந்தபிறப்பினிற்
றனிப்பவர்க்கலதிலையீதெனச்சாற்றினன்
மெய்த்தவரறியுமேதகுகருணையான்
பொய்த்தவரறியாப்புனிதவரோதயன்
நிரதிசயானந்தநிர்க்குணப்பொருளைக்
கரதலாமலகமாய்க்காட்டிடுமுறவோன்
சத்தியஞானசதோதயவாழ்வஃ
தெத்திறத்தவருமெய்திடலாகுமென்
றுற்பவநாசமிலாவகையுறவருட்
சிற்கனமாரிசொரிசிற்சுகோதயன்
சுஜாதிகவிஜாதிகசுவகதரகித
நிஜானந்தபூரணநிருமலானந்த
னவாங்கமெல்லாமாற்றியவற்புதன்
றவாங்கமெல்லாஞ்சாற்றியதற்பர
னிங்கொடங்கென்பதிரண்டறவோங்கி
யெங்குமாய்நிறைந்தவேகநாயகன்
நித்தியானந்தமுதவும்
வித்தியானந்தவிமலதேசிகனே

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநம:

# தியானமஞ்சரி.

துதிகுருசரணந்துதிகுரு சரணந்
துதிகுருசரணந் துன்மதியே
விதிவழியான்வருமுடலம் விழுமுன்
வித்தகவடியர்கள்விரவுறு திருமுன்-துதி.

இகபரவாழ்வாமின்னலிற் சுழன்றே
யெங்கோனெழிலருள்பெறும்வகை யிழந்தே
யகமகமெனத்தனுவாதியி லுழன்றே
யவனவளதுவாயழிகுவ தொழிந்தே-துதி.

மாயையவித்தைதமயல்கெட மீறி
மகதகங்காரப்பேய்மாண்டிட நூறித்
தீமைமிதித்ததெனத்திரிவதின் மாறித்
தேசிகனடிகுடிசேர்த்தக மாறித்-துதி.

ஆசைவலையுட்சிக்கியவித்தையுல வரங்கி
னமிழ்ந்தகங்குழைந்திழிந்தழிந்தவதற் கிரங்கி
மோசமிலதென்றுன்னிமோனத்துடன் பிறங்கி
முகிண்மலர்த்தாணிழன்மோகத்தணைந் துறங்கித்-துதி.

வரவுபோக்கிரண்டறும்வாழ்வினை நாடி
வாழ்முதலேயென்றுவாயாரப் பாடிக்
கரவடமாகுநின்களங்கத்தைச் சாடிக்
காணற்கரியோனைக்கலந்தொன்றாய்க் கூடித்-துதி.

பவாம்புதிகடத்தும்பலதின னென்றும்
பணிபுரியடியர்தம்பரிசின னென்றும்
சிவாத்விதவிஷ்ணும்யப்பிரம னென்றும்
சின்மயசிற்பரசிச்சச்சீர்பதி யென்றும்-துதி.

கருதிக்கருதிமலர்கரங்கொடு சாத்திக்
கரவடமலமனங்கரிலற மாற்றி
யரியதிருவுருவையமைவுட னேத்தி
யலமரலறவருளபயமென் றுற்றித்-துதி.

ஆறுறுதத்துவங்களாராய்ந்தறிந் துதறி
யாசாதிபாசமயலாகாதெனச் சிதறிப்
பேறுகிநிற்குமுண்மைபேசாயெனப் பதறிப்
பீடார்விவிக்தபதம்பேராவணங் கதறித்- துதி.

நித்தசுத்தபுத்தமுத்தநிர்ச்சபளிதத்தை யுற்று
நிச்சயமழித்தெழுந்துநிற்குமித்தையுட்க வற்று
நிர்த்தொந்தமணஞ்செழிக்குநிர்ச்சிந்தைமயத்தைக்கற்று
நிட்பிரபஞ்சநிர்ச்சலத்வநிட்டைநிரந்தரம் பெற்றுத்-துதி.

அரனைப்பரனைப்பரம்பரனையகத்தி னெண்ணி
யருளைப்பொருளெனவேயடையுமவனை நண்ணி
யுரனையுரியமனையெனவங்குறையுந் தண்ணி
னுடையவுருவைந்துடையொளியைச்சபங்கள் பண்ணித்- துதி.

ஹரஹரசிவசிவவெனவக முகமனி
யதுலிதவதிரசவஜபம தகமுனிப்
பரவறிவொடபரிமிதசுக மதுசரி
பதியினிற்றனிபசுபதியரு ளனநனி- துதி.

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# ஆனந்தலஹரி.

சிவோஹம்சிவோஹம்சிவோஹம் - சச்
சிதானந்தரூபசின்மாத்ரசிதாத்ம - சிவோஹம்.

வேதமுடிவின்விளங்கும் - சத்திய
விமலன்விகிர்தமறவேதுளங்கும்
பாதம்பாலித்தேகளங்கம் - பாறும்
பரிசுறுபண்பளித்தானகளங்கம் - சிவோஹம்(க)

அவனவளோடதுவாகி - யின்று
ளனூர்தசடதுக்கத்தாலழிந்தேகி
நவமிகுநாதனுளாகி - மன்னு
நாட்டம்வைத்தேனின்றுநானேதானுகி - சிவோஹம்.(உ)

கோசக்குகையைப்பிரித்து - முக்
குணமாதிதத்துவக்கூட்டமரித்து
ஆசைவலையங்கெரித்து - அண்ண
லருள்விழிவைத்தானென்னையாதரித்து - சிவோஹம்.(ந)

ஓர்ந்திடிற்பொருளொருமூன்றும் - அவ
னுன்னுதொழியுமுபாயஞ்செயான்றும்
தேர்ந்தருள்சேருரையூன்றும் - ஒன்று
தெளியச்சொன்னான்பரதேசிகன்சான்றும் - சிவோஹம்.(ச)

பாவாபாவாதீதபிரம்மம் - தானே
பார்முதலாகப்பரவியதர்மம்
ஓவாதொலிமறைமர்மம் - ஆன்
வுளவுணர்ந்தேனொழிந்தேனுறுகர்மம் - சிவோஹம்.(ரு)

பெத்தமுத்தியதாகும்பேதம் - பின்னு
பின்னமென்றோர்ந்துபிறந்ததிங்கேதம்
சுத்தநிர்த்தொந்தசுபோதம் - தன்னிற்
சும்மாயிருக்குஞ்சுகம்பெறனீதம் - சிவோஹம்.(சு)

ஆதரித்தருகழைத்தென்னை - யைய
னன்னைசிசுவையணைவகைமுன்னை
வாதனைமாய்தரத்தன்னை - யினி
வாய்பேசாவண்ணம்வழங்கியதென்னை - சிவோஹம்.(எ)

நானவன்வேறெனநாடிப் - பல
நாள்கழித்தேனுயினேனெனைநேடி
மானுபிமானங்கள்சாடி - வள்ளல்
வானவர்வாழ்த்தவைத்தானிதென்னேடி - சிவோஹம்.(அ)

சுட்டறுசோதிமாதேவன் - றன்னைச்
சுட்டாதுசுட்டித்தெரித்ததென்னேவன்
கட்டறுகாரியசிவன் - தற்
காரணவான்மக்கலப்பினென்றுவன் - சிவோஹம்.(கூ)

நானேநீயாநயமாகும் - இதை
நாடென்றருளவஞ்ஞாய்மதாகும்
ஞானுகாரநலமாகும் - நிலை
நாடிநின்றேனிதெனுனிலையாகும் - சிவோஹம்.(க0)

நீதிநிகமாகமாதி – போத
நிட்களசகளநியாமகசோதி
கோதின்ஞானனல்கொண்டுதேச் – செம்பிற்
குலவெண்பொன்செய்குருரசவாதி – சிவோஹம்.(௧௧)

இல்லாவிருண்மாயக்கோட்டை – மதில்க
ளெல்லாமிடியத்தகர்த்துமெய்வீட்டை
வல்லேயளித்தவன்மாட்டை – மேய
வளமலிதரவியம்புவன்ஞானப்பாட்டை – சிவோஹம்.(௧௨)

உலகத்துயர்பொருளாகி – நாயே
னுள்ளத்தமருமொளிரருளாகி
யிலயமின்மனத்திருளாகி – யெந்தை
யிருப்பதென்னேயெவனுந்தெருளாகி – சிவோஹம்.(௧௩)

கன்றுகற்றுவினைத்தேடிக் – கண்டு
கலந்துண்மகிழுமக்காட்சியினேடி
யின்றுபெற்றேனருண்மூடி – யவனே
யேத்தியிருக்கமகிழ்ந்துகூத்தாடி – சிவோஹம்.(௧௪)

மோனவாடந்தருண்முத்தன் – அவன்
மூவாமுழுமுதலாகியசித்தன்
தானநிதானசமர்த்தன் – அத்
தனிபற்புகழ்தமியேனவன்பத்தன் – சிவோஹம்.(௧௫)

தற்பதந்தொம்பதந்தன்னி – னெடு
தருமசிபதவிலக்கியத்தகையுன்னி
நிற்குநிசபொருண்மன்னி – நிற்க
நிருவிகற்பாங்கநிறுவினன்றுன்னி – சிவோஹம்.(௧௬)

ஆதிமுற்சோதியங்கங்கே – யமர்ந்
தசைவின்றியசையுமதிசயமிங்கே
யோதியுணர்பவரெங்கே – யயல
தொன்றுமிலதுளவெலாமவர்பங்கே – சிவோஹம்.(௧௭)

சிற்சுகவாரிசெழிக்கும் – அருட்
செல்வக்கொடியுயர்த்தோன்சீர்மொழிக்கும்
வெற்றிகொண்மேனிவிழிக்கும் – இணை
வேறுண்டோமேல்கிழப்பாலிப்பால்கொழிக்கும்- சிவோஹம்.

சகத்குருவாகும்பிரதாபன் – சாரும்
சதசத்திரண்டிற்றவழ்ந்திடுதீபன்
மகத்பரிபூரணமாபன் – மறை
மன்னுபுராணமலர்த்தியபூபன் – சிவோஹம்.(கசு)

காமக்கோட்டிப்பீடக்காந்தன் – மிகு
கருணைபொழிந்தன்பர்கட்கருள்வேந்தன்
நாமக்கோட்டிநவில்சாந்தன் – எற்கா
நலமியாவுநல்குநால்வேதவேதாந்தன் – சிவோஹம்.(உ0)

ஷண்மதோத்தாரானுரூதன் – உயர்
சரஸ்வதிபீடந்தயங்குபொற்பாதன்
உண்மையுணர்த்தும்பிரபோதன் – ஜக
தோங்கதிட்டானசங்கரகுருநாதன் – சிவோஹம்.(உக)

சிவார்ப்பணம்.

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# முத்தியுபாயம்.

எல்லாமாயெழிலாகவிசைப்பதும்
பொல்லாமாயைப்புணர்ப்பதொசிப்பதும்
சொல்லார்ஞானசுகாரம்பதேசிகன்
சல்லாபந்தவழ்தாண்மலர்சார்தற்கே. (க)

ஏதமற்றிங்கிருந்திடலாவதும்
போதமுற்றுப்பொருந்திடலாவதும்
நீதநிர்க்குணநின்மலதேசிகன்
பாதநற்றுணைபற்றிப்பணிதற்கே. (உ)

ஐயமின்றியடங்கலும்பார்ப்பதும்
மெய்யதின்றியமித்தைகடீர்ப்பதும்
உய்யுநன்றியுதவுநற்றேசிகன்
துய்யவென்றிதுதைசரண்டோய்தற்கே. (ங)

ஆரணந்தமிலாயவையோர்தலும்
பூரணந்தவழ்போதநெஞ்சூர்தலும்
பேரணிந்தபிரம்மானந்ததேசிகன்
ஏரணிந்தவடிநிழலெய்தற்கே. (ச)

சாந்தமாதிதவாங்கமுறுதலும்
ஓய்ந்துநேதிசெய்தோவலறுதலும்
வாய்ந்தநீதிமகாநந்ததேசிகன்
காந்தமார்கமழ்பூங்கழல்காணற்கே. (௫)

சத்தியஞானதவாநலமாய்தலும்
முத்தியானமூவாத்தலமேய்தலும்
சுத்தமோனசுதாரசதேசிகன்
மெய்த்தபாதபங்கேருகமேவற்கே. (௬)

தன்னைநாடுந்தகைமைவந்தெய்தலும்
உன்னுமன்பர்பணிபுரிந்துய்தலும்
என்னுளாடுமேகாந்தமெய்த்தேசிகன்
சொன்னமாமலர்சூழ்கழல்சூழற்கே. (௭)

தேகபோகஞ்சினந்துயிர்வாழ்தலும்
சோகமோகந்துரந்தகமாழ்தலும்
தேகிதேகத்திமிர்ப்பொழிதேசிகன்
பாகமாகிப்யுத்ம்பெறும்பான்மைக்கே. (௮)

வந்துபோகுமயலதிறப்பதும்
சிந்தையாதித்தியக்கமறப்பதும்
அந்தமாதியிலாவருட்டேசிகன்
சந்தபர்தந்தலைவருந்தன்மைக்கே. (௯)

உண்பதாடையுறக்கந்தவிர்வதும்
எண்பதாதியினெண்ணமவிர்வதும்
நண்பதாயருணல்கிடுந்தேசிகன்
பண்பதாமலர்ப்பாதம்பரவற்கே. (௧0)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# சரணப்பதிகம்.

பூதமற்றுப்பொறிபுலனற்றது
பேதமற்றுப்பிணுபினமற்றது
காதலுற்றூர்கருத்தகமுற்றது
நாதன்சங்கராநந்தன்சரணமே. (க)

வானுமாகிவளிகனலாவது
ஊனுமாகியுடலுயிராவது
ஈனமாயவெணுவினிலாவது
தானசங்கராநந்தன்சரணமே. (உ)

முப்பதங்கண்முடிவிடமாவது
செப்பும்லக்கணேசேர்விடமாவது
சொப்பிரகாசசுபாவமதாவது
அப்பன்சங்கராநந்தன்சரணமே. (ரு)

காலமூன்றுங்கடந்தொளிர்கின்றது
தூலமாதித்தொடக்கறநின்றது
மூலமாய்முருகார்தருமொன்றது
ஞாலசங்கராநந்தன்சரணமே. (ச)

அன்னையாய்த்தந்தையாகிநிவர்ந்தது
என்னையோர்பொருளாகவுவந்தது
சென்னிமீதிற்செவ்வேயுறவந்தது
நன்னர்ச்சங்கராநந்தன்சரணமே. (ரு)

ஆதியாகியநாதியதாவது
சாதியாகிச்சமயமதாவது
நீதியாகிநிரூபகமாவது
தாதைசங்கராநந்தன்சரணமே. (சு)

முத்தியாகிமுழுப்பொருளாவது
புத்தமாம்புருடார்த்தமதாவது
சித்தமேவிச்சிதானந்தமீவது
சத்தியசங்கராநந்தன்சரணமே. (எ)

வித்திலாமாயைவீயவடர்ந்தது
அத்துவாமார்க்கமாறுங்கடந்தது
சுத்தசுந்தரர்க்காகநடந்தது
அத்தன்சங்கராநந்தன்சரணமே. (அ)

பரவியன்பர்ப்பணிந்துபுகழ்வது
இரவொடேபகலின்றித்திகழ்வது
நிருவிகற்பமதாகிநிகழ்வது
சரதன்சங்கராநந்தன்சரணமே. (கூ)

எங்குமாகியிலகுமுறவது
பொங்கும்பூடணமாகியுறைவது
துங்கமாகித்துதையுநிறைவது
தங்குஞ்சங்கராநந்தன்சரணமே. (க0)

சிவார்ப்பணம்.

---

ஸ்ரீ

சங்கரபகவத்பாதாயநமஃ

# முடிவாமியல்பு.

உருவாகுமண்டமொடுபிண்டமன்னியுறழ்தேகபோகமயறீர்ந்
திருண்மாயைபோதவொளியாலிராமலிறுநீர்மைநீதநெறியார்ந்
தருவானமோனமனுகாவதீதமயமாவதென்றுபுகலாய்
அருளாகிஞானவமுதாகியாவுமாயல்லவாகுமொளியே. (க)

மருளார்மனுதிவயமாகியான்மவளமேவுமோர்விலடியேன்
பெருகாவுளன்புபிறழாவணஞ்செய்பிழையாவுமுன்னிமதியா
தொருபோதுமென்னுளுறவாடிமல்குமுயர்வாழ்வதென்றுபுகலாய்
பொருளாகியோங்குபுகழார்ந்திலங்குபொதுவானகோலவெளியே.

பெருவேலையாகுபவநீந்திநாறுபிணமாசுதீர்ந்துபிரியா
நிருபாதிகாதிநிலைமேவியின்பநிறைவாகியெங்குநிகழாச்
சொருபானுபூதிதுதைவானமாகுசுபநாளதென்றுபுகலாய்
தெருளாகிநின்றுதிகழ்பாதநல்குதிருவார்சுபாவவளியே. (ங)

பிரம்ஹார்ப்பணம்.

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# பஞ்சலிங்கஸ்தவம்.

ஆகாயவழியேசென்றமரர்தொழுங்கைலைமலையடைந்துலோக
மோகாந்தகாரமகன்றிடப்படிகலிங்கமொரைந்தருளின்முன்னே
னேகாந்தகுருபரமசங்கரனெங்கோன்கொணர்ந்திவ்வுலகிற்றாபித்
தாகாத்துன்மதங்கடிந்தத்துவிதநிறுவினனவனையகத்துள்வைப்பாம்.

## கேதாரக்ஷேத்திரம்.

முத்தியாவேசமொடுமொட்டறுமாலைகொடு
மூத்தராவார்கள்பணிமுற்றுகேதாரநிகழ்
முத்தர்சூழ்சங்கரர்தமொய்த்தசீரோங்கவளர்
முக்திலிங்காயநமமுக்திலிங்காயநம. (௧)

## நீலகண்டக்ஷேத்திரம்.

பரமேவுமாசைகொடுபவபாசநாசமருள்
பரவோமெனும்பரிசர்பணிநீலகண்டநிகழ்
பரஞானசங்கரர்பராவுசீரோங்கவளர்
பரநாமலிங்கநமபரநாமலிங்கநம. (௨)

## சிருங்ககிரி.

போகமங்காவுளிருள்போதநீதாதியருள்
போகதுங்காதிபர்பொருந்துசிங்கேரிநிகழ்
போகசங்கரகுரவர்பொருவில்சீரோங்கவளர்
போகலிங்காயநமபோகலிங்காயநம. (௩)

## ஸ்ரீகாஞ்சி.

யோகவங்காங்கமொடியோகயூகாதியருள்
யோகசம்யோகர்தவழ்யோகமாகாஞ்சிநிகழ்
யோகசங்கரகுரவர்யோகசீரோங்கவளர்
யோகலிங்காயநமயோகலிங்காயநம. (௪)

## ஸ்ரீசிதம்பரம்.

மோக்ஷசம்போகர்புகழ்மோக்ஷசாம்பிராஜ்யமருள்
மோக்ஷவாகாசதலமோக்ஷசிற்சபையினிகழ்
மோக்ஷசங்கரகுரவர்மோக்ஷசீரோங்கவளர்
மோக்ஷலிங்காயநமமோக்ஷலிங்காயநம. (௫)

பிரம்ஹார்ப்பணம்.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# திருவருள்வாழ்த்து.

எவனுலகியற்றப்பூவினினிதமர்புத்தேளாவ
னவனுயர்தோப்பாவென்னவணுகிவந்தமுதகல்கி
யவனியின்விடுத்துஞானவரும்விதையுளங்தெளித்தான்
றவமுனியாகுமன்னோன்றண்ணருள்வாழ்கவன்றே. (க)

எவனரியெனநின்றோங்குமெழிலுலகனைத்துங்காக்கு
மவன்சிதம்பரனென்றுசிலருண்மழைபொழிந்துமாழ்கு
நவையறப்பைங்கூழாகுநறுசிவபோகங்காத்தா
னவனிணையறுபொற்பாதவளிமலர்வாழ்கவன்றே. (உ)

எவனுருத்திரனென்றோதுமியல்பினின்றரிப்பணியாவு
மவனிவண்வித்யானந்தவறவனுயவித்தைநூறி
நவில்சிவஜீவனென்றுநயவனுபவங்கடுய்ப்பித்
தெவமகற்றினனன்னோன்பொன்னிணையடிவாழ்கவன்றே. (௩)

எப்பொருளுமருபமின்றியேகாந்தமாகு
மப்பொருள்சங்கரார்யவதிபனென்றளவினுண்டங்
கொப்பனைமிகுபொற்பாதமுதவிவன்பவமொழிக்கு
மப்பொருளாகுமன்னோனடிமலர்வாழ்கவன்றே. (௪)

சிருட்டிமுன்னிருந்தவாறென்சிந்தனையிலைந்தபோதம்
பொருட்படவாழ்கவெங்கோன்புவனசற்குருபீடங்க
டெருட்பரிதியெனவாழ்கதெள்ளியோரறங்கள்வாழ்க
வருட்டியானனுபூதியடைபவர்வாழ்கவன்றே. (௫)

பிரம்ஹார்ப்பணம்.

ௐ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# எண்ணக்குறிப்பு.

(வெண்பா.)

எல்லாமுடையபிரானீண்டவெழுந்தாள்வதிறு
லெல்லாமவன்வடிவாயேத்திநிற்பாம்—எல்லீரும்
ஏத்துங்கோள்வையகத்தீரெம்மானிலாதிலையென்
றுத்தருணாமெய்யறிவிணுய்ந்து.

பிரம்ஹார்ப்பணம்.

ஆ திருப்பதிகம் - எஎ - இ - திருப்பா - கஉசுஎ.

தியாஞனுபூதி

முற்றிற்று.

உ

ஸ்ரீசந்திரமௌளீஸ்வராயநமஃ

# ஆசிரியர் வரலாறு.

முக்கணனெண்டோள்வரையினிவர்ந்துமுரிதிரைக்கங்கைமுதுநீராடித்
தக்கதிருவெண்பொடியிற்புழுதிவிளையாட்டயர்ந்துதண்பசுந்தே
னுக்கமலர்க்கடுக்கையங்காடுழக்கியிமமலையீன்றவொண்கரும்பு
நெக்குசுவைப்பாலமுதநெடிதுநுகரொருகளிற்றைநெஞ்சுள்வைப்பாம்.

அரியபிரமமாவானையல்லற்பிறவியறுப்பானை
யுரியவடிவமூன்றானையுயர்மெய்ஞ்ஞானவாரிதியை
விரியும்வேதந்தொகுத்தானைவேதமுடிவின்விழுத்துணையைத்
துரியசங்கராசார்யசொருபன்றனையாந்தொழுதிடுவாம். (௧)

காமக்கோட்டிப்பீடமதிற்கலந்தோன்றுங்காரணனை
நீமக்கோட்டிச்சீடர்பவநிமிடத்தகற்றுநித்தியனை
யேமக்கோட்டித்தோடணிநம்வாணிபீடத்திலகொளியை
யாமக்கோட்டிப்பீடமர்சங்கரசிற்பரனையகத்துள்வைப்பாம். (௨)

(வேறு.)

பராவகண்டாகரப்ரபாவதுங்காம்ருதபயோததிகனிந்துனகமே
கிராதனென்றேபுகல்கெடாவனெஞ்சேய்பலகிலேசனதகந்தையறவே
தராய்நயந்தேதயைதபாவநந்தாதவழ்ததாகரமுவந்தமுனிவோர்
விராவிநின்றேதொழவிராவெதீந்திராவுயர்வித்யாநந்தனெனெந்தைபரனே. (௩)

(வேறு.)

முதுகிரியிலம்மையருள்முதுண்டமுதல்வனடிமுடிகள்சூடித்
துதிமருவவருமுதியர்குழுமரபின்வந்ததுரைராசனெங்கோன்
பதமுத்திநிலையுத்திபாழ்த்தவெனத்தனதருண்மெய்ப்பதந்தந்தாளும்
பதிவேதஸ்ரோணிசிதம்பரதேசிகேசனடிபணிந்துவாழ்வாம். (௪)

(வேறு.)

திருவளரிணையிலடிமலரிணையென்சென்னியிற்பொறிக்குமந்தணனிங்
குரியமெய்யடியர்பவமகன்றோடவுதித்தருண்ஞானபாற்கரனைப்
பரியசங்கரன்வெண்மலரவனரியுமாகியவச்சுதாநந்த
வொருதனிமுதனங்குருபரற்பரவியுபசமனமுற்றிறைஞ்சிடுவாம். (௫)

(வேறு.)

பலசமயவிருளகலப்பரிபவமற்றொருதனிமை
யெலையில்பரிபுரணநுகரிருந்தவர்மற்றிருக்கவென
தலைமருவுமனங்குவியவருளுமொருபரன்சரிதை
தலையுரைசெய்வேனறிஞர்தமநகைக்குநாணுமே. (௬)

(வேறு.)

கல்விதேர்தருநாவலர்கருதுமெய்ஞ்ஞானச்
செல்வர்வான்புகழ்செல்வரித்திறத்தினர்சிறப்ப
வல்கலின்றியேயருங்கலைமகடிருமகளார்
நல்கிவாழ்வுறக்கமலமொத்ததுதொண்டைநாடு. (எ)

(வேறு.)

நீடுமுலகோர்வரியநீர்மையுளநாடு
நாடுமயலோர்மகிழ்விஞடுமுயர்நாடு
பாடுமறிவாளர்கவிபாடுபணிநாடு
சூடுபடுதொண்டைவளநாடிசையுமதனில். (அ)

(வேறு.)

இரவிலிறைஞறுதுநடந்திடவிசைத்தவெழில்பெறுசுந்தரருஞான
விரகர்தமிழாளருநன்குறைபதிகமேவுதிருப்பதிகளாமெய்த்
திருமருவுமொற்றிநகர்மயிலைநகரிடையாகத்திகழ்பவாய
வுருமலியம்பதிகளிற்கோவிந்தபுரமெனவுளதொன்றுணரற்பாற்றே. (௯)

அப்பதியினுறைசெயுமுவ்வரசர்தலையானவருளார்ந்தமேனிச்
செப்பரியசேரர்பெருமான்வமிசந்திகழ்தரவந்துதித்தசீமான்
மெய்ப்பதஞ்சத்தியமலதுவேறுமயலெனத்தெளிந்துவிமலன்பாதத்
துப்பலர்மென்மலர்வணங்கியிருளகன்றமனத்தினன்மெய்சோர்விலாதான். (௧0)

அமரர்தமதிடுக்கணறவசுரர்தொலைந்திடவவர்தமரசரான
சமரினடரினதாபிவாதாபியெனுமிருவர்சாகவேள்வி
யமைதியினன்கிழைத்தசம்புமாமுனியினருள்வழியம்மகத்தின்வந்த
நமருமகிழ்தருசம்புவிருடிகோத்திரனெனுமுண்ணுட்டமிக்கான். (௧௧)

ஓர்ந்துபலவுயர்வறமொன்றுலுமிழிபுரையிலதென்றுரைக்கவாய
தேர்ந்திடுமில்லறமெய்தத்துணிந்துசிவநேசமகலாதசிந்தை
யேய்ந்தபரிசொளிர்சுப்பராயபூபதியெனவிங்கிலகுமன்னேன்
வாய்ந்தபலசுகுணகாமாட்சியெனுமாதுபுயமருவவெண்ணி. (௧௨)

தெய்வநெறிமிகுமன்றைனமணந்துதிசைபரவவிசைகள்வேய்ந்திட்
டுய்வரிதிங்கிலைவிதனினெனவுரைக்கமனையறத்தையுஞற்றிநாளுஞ்
செய்வனசெய்தரியபலவறநிகழ்த்திக்கற்புநிலைதெரிப்பவீசன்
மெய்வருமாதோமுனிவனருந்ததியோவெனவுலகர்விளம்பமேவி. (௧௩)

நாயனூர்போல்வரெனநானிலத்திலறநடத்திநனுகுநாளில்
நாயனரிவர்மதலைப்பேறிலையிஞ்ஞாயமெவணவில்வனென்று
நாயனூர்பலர்வணங்குஞானவருளாநந்தநாதநம்ப
நாயனரமர்ந்திலகுகோயில்பலபுகுந்துநனிவிரதமாற்றி. (௧௪)

நின்றவிதுகாறுமவணிசபருவமகன்றதினிச்சயமதொன்றுந்
தன்றுணைவியவனுமுதிர்ந்திடமாழ்கிச்சாம்பவசங்கரமகேச
கொன்றையணிசடிலத்துக்கூத்தபரசிவஞானக்கொழுந்தேயென்று
மன்றதனின்மனைக்கிழத்தியுடன்வணங்கிமாசகன்றுவைகுநாளில். (௧௫)

அன்றுயிருகண்டர்தமதரியதவமதிந்தநந்தாநந்தஞானந்
துன்றுமொளிகதிர்க்குமருட்சொருபவியல்வாய்ந்தசுகஞானபோத
நன்றுமிகுமார்க்கண்டனுமதலைவயதுபதிஞருநல்கி
யென்றுமழியாதசிரஞ்சீவியெனவருளியல்பினீசனார்தாம். (கசு)

(வேறு)

அருண்மிகப்பெருகியருந்தவமனிசமசத்தகலாதமைதியதாய்த்
தெருண்மிகநயந்துபுரிந்திடுமவர்தஞ்சிந்தைநைந்துறல்பொருதவராய்
மருண்மயவுலகமாசகன்றயநன்மாணெறிபிறந்ததென்றறிந்தோர்
பொருணயமுணர்ந்துபுகன்றிடமகவொன்றருளவின்னருள்சுரந்ததனால். (கஎ)

(வேறு.)

தீப்பார்வையிலாமாந்தர்சிகாமோனவொண்மணியாங்
காப்பாயெனவடிமாமலர்கழலார்கள்கண்மணியாம்
நீர்ப்பார்முழுதறியாநெறிநினைவார்கள்விண்மணியாந்
தோப்பாவெனுஞ்சாபானுக்ரகார்ப்பாடசுபாவன். (கஅ)

எனுமாதவமனமாசறுமெழின்மாமுனியொருநா
டனைநேர்தனியருணூடுறுசரணுகதிபுரிவோர்
மனையேயதெனக்கனமீதுறுமனமாட்சியினடைந்தே
யினைநேர்தருமடவாள்களிகொளுமாறுளமழையா (ககூ)

உலகோர்துதிசகசிவாத்தினமோதமுறுளத்தே
நலமார்பலநயவாசிநயந்தேயளித்தனலாற்
பலமாகச்சமைத்தேபுசிப்பாயென்றருள்பணித்தே
யிலகாவெழுசுடர்மேனியொளித்தானெமையுடையான். (உ0)

(வேறு.)

கண்டனர்வியந்துகளிகூர்ந்தனர்கணேலே
யொண்டவருமந்தவியலுறுவதரிதாமா
லொண்டொடியிவன்னைதவமென்னெனவியந்தே
மண்டுமயலார்மகிழ்வதெய்திமனைசென்றார். (உக)

ஈங்கனையியைந்தபடியிட்டவமுதுண்டே
தீங்கறுமணாளனொடுசேர்ந்துசிவநேசப்
பாங்கரின்விடாதபரிசுற்றுளமகிழ்ந்தே
ஞாங்கர்விழிமங்கையொருபங்கனடிநண்ணி. (உஉ)

இல்லறநடாத்துமியலெவ்வகையினேரு
நல்லறமிதென்றுநவில்வானடைவிழைந்தே
சொல்லறமிகுந்துநனிதுன்றும்வளையன்னாள்
புல்லறமொழிந்திடுபுராதனமதுன்னி. (உங)

நிலவுமவனேயநயநெஞ்சுபயில்வாய்மை
யிலகநனியருளனையனின்னருளுவந்தே
யலகின்மனுசேர்ந்தடியறிந்துதமையாய்வா
னுலகர்துதிபரவுமகவொன்றருள்புரிந்தான். (உச)

(வேறு.)

உயர்ந்தநற்சாலிவாகனசகாத்தமுறுமோராயித்தொளாயிரத்து
நயந்தருமோரைம்பதினுடனுறுநண்ணியசயவெனுமாண்டி
லியைந்திடுமாசிமிசையொருபதினேழேய்ந்ததேதியிற்குருவாரம்
வியந்துறுமமரபக்கமொடுமைக்குமிளிர்சிவநிசிசகிதமதாய். (உரு)

(வேறு.)

நண்ணுமாதபனோடொளிரம்புலி
வண்ணமாயுறழ்வண்டிதியோடமர்
திண்ணமார்சதயந்திகழ்சேர்த்தினத்
தண்ணருேன்றினனண்டர்வியக்கவே. (உசு)

(வேறு.)

அதுவிதுமற்றுதுவெனுமந்தகர்கேண்மையகலவுமெய்ப்
பதஞானப்பரிசினர்பண்புறுபான்மைபரவவுமுச்
சிதமோனநிலையினருண்மகிழ்தூய்மைதிகழவுமச்
சுதமேவுமருளிரதமுறுவார்கடுமைதரவும். (உஎ)

மறையுணருமாதவர்கள்வாய்மலர்ந்திடுதெனையெனவுங்
குறையகலும்வழியோங்கக்குலவுமடியாரிதயக்
கறையகலுநீர்மைநெறிகண்டனநற்பெருந்துறையி
லிறையவனுமவனலதுதோன்றுமிவணிலையெனவும். (உஅ)

உடையவனென்றிலகுமனத்துத்தமனேயெனத்துதித்து
நடைகொளன்பர்சுகஞானநல்லமுதுட்கொண்டருளி
யடைவினடிபணிந்தணிகொளம்பலத்தேகண்டவனிப்
புடவிமிசைவந்தனனிப்புதுமையுரைப்பரிதெனவும். (உகூ)

கத்துறுசட்சமயிகடங்கடலின்மடைதிறந்ததெனு
மத்தமுறுவாய்திறக்குமதுவகலவருமறையி
னத்தமுறுமத்துவிதானந்தவெள்ளமலைபுரளு
மத்தகைமையினதிஞர்குழுவருந்தியுளமாறிடவும். (௩௦)

இன்னபலபுருடார்த்தமியல்பினிலங்கிடவுமுனர்ச்
சொன்னபரமார்த்தனொளிர்சூரியர்பற்பலகோடி
பின்னமறவொன்றெனநின்றிலகுமதோவெனமுதியர்
பன்னவவதரித்தமுறைப்பரிசுரைக்கும்பான்மைத்தோ. (௩க)

(வேறு.)

பொருளுணர்ந்துரைப்போரொளிர்முனிலிங்கப்புதவரனெனப்புடவியினே
ரிருடெறுமாறன்புடனியலறமோர்ந்தின்னுயிர்ப்பதமெனநயந்தே
யுருமலிபிறப்பற்றும்பரினடையுமுவகையினுரியநற்றுணையாந்
திருமலிநாமமமைந்தசுபாதிதேர்ந்தநண்பகலினிட்டனரோ. (௩உ)

(வேறு.)

உரியபருவமேய்ந்துகலையோதியெவருமுளமுவந்து
பிரியமுறநன்சமர்ந்துகலையோதுபெற்றிகனிபயன்றங்
கரியசெய்வரறிஞரெனுமாக்கமுணர்ந்தன்னதுவீதே
தெரியவெனவுள்ளன்புமிகத்தெளிந்துமனசெக்குருகிடவே. (௩௩)

(வேறு.)

கொன்றைகமழ்சடிலனுறுகோயில்பலசென்றிறைஞ்சுங்கொள்கைமேவி
மன்றினடம்புரிதருமன்னவசிவசிற்பரதேவவயங்குநீலந்
துன்றுமிடற்றினனேயென்றுணையேமெய்ஞ்ஞானவிழுச்சுடரோவானே
யென்றுநடந்திறைஞ்சியனுதினமுயர்முக்காலுமினிதேத்துநாளில். (ருச)

(வேறு.)

வயதொருபதினைந்தாகவளமலிதருமெய்ஞ்ஞான
மயநெறியுணர்த்தவல்லமாதவரொவரொன்றெண்ணி
நியமமதாகநாளுநித்திரையொழிபின்மேலோர்
வயினடைந்தரியசீர்மைமாதவமுஞற்றுநாளில். (ருரு)

(வேறு.)

ஒன்றிரண்டெனலற்றொளிர்பரஞ்சோதியோங்குமெய்ஞ்ஞானவாரிதிமெய்
யொன்றுநெஞ்சினருண்மணியிருளகலவுதித்தருள்பானுசிற்கனமா
லொன்றுபொய்யவித்தைமாயைகண்மடியவுவந்தடியார்க்கருள்புரிவா
னென்றிடுவேதசிரேணிவந்தொளிர்வானுத்தமகுருசிதம்பரனே. (ருசு)

அன்னவனடிமையென்றுலகறியவடைக்கலம்புகுந்தவணியலுஞ்
சொன்னெறிபிறழாதுயர்குருபணியிற்றோய்ந்துடற்குயிரெனவிழியிற்
றுன்னியவிமைகளெனநலூசியினிற்றுறுசரடெனவிடிற்புலியொ
டுனனலரவத்திடையுளங்களிப்பவுறுநெறியொழுகுமந்நாள்வாய். (ருஎ)

நடைவிளங்கிடமெய்நடுங்கிடநாளுநடந்திடரறுந்திடமருவி
யடைந்தநல்லடியரடர்ந்திடமனதினடைந்தமாசகன்றிடமெய்யன்
புடையவர்வாழ்த்தவுடையதொன்றுடனிவ்வுடலுயிர்பொருளுமிங்குடையா
னுடையதேயெனநெஞ்சுடைதலிலாதவுடைமையையுடையவனுகி. (ருஅ)

சென்றனுதினமுந்திருவடிதொழுதுதேர்ந்தமாவாக்கியப்பொருளாய்க்
குன்றெனுங்குணத்தான்கொதிப்புறநோக்கிக்கூறுமம்மாற்றமுள்ளுணரா
வென்றுணையசண்ணிணையகலாதவெழிலருட்சோதிமாதேவே
யென்றுநைந்துருகிநிற்பெரிதுண்டோவெனவுளங்கனிந்தெமையுடையான்.

மழையொடுவெயிலின்மனமடியாதுமாதவநெறிவிளங்கிடுமா
றழைமுனமிரவினடுகொள்சாமத்துமரிதரிதரிதெனமுறையே
விழைவொடெத்திறத்துமருள்பெறவேண்டிவெவ்வினையிடைந்தகன்றோடப்
பழையவனிடத்திற்படிந்திடநடந்துபன்மலர்பறித்தடிவணங்கா. (சo)

(வேறு.)

“ கதிர்கொண்மேனிகற்பனையாற்களிம்புதோய்ந்துகிடப்பேனைத்”
துதிகொள்சிதம்பராரியனுய்த்துலக்கும்வாய்மைநெறிபெற்றேன்
மதிக்குமவன்றனின்னருளான்மாதர்மோகப்படுகுழியிற்
குதிக்குமதுவுமிலதாகுங்கொள்கையேதிங்கதுவுற்றேன். (சுக)

“ பொறியின்வசத்தைம்புலனுதிபொதியமாழ்குங்கடையேனை ”
யறவன்வேதசிரோணிசிதம்பரனுரறிவின்வசமாக்குந்
திறலிங்குறுமெய்யுணர்ந்தனனித்தேகமகலுமுனமெனுமவ்
வறநில்லலகிலனுபவத்தினுயுமேலோன்கருள்புரிவான். (சுஉ)

சிதம்பரேசன் றிருவுருவாந்தன துலீலைசெறிவடிவைச்
சிதம்பரேசனெனவுலகர்செப்பவொளித்தந்தரமான
சிதம்பரேசவடிவினனற்றீர்த்தமாம்பிணுகிதவழ்
சிதம்பரேசன்றலமெனுநன்சீர்செய்தரணிவாய் தனில். (சங)

அரியபிரமகுலத்தினின்வந்தவதரித்தவெதிவரனும்
பிரமஞானநிபுணனெனும்பெயரின்வித்தியாநந்த
குருசிற்பரனையடைந்தரியகோதுற்றறழ்சங்கைகள்பலவு
மருவுமனதினகன்றுநிசமனதுமாயும்வகையுணரா. (சச)

(வேறு.)

"பத்திவைராகவுபரதியாகும்பரிசிலேன்றனையுமோர்பொருளா
யத்தமத்தகசையோகமதியற்றியங்கைபிற்கனியெனவருளாற்
றத்துவமனைத்துஞ்சடமெனவுதறித்தன்மயமாக்கியவதீத
வித்தகவித்யாநந்ததேசிகன்றன் மிளிர்பதவிணைசிரம்பெறுவாம்." (சரு)

"பகுதியின்விளைந்துபார்முதற்பூதபௌதிகபவவிதையாகு
மகதகங்காரமலினவாதனைகண்மாய்வுறமாப்பொருள்விரித்தே
யிஃதஃதெனுஞ்சுட்டறவொருபடித்தாயினயந்துபசாந்தவாழ்வுறச்செய்
விகிதனும்வித்யாநந்தவேதியன்றன்விரைகமழ்பதமிறைஞ்சிடுவாம்." (சசு)

"அச்சமாரனூர்தமாதியவகற்றியரியஞானஶ்ரமம்ளித்தே
யச்சிதானந்தவருளமுதருத்தியச்சுதானந்தமென்றறையா
வெச்சமதாகவெழில்பெறவருளுமிருந்தவத்தவருணர்ந்துவந்து
மெச்சிடும்வித்யாநந்தவேதாந்தவினோதனற்சரண்டுதித்திடுவாம்." (சஎ)

என்றிவைமுதலாவளவறுஞானவெழிற்கணோர்தருமனுபவத்தா
னன்றினிதாயுந்திறமிகுந்தரியஞானிமற்றிலையெனுமயத்தி
னென்றிடும்வரைமுப்பதங்கடந்தொளிருமுத்தமகுருசிகாமணிநந்
துன்றிருண்மயலதகற்றுவோனிவற்குச்சொற்றதிங்குளததையுரைப்பாம். (சஅ)

(வேறு.)

அச்சுதானந்தவரைகுதுமருளினதிதியெனவறையுமாற்றஞ்
சச்சிதானந்தபரிபூரணசின்மயசகசசாட்சாத்கார
சிற்சுகோதயபரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யசீமா
னிச்சகாதாரகுருவாமருள்சங்கரனடியிலினிதுதோயும். (சகூ)

பாக்கியமுற்றுயும்பான்மைபலிதமுறப்பகர்ந்தனமிப்பரிசதின்னும்
வாய்க்குமொருசிலபகலின்மனதுறக்கேளெனவருளியயங்கும்ன்றே
னீக்கமிலிங்குரியவதைநிகழ்த்தியயலிலையெனுமந்நீர்மைசால
வேற்கவெமனோர்துதிசெய்தேத்தமனமிசைந்தவிடமேகினனே. (ருo)

(வேறு.)

அன்றுதொட்டுடன்ஞாஶ்ரமமடைந்தவருந்தவனசிந்தியாநந்த
னன்றெமதுளத்தினிவர்ந்திடுமமிர்தாநந்தமாதவந்துயோடுங்
குன்றெனுங்குணத்தெம்மிறைமுறைபிறழாக்கொள்கையினிருந்துசின்னுளிற்
றுன்றுநீருலகத்தொருதனிமுதலோன்றெல்லைநற்பதிவளநீர்மை. (ருக)

ஆயுநெஞ்சினனுயடியர்கள்சூழவருட்டிருவொற்றியூர்மயிலை
மேயசிற்புரநல்லூருசிதம்பரமும்வேதமெய்ந்நெறிபிறழாசங்
காயசீகாழிவைத்தியநாதரமர்ந்தருள்பதியுமன்புடையோ
ரோய்தருகுடந்தைதிரிசிரபுரத்தொடிலகிடுமானைக்காவொடுமே. (௫௨)

அரங்கமாநகருமாலவாயமுதமாமொழிதருமரிதான
வரங்கசிற்சொருபவந்தணர்பணிகொளணிதிகழ்திருப்பெருந்துறையும்
வரஞ்செயாரூருமருவியதலமுமற்றுமோர்வரிதெனுமகத்வப்
பரங்கொளிராமநாதர்சந்நிதியும்பணிந்துபன்னாள்கழிந்திடவே. (௫௩)

(வேறு.)

சென்றபடியேதிரும்பிச்செழுவயல்வாய்மடந்தையரிலெகினமேவ
நின்றதிருக்கோவிந்தபுரமெய்திநியமவிதிநிகழ்த்துமேல்லை
யன்றவனன்றுரைத்தபடியகிலசகத்காரணசங்கரனுமண்ண
னன்றிவண்வந்தருள்கவெனநயந்தழைக்கநணுகிநின்றான்ஞானமோர்வான். ௫௪

(வேறு.)

"திருவளர்காமக்கோட்டிப்பீடமதிற்றிகழ்தருநின்றிவ்யபாத
மருமலர்த்தாமரையிலளியெனவடைந்தேற்கருளமுதம்வழங்கினையே
யிருமைசெறிநோய்க்குமருந்தாயருர்தியின்புறுவேனிரங்குவாயே
பெருமைதிகழ்சங்கராசார்யபிரபோதாத்மனெனும்பெற்றியோனே." (௫௫)

"சிறுமையெலாமெவ்வளவுண்டவ்வளவெலாமெனவாய்ச்சிதைவுற்றேனை
யிறையவநீயஃழத்தடியர்குழாத்தடியர்க்கேவலெனவிசைத்தாலன்றி
நிறைமதியிலேன்செயலானினையடருமாறுளதோநீசனேன்றன்
குறைதவிரவருஞ்சங்கராசார்யகுணக்குன்றேகோதிலானே." (௫௬)

(வேறு.)

"பூமன்முதற்பண்ணவர்தமுளத்திற்பொலியுஞ்சின்மாத்திரமே
ஓமென்பதனுட்பொருளீதெனவேயுணர்ந்துலகுய்யச்சுக
நாமம்புனைசிவசங்கரதேசிகஞானவரோதயனும்
ஸ்ரீமன்மஹாதேவேந்திரஸரஸ்வதிஸ்ரீபாதமேத்துதுமே." (௫௭)

(வேறு.)

என்றிவைமுதலாத்துதித்துமெய்யன்பினெரியிடுமெழுகெனவுருகி
யென்றுணையேயென்னிடர்ப்பவமொழிக்கவெழுந்தருள்பரமசற்குருவே
நின்றநின்றன்மையாவரோயறிவர்நீசனேனதுர்தமாதியவாற்
குன்றினனறியாய்போலுநின்னபயங்கோதிலாமாதவப்பேறே (௫௮)

"ஆள்வதேகடனுயருட்கொடியுயர்த்தோ" யறிந்தெனையாளுநாளுளதோ
தாள்பணிந்திடுமெய்த்தவநெறியறியேன்றனயபுரிந்திடுதியென்றலறி
நீள்கழனிலத்திற்படிந்துமெய்பொடிப்பநின்றவந்நிலைபரனுண்ரா
வேள்விறல்வெலுமெம்பரமனைநோக்கிவிழுமியவாச்சிரமத்துள். (௫௯)

உனதிருபானொடிரண்டுறுவயதினுறப்பெறுமுயர்துறவறத்தில்
மனமுறனமதுசம்மதமாகுமாற்றுதிகுறையினையொருங்கே
சநநமொடுறுபொய்ம்மரணமுமிலையாஞ்சத்தியஞ்சத்தியமுரைத்தோ
மெனவுரைத்தருண்மாதீக்கைவத்திரான்கிலைசந்தருள்புரிந்ததன்றியுமே. (௬௦)

தமதுப்ரத்யாம்ஞைமதெனவுணர்க்குந்தகையிருதாளிணைக்குறிக
ளிமையவர்முனிவரொண்டிசைப்பாலரோமுதல்சித்தர்யோகியரு
நிமையறநமக்கும்வாய்க்குமோவெனுமந்நெறியினந்தரத்துநின்றேத்த
வமைவுறவருளியாசிகள்புகன்றெம்மாரியனுஶ்ரமமணுகி. (௬௧)

வந்துகண்ணுற்றுமனக்களிப்படைந்துவாய்திறந்தரியதிவ்வுலகி
லிந்தநற்காட்சியெனவிசைத்திதற்கிங்கெவ்வகையோருமேத்திடுவான்
சிந்தைசெய்ரிய "சித்துவிலாசத்திகழ்சபை" யெனுந்திருப்பேரா
லிந்தநன்பகலின்முதலழைத்திடவிங்கியலுமென்றிசைத்தடிபெயர்த்து. (௬௨)

சென்றனனறிவீர்தோர்தருஞானச்சீர்பதிசங்கராரியனுஞ்
சென்றபினவனன்களித்தபாதுகைகள்சிரமிசையமர்த்தியாலயத்திற்
சென்றிடவரியபூசனையாதிசிறப்பொடுமுவகையினடத்தி
யன்றலர்மலர்கொடர்ச்சனையாற்றியகமகிழ்ந்தினிதுறைநாளில். (௬௩)

(வேறு.)

வாணிபீடாதிபனங்கோன்குருசங்கரனடிகண்மருவிவாழ்த்திக்
காணருமுக்கண்கொண்டகரும்பேவன்பவமொழிக்குங்கனகவெற்பே
பேணுவதிங்கிலையலுனருட்பரிசல்லதுஞானப்பெரியர்சூழு
மாணுறுநின்றகையுணர்க்கற்பாலதோவெனத்துதித்துவணங்கிநின்று. (௬௪)

(வேறு.)

"அதிரசமதிசுகமதிசுபமதிசயநினதருள்கா
ணதுவிதுவுதுவெனவலமருமறிவிலியெனவுதரு
திதமுடனெதிவரர்நிதிகுணவியல்விதென்றுரைசொலிமெய்ப்
பதமருள்குரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே." (௬௫)

"எணுமெணமுடிகுவதிலதுளதெனுமியலறிதரமுக்
குணமிசைகுடிகொளுநினதொளிர்குரைகழல்குறுகிடவே
துணிபுகைவலியசித்தியின்முரணிலையெனுஞ்சொலையடைந்தேன்
பணியணிகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே." (௬௬)

"முழுதுணர்முனிவரர்நரர்சுரர்மொழிதவழ்முருகவிழ்பொற்
பெழுகழலுறுபுனலிருமையதகலவெனநுசிரமார்ந்
தழகமர்தரவழங்கியதருளுரிமையதலதறியேன்
பழமையகுரவசங்கரதுங்கநரசிங்கபாரதியே." (௬௭)

(வேறு.)

என்றுபொருமியேத்திமகிழ்ந்தினிதினடியர்புடைசூழ
வன்றுவடபானீழலமர்ந்தமலனலவர்க்கருணீர்மை
நின்றுபரமகுருநாதனிகழ்த்துபோதந்தனையுணர்ந்து
குன்றுபோலுங்குணத்தினனுய்க்கோதுருநன்னெறிபோந்து. (௬௮)

(வேறு.)

செந்தமிழிற்புனைந்தபலதுதிகூறியிணைவிழியிற்றிவலைசோர
நந்தலிலாவாநந்தக்கடன்மூழ்கிநவிரறுசீர்நளினபாத
தொந்தமுறவொற்றுமைப்பட்டொருதனிநின்றனன்றூய்மைதுளங்குமேலாஞ்
சிந்தையினும்விழியினுமெஞ்சிரத்தினுமெத்தினத்துமருச்சீர்மையோனே. (௬௯)

(வேறு.)

இத்தகைபண்ணலெம்மையாளுடையானீரிருமறைநெறிபிறழும்
பொய்த்தபுன்னெறியோர்க்கறநிலையுணர்த்தப்போந்ததுஞானவேதியர்கள்
சித்தமிக்குவகைசிறந்ததுதமிழிற்சிறந்தநாவலர்மணிமுடியா
வொத்ததுதியானுனுபூதியென்றொருநூலுரைத்தனனமக்கருள்சுரந்தே. (௭௦)

இன்னனபலநூலருள்சுரந்தளித்தானினைதலற்றொருபெருஞான
மன்னுறவேண்டியன்னவையோதிமாசறப்பொருடெரிந்தன்னோன்
பொன்னடிவாழ்த்திப்புதுமலர்தூவிப்பொருமிடர்ப்பிறப்பறுத்துய்ம்மின்
பின்னியதிரையார்கலிபுடைசூழும்பெருநிலமிசையினுள்ளீரே. (௭௧)

அன்பர்காணீவிர்பவத்தடுமாற்றத்தாழ்ந்திடவியல்வதென்விதியோ
வன்பவமறுக்கும்வள்ளலெண்டோளன்வளைமகடனக்கருள்வாய்மை
யின்புறுகுருவேபிரமமென்றியம்புமியல்பினனெழிற்றவவடியார்
துன்பமதகற்றுந்துணைவனன்றியுந்தன்றுணையடியடைந்தவர்க்கருள்வான். (௭௨)

எற்றலைசூழுமிருநிலத்தலையுமேழைகாளெமதுயிர்த்துணைவன்
பொற்பதமலரிற்போந்துநின்றழுவீர்பொன்னினன்றுடனல்லதுமற்
றெத்தகையோருமெய்தரிதாயவிணையடிசதமெனவருள்வன்
சத்தியமியமன்றுணைவந்தடைந்துசார்ந்திடும்வழியறற்பொருட்டே. (௭௩)

அன்னவனடியென்முடிச்சுமந்தடருமரியவெம்பிறவிகளேழுந்
துன்னருவழிபெற்றேருங்கநின்றிடுவேன்றூமறைபேசரிதாய
முன்னவன்கருணைமுகில்பரமேசன்மூதடிக்காட்படவருள்வான்
செந்நெறியிதுவாம்வருகவென்செய்வேன்சிறியனேன்சென்றிறைஞ்சுவனே.

(வேறு.)

ஐயனேயருளாநந்தவாரியே
மெய்யனேமண்ணும்விண்ணும்பிறவுமா
யுய்யவன்பருதித்தருள்பானுவே
துய்யனேயச்சுதாநந்தத்தோன்றலே. (௭௫)

தோன்றனீயன்றிவேறுமுண்டாங்கொலோ
வான்றவீசனயன்மாலுமாகியே
தோன்றியன்பர்தொடர்பவநீக்குபு
சான்றெனுமச்சுதாநந்தத்தாணுவே. (௭௬)

தாணுவாநின்சரணபங்கேருகம்
பேணுமாறறியாப்பெரும்பிச்சனேன்
காணுமாறுன்கழலளித்தாள்வையோ
வாண்மைசேரச்சுதாநந்தாதிபனே. (௭௭)

அதிபனென்றுனையண்டிவந்தேனெனைப்
பதிதனென்னும்பரிபவம்பார்த்திடா
தெதிவ்வோதயனேயருள்செய்திடா
யதிகனுமச்சுதாநந்தாத்யாத்மனே. (௭௮)

மன்னுமாண்பொருளேமறையோர்நிதம்
பன்னுமெய்யபரானந்தச்செல்வமே
சொன்னவாய்மைதுலங்கவருள்பிர
சன்னவச்சுதாநந்தசத்பாவமே. (௭௯)

பாவநாசனென்றேமறைபன்முறை
யோவலின்றியொலித்திடவேநினை
யாவலோடுவந்தேனெனையாள்வையோ
தேவனேயச்சுதாநந்தச்செம்மலே. (௮௦)

செம்மலர்ப்பதநோவநின்சீறடிக்
கிம்மணின்மெய்யன்பெய்துமிருந்தவர்
விம்மருவினைவேகவெளிப்படல்
நம்பினேனச்சுதாநந்தநாதனே. (௮௧)

நாதகீதவிநோதநயந்தரு
மாதரார்மயன்மாழ்கிமதிசலங்
கேதமேததகலவெனக்கருள்
நீதனேயச்சுதாநந்தநித்தனே. (௮௨)

நித்தநிர்க்குணநின்மலநிட்கள
சுத்தஞானசுபோதசுதாரச
பத்தவந்திதபாதபங்கேருக
முத்தனேமச்சுதாநந்தமூர்த்தியே. (௮௩)

மூர்த்தியேமுருகார்தருநின்னருள்
போர்த்திலங்கும்புனிதர்தம்பொன்னடி
சேர்த்தருள்செயுஞ்சீர்த்திறலென்றுகாண்
காத்திடாயச்சுதாநந்தாகண்டனே. (௮௪)

(வேறு.)

மகம்வாழிகாலுமறைவாழியிந்துமணிமௌலிவாழிபொடியம்
பகமேவுமக்கமணிவாழியோதுபணிவாழிபாடுமியறே
ரகமேவுமன்பரவர்வாழியந்தணர்கள்வாழிமாலொடயனோர்
நகம்வாழியச்சுதாநந்தன்வாழிநவில்சங்கரார்யனொடுமே. (௮௫)

ஆசிரியர்வரலாறு - முற்றிற்று.

இஃது.

ஷ சுவாமிகள்

அடியவர் திருக்கூட்டத்தவருள்

ஒருவராகிய

சோமசுந்தர அடியவர்

இயற்றியது.